சூரபத்ம நாடகம்

O-,892 MV144,5
N05

120631

உ.

கணபதி துணை.

சூரபத்ம நாடகத்தின்

34/1905

# சாற்றுக்கவிகள்.

——(*)——

ம-ா-ா-ஸ்ரீ, கும்பகோணம் ஞானயோக சோதிடமணி

மந்திர குண்டகக்கட லாகிய

## சாமிநாதசுவாமியாரவர்கள் இயற்றிய,

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கடலெழுந்த மருந்தனைய கலைமகளு மூருவாகிக் கழுக்கு
ன்றத்தில், அடலெழுந்த புனிதனெனு மம்பலவாணர்றவத்தா லவ
தரித்தோன், மிடலெழுந்த சூரபத்மன் சரித்திரத்தை நாடகமாய்
விளங்கச்செய்தான், மடலெழுந்தவாவியெனு மனக்குரியோனிகர்
த்தவடி வேலன்றனே.

ம-ா-ா-ஸ்ரீ, கும்பகோணம்.

## சா. கிருஷ்ணசாமி பிள்ளையவர்கள் இயற்றிய,

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்மேவு சண்முகனே தன்புகழை யாவருக்குந் தெரிப்பா
ன்றுவர், தார்மேவு கழுக்குன்றப் பதியில்வடி வேலனெனத் தன்
பேர்பூண்டு, ஏர்மேவுமம்பலவா ணப்புனிதன் செய்தவத்தா லினி
துவந்தே, சீர்மேவு சூரபத்மன் சரித்திரத்தை நாடகமாய்ச் செய்
தான் மன்னே.

ம-ா-ா-ஸ்ரீ, கும்பகோணம்.

## அ. கிருஷ்ணசாமி நாய்க்கரவர்கள் இயற்றிய,

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்பூத்தவெளியான் மலைக்குறதி விம்பவுரு நெறியிற்பெற்
றப், பேர்பூத்தவிண்டங்கள் யாவையுந்தன் குடைநிழற்கீழ்ப்பரிந்
தாண்ட, கார்பூத்தவிறற்சூரன் சரிதந்தனை வசமுறக்கிக்க மே
லாக, சீர்பூத்தவசந்தமிழா லின்னிசைசேர் நாடகமாச்செய்தான்
மன்னே. (க)

சிவனடியார் தமைக்காணி லவனெனவே வழிபாடு செய்யு
மேலோன், பவவினைகள் சுழித்தருள்பஞ் சாக்கரமே யுதினமும்
பகருமாவோன், நவமணிசேர் கனகத்திருநீறுங் கண்மணியு மணி
ந்தழகன்போனை, அகிலருமா விருப்பமுடன் வெள்ளேறாந்து வணு
மைமே பணிக்குணவான்வேலன்; (௨)

அன்றிப்புலெம்பாரவிலகு அன்புடையோன் கழுக்குன்றத்
தமர்ந்தவாழ்வு, இன்றியமை யமைவாணமுதலி முனைமனமகிழ்ந்து
துளக்கச்செய்த, வென்றிபுனை முருகன்தனை தாம் புத்திரனுக்கிதான்
றிலகு மெதினிக்கண், என்றியம்ப வடிவேலு முதலியென வீராளனை
தன்னிலனே.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட

ஜூலை மாதம் வருடம் 83

செப்பனிட்டு முடித்த

மே. மாதம் வருடம் 83

ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * *


முருகன் துணை.

# சூரபதும நாடகம்.

இஃது,

திருக்கழுக்குன்றம்

ம-ள-ள-ஸ்ரீ, சுப்பராயமுதலியார் குமாரர்

அருணகிரிமுதலியார் கேட்டுக்கொண்டபடி

தையூர், ம-ள-ள-ஸ்ரீ, அம்பலவாணமுதலியார் குமாரர்

வ. வேணுமுதலியாரவர்களால்,

இலங்கார-பாரிஸ்-பதம்-சித்தகம்-சிந்து-[illegible]

கும்மி-தில்லாறு-முதலான வர்ணமெட்டுகளுடன்

இயற்றப்பட்டு.

சென்னை

ஸ்ரீபிரசன்னவிலாச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

OFFICE OF THE REGISTRAR ... 12 APR 1905 MADRAS

முதல்பதிப்பு காபி 1000.

1905ஞ. ஏப்ரல் மீ

இதன் விலை.] [ரூபா 1-0-0.

*Registered Copy-right.*

கடவுள் துணை.



# விளம்பரம்.

இத்தனால் சகலமான பேர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் இகபரமளிக்கும் இளையபிள்ளையார் சூரன்கதையை இந்துஸ்தான் பார்ஸி தில்லானா கீர்த்தனம் பதம் இருதி டோம்பிரி முதலானவைகளால் நாடகவாயலரப் நடிக்க வமைத்து அச்சிட்டிருக்கும் புத்தகத்தை சென்னை முல்லாசாயப்புசந்து 7-வது நெம்பர் வீடு திரிபுரசுந்தரி விலாச அச்சுக்கூடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை, ரூபா. 1-0-0. தபால்சார்ஜு பிரத்தியேகம்.

இப்படிக்கு,

இ. அ. வடிவேலுமுதலியார்.

கணபதி துணை.

# சூரபத்ம நாடகம்.

## வண்டிவனப்பிள்ளையார் துதி.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்.

அப்பாருஞ்சடைமுடியானளித்தருளும் வரத்தானன்கீர்கசெய்து
முப்பாருந்தொழுவிருந்த சூரன்கன்கதைதனைமுதிருமன்பால்
இப்பாருள்ளோர்மகிழநாடகமாச்சொலவேதனமிர்க்குன்றத்தார்
ஒப்பரிருமில்லாத வண்டிவனப்பிள்ளையின்றாள் உன்னிவாழ்வாம்,

## சுப்பிரமணியர் துதி:

கந்தனைப்போன்மெய்ச்சூரன் கருதரும்கதையினைச்சோ
கந்துதீர்ப்போக்கும்பண்ணுறு கதிக்குநாடகமாச்சொல்ல
கந்தனுத்திண்டும்சோலைக்கழுக்குன்றப்பதியில்வாழும்
கந்தனைப்போற்றினாரும் கருத்தினுள்ளிருத்திவாழ்வாம்.

## பரமசிவன் துதி.

சடையானைமும்மலமாசடையானை அன்பர்களைத்தருமன்கையில்
படையானைமழுவெலுமாப்படையானை குறுமுனிக்குப்பரிவில்சொன்ன
விடையானைஅகிலமுறும் விடையானைசறுக்கண்ணைம்மேவப்புக்ரேல்
உடையானைகழுக்குன்றமுடையானை அநுதினமுமுன்னிவாழ்வாம்.

## அம்பிகை துதி.

மதியானைமுகப்பெருமானமதியானை அறக்கொளவேனவர்க்குஞான
முதியானைஅடியவர்க்கிருதியானை அதிசிதவித்தறுமடக்குசான்று
கதியானைஅறிதலிச்சாத்தியானை எழுமடியக்கலைக்கன்மெருஞ்சில்
மதியானைகழுக்குன்றப்பதியானை அன்னவாசம்பகலிவாழ்வாம்.

## குருவணக்கம் வெண்பா.

இன்னிசைசேர்நாடகமாய் ஏற்றமிகுசூரபத்மன்
தன்னிசைசேர்கதைதனைச் சாற்றுதற்கு—மன்னிசைசேர்
தச்சிப்பாப்போற்றகுணா நன்னிமெற்குக் கல்விதந்த
கச்சியப்பன் குருமணியாம் தான்.

## சுப்பிரமணியர் தரு.

இ-ம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

முருகாஎனக்கருள்செய்வாய் திருமருகா. (முருகா)

அநுபல்லவி.

முருகுமலர்த்தொடை மருவிய திருமா
நிருதாளித்து சருவமுமர்செய்யும். (முருகா)

சரணம்.

பாருமேயுன்னருட்கண்ணால் ஏழ்வினை தீருமே
பாரினுமா துணை யார் ருமிலேனைக்
காருமகிழ்வுடன் வாருமி துதகி. (முருகா)
சீலனேசின்மயனார் தந்த அருட்பாலனே
சீலமாமயிலேல ஏறிடின்
ஞாலமேல்வடி வேலனே தக்கருள். (முருகா)

## வேதகிரீஸ்வரர் துதி விருத்தம்.

ஆதியாயநாதியாகி அகிலத்துக்கப்பாலாகி
சோதியாய்நிறைந்தெளங்கும் துலங்குமைந்தெழுத்துமாகி
வேதமாமலையில்வாழும் வேதகிரீசாவுன்றன்
போதமேயருளெனக்குப் புண்ணியனேபோற்றிபோற்றி.

## வேதகிரீஸ்வரர் தரு.

இ-ம்-ஆனந்தபைரவி-ஆதி-தாளம்.

பல்லவி.

விடைஏறும்சடையா வாதிடஞானமூட்டு
நடையேனெனக்குகருணை வழிகாட்டு காலனையோட்டு. (விடை)

அநுபல்லவி.

தடையில்லாக்கொடையாய் தாரணியில்புகழுடையாய்
இடமாயோடி என்வினை தீர்த்திடவருவாய் இதுதகியாய். (விடை)

சரணம்.

காலாகாலக்கோலா கபாலா கிரிநிலா
ஆலாலமூலா அண்டர்க்கேதுணை சீலா
பாலன்வடிவேலன் பாடும்பதம்மேலா
ஞாலத்திலோங்கிடாநுமேயாதங்காகிருபைசெய்வோன். விடை



## திரிபுரசுந்தரி தரு.

இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

அம்பா திரிபுரசுந்தரி அன்பரின்வந்தரி. (அம்பா)

அநுபல்லவி.

அகிலலோகம்யாவும் அடக்கியாளும். (அம்பா)

சரணம்.

மூவகாரணி மும்மலவினையற
மோனஞானத்தை மொழிகுவாயொளிபெற
மாலயனபோற்றும் மகிமையுடைய (அம்பா)

## சபைவணக்கம் விருத்தம்.

கோதிலாமனிதர்களாகும் குலமுமங்கைகளாலும்
நீதிசேர்புராணமற்றும் தெரியில்முக்குற்றமீங்க
ஓதியேயுணர்ந்தெழுந்த உன்னிதசபைக்குவந்த
நீதிசப்பெரியோர்பாதம் சிரத்தினிலணிகுவேனே.

## அவையடக்கம் விருத்தம்.

இணைக்குமைம் திலங்கணத்தொடெழிற்கவிபல்வுக்கற்றாக்
குணங்கொள்மாபுலவர்முன்யான் குலவுறவிரும்புந்தன்மை
கணங்கொளவொளிதிரோன்முன்பு காறுமின்மினிபோலும்
மணங்கமழ்கமலமுன் மலருங்கொட்டியும்போலாமால்.

## விருத்தம்.

ஆடகமன்றனாடு மன்னவ்பால்வரங்கள்பெற்றுப்
பீடமாண்டெல்லாம் பிறங்கநன்கரசாண்டிரான்
பாட்டமைசரித்திரத்தைப் பகருநல்லிசைகளோங்க
நாடகமாகச்சொல்வானயந்தேதொடயருசொல்வேனே.

தோடயம்-காட்டை-இ-ம்-ஜம்பைதாளம்.

தேவர்கள்பலரும்பணிசூரன் சித்திரம்வெல்லும்படைவீரன்
நாவிருகற்புகழார்கதையை நாடகமாச்சொலவே-ஆ ஆ
பூவுருபிரம்மனேமுதலோர் போற்றித்தவ்செயவருள்புரியுமத
மாதங்கப்பெருமான்கமல மலரடிகள்துணையே-ஜெய-ஜெய

அற்புதமார்த்திடவண்டமெல்லா மாண்டருள்சூரனுருக்களத்தைப
கற்புவிபேரர்முன்பின்னிசைசேர் நாடகமாச்சொலவே-ஆ-ஆ
சிற்பரார்க்குமுன் ஞானவுப தேசமகிழ்ந்துரைசெய்தருளும்
பொற்றருமஞ்சுவிலவருமுருகன் பொன்னடிகள் துணையேஜெயஜெயா
கவுமணிமாடமயேந்திரத்தை கன்சூரசானதோசனுத
அவமதுகானதைநாடகமா யன்புடனுரைசெயவே-ஆ-ஆ.
கவமகிமோயியரிக்ந்தருளே தங்கியிருந்தருள்செய்பவனும்
சிவபெருமானிருபங்கயசேர் சேவடிகள் துணையே-ஜெயஜெய
சித்திகள்பாவையுமோர்கொடியில் சேர்ந்துசெயல அருளும்
பத்மவினைமிற்கதைநாடகமாய்ப் [illegible]த்திடவே-ஆ-ஆ
முத்திபைபயன்பர்தமக்கருள்செய் முனிவர்கள்ஞானமிருக்கவராகு
சத்தியின்மணாளனிருமலர்சேர் தாள்கள் அருள் அம்பிகை ஜெயஜெயா
மந்திரையோக்குமிழ்க்குரான் மாயையை பிறவியருத்திரன்
தந்சமிலாக்கதைநாடகமாத் தாரணியோதிடவே-ஆ-ஆ
அஞ்சமெனச்சொலும்மாகன்னர் அம்புநூராவியமர்த்தருநத்
செஞ்சுந்தரசொல்மொழிவாணி திருவடிகள் துணையேஜெயஜெயா
ஆண்மைத்துடையானிடமுன் [illegible]வசப்பெறுசூரனது
கதையங்கதைநாடகமாய் இன்னியமுறச்சொலவே-ஆ-ஆ
வாணியும்புகழ்போற்றியகை வந்தருநீ அத்தமாசறியராம்
ஞானமிருக்கருள்சால்பயகு நற்கமலத்துணையே ஜெயஜெயா

மங்களம்-இ-ம-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

மங்களம் மங்களம் மங்களம் நித்தியசுப
மங்களம் மங்களம் மங்களம், (மங்)

சரணம்.

இங்கனைத்தரித்தவர்க்கும் இங்கிளவாமுனையாடத்து
எங்குமிகப்பெயர்பெற்ற இணையிலாசூரனுக்கும் (மங்)
ஆயிரவருடாரச மந்தரத்தவமிருந்து
போய்வாஇந்திரஜாலத்தேர் புகழ்கொண்டசூரனுக்கு (மங்)
நாற்பெறட்டுயுகம்வரை தவலொருவரில்லா
எற்றுமிசத்தொட்டண்டம் இருந்தாண்டசூரனுக்கு (மங்)
விண்ணுலகையாசிகட்டும் விற்பன்னவிவேகிகட்கும்
தன்னெறிவாழ்ந்துவின்னரும் சகலவிதசுகத்துக்கும் (மங்)
சமையாசாரிகளுக்கும் சாத்திரமுனிவர்களுக்கும்
அமைந்தபசுக்கனுக்கும் அகிலத்தில் அனைவர்க்கும் (மங்)

முருகன் துணை.

# சூரபத்ம நாடகம்.

## விநாயகர் வெண்பா.

அருளையுணர்கண்ணனே அம்பிகையின்புத்திரனே
[illegible]வரியிருப்போனே — மோதுமுடன்
சூரன்மகாகதைதனைக்கொல்லிசைசொல்நாடகமாச்
சீருறவாக்செய்ய அருள்செய்.

## விநாயகர் தரு.

இ-ம-[illegible]-ரூபகம்.

அம்பிகைதனயனே அருளாருவாகனனே
நம்பினோருக்கிருபைதந்து கொம்பிரமாய்வந்து (அம்பி)
முத்திக்கருவித்தாகி சத்தசிற்குணமாகி
சித்தியாய்வெற்றியெற்கும் சித்திபெறுமிகயோசனும் (அம்)
எத்தனிடர்வினைத்தீர்த்து என் அம்புகழுமோர்த்து
[illegible]பாஞ்சியசுவை... சோயன்வடிவேலினையே (அம்)

## பொது விருத்தம்.

பாமஞ்சியன்றவிநலே பக்கமனதுமினனனா
வாம [illegible] அரிடன் மயூர்த்திடமாம்பைசன்பால்
[illegible] சுக [illegible]
[illegible] சிறப்புடன்தோன்றினனே.

(பொதுப்பேசம்.) அனுக்கள் சபையோர்களே? வீரமாயவேன்
[illegible] அரசாட்செய்யும் சூரபத்மமஹாராஜன் ஆசாவல [illegible]
[illegible] வருகிறவிதம் காண்பீர்கள் [illegible]

## பொது தரு.

[illegible]-ரூபகதாளம்.

பல்லவி.

[illegible] (வரு)

சரணம்.

எட்டுத்திசைகடுக்க — எட்டிவல்லாயுகத்தி
மட்டில்லாமலேதாக்கி — வெட்டிச்சூரன்சபைக்கு (எட்டு)
வஞ்சகம்பேசுவோர் — நெஞ்சைப்பிளந்திட
மிஞ்சியுக்கிரத்துடன் — அஞ்சாத்திரனானைக்கு (எட்டு)

(பொது-வ-ம்.) சேனுங்கள் சபையோர்களே! வீரமாமகேந்திரத்தை யாளும்சூரபத்மமஹாராஜன் கொலுவிற்கு வருகிறவிதம் காண்பீர்கள், கனவான்களே.

## பொது தரு.

இ-ம்-அடாணு-ஆதிதாளம்.

பல்லவி.

இராஜராஜராஜன் வீரமாமகேந்திரத்தைத் — தீரமுடனாளும்சூரன்கொலு — வீற்றிருக்கவந்தான். (இராஜ)

அநுபல்லவி.

அரிபிரம்மாதிதேவரும் — அன்பாய்ஜெயங்கள்கூறிட
அரசர்சேனைத்தலைவர் — அணிக்கூட்டங்கள்சேரிட (இராஜ)

சரணம்.

முத்துத்தாழ்வடங்களும் — மோகனமாகவும்
ரத்னமகுடமின்ன — சவைபதக்கமும் மின்ன
வாகுவலயமும் — வயிரகடகமும்
பாகுபுஜகீர்த்தி — பட்டுடைபுனைந்து
வீரக்கட்டியங்கூற — வெண்சாமரமசைய
காப்பதிறுவிரும் — கைமெய்யுரைத்திட
நாயகிளைக்கொரி — மெய்யுருகிக்கூறி
நாடியாலவட்டங்களா — நின்றுமுத்துக்குடையிரங்க
வேதங்கீதமோதிட — வெண்சங்கூதிட
மாத்திரமுழங்கிட — மைவிழியார்நடமாட
அரம்பைமேனகையாட — ஆடல்பாடல்மேவிட
அண்டமாயிரத்தெட்டையும் — அரசாற்றிடவேகத்தையுடைய (இராஜ)



## சூரபத்மன் போற்றி விருத்தம்.

வேதமாமலையின்மீது விளங்கிடும்விமலாமுன்னம்
சோதனைசெய்துபார்த்துச் சோர்ந்தயேயழிந்தவென்னை
வாதையில்லாதெழுப்பி வாழ்ந்திடவரத்தைத்தந்த
நாதனேகாப்பாயுந்தன் நன்மலர்த்தாளேபோற்றி.

## மந்திரிதருமகோபன் போற்றி விருத்தம்.

ஆழாழிசூழ்ந்திருக்கும் அண்டமாயிரத்தோரெட்டும்
பாழிலாதரசியற்றும் பாக்கியவானேநாளும்
தாழ்விலாதமரர்யாரும் தகுந்ததோரேவல்செய்ய
மாமழுவரத்தைப்பெற்ற மன்னவாபோற்றிபோற்றி.

## மந்திரிதுர்முகன் போற்றி விருத்தம்.

தவத்தினைப்பெறுக்கச்செய்து தாழ்விலாதிருக்கப்பொல்லா
பவத்தினைமுற்றும்போக்கிப் பரமனின்னருளைக்கொண்டு
புவித்தனிவெவருமபோற்றப் பொலிதருசெங்கோலோடு
நவத்தனிக்குடைகோனெக்கள் நாதனேபோற்றிபோற்றி.

(கட்-வ-ம்.) பராக் பராக் இராஜகெம்பீர பராக்.

## தேசவிசாரணை.

இ-ம்-இந்துஸ்தான்-ஆதிதாளம்.

பாட்டன்பிரம்மனைப் ... மில்லா தோட்டமாய்ப்பன்
நாட்டமுடனிட்டமாயோட்டுறனை இங்கு ... ரா

(சூர-வ-ம.) மந்திரி என்னுடைய பாட்டனாகிய பிரம்மனுடன், தினமும் பிராதகாலத்தில்வந்து பஞ்சாங்கம் நட்சத்திர யோககரணவாரங்களை சொல்லிப்போகிறது. (சொல்)

## மந்திரிதுர்முகன் தரு.

இ-ம். இந்துஸ்தான்-ஆதிதாளம். நாதனே. ()

சங்கமின்வாக்கோமல் ஒங்கியுவ்பாட்
டிங்கிலபஞ்சாங்கம் நல்பாங்காயோதும்புமக்கள்
... னைன்ணங்கள்

(மந்-துர்முகன் வ-ம்.) அரசே உமது ப... புமித்திறமே
நடுசேப்பி நீர் வரது பிராதகாலத்தில் குறித்த ... சீகத்துணமே
யோக கரணங்களை பயபக்தியில்லாதது ... துணமே. (சொல்)
குரு அரசே.

## சூரபத்மன் தரு.

இ-ம்-இந்தன்தான்-ஆதிதாளம்.

சூரியன்கிரணங்கள் சிறுமல்வேறாய்
நேராயில்லாதோராமாய்ச் சேரிப்போவாறு

(சூ-வ-ம்.) மந்திரி அதிகவெப்பத்தைத்தரும் சூரியனுன்வன் நம்து பட்டணத்தின் மேலாகப்போகாமல் கிழக்குமேற்கு கோபுரவாயில்களின் பக்கமாக குளிர்ந்தகிரணங்களை விடுப்போகின்றனு மந்திரி.

## மந்திரிவக்ரபாலன் தரு.

இ-ம்-இந்தன்தான்-ஆதிதாளம்.

போதாசல்கோபுரவாயல் போயல்வருதிரா
சூராஅதிவீரா கண்பாரா நல்மாரா

(மந்-வக்ரபாலன் வ-ம்). மஹாசூரா உங்களுடைய ஆக்கினைச்சக்ரங்களுடைய மகிமையைத் தெரிந்த சூரியன் தன்னுடைய வெப்பமாகிய கிரணங்களை யொடுக்கி கிழக்குமேற்கு கோபுரவாயலின் வழியாகத்தானே குளிர்ந்து செல்கின்றான் மஹாசூரா.

## சூரபத்மன் தரு.

இ-ம்-இந்தன்தான்-ஆதிதாளம்.

[illegible]

[illegible] () மந்திரி மோகார்ந்தகாரத்தை ஓட்டும் சந்திரன் [illegible] மறைவது மில்லாமல் எக்காலத்தும் [illegible] பூரணமாக சோடசகலைகளோடு நமது நாட்டில் [illegible] வருகின்றானு மந்திரி.

## மந்திரி மயிடன் தரு.

இ-ம்-இந்தன்தான்-ஆதிதாளம்.

[illegible]

[illegible] (வ-ம்.) ஸ்வாமி சக்கரத்தின் [illegible] அதிகார்த்தை [illegible] நமது நாட்டில் [illegible]

(சூ-வ-ம்.) மந்திரி எமதர்மனைவன் இவ்வுலகங்களி[illegible] நின்ற ஜீவராசிகளைக் கொல்வதுபோல நமது சேனையாளர் முதலானவைகளைக் கொல்லக்கனவிலும் நினையாமல் பந்தியோடு அவைகளை குறைவில்லாமல் பாதுகாத்து வருகிறானு மந்திரி.

(மந்திரி-தீயன் வ-ம்.) ஆண்டவர் உங்களுடைய வீரமும் தீரமும் கண்ட எமதர்மன் பயப்பிராந்திகொண்டு காலனுக்கு காலனுயிருக்கப்பட்ட நீங்கள் யாதுவருத்தம் நேரிடச்செய்துவிடுவீரோவென்று தன்பாசத்தையும் சூலம் [illegible] தங்களை நெருங்காமல் நமது நாட்டில்வந்து சேனையாளர் பரிவர்களை எல்லாம் குறைவில்லாமல் பாதுகாத்து வருகின்றான் மஹா.

(சூ-வ-ம்.) மந்திரி கனலையுகுத்துக் கொளுத்தும் அக்னிபகவான் நமது நாட்டிலிருப்பவர் யாவர் நினைத்தபோதிலும் அவர்கள் இடத்திற்போய் இட்ட வேலைகளைச்செய்து [illegible] குளிர்ந்து காட்டி வருகின்றானு மந்திரி.

(மந்திரி-தார்க்குணன் வ-ம்.) இராஜாதிராஜ பரமேசுவரா உங்கள் செல்வத்தையும் மற்றுமுள்ள சம்பத்துக்களையும் அக்னியானவன் அறிவழிந்து புலம்பி [illegible] தன்னுடைய வெப்பமெல்லாம் அடக்கி செக்கமலத்தைப்போலக் காட்டி அவரவர்கள் இட்ட வேலைகளைக் கிரமமாகச் செய்து வருகின்றான் ராஜாதிராஜ பரமேசுவரா.

(சூ-வ-ம்.) மந்திரி எங்கும் சஞ்சரிக்கும் வாயுவானவன் நமது நகரங்களின் தெருக்களில் விசிய வஸ்திரபரணங்களை பட்டமாலைகள் கலைவிக்காமல் தன்னைப்போலே மகரந்தம் குப்பைகளை இராப்பகலின்றி சுத்திசெய்து வருகின்றானு.

(மந்திரி-தீயன் வ-ம்.) [illegible] ஆயிரத்தெட்டு அண்டங்களையும் தனியே அரசாளும் எழுந்தருளியிருக்கும் உங்களைப் பயந்து வாயுவானவன் அதிக ஜாக்கிரதையாக (சொல்) நகரங்களின் தெருக்களில் விசிய வஸ்திரபரணங்களை கலைவிக்காமல் தன்னைப்போலே மகரந்தத்தையே () இராப்பகலின்றி சுத்திசெய்து வருகின்றான்.

தம்புமசசங்கள்
[illegible]
[illegible]

[illegible] கொண்டுவாய்க்கத்துணையே
கொண்டுவாய்க்கத்துணையே கொண்டுவாய்க்கத்துணையே. (சொல்)

(சூர-வ-ம்.) மந்திரி சமுத்திரராசனாகிய வருணன் பணிந்து, வாறு, அகிற்சந்தனத் தெய்வகைப் பன்னாயிரமின் மணமுத்து நன்மணிகளோடே திவ்ய சுகந்தங்களையும் பன்னீர்கூட்டு இப்பதி முற்றிலும் நிருதர்களாக இறைத்துக்கொண்டு செய் வருகின்றனா மந்திரி.

(மந்திரி-நான்முகன் வ-ம். மன்னவா உனைக்குறுக்குச் செழி யத்தரும் வருணன் பயந்தோடுகின்ற ஆக்கத்தை விலக்கும் மந்தரங்கள் இறைத்துவருகின்றான் மன்னவா.

(சூர-வ-ம்.) மந்திரி பொன்னுலகத்தில் வசிக்கும் இந்திரனும் சுக்கலோகத்திலிருக்கும் விண்ணவர்களும் அட்டதிக்குப்பால கர்களுடன் வந்து நமது அரண்மனைமுதலான இடங்களில் பணிவிடைகளில் யாதும் குறையில்லாமல் செய்துவரு கிறார்களா மந்திரி.

(மந்திரி-அக்கினிதேவன் வ-ம்.) அரசே இந்திரன் முதலான யாவரும் நமது அரண்மனையில் வேண்டும் வேலைகளை அ டங்கிக்கொண்டு வருகின்றார்கள் அரசே.

(சூர-வ-ம்.) மந்திரி என்னுடைய கடக்கும் இப்பேர்ப்பட்ட அரசுபோலவே என்னு தம்பிமார்களாகிய சிங்கமுகனுக்கும் தாருகாசுரனுக்கும் நடத்திவருகின்றார்களா மந்திரி.

(மந்திரி-தர்த்தியன்-வ-ம்.) பிரபு இங்குநடத்தி வருவதைப் போல அங்கும் நடத்திவருகின்றார்கள் பிரபு.

(சூர-வ-ம்.) மந்திரி நமது நாட்டிலுள்ளவிருக்கும் ஆலயங் களில் திரிகாலபூஜை நடக்கிறதா அதுடன் மாதமும்மாரி பெய்து வருகின்றதா மந்திரி.

(மந்திரி-திக்கண்ணன் வ-ம்.) மஹாராஜனே நமது நாட்டு ஆலயங்களில் திரிகாலபூஜை நடக்கிறது அதுடன் மாத மும்மாரி பெய்துகொண்டு வருகின்றன மஹாராஜனே!

## சூரபத்மன் விருத்தம்.

வாசத்தார்க்கிறைவனுறை புரந்தரன் தன்னை மந்திரி
அரண்மனைபாக அடிமைசெய்குவாரே,
அவன் மந்திரி இந்திரனை என்னசன்னிதானமுகம் வரச்செய்



(மந்திரி-வ-ம்.) இராஜபரமேஸ்வரா இதோ வரவழைக்கின் றேன் இராஜபரமேஸ்வரா.

(மந்திரி-வ-ம்.) ஏ இந்திரா உன்னை ராஜன் சேர்வைக்கு வரச் சொன்னார் சீக்கிரம் செல்வாய் இந்திரா.

(இந்திரன்-வ-ம்.) இதோ செல்கின்றேன் மந்திரி யாரே..

## இந்திரன் தரு.

இ-ம்-இதுவுமான்-ஆதிதாளம்.

பல்லவி.

எதிர்த்தாழிசிடவோரேனு பரி எங்குசேருவமையோ. (எ)

சரணம்.

வாதுபுரிந்தனைத்திடச்செய வரவழைத்திட்டாரேவனையோயேன்
நிறைதவிலைக்காமல்செய்வதோ சதிசெய்ய நேருமோ நிலையோ. (எ)
ஆதரவில்லாமல்வீழுமிசனின்னென்னுமும் அருளாற்றுறை அவதிப்
சேர்தன்செய்வதுசோதியே புனக்கிதுசொக்குமதிலேயோ. (எ)

## இந்திரன் விருத்தம்.

ஆயிரவருடகாலம் அந்தரத்தவமிருந்த
காயவேளையறுத்த சேர்வைமையுரைப்பாய்போற்றி.

(இந்திரன்-வ-ம்.) போற்றி போற்றி மஹாராஜபர்வா என்னை வரவழைத்த காரணம் யாதோ தெரிவிக்க வேண்டும் மஹாரா ஜாவா.

## சூரபத்மன் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-ரூபகதாளம்.

பல்லவி.

சொல்லுகிறேன் கேளிந்திரனே சோம்பலாகாதே.(சொல்)

அநுபல்லவி.

இந்திராணியுடன் இப்புவனந்தம்பியா விரும்பாமினிதனே. (சொ)

சரணம்.

விரைவாய்ப்போவாயிந்த சென்றவிரும்புமச்சங்கள்
பருத்திடக்காய்பின்தடிக்கிட பற்றிதவின்னாங்கள்
அறுதாவதீராய்கொண்டேக அதிவாய்ப்பிடித்திலே
கறுமேதாலுமாய்சோபல்முன் கொணர்வாய்பத்துடனே
கொணர்வாய்சுற்றுடனே கொணர்வாய்சுற்றுடனே. (சொல்)

(சூர-வ-ம்.) ஏ இந்திரனே இவ்வளவிலும் செலுத்திவரும் வேலைகளுடன், அகன்ற பெருத்த சமுத்திரத்தில் இருக்கின்ற மகாமச்சமுதலானவைகளில் நான் புசிப்பதற்கு யோக்கியமாகிய பருத்த மீன்களைப் பிடித்துக்கொண்டுவந்து கொடுக்க உன்கூட்டத்துடன் செல்வாய் இந்திரா.

## இந்திரன் விருத்தம்.

அன்னவேலெரும்புமச்சம் அட்டியில்லாமலிப்போ
இன்னமாய்க்கொண்டுவாரோம் இவராசனைப்புவீரே.

(இந்திரன்-வ-ம்.) ஆண்டவரே தாங்கள் புசிக்கும்படி கோரின மச்சங்களை சமுத்திரங்கள் சென்று தடையில்லாமல் இப்பொழுதே பிடித்துவருகின்றோம் உத்திரவுதாரும் ஆண்டவா.

(சூர-வ-ம்.) சீக்கிரம்போய் சென்றுவருவீர்கள் தேவர்களே.

## இந்திரன் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-ஏகதாளம்.

பல்லவி.

என்னவிதியிட்டாய் முன்னேறுனோனான்
பொன்னுலகத்து மன்னனாய்ப்பிறந்து. (எ

அநுபல்லவி.

சொன்னவேலைசெய்ய சோதிக்கிறாய்மனம்
இன்றெனக்கிந்த இழிவடைய. (எ

சரணம்.

நீராய்புழிப்பாதகன் நிரமாயமுழுதின்னை
நீராய்மீனைப்பிடித்து வாராயென்றுசொல்ல
நேராய்க்கேட்க நேர்ந்ததே. (எ)

வானோர்யாவர்களும் வனைகிலிருந்தோரும்
காணுமிவ்விதிப்பட நான்வந்ததே தர
மானிடமெத்தி மாற்றலிதோ. (எ)

(இந்திரன்-வ-ம்.) ஓ ஜெகதீசா சூரபத்மன் வீட்டில் வேலைகள் செய்யவும் சமுத்திரங்கள்சென்று மீன்பிடிக்கவும் எங்களுக்குவிதித்ததோ இப்போதென்று எண்ணினாலும் பாழாப்



போன அமுதம் உண்டிறவில்லையோ மரணமில்லையே இனி என்செய்வது கடலிடம்சென்று வருணனிடம் மச்சங்கள் தரும்படி கேட்கப்போகின்றோம் வேறுகதியில்லை நீயேகதி ஜெகதீசா.

## இந்திரன் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-ஏகதாளம்

பல்லவி.

ஓடிவாருமையா வருணனே, ஒருதவிசெய்யதற்காக்க வா வா. (ஓ)

சரணம்.

தேடிவந்தேனிங்கு நாடியுந்தனிடம்
கோடிபுண்யமுண்டு கூறுவேனுன்னக்கண்டு. (ஓ)

கருத்தசாகரத்தினில் காணுமலொளித்தாயோ
வருத்தமேதீர வஞ்சநெஞ்சம்விட்டு. (ஓ)

எந்தன்மனக்குறைகளை எப்படிமுடிப்பேனோ
எதுவுந்தோணவில்லை ஏங்குதென்செய்வேனல்லே. (ஓ)

(இந்திரன்-வ-ம்) ஓ வருணராஜனே இதுசமயம் எனக்குதவிசெய்ய ஓடிவரவேண்டும் வருணராஜனே.

## வருணன் விருத்தம்.

இந்திராபுரர்யும் எந்தனைப்பொருட்டாயெண்ணி
சிந்தையொடழைத்தசேதி சீக்கிரமுரைசெய்வாயே.

(வருணன்-வ-ம்.) தேவராஜனே அதிக மனவாட்டத்துடன் என்னை அழைத்தசேதியை தெரிவிக்கவேண்டும் தேவராஜனே.

(இந்திரன்-வ-ம்.) அப்பா வருணா எனக்கு நேர்ந்த காலகதியை என்னவென்றுரைப்பேன் பாபியாகிய சூரபத்மன் கொஞ்சமும் அஞ்சாமல் சமுத்திரங்கள் சென்று தான் புசிக்கும்படியான பெரியமகாமச்சங்களைப் பிடித்துக்கொண்டு வரும்படி கட்டளையிட ஓடிவந்தேன் இக்காலத்தில் எந்தன் மனக்குறைமுடியத்தக்கதாக அலையாகிய கைகளினால் திமிங்கலமுதலாகிய மீன்களைத் தள்ளிவிடுவையாகில் நான் பட்டதையும் துக்கசாகரத்தின் கரையிலேற்றியதாக நினைத்துக் களிப்பேன் வருணா.

(வருணன்-வ-ம்.) ஆயிரங்கண்ணு உமக்கும் இப்படி இரங்கும்படியான காலமும் நேர்ந்ததல்லவா என்மனம் ஒருவாறு ஆறியமர்கின்றது இருந்தபோதினும் உமது இஷ்டப்படி இதோ யான் சமுத்திரஞ்சென்று சேருடி பருத்தமீன்களை வாரிவாரி விசாலமாகிய கரையின்கண்மலைகளைப்போலக் குவித்து விடுகின்றேன் எடுத்துச்சண்டாளனாகிய சூரனுக்களிப்பீர் ஆயிரங்கண்ணு.

(இந்திரன்-வ-ம்.) தேவர்களே நமக்கெனவிதித்த விதியின்படிமுடியுமல்லாமல் வேறொன்றும் முடியாது இப்போது வருணன் சமுத்திரக்கரையில் கொண்டுவந்து சேர்த்திருக்கும் மச்சங்களைக்கூசாமல் எடுத்துலர்த்தி அனந்தன் வாசுகி தட்சன்முதலிய சர்ப்பங்களால் கட்டிஎடுத்துக்கொள்ளுங்கள் செல்வோம் தேவர்களே.

## தேவர்கள் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-ஏகதாளம்.

பல்லவி.

அய்யய்யோ இதற்கென்ன செய்குவோம்ராமே. (அ)

அநுபல்லவி.

அரசன்சொற்படிக்கிப்போ தனைத்தைத்துமுனைக்கிட்ட (அ)

சரணம்.

சிலமேயொழிந்திட காலமோயிது
கோலமென்னசெய்தோமோ குலையத்தில் (அ)
மானமாயிருந்தநாம் மதிமயங்கிஇப்போ
ஈனத்தொழில்புரிய இட்டானேசிவன். (அ)

(எமன்-வ-ம்.) தேவர்களே சூரனென்னும் பாதகனால் இதற்குமுன்னமே மகத்தாகிய துக்கசாகரத்தில்முழ்கி மனதுக்குழம்வழியுமிழந்து வருந்தியயாம் எப்புவனங்களிலும் வெறுக்கும் பழிபாதகத்திற் கேதுவாகிய இவ்வீனத் தொழிலையும் செய்யத்துணிந்தோம் இன்னும் என்னென்ன கொடிய கிருத்தியங்களை நடத்திவைக்க இருக்கின்றானோ ஜெகதீசன் இப்படியும் விதிப்பாலென்று தெரியாமல் போனதே மானிடரும் சாத்திரமுன்னிலையில் மகாபாதகமென்றிகழ்ந்து நீக்கிஇருக்க நாம்செய்யநேர்ந்ததே என்செய்வது தாமதம் செய்யாமல் சீக்கிரம் கட்டிஎடுத்துக் கொள்ளுங்கள் செல்வோம் தேவர்களே.



## தேவர்கள் கண்ணி.

இ-ம்-சீலாம்புரி-திரிபுடைதாளம்.

என்னகாலமெங்களுக்கு எய்திட்டதன்மனங்கலங்கிலோ
அன்னைக்குமனையான ஆதியே
செங்கோலிழந்திந்திரனும் சிறுமைப்படகாலமாச்சே
மங்கைபாகத்தமர்ந்தோனே பகிழ்ந்தாயோ
பாவிசூரனிடமேவல் பரிந்துசெய்யப்பார்த்தாயே
ஆவிதடுமாறியப்போ அலையாச்சே
மச்சங்கள்பிடித்துணக்கி இச்சையுடனெடுத்ததோ
மெச்சினோபோகைலாசா லச்சைபட
வானவர்களென்றுநாங்கள் வசித்திருந்ததெல்லாம்போச்சே
ஈனமானதொழிலையே ஈசனே.

(தேவர்கள்-வ-ம்.) ஆ லோகநாயகா உன்னால் நிருமித்தவே தவொழுக்கங்களுக்கும் சிறந்தோங்கிய ஞானவுருபம்பிற்கும் விலக்காகிய கொடியபாதகத்தொழிலை செய்யவும் உடைந்தனர் வானவர்களென மதித்திருந்த மதிப்பையுங் குறைக்க கனித்தாயோ கைலாசா.

## தேவர்கள் விருத்தம்.

காவிறுமிட்டவேலை கையினுல்செய்யாமுய
சீலனேசாகரத்தின் சினையுள்ளமச்சமெல்லாம்
சாலவேபிடித்துணக்கிச் சடுதியில்வந்தநாமே
ஆலைபோலடியோய்கேநாம் அன்புடனேற்றுக்கொள்ளே.

(தேவர்கள்-வ-ம்.) இராஜாதிராஜகெம்பீரா நீர்காலின்ற விட்டவேலைகளை கைகளினுல் சமுத்திரத்தி லிருக்கும் பருத்தமச்சங்களைப்பிடித்து உலர்த்தி புலன்களென்ற எடுத்துவந்தோம் ஏற்றுக்கொள்வீர் இராஜாதி ராஜகெம்பீரா.

(சூர-வ-ம்.) ஆ ! ஆ ! நமக்கிஷ்டமான மச்சங்களைப்பிடித்துலர்த்திக்கொண்டு வந்தீர்கள் அல்லவா மகாசந்தோஷம்.

## சூரபத்மன் விருத்தம்.

தேவர்காள்தினமுமீசதீது கொண்டதோர்மச்சமெல்லாம்
ஆவலாய்க்கொணருவீர்கள் அட்டியில்லாமற்றுனே.

(சூர-வ-ம்.) தேவர்காள் தினந்தினம் இவ்வண்ணமாகவே அகப்படுகின்றவனைப் பிடித்துவருவதுடன் அரண்மனை வேலைகளை ஜாக்கிரதையாகச் செய்து வருவீர்கள் தேவர்களே.

(தேவர்கள்-வ-ம்.) பிரபு தங்களுத்தரவுப்படி அப்படியேசெய்துவருகின்றோம் அரசனே நாங்கள் செல்கின்றோம் பிரபு.

(பொது-வ-ம்.) கேளுங்கள் கனவான்களே சூரபத்மன் இவ்வாறு அரசுசெய்யுங்கால் பதுமகோமளை என்னும் பட்டத்தேவியின் வயிற்றில் உதித்தகுமாரன் பானுகோபனென்பவன் மாளிகைக்கட்டிலில் நித்திரை செய்திருக்குந் தருணம் சூரியன்பிரகாசத்தினுண்டாகும் கிரணமானது சன்னலின்மூலமாகப் பாய்ந்து தன்மீது தாக்கக்கண்ட பானுகோபன் சூரியனைப்பிடித்துத் தன் தொட்டிலிற்கட்டி நித்திரைசெய்தலைக் காண்பீர்கள் கனவான்களே.

(பானுகோபன்-வ-ம்.) ஆ! ஆ! என்ன ஆச்சரியம் நாம் ஆயிரத்தெட்டண்டத்திற்கதிபதியாகிய சூரனுடைய புத்திரனென்று கொஞ்சமும் பாராமல் சூரியனானவன் தன்னுடைய ஆயிரங்கிரணங்களைக்கொண்டு அதிகதுரிதமாய் நாம் படுத்திருக்கும் தொட்டிலில் சன்னலின்மூலமாய் நுழைந்து நம்மைவருத்தும்படியாய் காய்ந்தானல்லவா அவனை இப்பொழுதே பிடித்துவந்து தொட்டிலின் காலில் கட்டிவிடுவோம் என்செய்கின்றான் பார்ப்போம் இதே நல்லயோசனை.

## பானுகோபன் கண்ணிகள்.

இ-ம்-புன்னாகவராளி-ஏகதாளம்.

| | |
|---|---|
| சூரியனேயுன்னுடகிரணம் | விழுடகாய்ந்தென்மீதில்பட |
| ஆருனக்கிந்த ஆண்மைகள்தந்தார் | அறிகிலேனுன்றன்கர்வம் |
| எனக்குவிரோதம்எதிர்த்திடும்பகைசெய்ய | உனக்குவந்ததேனோசொல்வாய் |
| தினமெதிலும்பிசகாதேயுன்பேல் | செங்கதிரோனேமனமே |
| உத்தட்டமாகவேவுனதுகோபமதால் | பத்தட்டமாகவேபாராமல் |
| சிறைத்திடும்படியினைத்துவந்த | இராஜியமற்றிருந்தோன்பாராய் |

(பானுகோபன்-வ-ம்.) அடா பருதி கொஞ்சமேனும் என்னுடைய சவுரியமறியாமல் உன்னுடைய கிரணங்களால் நித்திரை விழித்து என்னை எழுந்திருக்கச்செய்ததினால் இதோ எனது தொட்டில்காலில் கட்டினேன் பாரடா பருதி.



(பிரமன்-வ-ம்.) தேவராஜனே இதென்ன ஆச்சரியம் பார்த்தீரா சூரபத்மன் குமாரன் குழந்தைப்பருவத்திற்றானே இவ்விதச் செய்வானாயின் காளைப்பருவத்தில் நாமெல்லோரும் என்னபாடு படவேண்டுமோ தெரியவில்லையே அவன் சூரியனைக் கட்டினதினாலே ஜெகமெங்கும் இருள்சூழ்ந்திருப்பதைப் பார்த்தீரா இதை ராஜனுக்குத் தெரிவித்து மீட்டுவிடுவோம் வருவாய் தேவராஜனே.

(இ-ன்-வ-ம்.) அப்படியே செல்வோம் வாரும் பிரம்மதேவரே.

## பிரமன் விருத்தம்.

சொராமரையகற்றும் சூரனேசொல்லக்கேளாய்
பாராமனுமைந்தன்புத்திரன் பானுவைப்பிடித்துத்தொட்டில்
சீராருங்காலில்கட்ட ஜெகமெலாம்பதைக்குதையா
வீராமல்விடுவித்தென்கள் வினையதையகற்றுவாயே.

(பி-ர-வ-ம்.) இராஜசேகரா உமது திருக்குமாரன் சூரியனைப் பிடித்துத் தொட்டிலின் காலில் கட்டினதால் ஜெகமெல்லாம் இருள்சூழ்ந்து ஜெந்துக்களெல்லாம் மலைகின்றது அன்றியும் எங்களுடைய நித்தியகருமங்களை முடிக்கவருந்துகின்றோம் சூரியனை விடுவித்து எங்களைக்காக்கவேண்டும் இராஜசேகரா.

## சூரபத்மன் விருத்தம்.

காலையில்வந்துபஞ்சரக்கத்தினையோதும்பாட்டா
பாலவேனதுபுத்திரன் தானிக்கென்குறைகள்செய்தான்
சீலமாரவன்தான்யாது செய்தனன் எத்தன்மைத்தாங்
கேலியேயுணர்த்திடவென்யானுந் திருப்பிப்போதனைசெய்வாயே.

(சூ-ன்-வ-ம்.) ஏ பாட்டா எனது குமாரன் சூரியனைப்பிடித்துக் கட்டினவிஷயம் அறியமாட்டேன் அப்படிக்கவன் நடத்தத்தக்க குற்றம்யாதோ அதனை முன்னாலே தெரிவிப்பாய் பாட்டா.

(பி-ன்-வ-ம்.) பிரபு தேவரீர் குமாரன் நித்திரைசெய்யுமுன்னிலையில் சூரியனுடைய கிரணகாந்தியானது முகத்திற்றாக்கியநிமித்தியமாகப் பிடித்து சிறையிலிட்டார் பிரபு.

(சூ-ன்-வ-ம்.) பாட்டா அதற்குநான் செய்யவேண்டுவதொன்றுமில்லை நீங்களேவரும்போய் எனதுபுத்திரனுக்கு இதம்பெற நன்மொழிகளாற் புகழ்ந்து அவன் சம்மதிபெற்று சூரியனை விடுவிக்கக்கடவாய் பாட்டா.

(பி-ம் வ-ம்.) அப்படியே செய்கின்றோம் அரசே போய்வரு கின்றோம்.

(பொ-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களே பிரம்மன் முதலி யோர் அரம்பைமேனகை திலோர்த்தமையுடன் தொட்டிலில் நித்தி ரைசெய்யும் ராஜகுமாரனிடம் சென்று தாலாட்டி ஆசீர்வாதம் சொல்லி உபசரிக்க குழந்தையெழுந்து சம்பாஷிக்கும்விதம் காண் பீர்கள் கனவான்களே.

(பி-ன்-வ-ம்.) பெண்ணே மேனகைதிலோத்தமை அரம்பா நீங்கள் பாலனுக்குதிவ்யமான ஆடல்பாடல்கள்செய்து தாலாட்டி னால் சூரன்குமாரன் நித்திரையிலிருந்து எழுந்திருப்பான் நமது கோரிக்கையை முடித்துக்கொள்ளலாம் பெண்களே.

(அரம்பாஸ்ரீகள்-வ-ம்.) அப்படியே இதோ ஆடிப்பாடி நடிக் கின்றோம் பிரமதேவரே.

## அரம்பாஸ்ரீகள் தரு.

இ-ம்-சவுராஷ்ட்ர-ஏகதாளம்.

பல்லவி.

எனிந்தநித்திரைகொண் டிருக்கிறாய்நீபாலா
எழுந்திடாய் என்சீலா. (ஏ)

அநுபல்லவி.

மானிலமெல்லாமயங்கி இருள்சூழ்ந்து
மதிகுலைந்தழுகிறார் மகதேவர்களுமாழ்ந்து. (ஏ)

சரணம்.

சூரியனைக்கட்டி சோதிக்கிறாயின்னும்
சுந்தரமுள்ளஎன் சொகுசுள்ளநல்லணியே
சோருதேபிராணிகள் சூழ்கடல்மண்மேலே
துதிக்கிறோமுன்னையே துலங்குங்கண்மணியே. (ஏ)
ஜாலம்செய்வதுனக்கு சரியல்லவடாகண்ணே
சங்கடமனட்டிருேம் சமயமிதுவேகாரடா
வேலைசூழுலகெல்லாம் வெறுப்பதுனக்கழகா
வேண்டுறோர்யாவரும் விழித்துப்பாரடா. (ஏ)

## தாலாட்டல் தரு.

இ-ம்-நாத்நாமக்ரியை.

ஆராரோ ஆராரோ அய்யனுக்கு ஆராரோ ஆராரோ
சீரானஎங்கள்தல சிறந்தசேய் எழுந்திருப்பீர்



...ன்னைதங்கதமுழவருமே அன்புமிகக்களித்தோங்க
...ன்னகருக்கிறையாக எற்றவாளெழுந்திருப்பீர்.
...ண்டஅன்னசாரத்தால் உறங்கிருக்குமன்னவரே
...தண்டதிட்டோமுந்தனுக்கு தெளிந்துநீயெழுந்திருப்பீர்
...ர்த்தனிலெல்லோரும் பதைத்துருகிறைந்தழுக
...ரியனைக்கட்டிவைத்த சுந்தரனேஎழுந்திருப்பீர்
...யிரத்தெட்டண்டம் ஆண்டிடஅவதரித்த
...செயனேகருணைவைத்து சீக்கிரமேயெழுந்திருப்பீர்

## பானுகோபன் விருத்தம்.

மண்மேல்துறத்தல்தையேநீர் மனவாட்டமிகவேகொண்டு
நண்பட்டிக்கோரிவந்த புதுமையையறிவிப்பீரே.

(பா-ன-வ-ம்.) பிரமதேவரே நீரதிகமனவாட்டத்துட னிங் குவந்தகாரணமென்ன அறிவிப்பீர் பிரமதேவரே.

## பிரமன் விருத்தம்.

சூரியன்கதியில்லாமல் சோர்ந்திடப்பிராணியெல்லாம்
சோரியுன்னிடமேவந்தேன் கேள்வியைமீட்கத்தானே.

(பி-ன்-வ-ம்.) அப்பாபோர் நீசூரியனைக் கட்டினமகிமையால் ஒளிக்குறைந்துலகத்திலுள்ள பிராணியெல்லாம் சோர்ந்ததினின் று சீக்கிரம் மீட்கவந்தேன் போரா.

(பா-ன்-வ-ம்.) பாட்டனாரே சூரியன்வேண்டுமாயின் உமது பதுடக்கலத்தைத் தந்தால்விடுவேன் மறுத்தால் விடமாட்டேன் போம் போம் பாட்டனாரே.

(பி-ன்-வ-ம்.) அப்பாபோர் இதோமந்திரபூர்வமாக வுனக்கு என் அடையாளமாகவும் திரத்தையும் பிரம்மாஸ்திரத்தையும் தந்தேன் ஏற்றுக்கொண்டு பிரகாசம் பொருந்திய சூரியனை விட்டுவிடுவாய் போரா.

(பா-ன்-வ-ம்.) தேவர்களே இதோ சூரியனைவிட்டுவிட்டேன் உங்களிருப்பிடம்செல்வீர்கள் தேவர்களே.

(இராசதூதர்கள்-வ-ம்.) இராஜாதிராஜபரமேஸ்வரா உங்கள் குமாரன் சூரியனைவிட்டுவிட பிரமனிடத்திலிருந்து மோகனாஸ் திரம் பிரம்மாஸ்திரம் இவைகளைப் பெற்றுக்கொண்டு விட்டு விட் டார் இராஜாதிராஜபரமேஸ்வரா.

(சூ-ன்-வ-ம்) ஆ-ஆ-சந்தோஷித்தேன் வீரர்களே மந்திரிமார்களே இன்றுமுதல் எனது புத்திரனுக்கு பானுகோபன் என்னும் திருநாமத்தை விளக்கிவைவேண்டும் வீரர்களே மந்திரிமார்களே.

(ம-ன்-வ-ம்) அப்படியே விளங்கும்படி செய்கின்றோம் ஆண்டவா.

## சூரபத்மன் விருத்தம்.

சேனாதிபதியேயும் சிறந்ததோர்படையுஞ்சென்று
வானோர்க்குப்பதியாய்வாழும் வச்சிரபாணிதன்னை
நாண்டியமழைத்ததாக நயந்துநீவினாவிலின்றே
போனதுதெரியாவண்ணம் போய்ப்புதன்றனைதருவாயே.

(சூ-ன்-வ-ம்.) சேனாதிபதியே புஷ்பயின்யங்களுடன் பொன்னுலகம்சென்று இந்திரனைக் கைப்பிடியாகப் பிடித்து வருவாய் சேனாதிபதியே.

## சேனாதிபதி விருத்தம்.

ஒப்பிநீருரைத்தவாறே ஒருநொடிதனிலேயேகி
கைப்பிடியாகப்பற்றிக் கடிதினில்வருகுவேனே

(சேனாதிபதி-வ-ம்.) மகாநுபாவா நீர் ஆக்ஞாபித்த வண்ணமே இந்திரனைக் கைப்பிடியாகப் பிடித்துவர செல்கின்றேன் மகாநுபாவா.

## சூரபத்மன் விருத்தம்.

அரியகற்காவல்யாக்கும் அதிரூபவதிகளேயான்
விரிகடல்போலமய்யல் மிகவுடைத்துழல்தலாலே
புரிமகபதியினெல்லை புகுந்திந்திராணிதன்னை
ஒருநொடிதனிற்கொண்டிங் கோடிவருகுவீரே.

(சூ-ன்-வ-ம்.) அரண்மனை அந்தப்புரம் காவல்காரர்களும் ஒன்பதுகோடி பெண்சேனைகளே யான் அனேகருபமுள்ள ஸ்திரிகளைப் புணர்ந்தும் இப்பொழுது இந்திராணியின்பேரில் காதலாயிருப்பதால் அவளைசீக்கிரமாய்க் கொண்டுவருவீர்கள் காவற்பெண்களே.

## காவற்பெண்கள் விருத்தம்.

பொன்னுலகத்தைச்சேர்ந்து புகழுமிந்திராணிதன்னை
மன்னரேஅழைத்தேயோடி மகிழ்ந்திடவருகின்றோமே.



(காவற்பெண்கள்-வ-ம்.) மகாராஜனே நீங்கள் மனமகிழ இதோ அந்த இந்திராணியைப் பிடித்துவர போய்வருகின்றோம் மகாராஜனே.

## இந்திரன்கொலு போற்றிவிருத்தம்.

முன்னைநான்மறைகள்காணு முதல்வனேபோற்றிபோற்றி
தன்னையேயுணர்ந்தோருள்ளும் தலைவனேபோற்றிபோற்றி
பின்னைசேரிடையான்பாக விமலனேபோற்றிபோற்றி
என்னையேயாளும்ஆளும் இறைவனேபோற்றிபோற்றி.

(ம-ரி-வ-ம்.) போற்றி போற்றி இந்திரபூபா போற்றி.

(இ-ன்-வ-ம்.) வாழி வாழி சதாவாழி மந்திரி.

(தேவதூதர்-வ-ம்.) போற்றி போற்றி தேவராஜனேபோற்றி சூரபத்மன் சயின்யங்களில் பராக்ரமசாலிகளாகிய இரண்டுபெண்படைகளும் சர்வாயுதபாணிகளாய் சண்டைக்காயுத்தப்பட்டவர்போல ஆர்ப்பரித்து இதோவான் நாட்டைநோக்கி வந்துவிட்டார்கள் தேவராஜனே.

(இ-ன்-வ-ம்) அப்பா தேவதூதர்களே அதற்கு தகுந்த முயற்சிசெய்துக்கொள்ளுகிறேன் அஞ்சவேண்டாம் தூதர்களே.

(இ-ன்-வ-ம்.) கண்மணி சூரபத்மனுடைய சயின்யங்கள் அதோ கெட்டவண்ணங்கொண்டு இங்குவருகிறார்கள் நாம் குயிலுருக்கொண்டு பூலோகம்செல்வோம் வருவாய் கண்மணி.

(இந்திராணி-வ-ம்) தடையில்லாமல் செல்வோம் வாரும் நாயகா.

(இ-ன்-வ-ம்,) பெண்மணி இச்சீகாழித்தலமே நாமிருக்கத்தக்கவாசமான ஸ்தலமாயிருக்கிறது இவ்விடம் பூந்தோட்டமமைத்து சிவனைப்பூஜைசெய்துக் கொண்டிருப்போம் பெண்மணி.

(இந்திராணி-வ-ம.) நாயகா இதேகாலமேயாக விருப்பதால் இவ்விடமேதங்கி பூந்தோட்டமமைத்து சிவனைப் பூஜைசெய்துக் கொண்டிருக்கலாம் நாயகா.

## இராக்ஷதவீரர்கள் காவற்பெண்கள் தரு.

இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்.

பல்லவி.

தேடிப்பிடிப்போம்வாரீர் தேரியவம்சனை திகழ்பெருமிந்திரனை. தே

அநுபல்லவி.

ஆடிப்பாந்து நல்லாண்மணிகளைசுற்றி
நாடிஎந்தவிட்டும் நலமேமிகயியற்றி. (தே)

சரணம்.

பொன்னுலகெங்கும் புகுதலைவீறியோங்கினும்
மின்னல்போலேயடியே மேவாதனங்கினும். (தே)

(இராக்ஷதவீரர்கள்-ஸ்ரீகள்-வ-ம்.) அடா அண்ணமார்களே இந்தபொன்னுலகெங்கும் சுற்றியும் இந்திரனையும் அவன்தேவியையும் காணவில்லையே அரசன் நம்மையொருகாரியக்காரராக நிதானித்து அனுப்பியபணிவிடையை முடிக்க வகையற்றோமே இந்திராணியுடன் தேவராஜன் இவ்விடம்விட்டு நீங்கினதாகக் காணுகின்றது என்செய்கிறது அண்ணமார்களே.

## இராக்ஷதர்கள் கண்ணி.

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

அங்கும்இங்கும்தேடி எங்குங்காணுததால் அயருதேயுள்ளமய்யா.
பங்கமேஅவருமோ பராகுமன்னனால் பனிமதிருமெய்யா
பொன்னகரெங்குமேபோய்பார்த்துதேடியும் புரந்தரனைக்காணேமே
என்னசெய்யப்போறோம்எங்கள் மனதிற்கு எதுவும்தோணுதானேமே.
வானுடர்செய்திட்ட வஞ்சகமோயிது வழியேதுந் தோணவில்லை
சேனாபதிகளோடு சேர்ந்தசேனையுமாய்சோர்ந்தோமிதென்னதொல்லை.

(இராக்ஷதர்கள்-வ-ம்.) அடாவீரர்களே இதெல்லாம் இங்கிருக்கும் தேவர்களால் தான் இந்தகுதூகடந்திருக்கிறது இவர்களை பற்களுதிர்த்து கிட்டிமாட்டி அன்றைந்தான்போட்டு கேட்டால் தான் தெரியும் இல்லாவிடில் ஒன்றுந்தெரியாது அப்படியே செய்யுங்களடா வீரர்களே.

## இராக்ஷதவீரர்கள் தரு.

இ-ம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்.

பல்லவி.

பன்னவர்களைப்பரபம் வின்னுமலேதேகம்
குன்னும்படிநீங்கள் பண்ணுங்கள். (ப)

அநுபல்லவி.

விண்முழுதுமாவி கண்ணில்காணுமலே
உண்மையாய்ப்போனிடம் திண்ணமாய்சொல்லென்று. (ப)



சரணம்.

கெட்டித்தனங்காட்டி கெட்டியுயிர்வாட்டி
மட்டிகைகளிலே கிட்டிதனைமாட்டி.
சட்டைசெய்யாமலே திட்டென்றிருந்தாலே
துட்டர்பற்களுதிர சட்டமாய்க்குத்துங்கள். (ப)

எத்திசைபோனாலும் குத்திப்பிடித்தவர்
தேத்தியண்ணுர்தானை சுத்துங்கள்
சித்தங்கலங்கியே ஒத்துசொல்லளவும்
கத்தியழுதிட மெத்தப்பதறிட. (ப)

(இராக்ஷதர்கள்-வ-ம்.) அடாதேவர்களே இந்திரனும் அவன் மனைவியும் எங்கேபோயிருக்கிறார்கள் சொல்லுமளவும் உங்களை விடமாட்டோம் இன்னும் செய்யாத சித்திரவதைக ளெல்லாம் செய்வோம் சீக்கிரம் சொல்வீர்களடா தேவர்களே.

## தேவர்கள் விருத்தம்.

சுறுக்குடன்விடவேவந்த சூரரேசொல்லக்கேளீர்
மறுத்தனில்மகவான்சென்று மறைந்திடமறியோமின்று
நிறுக்கிநீர்பிழிந்திட்டாலும் நாங்களென்சொல்லப்போறோம்
பொறுத்துரக்ஷிக்கவேண்டும் பொன்னடிபோற்றிபோற்றி.

(தேவ-வ-ம்.) ஐயாராக்ஷதவீரர்களே இந்திரன் தன்மனைவியோடுபோனவிடம் எங்களுக்கெவ்வளவும் தெரியாது இன்னும் நறுக்கிப்பிழிந்தபோதிலும் எங்களுக்கென்னதெரிந்து சொல்லப்போகுறோம் கிருபையுற்று மன்னிக்கவேண்டும் ராக்ஷதவீரர்களே பெண்பனைச் சேனைகளே.

(பெரியராக்ஷதவீரர்கள்-வ-ம்.) அடா தம்பிமார்களே இவர்களை எப்படிக்கொன்றாலும் பிரயோசனமில்லை நாம்விரமாமயேந்திரத்தைச்சேர்ந்து ராஜனிடம் இந்திரனும் இந்திராணியும் அகப்படாத சங்கதியைதெரிவிப்போம் வருவீர்கள் தம்பிமார்களே.

(இராக்ஷதவீரர்கள்-வ-ம்) அப்படியே செய்வோம் வருவீர்களப்பா அண்ணமார்களே.

## இராக்ஷதர்கள் விருத்தம்.

சுந்தரனின்னுடெல்லாம் சோதித்துப்பார்த்தோமய்யா
இந்திரன்மனைவியாரும் இருந்திடமேகாணோம்.

(இராக்ஷதர்கள்-வ-ம்.) இராஜாதி ராஜராஜகெம்பீரா நாங்கள் இந்திரபுரஞ்சென்று ஒவ்வொரு இடங்களிலும் பார்த்தும் இந்திரனும் அவன்மனைவியும் அகப்படவில்லை அங்கிருக்கும் தேவர்களை படாதபாடுபடுத்தி அன்னந்தண்ணீர்போட்டு கட்டிமாட்டி இன்னும் அநேகமான தொந்திரவுகள் செய்தும் அவர்கள் போனவிடம் தெரியாதென்று சொல்லிவிட்டார்கள் எங்கேயோ ஒடிமறைந்தான் ராஜகெம்பீரா.

(சூர-வ-ம்.) மந்திரி நமது பட்டணத்திலுள்ள பலகோடி தூதரைவரவழைப்பாய் மந்திரி.

(மந்-வ-ம்.) இதோவரவழைக்கின்றேன் ஆண்டவரே.

(மந்-வ-ம்.) அடா சேவகா நமதுபட்டணத்திலுள்ள தூதர்களை வரவழைப்பாய் சேவகா.

(சேவ-வ-ம்.) அப்பா தூதர்களே ராஜன் அழைத்துவரச் சொன்னார் வாருங்கள்.

(தூதர் வ-ம்.) இதோ ஒடிவருகுறோமப்பா சேவகா.

(தூதர்-வ-ம்.) போற்றி போற்றி இராஜகெம்பீரா போற்றி எங்களை யாதுகாரியமாக வரவழைத்தீர் தெரிவிக்கவேண்டும் இராஜகெம்பீரா.

(சூர-வ-ம்.) தூதர்களே நீங்கள் அதிசீக்கிரமாய் விண்மண் பாதலங்களாகிய இம்மூன்றிடங்களென்றும் க்ஷேமமாக ஆராய்ந்து இந்திரனையும் இந்திராணியையும் இருக்குமிடம் தெரிந்துரைப்பீர்கள் தூதர்களே.

(தூத-வ-ம்.) சுவாமி இப்பொழுதே சென்று தெரிந்துவர செல்கின்றோம் சுவாமி.

## தூதர்கள் தரு.

இராகம்-தன்யாசி-அடதாளம்.

பல்லவி.

தேடித்தேடிப்பார்த்தும் தேவர்கோனிருப்பிடம்
தெரியவில்லை என்றுசெப்புவோம். (தே) (ப)

சரணம்.

காடுமுன் மலைகளும் நாமடையவேவெற்றி
ஆடிப்பார்க்கினும் அலைந்தலைந்துகத்தி. (தே) (ப)



ஆனதுசெய்வானேனோ சேர்குதேயுள்ளமும் வீரத்தனத்திலே
ஆர்வரர்களுடன் ஆர்பரித்தலைந்து
தேடித்தெரியாமல் தியங்குதேமனம் கோந்து (தே).

(தூதர்-வ-ம்.) தூதர்களே இந்த மூன்றுலகமும் பாராத இடமில்லை இந்திரனும் இந்திராணியும் அகப்படவில்லை இந்தசீகாழித்தலத்தில் தானிருப்பார்களென்று எண்ணினோமே இங்குமகப்படவில்லையே என்செய்வது வேறிடம்செல்வோம் வாருங்கள் தூதர்களே.

(தேவர்-வ-ம்.) ஐயா தேவர்களே எல்லாசுகங்களையு மனுபவிக்க பூலோகத்திலிருக்கப்பட்ட சீகாழித்தலத்தில் இறைவனாகிய இந்திரனும் இந்திராணியும் ராக்ஷதவீரர்களுக்குப் பயந்து யாதொரு துன்பமில்லாமல் குயிலுருக்கொண்டு அத்தலமடைந்து தூதர்கள் தேடிப் போகுங்காலம் மூங்கிலுருக் கொண்டிருக்க ராக்ஷதவீரர்கள் தேடிப்பார்த்து காணாமல் போய்விட்டார்கள் இனிநாம் சீகாழித்தலம்சென்று இந்திரனிடம் நாம்பட்டகஷ்டங்களை தெரிவித்து எல்லோரும் கைலயங்கிரிக்குச் சென்று நமது குறைகளைபோக்கிக் கொள்வோம் வாருங்கள் தேவர்களே.

(தேவர்-வ-ம்) தடையில்லாமல் செல்வோம் வாருங்கள் தேவர்களே.

## தேவர்கள் விருத்தம்.

இந்திரபூபாபோற்றி இனிநாங்கள்குறையைத்தீர்க்கச்
சந்திரன்கலைச்செல்வோம் சுருக்குடன்வருவாய்போற்றி.

(தேவர்-வ-ம்.) போற்றி போற்றி இந்திரபூபா நீரும் உங்கள் பத்தினியாரும் ராக்ஷதர்களுடைய மாய்கையில் அகப்படாமல் இந்தசீகாழித்தலத்தில்வந்து பூந்தோட்டமமைத்து சிவபெருமானை பூஜித்து சுகமாயிருக்கின்றீர்கள் நாங்களந்த ராக்ஷதர்களிடத்தில் சிக்கி எங்களுக்கு கட்டி அன்னந்தண்ணீர் மாட்டி அவர்களால் பலவிதமான துயரங்களை அனுபவித்து பிறகு எங்கள் வேண்டுதலைக் குறித்து அவர்கள் மனமிரங்கி விட்டுப்போய்விட்டார்கள் இப்படிக்குக் கஷ்டப்பட நீங்கள்பார்ப்பதுமுகா இப்பொழுதே அந்த ராக்ஷதர்ப்புன்மை மாற்றுதற்க கைலயங்கிரிக்குச் சென்று நமது குறைப்பாடுகளை சிவபெருமான்சந்நிதியில் முறையிட்டுக் கொள் வோம் வாருங்கள்

(இந்-வ-ம்.) தேவர்களே இந்திராணிக்குத் தெரிவித்து வருகி றேன் அப்படியே செல்வோம் வருவீர்கள் தேவர்களே.

(இந்-வ-ம்.) கண்மணி யான் கைலையங்கிரிக்குச் செல்கின்றேன் வருமளவும் அரிஹரபுத்திரரை வரவழைத்து காப்பாற்ற அவரை தியானிக்கின்றேன் கண்மணி.

## இந்திரன் தரு.

இ-ம்-இந்ரூபதான்-சாப்பு-தாளம்.

அரிஹரபுத்திரரேவாரீர் ஆபத்தைதுதாககட (அரி)
பரிசரித்துளங்கள் பாபங்கள்போக்க
விரிதருமூலகினில் விரைவினில்காக்க. (அரி)

## அரிஹரப்புத்திரர் விருத்தம்.

இந்திரனேகதறவேண்டா மிதோவந்தேன்வந்தேன்றனே
தந்திராவுன்னைக்காத்துத் தழைத்திடச்செய்யத்தானே.

(அரிஹ-வ-ம்.) இந்திரா மனவருத்தம் விடு இதோவந்தேன் யாதுவரம் விரும்பினையோ அதைத்தாவிருப்புற்றனம் கேழ்ப்பாய் இந்திரா.

(இந்-வ-ம்.) போற்றி போற்றி அரிஹரப்புத்திரரே போற்றி சூரபத்மன் முதலானவர்களால் மிகவும்வருந்தி பொன்னுலகவாழ்வை யிழைந்து பதிதராய் இத்தலத்தில் வந்தும் அக்கொடியவருக் கஞ்சி மூங்கிலுருக்கொண்டு மனைவியும் நானுமாகத் தவம்செய்து கொண்டிருக்க தேவர்களில்சிலர் சூரனுக்கஞ்சி என்னை உலகமெங்கும்தேடி முடிவில் இத்தலத்திலென்னைக்கண்டு தங்களுக்கு நேர்ந்தகுறைப்பாடுகளைத் தெரிவித்து அதனைபோக்கி ரக்ஷிக்கும் படியாக முறையிட்டுப்புலம்பினின்று திருக்கயிலாயத்திற் கென்னை அழைத்துப்போய் பரமசிவத்தினிடத்தில் குறைகளைவிண்ணப்பம் செய்து அவரனுக்கிரகத்தைப்பெற்று அவரத் தீர்மானித்திருப்பதால் யான்போய்வருகிறபரியந்தம் எனது பத்னியாகிய இந்திராணியை ராக்ஷதர்களுடைய பயமில்லாமல் காப்பதுதேவரீர் கடமையாக விருக்கவேண்டும் அரிஹரப்புத்திரரே.

(அரிஹ வ ம்.) தேவர்கோனே உமது மனைவிக்கு ராக்ஷதர்களுடைய உபத்திரவம் நேராமல்பாதுகாத்து வருகின்றேன் ஊனி*



யெனிட்டுனக்கோ மென்கிற அதயிர்யம்வேண்டாம கைலையங்கிரிக் குச்செல்வாய் தேவர்கோனே.

(இந்-வ-ம்.) மகாபாக்கியம் இதோசெல்கின்றேன் ஆபத்தை த்தீர்த்தவா.

(அரிஹ-வ-ம்.) சேனைத்தலைவனே மகாகாளா இந்திரன்பர மசிவனைதரிசித்து வருமளவும் இந்திராணிக்கோர் கவலையும் நேரா மல்பாதுகாத்தவருவாய் செல்கின்றேன் மகாகாளா.

(மகாகா-வ-ம்) செரற்படிகாத்து வருகின்றேன் மகாநு பாவர்.

(இந்-வ-ம்.) பெண்மணி உனக்கு யாதொருகுறையும் இனி நேரிடாது மனக்கவலை யற்றிருப்பாய் யான்தேவர்களுடன் கைலை யங்கிரிக்குச் செல்கின்றேன் பெண்மணி.

(இந்-வ-ம்.) சீக்கிரம்போய் வருவீர்நாயகா.

## இந்திரன் விருத்தம்.

தேவர்காளிப்போதேபோய்த் திங்களைத்தரித்தோனைக்கண்
டாவலாய்ப்பணிவோம்வாரீர் அனுகாடல்வினைகள்தானே.

(இந்-வ-ம்.) தேவர்களே பரமசிவன்வீற்றிருக்கும் கைலைக்குச் செல்வோம் வருவீர்கள் தேவர்களே.

(தேவர்-வ-ம்.) இதோவருகிறோம் இந்திரபூபா.

## இந்திரன் விருத்தம்.

புந்தியில்சிவனைப்போற்றிப் புனிக்கும்புனிதஞான
நந்திஎம்பெருமானேயுன் நற்பாதம்போற்றிபோற்றி.

(இந்-வ-ம்.) போற்றி போற்றி நந்தி எம்பெருமானே போ ற்றி.

## நந்திதேவர் விருத்தம்.

இந்தகால்வேளை தன்னி லிங்குநீவரத்தேவரோடு
வந்தகாரணத்தை வண்மையாயுரைசெய்வாயே.

(நந்தி-வ-ம்.) தேவர்கோனே யாதுகாரணமாய் தேவர்களு டன் இங்குவந்தீர் தெரிவிப்பீர் தேவர்கோனே.

## இந்திரன் தரு.

இ-ம-தர்பார்-ரூபகதாளம்.

பல்லவி.

சூரனுலோடிவந்தோம் அவன்சொல்லும்வேலைசெய்து
சோர்வடைந்து மைந்தா. (சூர)

சரணம்.

ஆருங்கதியில்லை ஆதரித்திடவே
ஆவலுண்டோ விடும்வேண்ட
அவிதமொரி அங்கேதோடிசேர்ந்தோமின்
கரும்புவேலையிலே அப்பணிடம்தாண்ட. (சூர)

(இந்-வ-ம்.) ஞானானந்த சொரூபமாய் விளங்கும் நந்திப் பெருமானே சூரபதுமன் இரக்கமற்று எங்களுக்கு பணிவிடைகளைச்செய்து மிகவும்வருந்தி மற்றொரு சார்பும்இல்லாமையால் அடியோங்கள் துயரங்களை சிவபிரானுக்குத் தெரிவித்து அதற்கொரு நற்றுணைமார்க்கத்தைத் தேடப்போகவந்தோம் நந்தி யெம்பெருமானே.

(நந்தி-வ-ம்.) புரந்தரா இன்னமும் உங்கள் வருத்தங்களொழியுங்காலம் சமீபிக்கவில்லை பரமேஸ்வரன் சனகசனந்தனர் சனற்குமாரர் சனத்சுஜாதராகிய தவசிரேஷ்டருக்கு ஞானயோக நிலையைக்காட்டிக்கொண்டு ஏகாந்தமா யிருக்கின்றனர் இச்சமயம் யாவரும்போய் தரிசிக்கக்கூடாதென்பதை அறிவாய் புரந்தரா.

(இந்-வ-ம்.) சுவாமி நாங்கள் மறுபடியும் இவ்விடம்விட்டு எவ்விடம் போனாலும் ராக்ஷதர்கள் எங்களைப்பிடித்து சிறையடைப்பார்கள் இதற்குச்சந்தேகமில்லை ஆதலால் இனைசரண்யனை நமஸ்கரிக்க காலம்நேருமளவும் தேவரீர் எழுந்தருளும் முகவாயில்மண்டபத்துக் கொருபாரிசத்தில் காத்திருக்கிறோம் தேவரீர் அன்புற்று விடைதரவேண்டும் சுவாமி.

(நந்தி-வ-ம்.) தேவராஜனே நீங்கள் யாவரும் வருத்தமின்றி இத்தலத்தி லிருக்கக்கடவீர்கள் தேவராஜனே.

## பொது கன்னிகள்.

இ-ம்-கேதாரம்-ஏகதாளம்.

கொண்டல்போலடியடித்துக் கொக்கரித்துமே
அண்டமண்டந்தத்தளிக்க அசமுகியாளான்
பாபுருஷர்களனைவர்களையுமே பார்த்தாட்டவே



சாமாயகாமலாகிரியால் சரசமாடவே
தெட்டமானமன்றில் கொண்டுசெடுக்சயாரையும்
கிட்டமூடவெறும்பி திப்பொரிவைவாரிமே
துடிக்குவார்க்கசைபடுத்துபேசி தான்முகியோடு
முடிக்குடனிந்நிலனி சோலைமுனைந்துதேடியே
செம்பட்டமயிரொங்க ளுமாயி செழித்திலங்கவே
தம்பட்டம்வாய்ப்பறையடித்து தாண்டிவாராளே.

(அசமு-வ-ம்.) அடிபரங்கி இந்தசெழிப்பான நந்தவனத்தைப்பார்த்தனையா தேவேந்திரன் நமக்கஞ்சி பொன்னுலகத்திலிருந்த கற்பகச்சோலையை இத்தலத்திலிறக்கி வைத்தான்போ லிருக்கிறதடி நாங்கிரியாத இடமிராது நான் அலையாத தேவர்களும் முனிவர்களும் தவசிகளும்மிகார்கள் அப்படிச்சொப்போன எந்தவிடங்களிலும் இப்பேர்ப்பட்ட உன்னதமான பூங்காவைக் கண்டதில்லை அம்மம்ம! இதன்விசாலத்தையும் தழைத்துக்குளிர்ந்த நிழலைப்பாப்பி பரிமளம் வீசுவதைப்பார்க்கப் பதினாயிரம் விழிகள்வேண்டும் போலிருக்கிறதடி அடி இதனைப்புகுந்து முற்றிலும் பார்த்துப்போவோம்வாடி பரங்கி.

(மகாகா-வ-ம்.) ஓ ஓ இவள் சூரன்தங்கையாகிய அசமுகியாயிருக்கவேண்டும் இவள் துன்மார்க்கினை கேள்விப்பட்டிருக்கின்றோமல்லவா ஆகிலும் இப்பாதகியின்து செய்கைகளைத் தெரிந்த பின்பு அதற்குத்தகுதியான பிராயச்சித்தத்தை நடத்தக்கட வோம் பக்கத்திலிருந்து பார்த்துக்கொண்டிருப்போம்.

## இந்திராணி தரு.

இ-ம்-செஞ்சுருட்டி-ஏகதாளம்.

பல்லவி.

சம்போசிவசங்கரனே சமயங்கார்தர்ப்பரனே. (சம்)

அநுபல்லவி.

செம்பொனம்பலவனே தேடுறேனுந்தனையே. (சம்)

சரணம்.

கருணாகரனேயென்னை கடைக்கண்பார்த்தருளய்யனே
சரணாகதியடைந்தேன் சங்கடங்களைகளுன்னே. (சம்)
வேதாந்தசித்தர்கோடி வேண்டிப்பணியும்போதா
பாதாம்புயத்தைதாரும் பற்றினேனேபிரக்கியாதா. (சம்)

(அசமு-வ-ம்.) ஆ ஆ இவள்வடிவத்தைப் பார்த்தினால் தோழி இவளே இந்திராணியாகும் இவள் இளமைப் பருவத்தைப்போன்ற ரூபலாவண்யத்தை இதுபரியந்தம் நாமெவ்விடத்திலும் கண்டதில்லை இத்தகையசுந்தரமுள்ளவள் அண்ணனுக்கன்றி சகலலோகங்களும் அமைந்து பலராலும் புகழப்பெற்ற பொன்னுலகிலிருந்து இவ்விடம்வந்து புகுந்தொளித்திருக்கின்றனள் என்தமயன் இவளிடத்தில் அதிகமய்யல்கொண்டு பிடித்துவரும்படிக்கி அனவரதசேனைகளை அநுப்ப அவர்களும் வீராவேசத்துடன் ஆயுதபாணிகளாய்தெய்வலோகத்தைச்சேர்ந்து அரண்மனைமுதலிய இடங்களில் தேடிக்காணாது மீட்டும் தூதர்களாலும் கிடையாமல் நமக்கு சுலபமாய்க் கிடைத்தவளை அண்ணனை சேரும்படி கொண்டுபோகலாம் இவ்விடத்தி லெவர்களும் காவலுமில்லை அருகில்செல்வோம் தோழி.

(அஜமு-வ-ம்.) அம்மா இவளை எந்தவிதத்திலும் உங்களண்ணனுக்குக் கொண்டுபோய் சேர்க்கவேண்டும் தாயே.

(இந்திராணி-வ-ம்.) ஆ ஆ இதென்ன இப்பேர்ப்பட்ட கோரமான உருவுடன் யாரோ நம்மெதிரில் நிற்கின்றாள் இவளைப்பார்க்குமிடத்தில் பசாசைப்போலவும் ராக்ஷசிபோலவும் இருக்குகன்னிகையைப்போலவு மிருக்கின்றது அல்லது காளிச்சேவல் செய்பவளோ இன்னாளெனத் தோன்றவில்லையே அதிசயமாகுதே சரி இந்த இடம்விட்டு அப்புறம் செல்வோம்.

## அசமுகி விருத்தம்.

நில்லடி இந்திராணி என்நிலையைவிட்டோடிவந்தாய்
சொல்லடி அதாலே சுருக்குடனன்னனுன்னை
புல்லிட அழைக்கத்தேடப் புலப்படாதொளித்தாயின்று
மெல்லடிவைத்தென்னோடு மேன்மையாய்வருகுவாயே.

(அசமு-வ-ம்.) அடி நில்லடி நில் இந்திராணி உன்னிமித்தம் எனது அண்ணன் அதிககாதல்கொண்டு வீரர்களையும் தூதர்களையும் விட்டுத் தேடிப்பார்க்க அகப்படாமல் இங்குவந்து ஒளிந்திருக்கின்றனை எனது அண்ணன் சகலைச்வரியங்களும் அழியாத காயமும்பெற்று அரசுசெய்திருப்பதைப்போல உனது புருஷன் இத்தகையவிஷயங்க ளொன்றுமில்லாததாலும் தேவர்களும் முனிவர்களும் இந்திரனும் எங்களிடத்தில் ஏவல்செய்யுந் தீனமகனையும் அடைந்திருக்கும் எங்கள் அண்ணனைச் சேர்ந்தால் மகதானவைசுவரியத்தை யடைவாய் என்னுடன் வருவாயடி இந்திராணி.



## இந்திராணி விருத்தம்.

தீங்குசஞ்சரக்கவந்த தீப்பொறிவாயைமூடிப்
பாங்குடனிவ்விடம்விட்டுப் பாதகியோடிப்போடி.

(இந்திரா-வ-ம்.) அடி சண்டாளி கற்புநிலைதவறாத எனக்கு அவிவேகமான நடைகளைப்போதிக்கத் துணிந்தாய் இங்கிருந்தால் உன்மானமழிந்து மதிகுலையநேரிடும் சீக்கிரம் இவ்விடம் விட்டு ஓடுவாயடி கல்லையும் பிளக்கும் வார்த்தைசொன்ன துஷ்டி.

## அசமுகி தரு.

இ-ம்-ஆனந்தபைரவி-ஏகதாளம்.

பல்லவி.

நில்லடி நில்லடி என்தன்சொல் லென்னடி மனம் சல்லியமாகுதென்சொல். (நில்)

அநுபல்லவி.

வல்லவீரவர்வந்தாலும் வணங்கிடச்செய்குவேன்
வாதுபரியாதென்முன் வலிகரம்பற்றிழுப்பேன். (நில்)

சரணம்.

பாடுள்ளதனுடனேஓடி அண்ணனை நீயேகூடி சுகமிருப்பாய்நாடி
ஆடிப்பாடிதேடினாக்காய் தெளிட்டாதேயிந்தசொல்லை
நாடிமேல்வந்த துன்பியான் மகிழ்வேனில்லாமலிருத்தாலே. (நில்)

## இந்திராணி கண்ணி.

இ-ம்-ஹுசேனி-ரூபகதாளம்.

அய்யய்யோபாதகி அலைக்கழித்திழுக்கிறாள் அய்யனாரே
ஐயவாய்ச்சூலிபோலே புலம்பவிட்டாயோ அய்யனாரே
பாதகிசுரத்தையும் பற்றியே இழுக்கிறாள் அய்யனாரே
பாம்பின்வாய்த்தேரைபோல் பதைக்கிறேனெந்தன் அய்யனாரே
மயங்கினைக்கிப்போது தனிசெய்துகாப்பாய் அய்யனாரே.

## மகாகாளன் விருத்தம்.

கோரதுந்தகனோடு கரியவாளைத்தாங்கி
வீரமாயோடிவந்தேன் விண்டிடவேண்டாந்தாயே.

(மகாகா-வ-ம்.) அம்மா இதோ நான் வந்துவிட்டேன் அஞ்சவேண்டாம் வாழிவாழியம்மா இப்பாதகியாகிய கொடிய அசமுகிக்கெவ்வளவும் பயப்படவேண்டாம் உன்னைத்தொட்ட இவள் கரத்தை வெட்டித்தள்ளி விடுவிக்கிறேன் தாயே

(இந்திரா-வ-ம்.) போற்றி போற்றி அரிஹரப் புத்திரருக்குப் படைத்தலைவனாகிய மகாகாளனே போற்றி

(மகாகா-வ-ம்.) எதுஷ்டியாகிய அசமுகி; தேவராஜன் பத்தினியாகிய இந்திராணியை வஞ்சித்தெங்கே கொண்டு போகுறாய் எவர்களுமிங்கில்லையென்று நினைத்திந்த காரியத்தை செய்யலாமோ போதுஷடிநில்லடி நில்.

(அசமு-வ-ம்.) அடாபயலே முத்தொழிலை நடத்துகின்ற மூம்மூர்த்திகளும் என்னைக்கண்டு நடுங்குவார்களெனின் நீயிவ்வளவு உன்னை இவ்விடக்காக்கும்படியாய் வைத்தவன்றடா சொல் மூடா

(மகாகா-வ-ம்.) அடி துன்மார்க்கி திரிலோகங்களிலுந் துன்பமில்லாமல் காக்கும் தினதயாபரன் நீருண்டமேகத்தை யொத்த கரியதிருமேனிபெற்றவன் வெள்ளையானைமீதுபவனிவருபவர் வலி மிகுக்கொப்பற்ற அரிஹரபுத்திரன் ஏனைக்கப்பணிவிடைகளைகட்டளையிட்டார் நான் அவர் சேனைத்தலைவர்களும் என்பேர் வீரில் வீரனான மகாகாளன் இனியாவது இந்திராணியை விட்டுவிடு துன்மார்க்கி.

(அசமு-வ-ம்.) அடாபயலே நீ அந்த இந்திரனுடைய தொண்டனல்லாமல் வேறல்ல என்னை மிரட்டவந்தபடியால் இதோ என் கரத்தில் விளங்கும் சூலத்தால் மார்புக்குழிக்கு பார்த்து மாளும்படி விடுகிறேன் பாரடா துஷடா.

### அசமுகி தரு.

இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

சிறந்தகுலத்தைவிடுத்தேன் சிறுவனேயுந்தன்மேலே. (சிற)
திறந்தமார்பையுடைக்க நிகரில்லாமலேயிப்போ
கறந்துறையும்படிக்கி கண்டித்துகளைதப்ப. (சிற)

### மகாகாளர் தரு.

இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

வீரமாய்வாளாலேவெட்டிவேன் வெடிபடநீக்கிறுன்பொடிபொடியாக்கிட
சீரமாய்விட்டசூலத்தை தேவர்களுமஞ்சும்படி
கோரமாய்வந்தருபியே கோர்த்துருக்கியும்படி. (வீர)

(அசமு-வ-ம்.) அடி துன்முகி இவனைஜாக்கிரதையாய் பிடித்துக்கொள் நான்மலைகளைவாரி இவன் தலைமீதுபோட்டு கொன்றுவிடுகிறேன் ஜாக்கிரதையாய் பிடித்துக்கொள் துன்முகி.

(துன்மு-வ-ம்.) அம்மா அதிகஜாக்கிரதையாய்ப் பிடித்துக்கொண்டிருக்கின்றேன் தாயே.



### அசமுகி தரு.

இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

உயர்ந்தமலையைத்தூவினேன் உனைநசுக்கிதரிக்க. (உய)

### மகாகாளன் தரு.

இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

துர்க்கினாளாலேவீசினேன் ஒடும்படி துண்டு துண்டாம். (து)

(அசமு-வ-ம்.) ஆஹா இவன் கயிலிருந்தவாளும் பொடியாய் போய்விட்டது இனிநாம் இந்திராணியைப்பிடித்தெறிவோம் இனி இவனால் என்னசெய்யக்கூடும் இதுவேசமயம் செல்வோம்.

### மகாகாளன் தரு.

இ-ம்-சௌராஷ்டிரம்-ஏகதாளம்.

பல்லவி.

நில்லடி துன்மார்க்க கள்ளியே நீ
நிற்குருபிவிட்டு நீக்கு தாமலென்தனிடம். (நில்)

சரணம்.

வருவதுமென்கையிடைப்பிடி வெட்டிவிட்டோமென்கைட
வாதுமுறையிலென்னுடன் வகையறியாமல்
வாய்கைகளிதுடனே வாடியுமைபடாளாலே
வருகரத்தைப்பற்றி வாட்டுமறுத்திட்டேன்பார். (நில்)

(மகாகா-வ-ம்.) அடி துன்முகி இந்திராணியைத்தொட்டகை உனக்கு இருக்கலாகாது இதோவெட்டித்தள்ளிவிட்டேன் நீ ஓடிப்போவீர்கள் அசுரர்களே.

(அசமு-வ-ம்.) அடி துன்முகி திரிமூர்த்திகள்முதலிய பலரும் புகழுமென்னுடைய என்முன் இக்கோலத்துடன் எப்படிபோவேன் அசுரர்களும் இனி என்னைக்கூட விரும்பமாட்டார்களே என்னசெய்கிறது தோழி.

(துன்-வ-ம்.) அம்மா அசமுகி நாயகியே நீ விசனமின்றி சென்று நமதரசனுக்கு நடந்ததைத் தெரிவித்தால் அந்த க்ஷணத்தில் தேவர்களைப் பிடித்துவந்து தகுந்த தண்டனை செய்து கொல்லுவார் மேலும் நமக்குமாத்திரம் இவ்வவமானம் நேரிட்டதின்று முன்னாளாம் மூர்க்கசகத்தில் தக்கன்செய்த யாகத்தில் வந்திருந்த தேவகன்னியர்கள் வீரபத்திரரால் சிறைபிடித்துபூங்காக்கு முதலிய உறுப்புகள் அறுபட்டு விருந்தனர் கேட்டதில்லையோ நமக்குமாத்திரந்தானே இப்படி சேர்ந்தது வாருங்களிருவரும் போவோம் அம்மா அசமுகியே.

## அசமுகி விருத்தம்.

பாரடியுனைப்பிடித்துப் பாங்குடன்தேவரோடு
நேரிடக்கொண்டுவந்து நெகிழவேசிறையடைத்து
வேரடிக்கனிவதைப்போல் வெட்டிடச்செய்யாவிட்டால்
காரிடி இடிக்குஞ்சூரன் தங்கையாவேனோபார்.

(அசமு-வ-ம்.) அடி இந்திராணி உன்னையும் தேவர்களையும் தூதர்களால் பிடித்துவரச்செய்து மாறாத சிறையடைத்து வெட்டிச்சின்னபின்னம் செய்யாவிட்டால் சூரன்தங்கையாவேனோபார் டி இந்திராணி.

(மகாகா-வ-ம்.) தாயே அசுரப்பாட்டி மக்களுக்கெவ்வளவேனுமஞ்சாதே உன்கணவனாகிய தேவராஜன் வருமளவும் உனக்கியாதோரிடையூறின்றி காக்கக்கடவேன் மனக்கவலையற்று பழையபடியே தவம்செய்யக்கடவீர் நான் எனதிருப்பிடஞ் செல்கின்றேன் தாயே.

(பொ-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களேநாரதர் இந்தவிஷயங்களை யெல்லாம் தெரிந்து கயிலாயம்சென்று இந்திரனைக்கண்டு ஆசீர்வதித்து இந்திராணிக்கடுத்த துன்பங்களையும் மகாகாளன் சகாயங்களையும் சொல்லக்கேட்ட இந்திரன் நந்தியெம்பெருமானிடம் உத்திரவுகேட்டு பூலோககயிலாயமாகிய சீகாழித்தலத்தை வருதல் காண்பீர்கள் கனவான்களே.

## இந்திரன் விருத்தம்.

நலமதேகாணும்சொல்லும் நாரதமுனிவேநேசம்
ஜலமதேபெருகவந்த சங்கையையுரைப்பீர்போற்றி.

(இந்-வ-ம்.) போற்றி போற்றி நாரதமகாமுனிவரேபோற்றி

## நாரதர் விருத்தம்.

பொன்னகர்க்கிறைவனான புரந்தராயுன்னைக்காண
இன்னகர்க்கோடிவந்தேன் இசைப்பேன்வாழிவாழி.

(இந்-வ-ம்.) சுவாமி எதாயினும் விசேஷமிருந்தால் தெரிவிக்கவேண்டும் சுவாமி.

(நார-வ-ம்.) இந்திரபூபா தெரிந்தவரையில் சொல்லுகிறேன் கவனித்துக்கேள், சூரன் தங்கையாகிய அசமுகியென்பவள் உனது தேவியின் காதைப்பற்றி இழுக்க மகாகாளர் அவளதுகரத்தைத் துண்டித்ததுடன் தோழியாகிய துன்முகியையும் காமுத்தனுப்பினார் அப்பா இந்திரபூபா.



(இந்-வ-ம்.) சுவாமி யான் என் மனைவியைப்பார்த்து வருகின்றேன் சுவாமி.

(நார-வ-ம்.) இந்திரபூபா அப்படியே போய்பார்த்து வருவாய் இந்திரபூபா.

(இந்-வ-ம்.) போற்றி போற்றி நந்தியெம்பெருமானேபோற்றி அடியேனிடம் அன்புவைத்து எனக்கு அசமுகியென்னும் பாதகியினால் நேரிடஇருந்த கேடுகள் நீங்கப்பட்டேன் பூலோகத்திற்குசெல்ல எனக்கும் மற்றதேவர்களுக்கும் விடைதரவேண்டும் மகாதுபாலா.

(நந்தி தே-வ-ம்.) போய்வரக்கடவீர்கள் தேவர்களே.

## இந்திரன் தரு.

இராகம்-ஆநந்தபைரவி. தாளம்-ஆதி.

பல்லவி.

நீசெய்தவுதவிக்குநானென்ன செய்யப்போறேன்
நீதிமகாகா ளனே. (நீ)

அநுபல்லவி.

சீர்பெறவுலகினில் சீகாழியையடைந்து
வேறுசிந்தையில்லாமல் வேண்டும்பொருள்தந்து. (நீ)

சரணம்.

தானின்மனைவியுமா தவித்திடும்வேளைவந்த
துயரபயமே நாசமாமேவன்
ஆவியுள்ளளவும் அகலாமலிருக்க
தேவியைக்காத்திட்ட தேவாசுரர்பேசிருக்க. (நீ)
எந்தனுக்கிட்டது எதும்வாராமலே
என்றும் காருண்யமையனே
சிந்தைதனைத்துவாடி சீகாழிதன்னூரான்
சொந்தவேலைசெய்து சோர்ந்தேன்வெகுநேரன். (நீ)

(இந்-வ-ம்.) கண்மணி இவரால் உனக்கு யாதோர் குறையும் நேரிடாமல் காப்பாற்றினதைப்பற்றி நாம் எந்தகாலத்திலும் இவருடைய விஸ்வாசத்தை மறவாமலிருப்பதோடு இவரே நம்மையடைந்து சகாயங்களைக்காக்கவேண்டும் கண்மணி.

(இந்திரா-வ-ம்.) நாயகா நானப்படியே தானெண்ணிக்கொண்டிருக்கின்றேன் ஆனால் அந்த அசமுகியானவள் போகும்போது நம்மை எந்தவிதத்திலும் பிடித்து சிறைவைப்பதாய் சொல்லிப்போயிருக்கிறாள் நாயகா.

(இந்-வ்-ம்.) நாயகி அவன் அதிக துன்மார்க்கியாதலால் அவனை யன்னையிடம் தெரிவித்து எப்படியாயினும் சகியர்களுடன் இங்குவருவார்கள் சீக்கிரம்நாமும் தோழிகளும் புறப்பட்டு மகமேருசாரலுக்குச் செல்வோம் வாராய் நாயகி.

## அசமுகி தரு.

இ-ம்-எ துகுலகாம்போதி-ஏகதாளம்.

பல்லவி.

அன்றுஅன்றுஅன்றுஅன்று அதையுரைத்தயென்றவிசோர்ந்து (அ)

அநுபல்லவி.

மன்னில்பாலும்பயங்கிப்புறாள்மயிழ்ந்தாயேயாவியுஞ்சேர்ந்து. (அ)

சரணம்.

அழியாவரமான்தந்த தழிவுவந்ததோதோனேனே
பழிவரக்கரமறுப்புண்டு பார்த்தழவுமானனே. (அன்)
பெண்ணுயப்பிறந்திந்தபலன் பெற்றதெனிப்போதும்போதும்
புண்ணிமானமழியவுஞ்சான் கோரிலுயோசியேநிதம். (அன்)

## சூரபத்மன் தரு.

இ-ம்-அடாணு-ஆதிதாளம்.

பல்லவி.

கொஞ்சமுமஞ்சிடாமலே மிஞ்சிக்கரமறுத்தவனர் அவனை
தஞ்சமென்றடையச் செய்வேன்பார். (கொஞ்)

அநுபல்லவி.

வஞ்சிக்கொடிபோலவே வளர்த்தேனேயுன்னைநானே
செஞ்சடைமகுடமின்னும் சிவனும்மயங்குவானே. (கொஞ்)

சரணம்.

ஆரோவென்றுன்னையண்ணி அவமதித்திப்படியும்
அலங்கோலமாய்செய்தான் அறிகுவேனெப்படியும்
ஊரும்பேருந்தெரிந்தால் உடைப்பாய்ப்பாண்டையைப்பார்க்காய்
சீருங்குலைந்திடச்செய்து சிதைப்பேன்வனிமிற்ந்ததங்கா. (கொ)

(சூர-வ-ம்.) அடிதங்கா யுன்னை இப்பேர்ப்பட்ட மானபங்கம் செய்தவன்யார் அவனைத்தெரிவித்தால் தக்ஷணம் கொல்கின்றேன் தங்கா.



## அசமுகி தரு.

இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

சொல்லுவேனேறுமண்ணு அண்ணு. (சொ)

அநுபல்லவி.

அல்லும்பகலென்னையவமதித்திட்டபடி அனியாயஞ்செய்திட்டதை
சொல்லவாய்க்கூசுதேன்மையையுமதையும் சொல்லிச்சேறுமதை. ()

சரணம்.

பூவுலகமெங்கும்வரும்நேரமதான் புதுவனங்கோன்றதின்வ
ரானிதின் மின்னின்மயங்கி கண்டபின்பட்டதின்று. (சொ)
உன்னைபென்னவென்றவனென்று உணர்த்துமுபற்றியகழுத்தலர
முன்பின்சுழிப்பமேலேநிர்ந்தமனமோ முன்னாசமேசய்தனதுபுர. ()
வலவிரமயிலேறிடுமாளமயிலொரு வஞ்சகமொசரமறுத்து
பொல்லாவாளிட்டு கீழேசாய்த்துத்தன்னை
மெய்யிலிருஞ்சினத்து சொன்னேனேயுமே அண்ணு

(அசமு-வ-ம்.) அண்ணு நானும் தோழியும் பூவனம் சுற்றிப்பார்த்து வருகிறபோது ஒருபட்டணத்தில் பூங்காவினைக்கண்டு அதனுள்ளிருந்தவைகளில் ஒருவிருக்ககண்டதில் தேவேந்திரன் மனைவியைக்கண்டிடயெடுத்திம்மனைவ குற்று தருநியானவ னென்னை விண்ணின்மேலில்லாதபடியால் வஷிலகர்த்தைப்பற்றி அழைத்துச்செல்லவரும்போது யாவரோ தவர்களி லொருவன் முன்பின்யோசியாமல் எங்களிருவர் காதுகளையுமேவெட்டி சினைகையும் பிடித்தறுத்தனிக் காலாலுதைத்தானண்ணு.

## சூரபத்மன் விருத்தம்.

வெட்டுண்ட செவியோடு மூக்குமழிந்தவள்பாய்
பட்டணமெங்குமுற்றப் பரதசந்திரைசெய்யானைக்
கிட்டிவைக்கொண்டுவந்து சிந்துகள்செய்தான்முன்னோ
வெட்டுவெனவனைப் பேசு தங்கா போயிருமனையிற்றானே.

(சூ-வ-ம்.) அடிதங்கா யுன்னை இப்பேர்ப்பட்ட மானபங்கஞ்செய்தவனை இன்னவனென்றுதெரியாததால் இப்போதே யென் இந்திரஜித்மைந்தனை அனுப்பி ஒருமுகூர்த்தகாலத்திலெட்டுப் பூமண்டலமெல்லாம் சுற்றிப்பார்த்து அவனைக்கண்டு பிடித்து கொண்டுவந்து அப்பாதகனை உன்முன் வதைசெய்கிறேன் அரண்மனைசெல்வாய் தங்கா.

## பானுகோபன் விருத்தம்.

அண்ணலேபானேசென்று அமரரையெல்லாமிம்மை
பண்ணவேகொண்டுவாரேன் பாரெங்கன் திரானிதானே.

(பானு-வ-ம்.) அன்று அந்தபாதகருகிய தேவர்களை இந்த க்ஷணத்தில் கொண்டுவந்து வருகின்றேன் உத்திரவளிக்கவேண்டு மன்று.

(சூர-வ-ம்.) அடா குமரா சேனைப்பெருக்குடன்போய் கொண்டுவருவாய் குமரா.

(சூர-வ-ம்.) அடா தூதர்களே பிரமன் பஞ்சாங்கம் சொல்ல வந்திருப்பான் அவனை அழைத்துவாருங்கள் தூதர்களே

(தூதர்-வ-ம்.) இதோ அழைத்து வருகின்றோம் மகாராஜனே.

(தூதர்-வ-ம்.) ஓய்பிரமதேவரே ராஜன்உன்னை அழைத்துவரச்சொன்னர் ஓடிவாரும் பிரமதேவரே.

(பிர-வ-ம்.) இதோவருகின்றேன் தூதர்களே

(பிர-வ-ம்.) இராஜ ராஜேஸ்வரா யாதுகாரியமா யழைத்தீரோ அதைதெரிவிக்கவேண்டும் இராஜ ராஜேஸ்வரா.

(சூர-வ-ம்.) ஏ பாட்டா தேவர்களில்யாரோ வொருவன்என் னுதங்கையினுடையகரத்தையும் அவள்தோழியினுடைய கரத்தையும் அறுத்துவிட்டானும் அவர்கள் அரண்மனையிலிருக்கின்றார்கள் யதாப்பிரகாரம் சேருட்டிக்கக்கடவை பாட்டா.

(பிர-வ-ம்.) இதோ ஒருநொடியில் செய்துவிடுகிறேன் மகாராஜனே.

(பிர-வ-ம்.) அம்மா அசமுகி துன்முகி நீங்களிருவரும் அறுப்புண்ட கரங்கள்வளரும்படி செய்தேன் பாருங்கள் அம்மா.

(அசமு-துன்மு-வ-ம்.) எங்களுக்கு கரம்சரியாய் வளர்ந்துவிட்டது பிரமதேவரே.

(பிர-வ-ம்.) சூராதிசூரா எதாப்பிரகாரம் கரங்களிருக்கச் செய்தேன் சூராதிசூரா.

(சூர-வ-ம்.) அடா தூதர்களே துன்முகியை அழைத்து வாருங்கள்.

(தூதர்-வ-ம்.) இதோ அழைத்து வருகின்றோம் பிரபு.



(தூதர்-வ-ம்.) அம்மா துன்முகி உன்னைராஜன் அழைத்து வரச்சொன்னர் வாருந்தாயே.

(துன்மு-வ-ம்.) இதோவருகின்றேன் தூதர்களே.

(துன்மு-வ-ம்.) இராஜகெம்பீர யாதுகாரியமா யழைத்தீர் தெரிவிக்கவேண்டும் இராஜகெம்பீரா.

(சூர-வ-ம்.) பெண்ணே துன்முகி உங்களிருவர் கரங்களறுப்புண்ட இடத்தை எனது புத்திரனுகிய பானுகோபனுக்கு காட்டிவருவாய்.

(துன்மு-வ-ம்.) அப்படியே காட்டிவருகின்றேன் மகாராஜனே.

(சூர-வ-ம்.) அடா தூதர்களே சூரியன் சந்திரன் ருதுக்கள் இராசிகள் முதல்யோரை அழைத்துக் கொண்டு வருவீர்களடா தூதர்களே.

(தூதர்-வ-ம்.) இதோ அழைத்தோடி வருகின்றோம் மகாராஜனே.

(தூதர்-வ-ம்.) ஐயா சூரிய சந்திரர்களே ருதுக்களே இராசிகளே உங்களைராஜன் அழைத்தோடி வரச்சொன்னர் வாருங்களய்யா.

(சூரியாதிகள்-வ-ம்.) தடையில்லை வருகின்றோமப்பா தூதர்களே.

(சூரியன்-சந்திரன்-ருதுக்கள்-வ-ம்) இராஜகெம்பீரா எங்களை அழைத்தகாரணம் யாதோதெரிவிக்கவேண்டும் இராஜகெம்பீரா.

(சூர-வ-ம்.) அடா சூரியா சந்திரா ருதுக்களே இராசிகளே என்தங்கையின் கரமறுத்தவன் உங்களுக்குத் தெரிந்திருந்தால் உரைப்பீர்களடா.

(சூ-ச-ரு-ரா-வ-ம.) எங்களுக்குத் தெரியாதய்யா ராஜபரமேஸ்வரா.

(சூர-வ-ம்.) ஏ, தூதர்களே இவர்களைக் கொண்டுபோய் சிறையிலடைப்பீர்களடா தூதர்களே.

(தூதர்-வ-ம்.) அப்படியே செய்கிறோம் மகாராஜனே.

(தூதர்-வ-ம்.) ஐயா எல்லோரும் இந்தசிறைச்சாலையி லிருங்கள்.

(பிர-வ-ம்.) ஐயா ராஜகெம்பீரா நீர் கட்டளை இட்ட சூரியசந்திர ருதுக்கள் இராசிகள் இவர்கள் சஞ்சரியாமல் உலகாமக்ஞேர்த்தம் நடவாது முக்கியமாய் உமது அரசுக்கே விரோதமா யிருப்பதால் அவர்களைமாத்திரம் மன்னித்து விடுதல்செய்யவேண்டும் ராஜகெம்பீரா.

(சூர-வ-ம்.) அடா தூதர்களே சிறையடைத்தவர்களை கொண்டு வாருங்கள்.

(தூதர்-வ-ம்.) இதோ கொண்டுவருகுறோமைய்யா மஹாராஜனே.

(தூதர் வ-ம்.) சிறையிலிருக்கும் நவக்கிரகாதிபதிகளே அனைவரும் வாருங்கள்.

(நவக்கிரகங்கள்-வ-ம்.) போற்றி போற்றி மகாராஜனே ச்சொலிபோற்றி.

(சூர-வ-ம்.) ஏ சந்திர சூரிய ராசிகளே ருதுக்களே இனி ...வ- ...ஜாக்கிர ...தையாய் அசுரர்களுக் கென்னநேர்ந்த போதினும் பார்த் ...துக்கொள் ...ளவேண்டும் இல்லாவிட்டால் கொடியதண்டனை கிடைக்குமென்ப ...தை அறிவீர்கள் ஜாக்கிரதையாய் அவரவர்க ளிருப்பிடம் போய்சே ...ருங்கள்.

(பொது-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களே. பானுகோபன் சயின்யங்களுடன் சொழித்தலம்வந்து, துன்முகியை கரமதாய்ப் ...ண்ட இடத் ...தக்காட்டும்படி கேழ்க்கும் விதம்காண்பீர்கள் கனவான்களே.

(பானுகோ-வ-ம்.) அடீ தோழி எந்தவிடத்தில் சமமறந்தது.

(துர்மு-வ-ம்.) ஐயா அதோதெரிகிற பூங்காவனத்திலய்யா.

### பானுகோபன் விருத்தம்.

மண்ணுலகத்தைவிட்டு மறைந்திட்டார்தேவர்பிரா
விண்ணுலகேகுவோம் வெகுவிரைவில்செலுத்துவாயே.

(பானுகோ-வ-ம்.) பாகா தேவர்களெல்லாம் விண்ணுலகத்திலிருக்கிறதாகதெரிகின்றது ரதத்தைத்துரிதமாய் செலுத்துவாய் பாகா.

### தேர்ப்பாகன் விருத்தம்.

அட்டியில்லை மன்னவா அதிவிரைவாகவே
தட்டியேஅஸ்வத்தேதனை நடையிலோட்டிடுவேனே.



(தேர்-வ-ம்.) மகாராஜனே அதிவிரைவாய் வானுலகம் செலுத்துகின்றேன் மகாராஜனே.

(தேவர்-வ-ம்.) போற்றி போற்றி சயந்தமகாராஜனே போற்றி சூரன்புத்திரனாகிய பானுகோபன் சயின்யங்களுடன் நமது பட்டணத்தை முற்றுகைபோட்டுவிட்டான் யாதுசெய்கு வோமோ தெரியவில்லையே சயந்த மகாராஜனே.

(சயந்-வ-ம்.) விண்ணவர்களே என்னே அருமையாகப்பெற்ற தாய்தந்தையர்களோ சூரன்கொடுமைக்கஞ்சிபோன விடமேதெரியவில்லை நமது குலகுருவாகிய பிரகஸ்பதி பகவானுமிங்கில்லை தேவர்களில் அனேகர் சூரன்தண்டனைக்குப் பயந்து பதுங்கிப்போயினர் அப்படி இருப்பதில் பயனில்லை இப்போது யான் யுத்தசன்னுகைப் போகப்போகிறேன் நீங்கள் வரத்தடையிருந்தால் தெரிவிப்பீர்கள் தேவர்களே.

(தேவர்-வ-ம்.) ஐயா சயந்த மகாராஜனே நீங்கள் யுத்தத்திற்குப்போகும்போது நாங்கள் வராமலிருப்போமா செல்வோம் வருவீர் சயந்த மகாராஜனே.

### சயந்தன் கண்ணி.

இ-ம்-மோகனம்-ரூபகதாளம்.

என்னிருப்பிடம் சுற்றிநின்றாயே என்னுடன்
எதிர்நின்று சமர்செய்ய வந்தாயே
என்னமோ வென்றெண்ணி ஏனோகெட்டுப்போறாய்
ஏகுவாய் ஏகுவாய் ஏகுவாய் ஏகுவாய்.

### பானுகோபன் கண்ணி.

இ-ம்-மோகனம்-ரூபகதாளம்.

ஏகுவாயென்றென்னை இளக்காரமாய்க்கிட்டி
எதிர்த்துபாணம் விட்டதேதடா.
வேகசரங்களை வீணாயழியும்படி
விட்டேன் விட்டேன் விட்டேன் விட்டேன்.

### சயந்தன் கண்ணி.

இ-ம்-மோகனம்.

விட்டக்கணைகளைப்பார் தொட்டேன்கணைகளினால்
வெடியடிக்கின்றேன் பொடிபொடியாக்கிட

வெட்டுடனவேகமாய் விரும்பாங்களை
விடுத்தேன் விடுத்தேன் விடுத்தேன் விடுத்தேன்.

## பானுகோபன் கண்ணி.

இ-க்-மோகனம்.

வெறியர்களெனுக்கள விட்டோடினும்விடுவேனோ
வெற்றியுடையாமலே விட்டென்னைப்போவேனோ
பொறிகள்கலங்கிட பொற்றவில்லைவளைத்து
போட்டேன் போட்டேன் போட்டேன்போட்டேன்.

(பானு-வ-ம்.) அடாவீரர்களே வெள்ளையானைமீதுவந்த சயந்தன் தோற்கிறந்து விட்டான் அவனையும் மற்றதேவர்களையும் இவர்கள் பத்தினிமார்களையும் கட்டிக்கொண்டு பொன்னுலகைத் தாக்கி முன்னதாக வீரமாயேந்திரந் செல்வீர்கள் யானும்பின் தொடர்ந்து வருகின்றேன் வீரர்களே.

(வீரர் வ-ம்.) அப்படியே இதோசெல்கின்றோம் பிரபு.

(பானு-வ-ம்.) அடா சூரர்களே இந்த பொன்னுலகத்தை கொளுத்தி சாம்பலாகச்செய்து விடுங்கள் செல்வோம்.

(சூரர்-வ-ம்.) இதோ கொளுத்திவிடுகிறோம் மகாராஜனே.

(சூரர்-வ-ம்.) பிரபு விண்ணுலகத்தைக் கொளுத்திவிட்டோம் வாரும் நமதுதேசம் செல்வோம் பிரபு.

(பானு வ-ம்.) அடா சூரர்களே வாருங்கள் நமதுநகரம்செல்வோம் சூரர்களே.

(பானு-வ-ம்.) அண்ணா இந்ததேவர்களிடத்தில் அதிகபோர் செய்து விண்ணுலகத்தையும் கிறுக்கி இவர்களைக் கட்டிக்கொண்டு வந்தேன் அண்ணா.

(சூரன்-வ-ம்.) அடா காவலாளிகளே இவர்களனைவரையும் சிறைச்சாலையிலடைப்பீர்கள் காவலாளிகளே.

(காவலர்-வ-ம்.) இதோ அடைத்துவைக்கிறோம் மகாராஜனே.

(பொது-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களே இந்திரலோகத் திலவனையானை யானதுபானுகோபனுடன் போர்செய்து முடியாமல் அரசனில்லாததூர் பாழுசென்றெண்ணி சயிந்தனுக்காக



இறங்கி விண்ணுலகம்விட்டு மண்ணுலகம்வந்து பலதலங்களை சேவித்து கடைசியிற்திருவெண்காடென்னும் பெருமையிற் சிறந்த நகரைக்கண்டு பரமசிவசொரூமாகிய லிங்கத்தினைஸ்தாபித்து சோடசோபசாரங்கள் செய்துவர பரமசிவன் களித்து போரில்பட்டகாயங்களைமாற்றி வேண்டியதையும் தந்தபிறகு அப்பதியை நீங்காமல் லோகநாயகனை வழிபட்டிருந்தனென்று அறிவீர்கள் கனவான்களே.

(தேவதூ-வ-ம்.) அப்பா தூதர்களே நாம் இந்த விண்ணுலகத்தில் நடந்தகாரியாவும் மேருமலைச்சாரலிலிருக்கும் தேவர்களுக்கும் தேவேந்திரனுக்கும் தெரிவிப்போம் வருவீர்களப்பா தூதர்களே.

## தேவதூதர்கள் விருத்தம்

அமரர்கன்றுபோற்றி யாராலின்றுவந்தோம்
சேவாடிமாங்கள்பட்ட சேதியையுரைப்போம்போற்றி.

(தேவதூத-வ-ம்.) போற்றி போற்றி இந்திரபூபா ராக்ஷதர்களால் பொன்னுலகம் பட்டபாட்டை தெரிவிக்கவந்தோம் கவனித்துக்கேழ்க்கவேண்டும் இந்திரபூபா.

(இந்-வ-ம்.) அப்பா தூதர்களே யாதுவிசேஷம் உரைப்பீர்களப்பா.

(தேவதூ-வ-ம்.) சுவாமி தேவரீர் பொன்னாட்டை நீங்கினபின்பு உங்கள்குமாரர் அரசுசெலுத்தி நேற்றியதினவரையில் எங்களைப்போற்றிவந்தனர் சூரன்குமாரன் பானுகோபனென்பவன் அளவற்ற ராக்ஷதப்படைகளைக் கூட்டிவந்து பொன்னுலகைமுற்றுகைபோட்டுக்கொண்டதை யறிந்து தமது குமாரர் கோபித்தவராய் தேவப்படைகளுடன் அயிராவதத்தின்மீதில் ஆரோகணித்து அநேகாயுதங்களைசெய்தும் கடைசியில் சத்துருக்களுக்கிளைத்துத் தானும் விண்ணவர்களும் அவர்கள் தேவிமாருடன் பாதகன் சிறையிலடைக்கப்பட்டார்கள் அதல்லாமலும் பொன்னுலகத்தையும் தீக்கிரையாக்கிவிட்டார்கள் சுவாமி.

## இந்திரன் தரு.

இ-ம்-காமரப்பிரியா-ஆதிதாளம்.

பல்லவி.

பாலகாபதைத்தாயோ பாவியால் ஜனிசோர. (பால)

அநுபல்லவி.

ஏலாதபோர்செய்து என்னைநினைந்தாயோ ஓ மகனே. (பால)

சரணம்.

ஆரகசெய்திருப்பாயென் றகமகிழ்ந்திருந்தேனே அன்புள்ள
அன்புள்ளஅய்யனே ஆதரிப்பேனென்னைக்காணனே தென்புள்ள. ()
செங்கோலரசியற்றி சிறையிருக்கநேர்ந்ததோ திருவினை
திருவனேநற்றவப்புதல்வனே சின்னமடைந்தாயோ அருவனே. ()

## இந்திராணி கண்ணிகள்.

இ-ம்-நீலாம்புரி-ஜம்பைதாளம்.

எப்படிசகிப்பேன்மகன் இருந்திடச்சிறையிலீசா
கப்பிடத்துயரானேனே கைலைவாசா
பாதகர்கைதனில்சிக்கி பதைத்திடச்செய்தாயோஈசா
சூதகருடனிருந்து சந்தநேசா
பாலனைப்பார்ப்பதெப்போதோ பய்பரவனித்தசா
பார்த்தெங்கள்குறையை தீர்ப்பாய்பரபதாசா.

(இந்-வ-ம்.) நாயகி நாம் இப்படிபுலம்புவதால் யாதோர்கு றையும் தீரமாட்டாது பரமசிவத்தை தியானம்செய்து தவமிருந் தால் அவர்பிரசன்னமாகி நமது குறைகளை தீர்ப்பார் துயரப்பட வேண்டாம் நாயகி,

(இந்-வ-ம்.) அப்படியே தவம்செய்வோம் நாயகா.

## இந்திரன் தரு.

இ-ம்-பைரவி-ரூபகதாளம்.

பல்லவி.

தருணம்வரத்தருணாபீசா தார்க்காத்தருள்சர்வேசா. (தரு)

அநுபல்லவி.

மரணவிர்தையாகிராங்கள் மயங்குகிறேமெவாரும்வாரும். (தரு)

சரணம்.

கருணைபொழியும்கைலைவாசா காலமிதுவேகாப்பாய்நேசா
தரணியில்துயராய்விலைப்பசா தவிக்கிறோம்குறைதீர்பவாசா. (தரு)
ஞானனந்தவாரியில்நாளும் நடனமிடும்நாதாகேளும்
ஈனுவிதயரின்மாளும் நங்கள்வினையைதீர்த்தின்றாளும். (தரு)



## பரமசிவன் விருத்தம்.

விண்ணுலகாளும்வேந்தா வேணதோர்வரமளிக்க
மண்ணுலகதனில்வந்தேன் மகிழ்ந்திடக்கேட்டிடாயே.

(பர-வ-ம்.) என் அன்புள்ள விண்ணுலகாதிபதியே நீசெய்த தவத்திற்கு மெய்ச்சி சந்தோஷித்தேன் வேண்டியவரத்தைக்கேள் இந்திரா.

## இந்திரன் விருத்தம்.

இடிபெறஇயற்றும்சூரன் இனமெலாமொழிக்கவந்தன்
அடிசிரமீதிற்கொள்ள அநுக்கிரகம்செய்வீர்போற்றி.

(இந்-வ-ம்.) போற்றி போற்றி புனிதஞான போற்றி நிமை மையே குடிகொண்டிருக்கின்ற சூரபத்மன்முதலிய அரசர்களைக் கொன்று எங்களுக்குள்ள துன்பத்தைநீக்கி யருளவேண்டும் புனி தஞானா.

(பரம-வ-ம்.) மகவதியே யாம்பார்பதியோடு கூடி ஒருகு மாரனைத்தருவோம் அவனால் வெற்றிபொருந்திய சூரன்முதலிய அவுணர்களைகொன்று உங்களுடைய செல்வத்தை யுங்களுக்கே கொடுப்பான் வருந்தவேண்டா மிந்திரா.

(இந்-வ-ம்) தேவர்களே சூரன்கண்ணில்புலப்படாமல் இவட த்திலேயிருந்து தவம்செய்துகொண் டிருந்தால் பரமன் வாக் களித்தவண்ணம் குமாரனைத்தந்தபிறகு வெளிசெல்லலாம் தேவர் களே.

(தேவர்-வ-ம்.) அப்படியே இவ்விடமே யிருக்கலாம் தேவ ராஜனே.

## தேவர்கள் தரு.

இ-தேவகாந்தாரம்-ஆதிதாளம்.

பல்லவி.

சம்போசிவசங்கரா சடையம்கார் விருபாக்ஷா. (சம்)

அநுபல்லவி.

செம்பொன்னம்பலவேவே சீர்மிகுமிறைவனே
சிவஞயாபரனே சிவ சிவ சிவ சிவ. (சம்)

சரணம்.

நந்திகணத்தோர்முதலே நாடிடும்பொற்பாதா
நான்மறைதுதிபோதா நமசிவய சிவ. (சம்)

நெவிட்டாவானந்தவாழ்வே — நீனிரீக்கவே
திருவருள்செய்குவாய் — ஜெய ஜெய ஜெய ஜெய. (சம்)
அண்டகோளங்களெல்லாம் — ஆண்டிடுமோதிமூர்த்தி
அடியவரிடர்தீர்ப்பாய் — அரகர அரகர. (சம்)

(இந்-வ-ம்) தேவர்களே சூரபத்மனால் நமக்கு நேரிட்டகொடிய துன்பங்களை பொறுக்கமாட்டாமல் மேருமலைச்சாரலில் தவஞ்செய்தகாலத்தில் பரமசிவன்வந்து மலையிறைவன் புத்திரியாகிய பார்பதியைக்கூடி சூரனைக்கொல்ல ஒருகுமாரனைத் தருவதாக வாக்களித்து வெகுகாலமென்னும் யாதொரு பரிகாரமும் உண்டாகாமையினால் யாவரும் கைலைக்குச்சென்று இன்னமொருவிசை நமது கஷ்டங்களை விண்ணப்பஞ்செய்துக்கொள்வோம் வாரீர் தேவர்களே.

(தேவர்-வ-ம்.) தேவர்கோனே இப்பொழுதே செல்வோம் வருவீர் தேவர்கோனே.

## தேவேந்திரன் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-ஏகதாளம்.

தேவர்கள்யாரும் — தீர்ந்திடக்குறை
தாவிப்போர்தே — தழைக்கச்செல்லுவோம்

### தேவர்கள்.

தேவர்கோனே — ஏகுவோமே.

### விஷ்ணு.

சூரபத்மனை தன்னிலொழிக்க — சோராமலோர்சுதக்காய்செல்லுவோம்.

### தேவர்கள்.

தேவர்கோனே — தருமிதயோசனை

### இந்திரன்.

தானியைவிட்டு — தடைபடாதய்யன்
சரணடைகுவோம் — சங்கடங்களேக.

### பிரமன்.

அமரோசா அதிரேசா — அதற்கென்ன தடை
யமவாதைதீர்த்திட — ஏகுவோமே.

### தேவர்கள். பிரமன்.

ஏகமாய்க்கூடி. — நலமிகப்பாடி.

### விஷ்ணு. தேவர்கள்.

சீக்கிரமோடி. — நித்தியபோமவரிடம் நாடி.



## பிரமன் விருத்தம்.

நம்பிடசபையின்கண்ணே நயந்தருசுரர்தானின்று
வெம்பிடாத்தாழ்கொண்டு விரைவினிலேயனுப்பிச்
சம்புதானிவனிருக்கும் சமயத்தையறிந்துகொண்டால்
தம்பிலாதினியொன்றும் சடிதிசேர்த்திசெல்லலாமே

(பிர-வ-ம்) தேவர்களே இந்திரன்முதலானவர்கள் யோசித்ததுபோல்போக யாதொருதடையுமில்லை சிவபெருமான்சமயத்தை இன்னதென்று முன்னே அறிந்துகொண்டால் நல்லதுபாரையது தேவர்களே.

## தேவர்கள் விருத்தம்.

ஆயிதமெய்தானேரின் றன்புடனுரைத்தவாறே
தாமதமில்லைதங்கள் சங்கதிதொருவர்தம்மை
நேமித்தனுப்புவிசேல் கிடைத்திடுமங்குசென்று
காமனைக்காய்ந்தோன்வேலை கண்டோடிவருகின்றோமே.

(தேவர்-வ-ம்.) தாமரையீடத்தமர்ந்த பிரமதேவரே நீர்திருவாய்மலர்ந்தபடியே நம் நேசர்களில் எவர்களையாகிலும் நேமித்தனுப்பினால் கயிலைக்குப்போய் சாம்பசிவனுடைய சமயத்தையறிந்துவருகுவோம் பிரமதேவரே.

## பிரமன் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-ஏகதாளம்.

நீர்போமவாரீர் — வாயுதேவரே நீர்
கோரிகேளுமையே — குன்றுடன்கைலை. (நீர்)
உத்தன்வல்லமைமேலெனி — எந்தனுக்கொல்லப்போகுமோ
சிந்தையில்மகிழ்வுகொண்டு — விந்தையுடனோடி. (நீர்)

(பிர-வ-ம்) வாயுதேவரே பூர்வத்தில் ஆதிசேஷனுக்கும்உமக்கும் வாதுசேர்ந்தகாலத்தில் அவனால்சூழப்பட்டிருந்த மகாமேருவினது சிகரங்கள் ஆறினுள் ஒருமூன்றை உம்முடைய வேகத்தினல்பறித்து அந்தவாடத்தக்கதாக சமுத்திரமத்தியில் வெறிந்த உமது வல்லமைத் தேவர்கள் மெச்சியிருக்க இக்காலத்தில் நமது குறைகளை நிவாரணம்செய்துக்கொள்ளும்பொருட்டு விண்ணப்பம்பண்ணவேண்டியதற்காக நீர் முன்னே திருக்கயிலாயம்போய் சிவபிரானிருக்கின்ற அவசரத்தைத் தெரிந்துவர பிரயாத்திவானியாதலால் போய்வரவேண்டும் யாதுரைக்கின்றீர் வாயுதேவரே.

## வாயுதேவர் விருத்தம்.

மனமகிழ்வுடனிருந்தய்யா மன்மதனை நிர்த்தகாலம்
சினமிசக்கொண்டன்றனே சிவபிரானெரித்ததாலே.
அனமெனுமவ்வாகனத்தின் அமர்ந்துவாழ் தருணமெங்கள்
மனவரோபோகேன்யானும் மன்னித்தாக்ஷிப்பீரே.

(வாயுதே-வ-ம்.) பிரமதேவரே சாம்பசிவனிடத்தில் மன்மதன் பட்டபாடு தெரிந்திருந்தும் நீங்களெல்லாரும் போகப்படாதவிடத்தில் என்னையனுப்புவதற்கோடபேன் மன்னிக்கவேண்டும் மகாநுபாவா.

## பிரமதேவர் கண்ணிகள்.

இ-ம்-இந்துஸ்தான்-ரூபகதாளம்.

மறுக்காதிசொன்ன சொல்மதிதலத்தல்
மகியில்வருபுண்யம் மாமிதுவே
தம்மையடுத்தோரை தாங்குவதே
தாணியில்மிகபுகழ் தருவதுவே
உம்மையல்லாக்கதி யுற்றவர்யார்
உக்ரஞானக்கனத யுரைத்திடுவீர்.

(பிரமதே வ-ம்.) வாயுதேவரே எவ்விடத்தும் தடையின்றி உலவுகின்றவர் நீரொருவரல்லாமல் இச்சபையில் வேறொருவருமில்லை தேகியென்பவர்களுக்குத் தியாகங்கொடுத்துக் குறையைதீர்ப்பதும் தம்மையடுத்தோரைத் தாங்குவதுந்தானே பெருமையாதலால் நீரே அவஸ்யம்போய்வரவேண்டும் வாயுதேவரே.

## வாயுதேவர் விருத்தம்.

எனக்கெனை நேர்ந்திட்டாலும் எப்பழிவந்திட்டாலும்
மனக்குறைநீங்கயானே மகிழ்வுடனேகுவேனே.

(வாயுதே-வ-ம்.) பிரமதேவரே உம்முடைய ஆக்கினைப்படி எனக்கெது நேர்ந்த போதிலும் உங்கள் மனக்குறை நீங்கும்படி போய்வருகின்றேன் பிரமதேவரே.

## வாயுதேவர் தரு.

இ-ம்-மோகனம்-ஆதிதாளம்

பல்லவி.

ஈசன் கைலாசனைக் கண்டுமையில்வருவேன்
தாசன்றனுமே தாட்டிகமதாய். (ஈசன்)



அநுபல்லவி.

நேசன்தங்காமல்நேராயோடியே நின்றிடாயலே. (ஈசன்)

சரணம்.

பார்ப்பவர்பதைத்திட பாங்குடன்பாந்தாள்
பக்குவமாகவே இக்கணமேவி
பார்த்தவருவேனிதோ பாதககுரர்கள்
பாதைகள் பாந்திட. (ஈசன்)

(வாயு-வ-ம்.) தேவர்களே இதோகயிலையங்கிரிக்குச் செல்கின்றேன்.

## நந்திதேவர் விருத்தம்.

ஆரடாபயலேநீதான் ஆங்காரங்கொண்டுயிங்கு -
வீரமாயென்னைத்தாண்டி வேகமாய்ப்போவதென்னே
சூரர்களெவருமில்லை கருசருப்புடனெநீயும்
தீரமாய்வந்ததோ இசீக்கிரமுரைத்திடாயே.

(நந்தி-வ-ம்) ஏ துஷ்டா கொஞ்சமும் அஞ்சாமல் உலகங்களைக் காக்கத்தக்க கைலையங்கிரியில் வீற்றிருக்கும் பரமசிவனுடைய காவல் இங்குண்டென்பது தெரியாதுவந்தவனுசிய நீயாரடா நில் துஷ்டா.

## வாயுதேவர் தரு.

இ-ம்-சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

கோபங்கொள்ளாதி ரய்யனே
கோரிவந்ததையான் கொப்பெனவுரைப்பேன் (கோ)

சரணம்.

தாபங்கள்மூன்றும் தணித்திடுந்தானுமே
சோபத்துடன்வந்தேன் சோதிக்காதினிமேலே
பாபிசூரபத்மன் பகரொணாசோரத்தால்
ஆபத்தைத்தீர்த்திட அடியேன்வந்ததாலே. (கோ)

தேவர்கள்பரவரும் தீராத்துயரங்கொண்
டவனுடன் என்னை அனுப்பவந்தேனையா
சிவதபரபரன் சமயந்தெரிந்தியான்
சீக்கிரமேகவே சிறியேனுக்கருளையா. (கோ)

அந்தமுள்ளதேவர் ஆக்கினைக்கஞ்சியான்
அடைந்தேனிங்கு ஆசாரசாபம்வருமென்று
சிந்தையிலெண்ணி சொரூபத்தைமாற்றியே
சேயன்வாயுவந்து சிந்தித்தேன்மிகபின்னீ. (சோ)

(வாயுதே-வ-ம்.) சுவாமி மகாவிஷ்ணு பிரமதேவர் தேவேந்திரன்முதலானவர்களனைவரும் சூரபத்மனுக்குப் பயந்து மகாமேருசாரலில் ஒளித்திருக்கின்றவர்கள் காளகண்ட மூர்த்தியினுடைய சந்நிதானத்திற்குவந்து தமதுகுறைகளை விண்ணப்பம்செய்துக்கொள்ள அதற்குமுன்னம் சிவபிரானிருக்கும் சமயத்தை அறிதமாய்த்தெரிந்துவர என்னை அநுப்பி தடுத்தால் சாபம்வருமென்றெண்ணி என்சுயரூபத்தைமாற்றி வாயுவாகிய யான் அந்தகோரத்தினால் உங்களைத்தெரியாமல் தாண்டினேன் மன்னிக்கவேண்டும் சுவாமி.

(நந்தி-வ-ம்.) ஏ வாயுதேவனே உனக்குப்போக விருந்தபிராணனை தந்தேன் இனி இங்குநிற்கவேண்டாம் சீக்கிரம் விலகுவாய் துஷ்டா.

## வாயுதேவர் தரு.

இ-ம்-சாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

பிழைத்ததேபெரும்பாக்யம் பேயனேடினேன். (பிழை)

அநுபல்லவி.

அழைத்தால்வருமோயெந்த ஞானியோனயின்பு
ஆரிடம்சொல்லுவேனான் அடைந்தவருத்தமின்று. (பி)

சரணம்.

மெள்ளமந்தமாருத வடிவுடன்வெல்ல
வெள்ளியங்கிரியில் வேகமுடனேசெல்ல
துள்ளிஆலயத்துட் போம்போதுபொல்லா
கள்ளனேகில்லென்று கடுத்துறத்துசொல்ல
அந்தஇடத்தில்பார்க்கநானே நந்திபெருமான்கோழ்க்கமிக
கொந்துகாலில்விழுந்து கொடியனினானபட்ட
சிந்தையென்னசொல்வேன் வினிலகைத்துவிட்டு. (பிழை)

(வாயுதே-வ-ம்.) ஐயாதேவர்களே கைலையங்கிரியில் நந்திதேவரால் படாதபாடுபட்டு பிராணனைபோக்கடிக்துக் கொள்ளாமல் வந்தேன் இனி என்னால் ஒன்றும் முடியாதய்யா தேவர்களே.



## மகாவிஷ்ணு விருத்தம்

வசிமினிற்சிறக்கோனை வாயுவுங்கயிலைசென்று
நசிவுகொண்டிங்குவந்து நடந்ததைசொலக்கேட்டோம்
பலதாம்பன்னிப்பார்த்தும் பார்ப்பதிமணவாளன்தான்
சலனமற்றிருக்குமார்க்கம் சடுதியில்தெரியச்செல்வோம்.

(மகாவி-வ-ம்.) தேவர்களே சிவபெருமானிருக்கும் நிலையைத்தெரிந்துவரும்படி யனுப்பினவாயுதேவன் சொன்னதைக்கேட்டுக் கவருத்தமாயிருக்கின்றது இனி காமதம்செய்யாமல் நாமெல்லோரும் வெள்ளியங்கிரிக்குச் செல்வோம் வாருங்கள் தேவர்களே.

## தேவர்கள் தரு

இ-ம்-இந்துஸ்தான்-தாளம்-ரூபகம்.

ஆர்தான்சிர்ப்பாரோ சமுத்ராவதிக்கோரி
அறிகுவோமதையின்று அன்புடன்தேரி
சீர்புகழ்சூரன்செய்யும் தீமையிதோய்
பார்ப்பதிபாகன்முன் பகருவோம்சீராய். (ஆர்)

## தேவர்கள் விருத்தம்.

அய்யனேபோற்றிபோற்றி அவுணரால்பாடுபட்டு
நய்ந்துமேசாங்களதந்தோம் நந்திகேள்வரனேகேளீர்
பய்யரவணிந்தோன்பாதம் பணிந்துநங்குறைகள்சொல்ல
தய்யனே வாவைச்சொல்லி துரிதமாயழைப்பீரே.

(தேவர்-வ-ம்.) போற்றி போற்றி நந்திஎம்பெருமானேபோற்றி நாங்கள் அவுணரால்படும்பாட்டை சகிக்கமுடியாமல் பரமனிடத்தில் பணிந்துமுறையிட்டுக் கொள்ளவந்தோம் எங்கள்வரவை கிருபாநிதிக்குத்தெரிவித்து அழைப்பிக்கும்படியான முயற்சி செய்யவேண்டும் சுவாமி.

(நந்தி-வ-ம்.) தேவர்களே யான் ஜடாமண்டலதாரியாகிய முக்கணெம்பிரானை வணங்கிவிடைபெற்றுவருமளவும் நீங்கள் இவ்விடம் விட்டசையாமல் இருப்பீர்கள் இதோ ஆலயத்துட்சென்று விடைபெற்றுவருகிறேன் தேவர்களே.

(தேவர்-வ-ம்.) அப்படியே காத்துக்கொண்டிருக்கிறோம் மகாதேவனே.

## நந்திதேவர் கண்ணி.

இ-ம்-எதுக்குலகாம்போதி-தாளம்-ரூபகம்.

புரமூன்றெரித்தோனே — புழைக்கையாயுரித்தோனே
தாணிசெழிக்கதேவர் — வும்மை தரிசிக்கவந்தார்கோனே
எல்லாம்வல்லவரே — எந்தனின்னைத்தினன்னரோ
நல்வரந்தருவீரே — அவர்கள் நாடுதற்குறைப்பீரே
அடிமுடியில்லாத — என்னைப்படனே ஆதரிப்பீர்
கடையனுரைத்ததற்கு — கருணைக்கடைக்கண்காட்டுவீரே. ()

(பரமசி-வ-ம்.) நந்தி தேவர்களெல்லாரையும் அழைத்துவரக் கடவாய்.

(நந்தி-வ-ம்.) நமஸ்காரிக்கின்றேன் பரமயோகி இதோ அழைத்துவருகின்றேன் சுவாமி.

(நந்தி-வ-ம்.) தேவர்களே வரும்படி உத்திரவு கடாக்ஷித்திருக்கிறார் வாருங்கள்.

(தேவர்-வ-ம்.) மகாசந்தோஷம் மகாஜுபாவா வருவீர்செல்வோம்.

## தேவர்கள் தரு.

இ-ம்-கேதாரம்-தாளம்-சம்.

பல்லவி.

உந்தன்பெருமைப்புகழ — எங்கள்தரமோ உந்தன். (உந்)

அநுபல்லவி.

மூர்த்திமூர்த்திவந்த — முக்கனிரசமே
மந்தகாசவா — சாமகோசரமே. (உந்)

சரணம்.

சந்திசிவமாகவும் — சராசரமும்
சஞ்சரித்திடு — மாயமும்
சுத்தசயிதன்ய — சொரூபானந்தமே
வித்தைமுத்திதரும் — விவேகானந்தமே. (உந்)

மெத்தவருத்திடுமய்யா — பாவிசூரனால்
நித்தங்கலங்கினோ — மையா
அத்தனேஅகில — மனைத்தையுமாள்வோனே
நித்யனேகர்த்தனே — நின்மலநாதனே. (உந்)

நாமரூபமில்லாத — நாயகனை
நம்புமடியார் — மீது



சேமஅருளைத்தந்து — ஜெகந்தனில்வேண்டிக்கும்
செல்வனேஉம்பர்கள் — தேடுமென்பனே. (உந்)

## பரமசிவன் விருத்தம்.

ஆவலாயிங்குவந்த அன்புள்ளதேவர்காளுந்
தேவலமானசிந்தை கெடப்பெறஅறிந்தேனின்றே
நீவரம்வரமேகேட்டால் தீவினையொழித்துமேதான்
தாவிலாத்தவம்பலிக்கத் தடையிலாதருள்செய்வேனே.

(பரமசி-வ-ம்.) தேவர்களே நீங்கள் மிகவும் நொந்து மனம் வாடினீர்கள் ஆதலாலித்தருணத்தில் உங்களுக்கு வரங்கள் ஏதேனுந்தர விருப்புற்றனம் வேண்டியதை கேழ்க்கக் கடவீர்கள் தேவர்களே.

## தேவர்கள் விருத்தம்.

அநுதினம்அவுணராலே அடைந்திடுமகஷ்டம்நீங்க
புவிமதிருடுமநாதா பலமுறையுரைத்தோமெங்கள்
மனமுறுதுயரொழை வந்தனம்பின்னுமின்றே
தனமுனைபுத்திரன்பெற்றுக் கவலையைப்போக்குவீரே.

(தேவர்-வ-ம்.) ஜடாமண்டல தாரியாகிய எங்களரசே அவுணவீரரால் படாதபாடுகள்பட்டு பலமுறைதெரிவித்தோம் இருவரை நோக்கரதிருந்து இப்போது கருணைவழிகாட்டும் கடவுளே அவ்வருத்தங்களைப்போக்கி அன்னவுடன் பார்வதிதேவியாரைக்கூடி திருக்குமாரனைத் தருவதாய் வாக்களித்ததன்னையும் தரவேண்டும் ஜெயபரமேஸ்வரா.

## பரமசிவன் தரு.

இ-ம்-பியாகடை-தாளம்-ரூபகம்

பல்லவி.

ஆதரித்தேன் — அஞ்சவேண்டாமினி. (ஆதரித்தேன்)

அநுபல்லவி.

இதன்னுவுணர்கள் — நீரெமொழித்து
வாதில்லாமலே — வாழவுமினி. (ஆதரித்தேன்)

சரணம்.

பார்த்துப்பார்த்துக் — களித்தானந்தமேவிட
பாலனைப்பார் — புகழ்பெறவேன்
கார்த்தவுலகங்கள் — பூர்க்கமிகவுமய

கனிவுடன்னைய — பாய்ந்தருமேவன்
பாலனுங்கிவிர்பயமே — பகர்ந்ததுஇனிமேல்லைமே
எனும்ராக்ஷதருலமே — இசையாதினிமேல்தினமே. (ஆதரித்)

(பொது-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களே உலகமெங்கும் கிருபாளோக்கம் வைத்தாளும் தயாநிதியானவர் ஒருமுகமாயிருப்பவர், ஆறுமுகமாகப்போகிற அதிசயங்காண்பீர்கள் சபையோர்களே.

## பொது தரு.

இ-ம்-பியாகடை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சாம்பசிவசங்கரன் — சமயங்களாதிந்த
சண்முகமானாரே — இதோபாரீர். (சாம்)

அநுபல்லவி.

பாம்பணையான்முதலோர் — பார்த்துகளிக்கவேண்டி
பாம்பணிந்தபரமன் — பழபகோலமாகியே. (சாம்)

சரணம்.

திசாதிசைகளெங்கும் — திக்குவிஜயம்பண்ணும்
பிசாசர்களை — நீற்றிடக்கோரன்னும்
வசிக்காதினிசெய்து — வான்புவிவாழும்வண்ணம்
இச்சைமனதில்கொண்டு — என்றும்பிரியனென்னும்
ஆதியும்அண்டங்க — ளாளும்
சோதியும் அன்பரைக் — காக்கும்
அய்யன்கிருபையினு — ருவமுருவமாய்
அணைத்திடன்பரை — அநுக்கிரகமாய்
நுதலின்விழிகடோறும் — நோக்கியனற்பொரி
நிதமும்வாழுவரும் — நின்றமைத்துசரியை
கிரியையோகங்கள் — கெடப்படாமலே
பரிவாய்பார்த்துமே — பாங்காய்மென்மேலே. (சாம்)

(பொது-வ-ம்,) கேளுங்கள் சபையோர்களே ஒருமுகமாயிருந்த பரமசிவன் ஆறுமுகமாகி நெற்றிவிழியிலுதித்த அனற்பொரியால் தேவர்களெல்லாம் ஆதிகாலத்தில் ஆலகாலவிஷத்திற்கு தாளாமலோடினதுபோல் அதிகதீக்ஷண்யத்தினால் தேவர்கள் திகைக்கவும் அருகிலிருந்தபரமேஸ்வரி அரண்மனைக்கு ஏகவும் சமுத்திரம் ஆறுகுளங்கடாகங்கள் ஜலம் குறையவும் உலர்விக்கொண்டிருப்பதை அறிவீர்கள் சபையோர்களே.



## பரமேஸ்வரி தரு.

இ-ம்-இந்துஸ்தான்-தாளம்-ரூபகம்.

அனலாய்விசகேனக்கும்மிக — அங்கம்வாடிசோருதே
நினைவுதமோருதிப்போ — நிலையிருந்தபோக அப்போ
நின்றதேவர்களும் — நிலகுலைந்தோடிட
நீக்கவருந்துமும் — சேர்ந்ததேவாடிட. (அன)

## பரமேஸ்வரி விருத்தம்.

உலகெலாமுணரின்று உண்மையைவிளக்கவந்த
கலைகுமெய்த்தனுதர் காடியேசிருட்டிசெய்து
அலறவேயண்டபிண்டம் அனற்பொரியாலையுந்தான்
உலவிடச்செய்துபார்க்கும் உன்னதமென்னசொல்வேன்.

(பரமேஸ்-வ-ம்,) ஆ! ஆ! இப்பொழுது வீசப்பட்ட அனலின்மகிமையால் ஜெகமெங்கும்வாடிவருந்த இப்பேர்ப்பட்ட சிருட்டியைசெய்ததாரென்று சொல்ல எனக்கே தீக்ஷண்யத்தைத்தருகின்றது இங்கிருந்தால் இன்னும் என்னபாடுபடவேண்டுமோ தெரியவில்லை நாம் அரண்மனைக்குச் செல்வோம்.

## தேவர்கள் தரு.

இ-ம்-நாடகுறிஞ்சி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எப்படிசகிப்பேபரமேசா இனிநாங்கள் எப்படிசகிப்போமீசா. (எ)

அநுபல்லவி.

தப்பிப்பிழைக்கப்படாது தங்குமனல்பொறித்தபொறியால். (எ)

சரணம்.

ஆலகாலம்போல்கோல — ஜாவாலையாலே
அலையுதேஞாலம் — குலையுதேதனுலே
ஓலமிடாமலே — ஜாலம்செய்யாமலே
காலபரிந்து — காரணிட்டாவினியேலே. (எப்)

எங்குந்தங்காம — லெங்கிறுமே
பங்கம்செய்பொல்கல — சிங்கம்போல்நாடுதே
திங்களணியும் — மங்களாஜாடுதே
தேங்கிவுடல் — வித்கிவாடுதே. (எப்)

(தேவர்-வ-ம்.) பரமேஸ்வரா கொடியபாதகராகிய அசுரரால் வருந்துகின்ற துன்பங்களைப்போக்கி ஆள்வதற்காக ஒருபுத்திரனை கடாக்ஷித்து ரக்ஷிக்கக்கேட்டதற்கு அதற்குமாராக அளிவு படாத அனற்பொறியினைத்தந்து அதனல் அதிக ஜுவாலைவீச அத்துவெப்பமானது எந்தவிடங்களிலும் பரந்து வாட்டுவதினுல் பிராணிகள் நாசப்படுகின்றன தேவரீர் தயவுசெய்து வேகத்தைத் தணிக்கவேண்டும் பரமேஸ்வரா

## பரமசிவன் விருத்தம்.

பரமனுளிருக்கநீங்கள் பயப்படவேண்டாம்கேர்கல்
சூரவெனவுங்களுக்குக் கோரியவெல்லாமீவேன்
உரமுடனளித்தவாக்கை உண்மையாய்கம்புவீர்கள்
விரைவினிலுருவைமாற்றி வேகத்தையடக்குவேனே,

(பரம-வ-ம்.) தேவர்களே பயப்படவேண்டாம் இப்போதிருக்கும் உருவைமாற்றி ஓருருவாகி கோரியதெல்லாம்தந்து பொறியின்வேகத்தை அடக்குகிறேன் தேவர்களே.

(பொது-வ-ம்) கேளுங்கள் சபையோர்களே ஆறுமுகமாயிருந்த பரமசிவன் அனற்பொறிகளை உற்பித்து ஓர்முகமாகி தேவர்களுடைய இடுக்கண்களைப்போக்கி அனலின்வேகத்தையும் தணிக்கும் கருணையைக்காண்பீர்கள் சபையோர்களே.

## பொது தரு.

இ-ம்--இந்துஸ்தான்-தாளம்-ஏகம்.

ஏகமுகமாகுரே எங்கும்ஜொலிக்க
வேகமாகபோகயோக ஞானதீபகோருதீபன். (ஏ)
சுந்தரமுகமுடனே குலங்கையினில்பிடித்து
சந்திரனைதலையில் தரித்தமான்மழுவிரித்து. (எ)

(பர-வ-ம்.) அண்டாண்டங்களையும் அலைத்தழிக்கும் அனற்பொரிகளே ஓடிவாருங்கள்.

## பரமசிவன் விருத்தம்.

சிரம்தபனிந்தகிற்கும் சிகிபொடுசலனேகேளீர்
பாபரப்புடனேஇந்த பகுபொறிசிரசில்தாங்கி
வாகதிதன்னில்சேர்த்தால் வணக்கமாயவளேகொண்டு
சரவணப்பொய்கைக்கேகி சாங்கமாய்விடுவாள்காணீர்.



(பரமசி-வ-ம்) ஏ வாயுவே அக்கினியே நீங்களிருவரும் இந்த அனற்பொரிகளை பயபக்தியுடன் சிரசில்தாங்கிக் கொண்டுபோய் கெங்கையில்விட்டால் கெங்கைசரவணப் பொய்கையில் சேர்த்துவிடுவாள் சீக்கிரம் செல்வீர்கள்.

## அக்கினிதேவர் வாயுதேவர் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-அடதாளசாப்பு

மனமகிழ்ந்திடுவோம் ஐயா மடங்கலைக்கானவே. (ம)

நினைக்கநினைக்க கொடிதுயிர்வாடி
நிகரில்லாவனைமையும் கெடிழ்த்ததுவிடி
அனந்தனைநீறியா கதிரையங்களுண்டோ
அடிமைகள் தாங்கிடக. (மன)

பாலவிழிப்பொறியால்சாங்கன் பதைபதைக்கின்றோமே
ஆலகாலவிஷம்போல் அதிகடரைக்கண்ட
மால்பன்றேன்றும் மதிமயங்கிக்கொண்ட
கோலக்குறையையும் குலைவாயுமென்சொல்வோம்
சிவனே சிந்திந்து (மன)

(வாயு-அக்கினிதேவ-வ-ம்.) கெங்காதரக் கடவுளே தேவரீர் நெற்றியில் உதித்தபொறிகளின் மகிமைகளை நினைக்குமிடத்தில் மனமடங்குகின்றது அப்பேர்ப்பட்ட அப்பொறிகளை அடியோங்கள் சிரசிற்றாங்கிக்கொண்டுபோக எங்களால் தாமோ இதைதேவரீர் அறியாததுண்டோ பாபங்களைப்போக்கும் பரமேஸ்வரா.

(பரமசி-வ-ம்.) ஏ வாயுவே அக்கினியே ஒருநொடிப்போதில் இந்தவுலகங்கள் முற்றிலும் பரந்து நெருங்கிய இப்பொரிகளை சுமந்துகொண்டுபோய் கெங்கையில் விடுவதற்கு உங்களிருவருக்கும் வலிமையுண்டாக ஆசீர்வதித்தனம் அப்படிகெங்கையில் விட்டமாத்திரத்தில் அவள் சரவணப்பொய்கையில் சேர்ப்பிப்பாள் பிறகுஅவ்விடத்தில் சிறந்தகுமாரனுக ஒருக்கொண்டு வெளிவந்து மகதவின்வரங்களைப்பெற்று உலகங்களை அலைத்திருக்கின்ற சூரபதுமனை குலநாசஞ்செய்வான் இனிமேற்கவலையின்றி மகிழ்ந்துபோய் வருவீர்கள் தேவர்களே.

## தேவர்கள் கண்ணி.

இ-ம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

ஆதிநேவனையர்தன் அருமையின்திறமை
அதிசேஷனுலுங்கொல்ல அரியதாம்பெருமை

சுயம்பிரகாசனே அன்பர்கூழும்நேசனே
ஜெயமேவாசனெனவர்க்கும் செம்புயீசனே
கோரியன்னவம்மானனி குறைமையதீர்த்தோனே
காரணகாரியமாகி கார்த்தாகிப்போனே
துஷ்டசூரனால்படும் துயரைப்போக்கினோம்
கஷ்டம்பாவும்கடந்து நின்அசனிக்கலாயினோம்
தாயசமானம்மை தாங்கினீரும்
போய்வருகிறோம் பெரும் புண்யனேகாரும்.

(தேவர்-வ-ம்.) சுயஞ்சோதிக்கடலே உங்கள் தயவால் எல்லா சம்பத்தையு மடைந்தோம் தங்களுத்திரவுப்படி அனற்பொறிகளை எடுத்தேகும் வாயு அக்னிதேவர்களுடன் நாங்களும் போய்வருகின்றோம் சுயஞ்சோதிக்கடலே.

## வாயுதேவர் தரு.

இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி.

அடாதாரசூரர் படாதபாடு
படுவாரென்றும் கெடுவாரென்றும்
கெடிபெறவுலகில் குடிகொண்டாளும்
கொடியசூரன் இடிகொண்டோடவும்
எடுத்தவிரதம் கெடுத்தவுன்னை
அடித்தவனென்று கடுத்துக்கொல்லவும்
திடமுடனிப்போ மடமடவென்று
எடாதனற்பொறி எடுத்தேனெடுத்தேன்
விடையன்சொல்போல் முடிமேல்பூண்டேன்
நடையுங்கொண்டு துடியாய்ச்செல்வேன்.

(வாயுதே-வ-ம்.) தேவர்களே நமது சங்கடங்கள் ஒழிய எடுக்கக்கூடாத அனற்பொறிகளை சிரசில்தாங்கினேன் சீக்கிரம்செல்வோம் வருவீர்கள் தேவர்களே.

## வாயுதேவர் விருத்தம்.

சிரசினிலெடுத்துவந்த சிறந்தகற்பொறிகள்செய்யும்
தெரிவரும்துயரையென்னல் செப்பிடவொண்ணுதய்யா
உரிமைகொள்ளக்னிதேவா உற்றனென் துயரந்தன்னை
பரிசிந்திடுவாய்நீதான் பரித்திடப்பொறிகள்தானே.



(வாயுதேவ-ம்.) ஐயா அக்னிதேவரே என்சிரசில்வைத்திருக்கும் அனற்பொறிகளின் வேகத்தால் தலைவெந்து படும்சித்திரவதையை என்னால் சொல்லமுடியவில்லை பரமசிவ னுத்திரவுப்படி நீர் இவைகளை சிரசில் தாங்கிக்கொள்ள வேண்டுமையா அக்னிதேவரே.

## அக்கினிதேவர் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-தாளம்-ரூபகம்.

வாதைபடவேண்டாம் வாயுதேவரேயுன்
நிதைவிலக்கிடுவேன் இப்போதே
ஆதரவுசெய்வேன் அட்டியில்லாமலே
அனற்பொறி தலைத்தாங்கி
மனமகிழ்வுடனவே ஓங்கி.(வாதை)

(அக்னி-வ-ம்.) வாயுதேவரே நீர்வாதைபடாமல் அனற்பொறிகளை தாங்கிக்கொள்ளுகிறேன் என் சிரமேல் வைத்துவிடுவீர் வாயுதேவரே.

## அக்கினிதேவர் விருத்தம்.

திப்பொறிகடுதலைமேல் தீய்ந்ததுசரீரமெல்லாம்
மாப்பணியணிந்தநாதா மங்கையோர்பாகாவுன்றன்
தாப்பதம்பணிந்தேனென்னை சட்டிடாதிருக்கவின்றே
காப்பாருங்கங்கைசேர்க்கக் கருணைசெய்தருளுவாயே.

(அக்னி-வ-ம்.) ஓ கைலாசவாசாநீயான்படும் கஷ்டத்தைப் பார்க்க வனக்கழகாகுமா அதிதமாய் கங்கையில் பொறிகளைசேர்க்கும்படி திருக்கருணைசெய்வாய் கைலாசவாசா.

## அக்னிதேவர் கண்ணி.

இ-ம்-புன்னுகவராளி-தாளம்-ஆதி.

ஒப்பிலாதஅனலுமென்னை கப்புதேன்னசெய்வேன்
அப்பனேநீஎப்படியும் தப்பிடக்காருங்கேன்
எதுசெய்வேன் எங்குநாம் எப்படிசகிப்பேன்
பேதமுறைக்கிரங்கிக்காத்தால் பேயன்பிழைத்திருப்பேன்
உன்னையல்லால்ஒருவரில்லை உற்றதுணைநீயே
தன்னையறிந்தின்பமுறும் தாணிக்கெல்லாந்தாயே.

## அக்கினிதேவர் விருத்தம்.

விடமுண்டநீலகண்டன் விதிப்படிவழியைநோக்கி
கடிதினிலோடிவந்து கங்கையைக்கண்ணுல்கண்டோம்
திடமுடனுற்றிலேதான் தீப்பொறியாறும்விட்டேன்
நடந்திடுமார்க்கமேதோ நாதர்காளறிந்திடீரே.

[illegible] (அக்னி-வ-ம்) ஐயா தேவர்களே கடவுளிட்ட அக்கினிப் [illegible] [illegible]ம்) துரிதமாய்வந்து கங்கையைக்கண்டு அதில் அனற் [illegible] [illegible]பான்விட்டதையும் கண்டீர்கள், இனிநடக்கும் மார்க் [illegible] [illegible]செப்பீர்கள் தேவர்களே.

### கங்கை தரு.

[illegible]ம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

[illegible] அக்கினிதேவர்களே அருமைமகனாரெனை
[illegible] ஆவிசோருதனல்மிஞ்சியே (ஆ ஆ)

அநுபல்லவி.

[illegible] அடைந்தகெறிபித
[illegible]ம். தேவனைசிந்தித்து. (ஆ ஆ)

சரணம்.

[illegible]வே யார்செய்தசதியோ
[illegible]த்தான் மகிழ்ந்ததிவ்விதியோ. (ஆ ஆ)

[illegible]னாயினும் இந்தவிதிபோலே
[illegible]யாதுநேர்ந்ததில்லை விந்தையிதுபோலே (ஆ ஆ)

உற்றுப்பார்க்கையி அம்பருக்கிறைவனுல்
முற்றும்நேர்ந்ததே முடிவதெப்போவென்னுல். (ஆ ஆ)

### கங்கை விருத்தம்.

பரமன்கட்டளையினுலே பாக்கியமளிக்கவந்த
வரமுள்ளவுடைவநோக்கி வரிசையாய்ஏந்திஎந்தன்
கரமென்னுமலைகளாலே கனிவுடன்கட்டிக்காத்து
சரவணப்பொய்கைமேனி சாங்கமாய்சேர்ப்பிப்பேனே.

(கங்கை-வ-ம்) ஓ! ஓ! இதுகள் பரமன்கட்டளையால் வந்த தாகத்தெரிகிறது ஆதலாலென்ன கஷ்டமிருந்தபோதிலும் சகித்து அதிகவேகங்கொண்டு அலைகளென்னும் கரங்களினுல் தாங்கி தாலாட்டி, சரவணப்பொய்கையில்சேர்க்குதிடுவோம்.



### கங்கை தரு.

இ-ம்-புன்னுகவராளி-தாளம்-ஏகம்.

சீராகசெல்வேன் சரவணமேபுகழ்பெறும்
பேர்பெற்றதேவர்கள் பின்பற்றிவரவும்
பிரியமாயெவர்களும் பெரிதும்கூறவும்
அருமனற்றமுனிவர்கள் ஆசிக்கூறிடவே
வருந்திடாதிமையவர் வாழ்த்திஜெயங்கூறிடவே
வேதங்களுதித்திட விஞ்ஞையர்பாடிட
நாதமுழங்கிட நல்விருதுபிடித்திட
இந்தவைபவம் இலங்குமுன்பாகவே
உத்தமநானிங்கிடயே உன்னதமாகவே. (சீராக)

(கங்கை-வ-ம்.) நாம் இப்பொழுது சரவணப் பொய்கையில் பரமன்கட்டளையால்வந்த அனற்பொறிகளை சேர்த்துவிட்டோம் இனி நமதிருப்பிடம் செல்வோம்.

### தேவர்களிலொருவர் தரு.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஏகம்.

பல்லவி.

அதிசயமென்னசொல்வேன் ஆ ஆ சரவணப்பொய்கையின் (அதி)

சரணம்.

பொருந்திதருக்கள்
புன்னைக்கொன்றை
மன்மதபாணம்
மருவிகொழுந்து
திருவுள்ரோஜா
மாதர்கள்காடும்
ஜாதிசெண்பகம்
கதிர்பச்சையுடன்
பிதமிக்கமலை
குருவேர்வாசம்
அருகிற்சென்றால்

பொய்கைக்கரையில்
புகழும்வில்லும்
பொலிந்திடுமுகும்
மல்லிகைமுல்லையும்
மணமகிழ்ச்சியாய்
இனமும்புகழ்ச்சியாய்
மகிழும்சுகந்தம்
சம்பங்குசிதம்
கனகாமந்தியும்
மிகவிருவாக்சியும்
குணமாய்வீசும்
அதிசம்சேர[illegible]

ஜெலத்திலிருக்கும் செந்தாமரையும்
விலகாமச்சம் வெண்டாமரையும்
நிகரில்லாத நீலோற்பலங்கள்
ஜெகம்புகழ்நல்ல செங்கழுநீர்கள்
அல்லலொழிக்கு மாம்பலுமல்லிகள்
மெல்லசெல்லவும் மென்படுபசுதிகள்
அதினுடன்கூட ஆறுமாமுகமாய்
அன்பரைக்காக்க ஆறிருகரமாய்
உருவைப்பெற்று உன்னதமாக
முருகக்கடவுள் முளைத்திருப்பதை
பார்க்கப்பார்க்கப் பிரம்மானந்தம்
நேர்ந்திடுமிவ்வித நேத்ரானந்தம். (அதி)

(தேவர்-வ-ம்.) மாயவா நாம் இந்த பொய்கைக் கரையி லேயே இருந்துகொண்டு இவ்விதமைவபவங்களை பெற்றுவிளங்கு கின்ற பாலசுப்பிரமணியருக்கு பால்கொடுக்க கார்த்திகை பெண் களை வரவழைத்து திட்டம்செய்வீர் மாயவா.

(மகாவி-வ-ம்.) அப்படியே செய்விக்கின்றேன் தேவர்களே.

## மகாவிஷ்ணு விருத்தம்.

சீர்பெறுசிவத்துதித்த தீப்பொறிமகவாய்வந்து
பார்புகழ்சரவணத்தில் பண்பதாய்விளங்கக்கண்டோம்
கார்தருகுழலார்க்தோங்கும் கார்த்திகைப்பெண்காள்நீங்கள்
ஏர்தருமுலைப்பாலீய இத்தறிவருகுவீரே.

(மகாவி-வ-ம்) ஓ கார்த்திகைப்பெண்களே சிவபெருமானி டமிருந்து உதித்த அனற்பொறிகள் சரவணப்பொய்கையில் குழந் தைவடிவாய் விளங்கி இருப்பதால் பால்கொடுத்துவளர்க்க விரை வாய் ஓடிவருவீர்கள் கார்த்திகைப் பெண்களே.

## மகாவிஷ்ணு தரு.

இ-ம்-காம்போதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஓடிவருவீர்களே உத்தமனத்தினைப்பெற்ற
உன்னிதக் கன்னியர்களே. (ஓடி)



சரணம்.

ஆடிப்பாரத்தால் லானந்தங்கொண்டுமிக
வேடிக்கையாகவெரு விரைவினில்வருவீர்
நாடியகருத்தைஎல்லாம் நாங்களினிமுடித்திட
தேடியேகார்த்திகைப்பெண்காள் தியங்காதிப்போதேநீங்கள். (ஓ)

சேனைத்தலைவருடன் வானைக்கட்டிவாழும்
தானவர்செய்திடும் ஊனங்களாலே
மானமழிந்துமெத்த ஈனத்தொழில்புரிந்து
வானமடைந்ததன்ம தானமிழைந்தொழின்று. (ஓ)

இகமும்பரமும்என்றும் இனிதுவிளங்கிட
பகவானருளால்வந்த பாலனுக்கும்பால்
அகமகிழஅளித்து ஆருயிர்ஓங்கிட
புகழ்பெருநல்லதவ புண்ணியவதிகளே. (ஓ)

(மகாவி-வ-ம்) ஓ கார்த்திகைப்பெண்களே எங்கள் குறை யை நீக்கிக்கொள்வதற்கு சரவணப்பொய்கையி லிருக்கும் குழந் தை வேலனுக்கு பால்கொடுக்க வருவீர்கள் கார்த்திகைப் பெண் களே.

## கார்த்திகைப்பெண்கள் விருத்தம்.

பஞ்சவாயுதனேபோற்றி பிரானந்தவனேபோற்றி
கஞ்சம்சேர்தாளாபோற்றி காயாம்பூவண்ணாபோற்றி
தஞ்சமாபுவியடைந்தோம் தாமரைப்புயனேபோற்றி
செஞ்சவேளமைபழைத்த செயலினையுரைப்பாய்போற்றி.

(கார்த்தி வ-ம்.) பனிமைபொருந்திய மாதவா எங்களையாது காரியமாய் வரவழைத்தீர் அதனைத்தெரிவிக்கவேண்டும் மாதவா.

## மகாவிஷ்ணு விருத்தம்.

கார்த்திகைப்பெண்களேநான் கருத்துடன்சொல்வேன்கேட்டு
மூர்த்தமாய்விளங்குமய்யன் முருகனையினிதிற்பெற்று
பார்த்திடவுலகில்யாரும் பயில்தாசெய்தலாலே
நீர்த்திடப்பசியைநீங்கள் தீங்கிலாதகற்பாளிவீர்.

(மகாவி வ-ம்.) பெண்களே சிவபெருமானிடத்தி லுதித்த குழந்தைகள் இந்தசரவணப் பொய்கையில் வீற்றிருக்கின்றனர் அவர்களுக்கு உங்கள் கொங்கைப்பாலை உண்ணும்படி கொடுத்து அன்பாகப்போற்றிவளர்க் கடவீர்கள் பெண்களே.

## கார்த்திகைபெண்கள் தரு.

இ-ம்-காம்போதி-தாளம்-ரூபகம்

பல்லவி.

ஆக்கினைப்படியே அளிப்போம்பாலை இப்படியே. (ஆக்)

அநுபல்லவி.

பாக்கியமிதுபக்ஷமுடனே பரிவாய்ப்பாலை. (ஆக்)

சரணம்.

அய்யன்களித்திட ஆனந்தமேவிட
ஆதரித்திடுவோம் அமுதர்தமளித்து
அச்சுதனேமெச்சம்படி இச்சையாக (ஆக்)

(கார்த்தி-வ-ம்.) மாசுவாமிகளுத்திரவுப்படியே எங்கள்பாலை க்கொடுத்து அதிகமேன்மையுடைய பாராட்டிப்பாதுகாத்து வருகின் றோம் மாதவா.

கார்த்திகைபெண் விருத்தம்.

ஆரணியத்தினித்துவந்த அய்யனேயின்குமாரர்கள்
பரிவுகொண்டுனக்குண்டாரும் பசிதனைப்போக்கவந்தோம்
கிரிதிகமெங்கள்கொங்கை கிளர்ந்துபாலையும்
பிரியமாயினி தினுண்டு பிறங்கிடவிருக்குவாயே.

(கார்த்-வ-ம்.) ஆரணியத் துதித்துவந்த அய்யனே பசித்திருக்கின்றீர் அமுதுண்ணவாரும் கார்க்கவந்த கருணாநிதியே.

### கார்த்திகைப்பெண் தரு.

இ-ம்-முகாரி-தாளம்-ஏகம்.

பல்லவி.

அய்யனேவாருமையாநீரும் அமுதான்னுமபசிதீரும். (அய்)

சரணம்.

மெய்யனேஎந்தனை மெய்ப்படப்பண்ணை
மேவுமிரிக்கனம் நிதியப்பாலுண்ண
மேலான நல்பாலினை
மோகினிபெண்களும் விருந்திடும் செல்வனே. (அய்)



அருமறைதுதித்திட ஆறுமுகர்துலங்க
அரிகரருடன் அன்பர்களிலங்க
அவதாரம்செய்த உபகாரம்
ஆறிலாருக்குந் அதிசயவீரம். (அய்)

(கார்த்-வ-ம்.) ஆ ஆ அம்மா என்ன ஆச்சரியம் என்ன புதுமை சண்முகங்களைப்பெற்று ஒருநீராறுமாகக் காட்டியவர் இப்பொழுது ஆறுகுழந்தைகளாக நிற்கின்ற அழகும் இவர்களுடைய மகிமைகளையும் எம்மால் ஒன்றுஞ்சொல்ல முடியவில்லையே அம்மா.

(கார்-மற்றொரு-வ-ம்.) அடி அதற்கென்ன தடை இப்பேர்ப்பட்ட மகிமையுடையவர் நாம் எப்பொழுதாகிலும் கண்டதுண்டா.

(கார்-மற்றொரு-வ-ம்.) அடியம்மா அவர்சர்வஞர்த், ஜெகதீசனல்லாது வேறல்லடி.

(கார்-மற்றொரு-வ-ம்.) ஆமாண்டி அப்படியல்லாவிட்டால் இப்படி அழகானசொரூபம் எடுக்கமுடியுமா.

(கார்-மற்றொரு-வ-ம்.) அடி அப்படி எடுத்தாலும் ஒருமுகமாயிருந்தவர் தனித்தனியாக ஆறுமுகத்தோடும் ஆறுகுழந்தைகளாக அவதரித்தது ஆச்சரியமே.

(கார்-மற்றொரு-வ-ம்.) அதற்கென்னதடை அம்மா இப்பேர்ப்பட்டவர் எப்படியும் அந்த சூரபத்மனைசம்மாரம் செய்துவிடுவார் தடையில்லையம்மா.

### கார்த்திகைப்பெண்கள் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஆறுருவான அதிசயத்தை அறிந்துசொல்லிடப்போமோயித்தை.

அநுபல்லவி.

ஒருருவாய்வந்து ஒன்றும்படிநின்று
வேறுருவாக வெளிவந்தினின்று. (ஆறு)

சரணம்.

ஒருவருக்கொருவராக ஒத்துநின்றுபால்கொடுக்க
நாறும்பூவும்போலேநாமும் நாடியே இசைந்திருக்க
பரிவாய்பார்க்கப் பரமானந்தம்
பசித்திடவே ஆ! ஆ! ஆ!

பாமைந்தர் — சேர் சேர் சேர்
பார்த்திடவே — சீர் சீர் சீர். (ஆறு)

(கார்த்-வ-ம.) எங்களை ஆளவந்த குழந்தைகாள் உங்களைப் பார்க்க தேகம்பூரித்த கொங்கைகளது தருளித்து பாலதிகமாக சுரப்பதை உண்டிடவோர வருவீர்களப்பா,

## கார்த்திகைப்பெண்கள் தரு.

இ-ம்-காம்போதி-தாளம்-ஏகம்.

பல்லவி.

பாலைக்குடித்திடுவீரே (பா)

அநுபல்லவி.

பாலைக்குடித்திடுவீர் — பாகைசேருமைக்கரும்
ஞாலம்செய்யாமலேயுன்னும் — ஐம்பொறியில்பசிதீரும். (பா)

சரணம்.

மெத்தப்பசித் — திருக்கிறீர்
சித்தம்குளிரச்செய்ய — வசெண்முகமாய்வந்த
முத்தமிழ்மொழியக்கேளீர் முந்துங்கனிபோக்க இந்த. (பா)
கொங்கையில் — பால்பெருகுதே
உங்கள் கருணையாலே — மங்களமாகவிகலே
தங்குமுடனின் அகாரும் — எங்கள் தமயோகிடலே. (பா)

## கார்த்திகைப்பெண்கள், விருத்தம்.

தட்டிருநிகழ்களொடு தண்மலர்தழைத்தாரோரும்
மட்டலர்கடப்பமீதுல் வதிக்கும்சரவணத்தில்
இட்டமாய்விளையாடல்செய் திருப்பதாம்தாமரைப்பூந்
தொட்டிலிலிட்டோமும் துலங்கத்தாலாட்டுவோமே.

(கார்த்-வ-ம)அடி அம்மமார்களே நாம் தாமரைப் புஷ்பத்திறல் தனித்தனி தொட்டில்செய்து அத்தனயம் பிரகாசமாய்வந்த குழந்தைகளை அதிலிருக்கச்செய்து தாலாட்டுவோம் வருவீர்களம்மா,

## கார்த்திகைப்பெண்கள் தரு.

இ-ம்-ஜுஞ்ஜுடி.

ஆரார்தானறிவாரோ உன்பெருமை ஆரார்தானறியாரோ
சராடிவென்செய்வோம் — கண்மணியேகண்வளரீர்
(மற்)தாமரைப்பூந்தொட்டிலிலே — தாங்கியுனைவளர்த்திட்டேன்
காமனையெரித்தோன்சேயா — கடவுளேகண்வளரீர்



(மற்.)தேவர்கள்முறைக்கிரங்கிஇங்கு — நீர்க்கவந்தபாலகனே
ஆவதழிவெல்லாம் — அறிவோனேகண்வளரீர்
(மற்.)சீருள்சிறந்தோங்க — தீர்சிறுமணம்பொறியாக
சூரனைக்காயுதித்துவந்த — சூரசம்மாராகண்வளரீர்
(மற்.)வாயுவடவனுமாக — வருந்திக்கைகொண்டுவர்து
சாயவிடசரவணத்தில் — சார்ந்தவரேகண்வளரீர்
(மற்.)இகபரமிரண்டிற்கும் — நல் இனிதாசெயங்கோரிவந்த
பகலவனேபசிதணித்தீர் — பண்புடனேகண்வளரீர்

(கார்த்-வ-ம.) அடியம்மா என்குழந்தை மெய்மறந்து நித்திரைபோகுதடி.

(மற்-வ-ம). இதோபாரடி என்குழந்தை நித்திரையிலிருந்தெழுந்து நன்றாய் பேசுகிறது.

(மற்-வ-ம) அடி அம்மமார்களே என்குழந்தை எழுந்து விம்மி அழுகுதடி எவ்வளவு சமாதானம் சொல்லியும் அதிகமாயழுகுதடி. இதற்கென்ன செய்வது.

(மற்-வ-ம.) அம்மம்மா என்குழந்தை எழுந்து தத்தடியிட்டு நடக்கிறது பாரடி.

(மற்-வ-ம.) அம்மா இந்தகுழந்தை நிற்கக்கூடாமல் பொத்துபொத்தென்று விழுந்து விடுதடி.

(மற்-வ-ம.) அடி அம்மா பாலைக்குடித்து பசியில்லாததுபோல் சிரிக்கிறதடி.

(மற்-வ-ம.) அம்மா என்குழந்தை மஞ்சாடி ஆடுதப்பா.

(மற்-வ-ம.) அம்மமார்களே என்குழந்தை செய்த வேலையை கேட்டீர்களா பொய்கையில் பார்த்து ஜலத்தை சொரிந்து நிற்கின்றதடி.

(மற்-வ-ம.) என்குழந்தைசெய்த வேடிக்கையைக் கேட்டீர்களா என்முலைக்காம்பைப் பிடித்து இழுத்து இழுத்து குடித்து சந்தோஷமுண்டாகிவிட்டதடி.

(மற்-வ-ம.) அம்மா என்குழந்தை பால்குடிக்கிறதும் அம்மாவோடிறதும் தவிர துஷ்டதனம் கிடையாதடி.

(மற்-வ-ம.) இதோ பாருங்களடி என்குழந்தை ஓடிஒளிப்பதகாட்டி பிடிக்கப்போனால் அகப்படாமல் ஓடுகிறது.

(மற்-வ-ம.) என்குழந்தை அழுதுகொண்டே வருகிறதேனடித்தாயென்னடி.

(மற்-வ-ம்.) அடி அம்மமாரே என்னடி கனக்கின்ற குழந்தைகள் நமது கண்ணுக்குப் புலப்படுகிறதே.

(மற்-வ-ம்.) அம்மா இக்குழந்தைகள் பரம்பொருளாகிய சர்வக்ஞனானவன் குமாரதேவராக தாம்வெவ்வேறிவிட்டதும் பொருந்தி நடப்பிப்பதைப்போல இத்தகைய அதிசய திருவிளையாடல்களை தமது மாயாவிலாசத்தாற்காட்டி நடிக்கின்றாரடி.

(மற்-வ-ம்.) அடி அம்மமார்களே இதாகா. குழந்தைகளை என்னுமல் வழிபட்டவர்கு இஷ்டதெய்வத்தைப்போலக்கருதி பக்திவினயமாய்ப் போற்றிசெய்து வரவேண்டும் அம்மமார்களே.

(மற்-வ-ம்,) அப்படியே போற்றிவரலாம் அம்மமார்களே.

## கார்த்திகைப்பெண்கள் தரு.

இ-ம்-அடாணா-தாளம்-ரூபகம்

பல்லவி.

முருகன்உருவிளங்கிவரும் பெருமை அந்த
மூவராலுமில்லை மொழியுந் திறமை. (முரு)

அநுபல்லவி.

அரிவையர்களருவருங்காண அகமுற்றியேமிகபற்றியே
ஆனந்தித்திடும் சரவணா. (முரு)

சரணம்.

தேவர்க்குறைபோக்கத் தீவிரமாகவே தேடிவந்தபாலன்மிக
ஆவலுடன்பார்க்க அன்புமிகுதியாய் ஆனந்திக்கும்சீலன்
சேவகம்பேசியே சிறுவேர்க்குக்காலன்
சிவபெருமானிடசேயன் இந்திரஜாலன்
தவத்தைப்பெருக்கித் தழைக்கக்கார்க்கும்லோலன்
தாணிதனிலுரமாகவே தான்வந்தாஜநிலீலன். (முரு)
அண்டமாயிரத்தெட் டாண்டிடுமதிசூர
அசுரனைக்கேட்டக் கொல்ல அந்த
அவுணர்யாவரும்முடியோடறுத்திட அவதாரம்செய்திட்டால்ல
ஆதிசிவசங்கர னெனவேசொல்ல
அதிசயிக்கயாரும் ஆதரிக்கவல்ல
அன்பரிருதயம் அகலாமலேபுல்லை
அருவத்தையுருவத்தை அடைந்தோங்கும்சிறுபிள்ளை. (முரு)



(பரம-வ-ம்.) தேவர்களே கார்த்திகைப்பெண்களே நீங்களெல்லோரும் அவரவர்கள் பதவியில் சேர்ந்து சுகமேவாழக்கடவீர்கள் யான்கைலைக்குச் செல்கின்றேன் உங்கள் குறைகளைதீர்க்க குழந்தை சுப்பிரமணியனை சீக்கிரத்தில் அனுப்புவோம் பயப்படவேண்டாம் போய்வருவீர்கள் தேவர்களே.

(பொ-வ-ம்) கேளுங்கள் சபையோர்களே பரமசிவன் சரவணப்பொய்கைக்குச்சென்று குமாரதேவனை அழைத்துக்கொண்டு கைலயங்கிரியில் பார்ப்பதிதேவியாருடன் வீற்றிருக்க வீராகுதேவர்களும் இலக்ஷத்தவர்களும் சூழ்ந்துவணங்கிப்போற்றி ஏகமாய் துதித்துநிற்க தேவர்கள் கைலைக்குவருகிறவிதம் காண்பீர்கள் தனவான்களே.

## நவவீரர்கள் இலக்ஷத்தவர்கள் தேவாரம்.

சோதியேசுடரேபோற்றி சுந்தரவடிவேபோற்றி
நீதியாதவனேபோற்றி சின்மயானந்தாபோற்றி
கோதிலாமணியேபோற்றி குககுருபரனேபோற்றி
காதலாய்க்கண்டோமுந்தன் கழலடிபோற்றிபோற்றி.

## தேவேந்திரன் விருத்தம்.

வலியகோலாகலஞ்செய்து வாழ்ந்திடுஞ்சூரனென்னை
விலையுயர்மச்சமெல்லாம் வெல்லாய்கடிதிற்சென்று
மலியவேபிடித்துணக்கி வாவென அனுப்பயானும்
நலியவேயோடியோடி நான்கட்டமடைந்திட்டேனே.

(இந்-வ-ம்.) விஷ்ணுதேவரே அந்தகொடியபாதகனாகிய சூரபத்மன் என்னை சமுத்திரஞ்சென்று மீனைப்பிடித்துணக்கி கொண்டுவரும்படி ஆக்யாபிக்க அதுபோல் செய்து பட்டகஷ்டம் என்னால் சொல்லமுடியவில்லையே இனியாகிலும் நாமனைவரும் கைலைக்குச்சென்று நமக்காகவுதித்திருக்கும் குழந்தைசுப்பிரமண்யத்தை யுத்தத்திற்கனுப்பும்படி குறைகளை சொல்லிக்கொள்வோம் வருவீர் விஷ்ணுதேவரே.

## விஷ்ணுதேவர் விருத்தம்.

சோதிக்கமனத்திலெண்ணிச் சோதியுஞ்சும்மாயாக்கு
பேதித்திருப்பதென்றோ பின்னெனுமிகுமோதேசோம்
வாதிக்கதாவந்தாலும் மனங்கொள்ளநல்லதன்றோ
நீதித்தைவிலக்கஇன்றே நிவாம்செல்லுவோமே.

(விஷ்ணுதே-வ-ம்.) தேவராஜனே பரமசிவன் நம்மையோதி க்கும்படி சும்மாயிருக்கின்றதாகத் தெரிகின்றது இன்னும் என்ன சங்கடங்கள்சேரிடுமோ தெரியவில்லை இப்போதே நாமெல்லோ ரும் செல்வோம் வருவீர்கள் தேவர்களே.

(தேவர் வ-ம்.) அப்படியே செல்வோம் விஷ்ணுதேவரே.

(தேவர்-வ-ம்) போற்றி போற்றி நந்தியெம்பெருமானே போற்றி நாங்கள் முன்னொருகாலம் பரமசிவனிடத்தில் எங்கள் துயரங்களை சொல்லிக் கொள்ள வந்ததுபோல் இப்பொழுதும் பொருக்கமுடியாத துயரினால் ஓடிவந்தோம் கருணைநிதிக்குத் தெரி வித்து வரவழைப்பீர் ஞானதேவரே.

(நந்திதே-வ-ம். தேவர்களே உங்கள் வருத்தங்களெல்லாம் இன்றுடன் ஒழிந்துவிட்டது பயப்படவேண்டாம் இதோ யான் சென்று விடைபெற்று வருகின்றேன் தேவர்களே.

## நந்திதேவர் கண்ணி.

இ-ம்-காம்போதி-தாளம்-ஏகம்.

காலனையுதைத்தபாதா கழலடிபணிந்தேன் நாதா
காலமிதுவேநல்ல கருணைகாட்டுவாய் போதா
தேவர்கள்துயரத்தாலே தேடிவந்தார்கள் ஐயா
தேருதலேதுமில்லாத் தியங்குறார்கள் மெய்யா
அலைக்கரும்பதாகி அலைகுறார்சூரன் தன்னால்
ஆருமில்லைகெதி யென்றங்கம்வாடுறார் முன்னால்

(பரம-வ-ம்.) நந்தி, தேவர்க ளனைவரையும் அழைத்து வருவாய்.

(நந்-வ-ம்) பரமதயாளா இதோ அழைத்தோடி வருகின்றேன்.

(நந்-வ-ம்.) தேவர்களே அழைத்துவரச்சொன்னார் வாருங்கள்.

(தேவர்-வ-ம்.) இதோ வருகின்றோம் நந்தி யெம்பெருமானே.

## தேவர்கள் விருத்தம்.

அரவணிந்தவனேபோற்றி ஆனைமுண்டவனேபோற்றி
மாகதவடிவேபோற்றி மாதேவிபாகாபோற்றி
திரிபுரமெரித்தாய்போற்றி தீங்கினைக்களைந்தாய்போற்றி
பரமனேயுன்றன்பாதம் பணிந்தனம்போற்றிபோற்றி.



(பார்ப்-வ-ம்.) அடிசக்களத்தி மார்களே எனது நாதனால் ஒங்கிய கெர்ப்பம் பலகாலம் வெளிவராமல் இவ்வாறே இருக்கக் கடவீர்கள்.

## நவசத்திகள் கண்ணி.

இ-ம்-முகாரி-தாளம்-ரூபகம்.

அய்யோதேகம்நடுங்க ஓசிவமே
அடைந்தோமேசாபமின்று ஓசிவமே
கர்ப்பம்வெளிவராமல் ஓசிவமே
காப்பதெப்படிஅய்யோ ஓசிவமே
இந்தவாதைபடவும் ஓசிவமே
வந்தவிதியிதுவோ ஓசிவமே
வாதைபடாமினி ஓசிவமே
நீதைவிலக்கிடுவீர் ஓசிவமே
எல்லாமுன்தன்கூத்தல்லால் ஓசிவமே
எவராலென்னமுடியும் ஓசிவமே

(பரம-வ-ம்.) ஓ ஓ உமையவளிட்ட சாபத்தால் நவசத்திகளும் பயப்பிராந்திகொண்டு நடுங்கி அந்த வெம்மையினால் வேர்த்திருக்கின்றார்கள் இதுசமயம் அவர்கள் தேகமுற்றிலும் வியர்த்தொழுகும் ஜலப்பெருக்கில் சூரியர்கூட்டம்போல் சலனமற்ற வீர பராக்கிரம சாலிகளாகிய இலக்ஷம்பிள்ளைகள் பிறக்கும்படி திருவருளைக் காட்டுவோம்.

## இலக்ஷத்தவர் விருத்தம்.

அண்டகோளங்களெல்லாம் அதிர்ந்துமிகிடுகிடென்ன
கண்டவர்மனங்கலங்க கனவீரவானைத்தாங்கி
கொண்டல்போலிடிஇடித்து கூற்றனையுதைத்தோனாலே
பண்டமேயாடையாக பகரமாய்தரித்துவந்தோம்.

## இலக்ஷத்தவர் கண்ணி.

போற்றி போற்றி போற்றி போற்றி புனிதஞானனே
பொன்னடிக்கே போற்றி போற்றி பூதனாதனே
எங்கும்சோதியாய் விளங்கும் எங்கள்மெய்யனே
மங்களமாய்தங்கிடப்பார் மழுவார்கையனே
தாமதம்செய்யாமலினி தயவாய்காருமே
காமனைஎரித்தோனே கடைக்கண்ணால்பாருமே

## பரமசிவன் கண்ணி.

ஆசீர்வாதம் ஆசீர்வாதம் அன்புள்ளமக்காள்
மாசில்ஜயவான்களாக வழங்கினேன்கண்காள்.

(பரம-வ-ம்) அன்புள்ள குமாரர்களே நீங்களனைவரும் ஜெயசாலிகளாக வீறி இந்திரன் முதலியதேவர்களுக்குப் பகைவராகிய ராக்ஷதர்முதலியோரை கண்டதுண்டமாக சங்கரித்து வேரறுக்களைய விருக்கின்றநமது திருக்குமாரனாகிய குமாரசுவாமிக்குப் படைத்துணைவருக இருந்து ஜயம்பெற்றுவர கடாக்ஷவீக்ஷண்யத்தை உங்களுக்கு செலுத்தி வேண்டியவரங்களையும் புஜபலபராக்கிரமசவுரியங்களையும் தந்தேன் நீங்கள் அவனுடன் சென்று ஜெயம்பெற்றுவரக் கடவீர்கள் குழைந்தைகாள்.

(இலக்ஷத்-வ-ம்) மகாபாக்கியம் பிதாவேபுத்தகசக்தாகாசப் போகும்வரையில் தங்கள்பணிவிடைகளை செய்துக்கொண் டிவ்விடமே யிருக்கின்றோம் பிதாவே.

(பரம-வ-ம்.) அப்படியே இருப்பீர்களடா கண்மணிகளே.

(நவசத்-வ-ம்.) பரமேஸ்வரா இதுபரியந்தம் இந்த உதரபாரத்தைத் தாங்கிக் களைத்தனம் இனிமேல் எங்களால் பரிக்கச்சகிக்கியமல்ல கிருபையுற்று வெளிகாணும்படி கடாக்ஷிக்கவேண்டும் பரமேஸ்வரா.

## பரமசிவன் விருத்தம்.

அகத்தினை அடைந்தபோழ அத்திமாதேகேளாய்
ஜெகத்தினிலுந்தன்பாதச் சிலம்பிலேதோன்றிவந்த
மகத்துள்ளநவமாதர்கள் மறுக்காதுன்சாபத்தாலே
மிகச்சுமந்திடுங்கருக்கள் வெளிப்படத்தயைசெய்வாயே.

(பரம-வ-ம்.) பார்ப்பதி உனது திருவடிகளில் தரித்திருந்த பாதசரங்களில் தோன்றிய இந்த நவசத்திகளும் உனது சாபசம்பந்தத்தினால் கருவைப் பலகாலமாக சுமந்து வருந்துகின்றவர்களை இனியாவது புதல்வர்களைப் பெற்று சிறுமை நீங்கி வாழும்படிக்கு கடாக்ஷிப்பாய் பார்ப்பதி.

## பார்ப்பதி விருத்தம்.

உலகெல்லாம் புகழ்கொண்டோங்க உயர்நவசத்திநீங்கள்
வலியபிள்ளைகளைப்பெற்று வண்மையாய் வாழ்குவீரே.



(நவ-ச-வ-ம்.) பரமேஸ்வரி உன் மகிமையால் நாங்கள் புதல்வர்களைப் பெற ஒருபாரிசத்தில் போய் வருகிறோம் அம்மா.

(பார்ப்பதி-வ-ம்.) சந்தோஷமாய்ப் புதல்வர்களைப் பெற்று வருவீர்கள் நவசத்திகளே.

## நவசத்திகள் கண்ணி.

இ-ம்-முகாரி-சாப்-ஆதி.

| | |
|---|---|
| அய்யய்யோநானேது செய்வேன் | நீலவல்லி |
| நொய்யுதேஎன்னங்கமெல்லாம் | நீலவல்லி |
| வயிறுமுடனோயுதடி | வயிரமங்கை |
| வகையொன்றுந்தோணவாட்டுதடி | வயிரமங்கை |
| பற்றிபற்றிஇழுக்குதய்யோ | பவளவல்லி |
| பாவமேதோஅறிகிலேனே | பவளவல்லி |
| மாரடைக்குதென்னசெய்வேன் | மாகதவல்லி |
| மயக்கமாகுதேதுசொல்வேன் | மாகதவல்லி |
| உந்தியிலிடிக்குதடி | நாகவல்லி |
| உயிர்தரிக்கத்தாளவில்லையடி | நாகவல்லி. |

(பொ-வ-ம்.) மேன்மைதங்கள் சபையோர்களே வெகுகாலமாக கருக்களை சுமந்துகொண்டிருந்த நவசத்திகள் அம்மனிடம் விடைபெற்றபின் நாகரத்தினப்பாவை வயற்றை கீறி வீரவாகுதேவரும் தரளவல்லிவயற்றில் வீரகேசரியும் புஷ்பராகக் கன்னிவயற்றில் வீரமாமயேந்திரரும் கோமேதகப்பாவை வயற்றில் வீரமாமகேஸ்வரரும் வயிரிப்பாவைவயற்றில் வீரமாபுரந்தரனும் வயிரமங்கைவயற்றில் வீராக்கனும் மரகதவல்லி வயற்றில் வீரமார்த்தாண்டனும் பவளவல்லி வயற்றில்வீராக்கதனும் நாகவல்லிவயற்றில் வீரதீரனும் ஈட்டி, கத்தி வாள்முதலாகிய ஆயுதங்களுடன் வயற்றைக்கீறி வெளிவந்தார்கள் தாய்மார்களும் சுகமேயிருப்பதை அறிவீர்கள் கனவான்களே.

## நவசத்திகள் நவவீரர்கள் விருத்தம்.

ஆனைத்தடனமாடு மம்பலத்தவனேபோற்றி
வானவர்தேவரெல்லாம் வணங்கிடப்பெற்றோயபோற்றி
தேனமுதமானசொல்லாள் திகழ்தருபாகாபோற்றி
கானகத்திகொன்றைவேய்ந்த கடவுளேபோற்றிபோற்றி.

(நவசத்-வ-ம்) போற்றி போற்றி ஆறுமுகக்கடவுளே போ

## பரமசிவன் விருத்தம்.

கலைமதிபருதிதங்கள் கதிமாறினுலும்நீங்கள்
நிலைகலையாமல்நாளும் நிலைபெற்றுவாழ்கவாழ்க.

(பரம-வ-ம்.) வாழிவாழி சதாவாழ்வீர்கள் எ மாதர்களே பரதசாஸ்த்திரங்களுணர்ந்து எனது சபையில் ஆடல்பாடல்கள் செய்துக்கொண்டு இவடமிருக்கும் வேலைகளை சரிவரப்பார்த்து கொண்டிருக்கவேண்டும் மாதர்களே.

(நவசத்-வ-ம்.) அப்படியே இருக்குரோம் பரமேஸ்வரா

## பரமசிவன் தரு.

இ-ம்-கமாஸ்-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஆரோவென்றுநினையாதே இவர்களைநீ ஆதரித்திடுமாதே. (ஆ)

அநுபல்லவி.

சீராய்வந்தமது செல்வரிவர்கள்மீது
காராய்கருணைவைத்து கண்மணியென்வாது. (ஆ)

சரணம்.

பாதச்சிலம்பில்வந்த பத்தினிமாரிவர்கள்
ஆதரித்திடயான் அவதரிப்பித்தபிள்ளைகள்
சோதிவடிவம்பெற்ற சுந்தரநந்திதேவர்
காதிகணத்தலைவர் அரிந்திடுவாய்சகாயர். (ஆ)
வெற்றியடைந்திட வேண்டிவந்தபாலர்
வீரர்எவர்களையும் விரைவில்வெல்லுங்காலர்
மற்றேதும்நினையாதே வஞ்சகமில்லாரே
மகிழ்வாய்வரத்தைத்தந்துவாழ்ந்திடச்செய்வாய்கற்சேரே (ஆ)

## பார்ப்பதி விருத்தம்.

பவவினையதவேசெய்யும் பாதகருயிரைவாட்டி.
புவனங்கள்வாழநல்கும் புத்திரரேவாழிவாழி.

(பரம-வ-ம்.) அன்புள்ள குமாரர்களே என்னால் நிருமிக்கப் பட்ட வாளாயுதங்களை கரத்தில்தாங்கி உங்கள் தாய்மார்கள் வெயர்வையிடத்தில் பிறந்த இலக்ஷம் வீரர்களுடன் நீங்கள் கலந்து உங்கள் தமையனுகவு மிரானின்ற குமாரசுவாமியைக் கூடிப்பிரியாமல் அவனிட்ட ஏவல்பணிவிடைகளை செய்துகொண்டு வாழக்கடவீர்கள் குமாரர்களே.



(பரம-வ-ம்.) நவமாதர்களே நான் வுங்களுக்கு குறித்திருக்கும் வேலைகளைசெய்து வாழக்கடவீர்கள் நவமாதர்களே,

(நவமா-வீரர்கள்-வ-ம்) அப்படியே செய்துகொண்டு வருகிரோம் மகாதுபாவா.

(பரம வ-ம்.) பார்ப்பதி சரவணப்பொய்கையில் வளருகின்ற நமது திருக்குமாரனை இந்ததிருக்கயிலாயத்திற் கழைத்துவரச்செல்வோம் வாராய் பார்ப்பதி.

(பார்ப்-வ-ம்.) அப்படியே செல்வோம் பிராணேசா.

(பொ-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களே பரமசிவன் இரிடபவாஹனரூடராய் உமையவளை இடபாகம்வைத்து சரவணப்பொய்கைக்கு சென்றுரென்று அரிவீர்கள் சபையோர்களே.

## பரமசிவன் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்

பல்லவி.

உந்தன்அந்தமுள்ள சுந்தரரைஎடுப்பாய்
உன்னதமே என்னிதமே (உந்)

அநுபல்லவி.

இந்தப்பொய்கையிலிருந்து விளையாடும்
விந்தையுள்ளபாலர் வேடிக்கையாயாடும். (உந்)

சரணம்

ஆவலாகயிதிலாடும் சேயர்களை
அறிவைவிளக்கி அணைத்தெடுத்துவிடு
தாவிஎடுபடு சமயமிதுசொன்னேன்
சங்கரிசங்கரி தங்கைநீ இன்றேடி. (உந்)

(பரம-வ-ம்) பெண்ணே உனது திருக்குமாரர்களை எடுத்து வருவாய்.

(பார்ப் வ-ம்) அப்படியே எடுத்துவருகிறேன் பிராணேசா.

(பார்ப்-வ-ம்.) அடாதன்களே வாருங்கள் என்ன ஒளிப்பங்காட்டுகிறீர்களே சரி நாம்கரத்தால் தாங்கி இவர்களை மார்போடணைத்து முத்தமிடுவோம் இவர்களை அழைத்தால் வரமாட்டார்கள்.

(பொ-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களே சரவணப்பொய்கையில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளை உமையவள்

அழைக்க வராததால் கரத்திலெடுத்து மார்போடணைத்து முத்த மிட ஆறுகுழந்தைகளும் ஒருருவாய் ஆறுமுகமும் பன்னிருகர முமாக விளங்கினர் என்பதை அறிவீர்கள் கனவான்களே.

## பொது தரு.

இ-ம்--மோகனம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அம்மையருளாலானூர் இந்த ஆறுபுதல்வருமோருருவாகியே. (அ)

அநுபல்லவி.

அம்மையருளாலே அகிலம்புகழவே
அய்யனுமெய்யாக வைய்யகந்தன்னிலே. (அ)

சரணம்.

சத்ருசங்காரனாய் மித்ருபகாரனாய்
சித்தமிசைகொண்டு எத்திசையுங்கண்டு
வெத்தியடையவே விண்ணவருக்காக
நித்தியனாய் சுத்தனாய் முத்தனாய் சித்தனாய். (அ)

(பார்ப்-வ-ம்.) குழந்தைகள்தா உன்னைச்சேர்த்துகட்டி முத்தமிட்டதினால் அன்புமிகுதியினாலே தனத்திலிருந்துபால் அதிகமாக சொரிந்தபடியால் இந்த ரத்தினக்கிண்ணத்தில் சேர்த்திருக்கிறேன் இதையுட்கொண்டு இதோ இருக்கின்ற உன்பிதாவை சேவித்துக்கொள்ளடா கண்மணி.

(பார்ப்-வ-ம்.) பிராணநாதா இதோவுங்கள்புத்திரனை எந்திக்கொள்வீர்.

(பரம-வ-ம்.) அடாகண்மணி என்னருகில் உட்காருவாயடா மாதாவேயும் அமருவாய்.

## தேவர்கள் விருத்தம்.

அனந்தமும்அடிமைகொள்ளும் ஆதியேபோற்றிபோற்றி
கனம்பெறுசூரனாலே கருத்தழிந்தலைந்தவாடி.
மனந்துயராகிநாங்கள் மகிழுறச்செய்குவீரே
இனந்தனைநீங்கலானோம் இனியேதுசெய்வோம்போற்றி.

(தேவர்-வ-ம்.) கர்த்தனே சூரபதுமனிடம் நகாதபணிவிடைகளைச்செய்து பலகாலமாய் வாடுகின்றனம் இனியாகிலும் சிறைபை தீர்த்து தாரக்கவேண்டும் கர்த்தனே.



## தேவர்கள் தரு.

இ-ம்-சங்கராபரணம்-ஏகதாளம்.

பல்லவி.

பாதுகாருமையனே பரவருள்மெய்யனே. (பா)

அநுபல்லவி.

ஆதரிப்போருனையல்லால் ஆரிருக்கிறாரினிமேல்
சோதிக்காதினியெங்கள் சோகமுந்தீர்த்தாமன்மேல். (பா)

சரணம்.

பாவிசூரனாலெங்கள் பலித்திடுந்தவமெல்லாம்
பாரிலழியுதே பதரிடத்திரேகம்
ஏவிடும்வேலைகளை எத்தனைசெய்தாலுமவன்
ஆவியழிந்திடவே அந்தட்டிடபேசுவான்வேகம். (பா)

(தேவர்-வ-ம்.) கொடியதுஷ்டனாகிய சூரனால்படும் கஷ்டத்தைத் தீர்த்தருளவேண்டும் பரமேஸ்வரா.

## கார்த்திகைப்பெண்கள் தரு.

இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எப்படிப்பிரிகுவோம் எந்தம்பாலனைவிட்டு
ஏக்கமாகுதே யென்னசெய்வோம் (எப்)

அநுபல்லவி.

இப்படியும்விதி எழுதலாகுமோநீரும்
கைப்பிடியாகப்போக ஒப்பிவிட்டோநாங்கள். (எப்)

சரணம்.

இஷ்டதெய்வத்தைப்போலே இன்பமாயெண்ணிருந்தோம்
இனிநடக்கும் விதம் ஏதோ
கஷ்டங்களறியாமல் காலங்கழித்துவந்தோம்
கயிலையில்வாழ்வோனே கண்டக்கண்பாரெங்கள்கோனே. (எப்)
விழலுக்குநீரிறைத்து வீணாய்ப்போனதுபோல
வேண்டியிருந்ததெல்லாம் வோரச்சே
உழன்றுதிரியவெங்கள் ஊழ்வினையடுத்ததோ
உற்றதுணையான உங்கள்மகனைவிட்டு. (எப்)

(பரம-வ-ம்.) கார்த்திகைப்பெண்களே கந்தசுவாமிக்கு பால் கொடுத்து அதிகபிரீதியுடன் போற்றியிருந்த காரணத்தினால் இக்

குழந்தை வுங்களுக்குப் பிள்ளையாகப் பெயர்வழங்கி உங்களுக்குரியதினங்களில் இந்தபாலசுப்பிரமண்யனுடைய திருவடிகளில் பணிந்து விரதங்களைச்செய்து வருபவர் எத்தகையரெனினும் அவர்கள் தீவினைகளைப்போக்கி விரும்பியவரங்களையும் கடைசியில் நமது சாரூபபதவியையும் கொடுத்தாள்வோம் உங்களுக்கு யாதோர் குறைவுமில்லை மனம் சலிக்கவேண்டாம் பெண்களே.

## பராசர்பிள்ளைகள் தரு.

இ-ம்-இச்சூல்தான்-தாளம்-ஏகம்.

பாதம்பணிந்தோமே பார்ப்பதிமனோகராபார்த்தருள்
பாரமதங்களாகை முற்றுமனே சம்போ
பஞ்சேந்திரியங் களைப்பற்றுமலே. (பா)

(பராசர்பிள்ளைகள்-வ-ம்.) ஆனந்த சொரூபமாய் விளங்கும் சாக்ஷாத்ஜெகதீசா அடைக்கலம் புகுந்தோம் பாதம்பணிந்தோம் நாங்களறுவரும் சதுர்வேதங்களையும் பூரணமாக ஓதி அவற்றின் முடிவினைத்தெரிந்திரானின்ற தவசிரேஷ்டராகியபராசரிஷிக்குப் பிறந்தபிள்ளைகள் நாங்கள் நன்னெறிகளில் பிசகி கொடியகாரியங்களைச்செய்யக்கண்டதந்தைமனம்பொறுமல்சபித்தகாரணத்தினால் சரவணப்பொய்கையில் மீனுருக்கொண்டு இருக்கும்போது பார்ப்பதிதேவியார் சரவணப்பொய்கையினிடத்தில்வந்து கந்தசுவாமியைக்கண்டவுடன் அதிகபிரீதியுடன் சமீபத்திற்போய் அவனுடன் எடுத்து தழுவியபோது கொங்கைகளிற்சுரந்த பாலைவயிரக்கின்னத்திற்கரந்து புத்திரனுக்கு சாப்பிடக்கொடுத்தபோது அதிகரித்தொழுகிய பாலானது ஆற்றுவெள்ளத்தைப்போல சரவணப்பொய்கையில்விழ நாங்கள் அதைக்குடித்தமாத்திரத்தில் சாபவலி யொழிந்து நித்திரை தெளிந்தெழுந்தவர்களைப்போல நாங்கள்கொண்டிருந்த மச்சவுருநீங்கி எங்கள் பழயரிஷிகோலத்தினைப்பெற்று பொய்கையைக்கடந்து வெளியேவந்து உங்களைக்கண்டு பாததரிசனம் செய்தோம் காக்கவேண்டும் ஜெகதீசா.

(பரம-வ-ம்.) ரிஷிபுத்திரர்களே நீங்களிப்பாரிசத்தி லிருக்கிறபர்வதங்களில் வாசமாய் தவம்செய்திருப்பீராகில் சிலதினத்திற்குப்பின்பு இந்தபாலசுப்பிரமண்ணியன் சூரனை சம்மாரம்செய்ய இம்மார்க்கமாக வரும்போது உங்களுக்கு அநுக்கிரகம் செய்து ரக்ஷிப்பான் போய்வருவீர்கள் ரிஷிபுத்திரர்களே.

(ரிஷிபுத்-வ-ம்.) மகாசந்தோஷம் புனிதனாக போய்வருகின்றோம் மகாநுபாவா.



## இந்திரன் விருத்தம்.

நறுமலர்வாசம்வீசும் நலம்பெறுசரவணத்தில்
உறுதிகொள்பாலனாகி உண்மையைவிளக்கவாழும்
இறைவனேயனந்தருபஞ் சிறப்புடனெடுத்தயாரும்
அறுதியின்பங்கொள்ள ஆடுதல்பார்த்திட்டோமே.

(இந்-வ-ம்.) தேவர்களே சரவணப்பொய்கையில் விளங்கும் சுப்பிரமண்யரானவர் குழந்தைப் பருவமாயிருந்து ஒருவரே பல கோடி சிறுபிள்ளைகளாகநின்று நாமனைவரும் பார்த்திருக்க ஒரு நிமைப்போதில் அளவுபடாத பேதாபேதங்களைக் காட்டினார் இவர்பெருமையை நம்போலியர்க்கு அறியப்படுவதன்று இத்தகையமாயைப்பெருக்கினைப்போல முடிப்பது எத்தகையருக்கேனும் அரிது அரிது இத்திருவிளையாடல்களை செய்தவர் ஒப்பற்ற பரமசிவதோற்றமல்லாது வேறல்ல இனிநமக்கு யாதுங்குறைவில்லை தேவர்களே.

(பார்ப்பதி-வ-ம்) ஆஆ அந்ததேவர்கள் நமதுநாயகரிடத்தில் வந்தித்து கேட்டுக்கொண்டபடி அவர் தன்னிடத்தி லுதிக்கும்படி உற்பத்திசெய்த குமாரனை என்னிடத்தில் உதிக்கவொட்டாமல் தடைசெய்த இந்திரன் பிரமன் விஷ்ணு மற்றதேவர் முதலியவர்களுடைய தேவிமார்களுக்கு இத்தினமுதல் புத்திரசந்தானமில்லாமல் போகக்கடவது இப்பொழுது ஏற்பட்ட தொகை முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளுடன் இருக்கக்கடவது நாம் இப்பொழுது நமது நாயகர் திருச்சபைக்கிச் செல்வோம்.

## பார்ப்பதி தரு.

இ-ம்-இச்சுல்தான்-தாளம்-சாப்பு.

ஆ ஆ என்னுயகரே அஞ்சினேனும்மாலேயாதும்
ஆவல்தீர்க்கதேவருக்காய் அளித்ததாற்பொரியால்வெந்தேன்
அடைந்தேனிந்தனல்மாரவே ஆதரித்திடுவீர்நொந்தேன். (ஆ ஆ)

(பார்ப-வ-ம்.) நாயகா நமஸ்கரிக்கின்றேன் தேவர்களனைவரும் பணிந்து தமது குறைப்பாடுகளைவிண்ணப்பம் செய்துவேண்டிய காரணத்தினால் தேவரீர் கடாக்ஷித்த சுயஞ்சோதிபடிவமாகிய பொறிகளினது உஷ்ணத்தினால் பயப்பிராந்திகொண்டு சரீரமுற்றும் வெந்து நொந்ததால் தேவரீரைப் பிரிந்தோடியயான் பொறி

கனின்வேகம் அடங்கினபடியால் மீளத்திருச்சபைக்கு வந்தேன் ஆதரிப்பீர் நாதா.

(பரம-வ-ம்) பார்ப்பதி எனதிடமாகத்தமருவாய்.

(பரம-வ-ம்.) நாயகி சொன்ன சரங்களில் இன்றினிதாகக் கோத்திருந்த சதங்கைகளினின்று நவமணிகள் நமதெதிரில் சிதறிக்கிடக்கும் காரணம் யாது தெரிவிப்பாய் நாயகி.

(பார்ப்-வ-ம்.) நாதா அக்கினிஜுவாலை மீறினபோது ஒடிய காலத்தில் என்பாதச் சிலம்பிலிருந்த மணிகளில் நவமணிகள் சிதறினதாகத் தெரிகிறது பிராணேசா.

## பரமசிவன் தரு.

இ-ம்-காம்போதி-தாளம்-ரூபகம்.

மணிவிமணிகளிற்காண மனம்பூணாநலத்தோணை
மதிமயங்குதே மிகநாண
மங்கைவடிவமிதிலே மாராமல்தோற்றுதே
மதித்தவுருவையமழுக்க இனி
மானிலமெங்குந் தழைக்க
வாரும்பெண்களேனென்றழைப்போம் மனந்தழைப்போம்சற்றுபார்ப்போம்
வருவார்கள்குறையாவுந் தீர்ப்போம்
வாடுறார்தேவர்கள் வையகமுழுவமையும்
வாதைபட்டுமிக சொக்கி பாகி
வாதாடும்சூரனுல் வெழ்க்கி.

(பரம-வ-ம்) நவமணிகளிலும் என்மாதருக்கொண்ட மாதர்களே வாருங்கள்.

(நவசத்-வ-ம்.) சுவாமி நமஸ்காரிக் கின்றோம்.

மணிவிருவாய்த்தீங்கள் மகிழுங்கள்மிகுதிங்கள் மன
மாராதெப்போதும் வாழுங்கள்
மடமாதரேவுங்கள்மேல் மையல்கொண்டேன்பூர்க்க
மனந்தளர்ந்தேதனுடி நீங்கள்
மயங்காதீர்க விங்குகூடி.

## பார்ப்பதி விருத்தம்.

சுந்தரவடிவுபெற்று சோராமலின்குளன்போல்
வந்தசக்கனத்திமாரே வகையுடன்சொல்லக்கேளீர்
பந்தமாயெனதுநாதன் பகிர்ந்திடச்செய்தகர்ப்பம்
சிந்தையாய்வெளிவராமல் வெகுகாலமிருப்பீர்தானே.



(தேவர்-வ-ம்) போற்றி போற்றி புண்ணியத்தாசே போற்றி.

## இந்திரன் தரு.

இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தவிதிதந்திடனுன் னோர்க்கின்றேன். (இந்)

அநுபல்லவி.

அந்தனூரனுக்களித்த அதிபராவாதமால்கடிக்
தெந்தனைநோகச்செய்குறுன் எவல்களைசெய்யும்படி. (இந்)

சரணம்.

சூரனிருப்பிடமான வீரமாமகேயந்திரத்தில்
கோரரூபங்கொண்டரக்கர் சிரமாய்ச்சிறைச்சாலையில்
அரம்பைபழுந்லோர்கள் அமரர்புதல்வர்கள்
வரம்பெறன்பிள்ளையையும் வருத்துவைக்கும்படிகொள். (இந்)
அரியதவங்கள்செய்ய ஆதரித்திடவந்து
அஞ்சவேண்டாமென்றுசொல்லி அருமையாலிருந்து
அரக்கர்படைகொன்று அன்புடன்காப்பேனென்று
அரியச்சொன்னபொருள் அவதரித்துமின்று. (இந்)
மெத்தசனத்தொழிலாலே மேனிமிகவாடுதே
புத்தேளீர்வசிக்குமெத்தன் பொன்னுலகம்போனதே
சித்தங்கலங்குதே சீரதுகுறையுதே
சுத்தமாயிருந்தமனம் சோக்கமீறிசோருதே. (இந்)

(இந்-வ-ம்.) கடவுளே இனிதாமதம் செய்யாமல் சூரசம்ஹாரம்செய்ய அநுக்கிரகம் செய்யவேண்டும் கடவுளே.

## மகாவிஷ்ணு விருத்தம்.

கொடியதோர்தொழிலேசெய்யும் கோரமாம்சூரபத்மன்
அடிமுடித்திடவேஅந்தோ தொலைக்கின்றான்பிராணியெல்லாம்
இடிபடும்எங்கள்வாதை இயம்பிடவொண்ணுதய்யா
அடிமுடிநடுவிலாதாய் அகற்றுதல்செய்வாய்போற்றி.

(மகாவி-வ-ம்.) போற்றி போற்றி பரஞ்சோதிச் சுடரேபோற்றி கொடிய செய்கைகளையுடைய சூரபத்மனானவன் இந்திரனையும் எங்களையும் வருத்துகின்றதும் பிராணிகளை தொலைக்கின்றதும் இப்பேர்ப்பட்ட கொடியகாரியங்களை செய்து வருகின்றான் அதற்கொரு நிவாரணத்தை அநுக்கிரகிக்கவேண்டியது தயாநிதியே.

## பரமசிவன் விருத்தம்.

குன்றுதவுருவாய்வந்த குழந்தைசண்முகனேகேளாய்
மன்றுடிசூரபத்மன் மாவிடாத்துன்பஞ்செய்ய
பொன்றுருநாட்டிலுள்ளோர் பொருக்காமலிங்குவந்தார்
இன்றேயிருவனைக்கொன் றெழிந்கொடிநாட்டிவாராய்.

(பரம-வ-ம்) அடா குழந்தைசண்முகம் உலகங்களை - இன்னு பின்னப்பட அலைத்து அவற்றிற்றங்கிய பிராணிகளுக்குங் கொடிய துன்பங்களைச்செய்துவாட்டித் தேவர்கள் வாசமாயிருக்கத்தக்க பெருமையுள்ள பொன்னுலகத்தையும் அக்கினிக்கிரையாக்கி இந்திரன்முதலிய விண்ணவர்களுக்குப் பலகாலமாகதகாத ஏவல்களை இட்டு நிஷ்டூரங்களைச்செய்து கொடுங்கோல் செலுத்திவருகிற புஜபலபராக்கிரமசாலியாகிய சூரபத்மனை அவனுக்கூட்டத்துடன் வகையறக்கொன்று வேதமார்க்கமாக சகலரும் நடக்கும்படி நிலைபெறச் செய்து இந்திரனுக்குப் பழயபடி திரிலோக சம்பத்தினைக்கொடுத்து தேவர்கள் முதலானவர்கள் கிலேசங்களைப்போக்கி சவுக்கியத்திலிருத்துவதாக பிரயாணப்பட்டுபோய் ஜெயங்கொண்டு வருவாய் குழந்தைசண்முகம்

## சுப்பிரமணியர் விருத்தம்.

அருமையாயெனைப்படைத்த அப்பனேபோற்றிபோற்றி
பெருமையைகாட்டவந்தன் பேரருளாலேசென்று
பொருமலைத்துலைத்துதேவர் பொலிவுடன்வாழயானும்
உரிமையாயின்றேஏகி உறுகின்றேன்போற்றிபோற்றி.

(சுப்பி-வ-ம்.) தந்தையே சூரனை ஜெயம்செய்து வேதமார்க்கங்களை நாட்டும்படி போய்வருகின்றேன் தந்தையே.

## சுப்பிரமணியர் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-தாளம்-ஏகம்.

நான்போய்வருகிறேன் தந்தையே நான்
நாடிமனமீதிடவே ஓடிநான்போய்.

## பரமசிவன் தரு.

வல்லமையுடையசூரன் வாநாடவொட்டாமல்
அல்லும்அசுரர் அவஸ்தைப்பட்டலையாமல்
வில்லும்வாளும்பாணங்களும் விதவிதமழுத்தண்டும்
வெல்லும்வேலைக்கொடுக்கிறேன் வெற்றியடைவாய் அடைவாய்.



## சுப்பிரமணியர் தரு.

ஒப்பினேன்தந்தையே தனிபெருமுழமாலே
அப்படியேதந்திடும் அடுகிறேனதனாலே.

## பரமசிவன் தரு.

வம்புசெய்பரக்கரை வளையவதைக்கொல்லுவாய்
அம்புவிசெழித்திட ஆதரித்தருளுவாய்.

## சுப்பிரமணியர் தரு.

அன்னையே அருளை எண்ணினதாலே
வன்மையே செய்குவேன் மண்ணின்மேலே.

## பரமசிவன் தரு.

எத்தனையாசர் சத்திவந்தாலும்
வெத்தியடைகுவாய் நித்தியமேநாளும்.

## சுப்பிரமணியர் தரு. பரமசிவன் தரு.

ஜெயமடைவேன் அடைவாய்
இன்பமாய் அன்பாய் போ

(பரம-வ-ம்.) அடாகுழந்தை சுப்பிரமண்யா நான்பதினொருருத்திரர்களைத்தோமரம் கொடிவாள் குலிசம் பாணம் அங்குசம்மலர் மாலைகமலம் தண்டம் வில்மழுவாயுதம் இப்பேர்ப்பட்ட ஆயுதங்களாகவும் வகைப்படைகளாகவுமிருக்க நிர்மித்து இதோ கொடுத்தேன் அன்றியும் பல்லாயிரங்கோடி அண்டங்களிலிராநின்ற பஞ்சபூதங்களையும் வாட்டும் முயற்சிபெற்றதாயும் சகலபிராணிகளையும் ஏககாலத்தில் நாசஞ்செய்யத் தக்கதாயும் எத்தகையர்மேல்விட்டபோதிலும் அவர்கள் புஜபலபராக்கிரமங்களையும் வாழ்வுயற்சிகளையும் அதப்படுத்தி பிராணனைவாங்கத் தக்கதாயும் எவ்வுலகங்களுக்கும் நாயகமாயிராநின்றதாய் வலியும்விரமும் கொடுமையும்பெற்றிருக்கின்ற ஒப்பற்றவேலாயுதத்தையுந் தந்தேன் உன்னுடன்கூட அனுப்பும்பேர்ணியுடன் இதோ இந்தாதரும் தந்தேன் சத்துருக்களை ஜெயித்துவரக்கடவாய் பாலா.

(சுப்பி-வ-ம்.) தந்தையே நீங்கள் கொடுத்தயாவும் பெற்றுக்கொண்டேன் போய்வருகின்றேன் தந்தையே.

(பரம-வ-ம்.) ஏ பூதத்தலைவர்களாகிய அண்டர்பாறு நந்திபு க்ர தண்டா தீக்கண்ணு சிங்கா உங்கள் வசத்திலிராநின்ற இர ண்டாயிரம்வெள்ளம் பூதங்களைக் கூட்டிக்கொண்டு நவவீரர்களை யும் இலக்ஷத்தவர்களையும் சேர்த்துசண்முகனுக்கு சேனைகளாகப் போய் சத்துருக்கள்களை ஜெயித்துவரக்கடவீர்கள் நவவீரர்களே இலக்ஷத்தவர்களே உங்கள் தமையன் குமாரசுவாமியுடன் சென்று சூரனை ஜெயித்துவருவீர்களப்பா.

(வீரர்-லக்ஷ-வ-ம்.) அப்படியேபோய் ஜெயம்பெற்று வருகின் றோம் தந்தையே.

(பரம-வ-ம்.) தேவர்களே உங்களுக்கு நன்மைசெய்யும் பொ ருட்டு பிரயாணப்பட்டு நடக்கின்ற குமாரசுவாமிக்கி மந்திராலோ சனைக்குரியவர்களாக இருந்து சகலகாரியங்களையும் முடித்துவரப் போய்வருவீர்கள் தேவர்களே.

(தேவர்-வ-ம்)அப்படியேபோய்வருகின்றோம்பரமதயாளா.

(பார்ப்-வ-ம்.) குழந்தைசுப்பிரமண்யா சூரனை ஜெயங்கொண் டுவரக்கடவாய் பாலா.

(சுப்பிர-வ-ம்)அப்படியேஜெயம்பெற்றுவருகின்றேன் தாயே

(பார்ப்-வ-ம்.) நவவீரர்களே இலக்ஷத்தவர்களே பூதப்படை களே தேவர்களே நீங்கள்யாவரும் குழந்தைவேலனுடன்சென்று சூரனை ஜெயம்பெற்றுவரக்கடவீர்கள் போய்வருவீர்கள்.

(வீரர்-இல-தேவ-பூத-வ-ம்.) அப்படியே ஜெயம்பெற்று வரு கின்றோம் தாயே.

(பரம-வ-ம்.) அனைவரும் போய்வருவீர்களப்பா.

(பூதம்-யாவ-வ-ம்.) போய்வருகின்றோம் தந்தையே.

## மகாவிஷ்ணு விருத்தம்.

உம்பருக்குதவிசெய்யும் உவவையேசொல்லக்கேளாய்
அம்பலதேவனாலே அளித்திட்டரதத்தைநாளும்
வம்புசெய்சூரன்தன்னை மாய்த்திடக்குமாரவேளாம்
நம்பிபீதேறிச்செல்ல நயந்துநீகொணருவாயே.

(மகாவிஷ்-வ-ம்.) வாயுதேவரே பரமசிவனால் கொடுக்கப் பட்ட ரதத்திற்கு நீபாகனாகசென்று ரதத்தை அலங்கிருதம் செய் துகொண்டு வருவாய் வாயுதேவரே.



(வாயுதே-வ-ம்.) காயாம்பூவண்ணரே இதோ வுங்கள் உத் திரவுபடி ரதத்தை அலங்கிருதம்செய்து கொண்டு வருகின்றேன் மாயவா.

(வாயுதே-வ-ம்.) சோதிவடிவாய் விளங்கும் சண்முகக்கடவு ளே இதோரதம்கொண்டுவந்தேன் இதில்வீற்றிருக்க கிருபைசெய் யவேண்டும் சுவாமி.

(கந்தசுவாமி-வ-ம்.) வாயுதேவரே துரிதமாய் ரதம்செலுத்து வீர் வாயுதேவரே.

(வாயுதேவர்-வ-ம்.) அப்படியே செலுத்துகின்றேன் சுவாமி.

(பொ-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களே குமாரதேவரும் மற்றசயின்யங்களும் ரதமேறி யுத்தத்திற்குபுறப்படுகிறவிதம்காண் பீர்கள் கனவான்களே.

## வாயுதேவர் தரு.

இ-ம்-தோடி-தாளம்-ஏகம்.

பல்லவி.

விட்டேன்ரதத்தைப்பாருமே இதோ
வீரமுடனேவெகு தீரமாயோடிட (விட்)

அநுபல்லவி.

மட்டில்லாவேகம்பார்த்து மனமகிழ்ந்துகளிக்க
விட்டுக்கயிலைதனை மெத்தப்புகழளிக்க (விட்)

சரணம்.

தேவாதிதேவரெல்லாம் தெண்டனிட்டுப்பணிய
ஆவலாயருமறை ஆசிகூறிஇனிய
நாவலநவவீரர் நாடும்லக்ஷத்தோர்களும்
தாவில்துணைவர்களாய் தாங்கிருபுரங்களும்
பார்விளங்கப்பெரும் பூதப்படைகள்சூழ
பார்ப்பதிமைந்தனை பக்ஷமுடனேதாழ
பார்ப்போர்மனங்கலங்கப் படபடபடவென
தீர்த்திடதேவர்குறை திடதிட்திடவென
பரியைப்பகரொணாத பரபரப்புடனோட்ட
அரிபிரம்மாதிதேவரும் அடைந்திடஜெயம்நாட்ட (விட்)

(இந்-வ-ம்.) சுவாமி நாம் இப்பொழுது கிரவுஞ்சபர்வத சமீபமாய் வந்துவிட்டோம் இதைக்கண்டவுடன் எனக்கு அதிகபயப் பிராந்தியா யிருக்கின்றது சுவாமி.

(குமாரதே-வ-ம்.) இந்திரா இந்தபர்வதத்தைக்கண்டு பயப்படவேண்டிய காரணம் யாது தெரிவிப்பாய் இந்திரா.

(இந்-வ-ம்) இதோவருகின்ற நாரதர் யாவும் தெரிவிப்பார் கேட்டருளவேண்டும் சுவாமி.

### நாரதர் தரு.

இ-ம்--மத்தியமாவதி-தாள-ம்ரூபகம்.

பல்லவி.

நாரதமுனிவந்தேன் நடைநடந்து நாரதமுனிவந்தேன். ()

அநுபல்லவி.

சூரனுக்காகவே சோதிவினையை ஏந்தி. (நார)

சரணம்.

கௌரிக்குமரன்பாதம் குன்றுமல்நான்பாடி
சோர்வடையாமலே சொல்லஅனந்தங்கோடி
தாருகாசூரன்தரும் வினையைநாடி
நேரமாகுதென்று நின்றநிலையிலோடி. (நார)
பரமகுருநாதன் பஞ்சாக்ஷரத்தினாலே
பலித்ததேபாக்கியம் பலகாலோதினதாலே
மருவுமண்முதல்மூன்றில் மயக்கங்கொள்ளாமலே
மதியுந்துலங்கிட மாராமல்மன்மேலே. (நார)

### நாரதர் விருத்தம்.

சரவணபவனேபோற்றி சத்ருசங்காரபோற்றி
அரனருள்புதல்வாபோற்றி ஆறுமுகமுடையாய்போற்றி
கரமோரீராறாய்போற்றி கதிர்வடிவேலாபோற்றி
சரணமேயடைந்தேன்போற்றி சண்முகாபோற்றிபோற்றி.

### குமாரதேவர் விருத்தம்.

திரிலோகமெங்குஞ்சுற்றித் தீங்குநன்றினதுரைக்கும்
பரிகாரிநாரதாவெல் பலகாலும்வாழிவாழி.

(குமாரதே-வ-ம்.) நாரதமுனியே சதாவாழக் கடவாய்.



(நாரத-வ-ம்.) சுவாமி யான்வந்தகாரியத்தை கவனித்துக்கேட்கப் பிரார்த்திக்கின்றேன் சுவாமி.

(குமாரதே-வ-ம்) வந்தகாரணத்தை தெரிவிப்பாய் நாரதா.

(நார-வ-ம்.) சுவாமி சூரபத்மனுக்கு பந்துவாயும் மாயவித்தைகளிற் கிரவுஞ்சனென்னும் பெயரைப்பெற்ற ராக்ஷதனொருவன் எதிரிற்தெரிகின்ற பர்வதமாகியகோலத்தைக்கொண்டு பவித்திரமாகிய சதுர்வேதங்களையும் ஓதாநின்ற பிராம்மண சிரேஷ்ட ரிஷிபுங்கவர்கள் ஆதியாக இச்சாரலின் மார்க்கமாகப் போகப்படுகின்றவர்களுக்கு சாதாரணமாகிய பலவழிகளைக் காட்டி அதன்மூலமாக நடக்கின்றவர்களை தன்மாயையிற் படுத்தி திகைக்கச்செய்து அலைத்துக்கொன்று நாசம் செய்துக்கொண்டிருக்க ஒருதினம் சிவபிரான் கட்டளையிட்டபடிக்கு அகஸ்தியர் பொதிகைமலைக்குப்போக வருமுன்னிலையில் அவரையுந் தனக்குள் வருவித்து பற்பலவஞ்சகங்கள்காட்டும்போது ராக்ஷதமாயைகளென்றறிந்து அம்முனிவர் கோபித்து சபித்தகாரணத்தினால் அன்றுமுதல் இந்தருபத்தினையே பெற்றிருக்கின்றனன் அக்காரணத்தினால் இதற்கு கிரவுஞ்சகிரியெனும் பெயர்விளங்கி வருகின்றது அன்றியும் இம்மலைக்கப்புரத்தில் பலவனங்களையுங் கட்டுக்காவலையும் கொண்டிருக்கின்ற மாயமாபுரியென்னும் சிறந்தபட்டணத்தில் ஜெயசாலியாகிய சூரனுக்கு இளையசகோதரனாகிய தாருகாசூரனென்பவன் முன்னொருகாலம் இந்த மகாவிஷ்ணுவுடன் யுத்தம்செய்யும்போது இவர்கோபித்தேவிய சக்கரப்படையைப்பற்றி கழுத்தணியாய் தரித்து வெற்றிகொண்டவன் தேவர்கள்முதலிய சகலர்களையும் வருத்திவருகின்ற கொடியபாதகன் வாசமாய் அரசுசெலுத்திவருபவனை கொல்லுவீராயின் இவனுக்கு மூத்தவனாகிய சூரபதுமனைவெல்வது வெகுசுலபமாகும் முக்கியமாய் இவன்வல்லமையைக் கொண்டுதான் அரசுசெய்துவருகின்றான் இதுதான் தெரிவிக்கவந்தகாரணம் சுவாமி.

### குமாரதேவர் தரு.

இ-ம்-அடாணா-தாளம்-ஏகம்.

பல்லவி.

குதித்தபாதகனைக்கொல்வேன் கோரியபடி
குறையாவும் தீர்க்கவெல்லுவேன். (குதி)

அநுபல்லவி.

கறுத்தஅவுணர்களும் கர்ஸ்கொடியினில்தோர்க்க
கலந்தவிகாரம்தீர்த்து கடிதில்வுங்களைக்கார்க்க (குறி)

சரணம்.

அஞ்சவேண்டாம்ரிஷிகாள் அரக்கரனைவரையும்
செஞ்சாமாருதம்போலே சிந்துரேன்பாரதையும் (குறி)
பேருபெரும்படிக்கி பிரியமாய்பேணிவாழ
தாருகாசூரனையும் தரிப்பேனேதலைவீழ (குறி)
கிரவுஞ்சராக்ஷதகிட கெர்வத்தைஒட்டிவாட்ட
விரைவினிலேதாசெல்வேன் வேதவழியைகாட்ட (குறி)

(குமாரதே-வ-ம்.) நாரதரே நீர்குறித்த பாதகரை இன்றய தினமே முடித்துவிடுகின்றேன் அஞ்சவேண்டாம் நாரதரே ரிஷிகளே.

## குமாரதேவர் விருத்தம்.

வீரமாவலியும்பெற்ற வீரவாகேகேளின்று
கோரமாம்கிரவுஞ்சத்தானை கூறுசெய்வதனேடந்த
தாருகாசூரன்வர்கம் தரணியிலிலையாச்செய்ய
தீரமாய்துணைவரோடு சீவரமேகுவாயே,

(குமாரதே-வ-ம்.) அப்பா வீரவாகு அகோளதிரிற்காணு கின்ற கிரவுஞ்சபர்வதத்தைப் பிளந்து தாருகாசூரனையும் கொன்று ஜெயம்நாட்ட உனதுசகோதரர்களும் பூதப்படைகளுமாய் யுத்தத்திற்கு செல்லுவாய் வீரவாகு.

## வீரவாகுதேவர் விருத்தம்.

பாக்கியமளிக்கவந்த பரமசன்முகனேயுந்தன்
ஆக்கினைப்படிப்போய்வாரோம் அய்யனேபோற்றிபோற்றி.

(வீரவாகுதே-வ-ம்.) ஆக்கினை இட்டீர்தே போய்வருகின்றோம் சுவாமி.

## குமாரதேவர் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-தாளம்-ஏகம்.

பல்லவி.

ஆவலாய்செய்குவாய் தேவதச்சனேரதம் ஆவலாய்



அநுபல்லவி.

ஆறானன்றிட அமைத்திடு
ஆயுதத்தே ரதிறுரிதமாய்
ஆராவாரங்களிடவே அவர்கள்
ஆண்மையிருந்திடவே இனிநீ (ஆவ)

சரணம்.

வீரவாகுதேவர் விரைவினிற்சென்றிட
வீரர்களிரியே வெற்றியடைந்திட
உத்தமஅஸ்வம் உருவுடனிருக்க
சித்தாக சிங்கங்களும்
பூதங்கள்பூட்டிப் பொருந்தச்செய்து
பொன்னிருபைப் பொருந்தவைத்து
அச்சுமச்சு குத்துக்கால்
அடங்கவே கொடிங்கைநால்
அதிசயவரத்தினமே இழைத்து
நாடிப்போதே நீயே அதை
நலம்பெறச் செய்குவாயே நீ (ஆவ)

(குமாரதே-வ-ம்.) ஏ தேவதச்சா வீரவாகு தேவர்முதலோர்கள் யுத்தத்திற்குசெல்ல சீக்கிரம் ரதம்செய்துகொண்டு வருவாய் தேவதச்சா.

## தேவசிற்பி விருத்தம்.

நாவலர்க்கமுதேவுந்தன் நன்மலர்த்தாளேயேற்றி
ஆவலாய்ரதமேசெய்வேன் அய்யனேபோற்றிபோற்றி.

(தேவசிற்-வ-ம்.) சுவாமி அதிவிரைவில் ரதம்செய்துகொண்டுவருகின்றேன் மகாநுபாவா.

## தேவசிற்பி தரு.

இ-ம்-இந்துஸ்தான்-தாளம்-ஆதி.

அமைத்திட்டேனே ரதம் அஸ்வமுடன்
ஆடும்பூதங்களும் அரிகரியும்
அச்சுமச்சு குத்துக்கால் ஆடாமலே
அதிசயரத்தினங்கள் சோபாயமே, (அ)
கொடிங்கைகொடிவிருது கோர்த்திட்டேனே
இடுக்கமெல்லா மின்னெழுந்திட்டேனே

அடுத்தராக்ஷதர்களை அரிக்கெறிய
வடிப்படைபெசுவோர்களை விட்டெறிய. (அ)
வீரவாகுதேவர் சோராமலே
வீராதிசூரன்முன் நேர்ந்தவே
நிரமாய்சமர்செய்து வோறுக்க
கூராயுதமுடன் சேரகவே. (அ)

(தேவரி-வ-ம்) சுவாமி வீரவாகுதேவரே நீங்கள் சயின்யங்களுடன் யுத்தத்திற்குசெல்ல சுப்பிரமணியக்கடவுள் ஆக்யாபித்த வண்ணம் சகல ஆயுதங்களுடன் சித்தப்படுத்திக்கொண்டுவந்தேன் ஏற்றுக்கொள்வீர் வீரவாகுதேவரே.

## வீரவாகுதேவர் விருத்தம்.

அசுவமுஞ்சேருப்பெல்லாம் ஆயுதம்பலவுந்தந்த
விசுவகர்மாவேயும் வெகுகாலம்வாழிவாழி.

(வீரவாகுதே-வ-ம்.) வாழிவாழி விஸ்வகர்ம்மா வாழி.

(சார-வ-ம்.) சுவாமி இந்தரதத்தில் ஆரோகணிக்க வேண்டும் சுவாமி.

(வீரவாகுதே-வ-ம்.) சாரதி சீக்கிரம் செலுத்துவாய்.

## சாரதி தரு.

இ-ம்-தோடி-தாளம்-ரூபகம்

பல்லவி.

பாரும்ரதத்தின் வேகமே
பாரில்திசைகள் பறக்கிதோபோகுது. (பா)

அநுபல்லவி.

தாருகாசுரனையும் தாக்கிடதுரிதமாய்
வாரும்வாருமென்றுசொல்லி வழிவிட்டோடுது. (பா)

சரணம்.

சிங்கம்யானைகரடி திரிகடுங்கட
பக்கம்வருமென்றெண்ணி பாய்யும்புலிகள்யாவும்
தங்காமலோடுதுபார் தவிக்கவொழிந்தனறு
எங்குமறைக்கும்படி எப்படி இதனாலுது. (பா)

(பொ-வ-ம்) கேளுங்கள் சபையோர்களே வீரவாகுதேவர் படைகளுடன் தாருகாசுரன் வாழும் மாயாபுரிப்பட்டணம்



வந்து சேர்ந்தமாத்திரத்தில் பூதத்தலைவர்களுக்கும் ராக்ஷதர்களுக்கும் யுத்தம் நடக்கப்போகிறதை அறிவீர்கள் கனவான்களே.

## பூதர்கள் ராக்ஷதர்கள் தரு

இ-ம்-காந்தாமக்கிரியை-தாளம்-ரூபகம்.

மண்டிடும்ராக்ஷதரையெல்லாம் கண்டதுண்டமாக்குவோம்
சதித்துவரும்போரையெல்லாம் காலனூரனுப்புவோம்.

ராக்ஷதர்கள்.

கானிதாரானுப்பவந்த சகலபூதர்களே
காத்திரம்பிளக்கறுங்கள் சோத்திரமழிக்குவோம்.

பூதங்கள்.

அழிக்குவோமென்றுசொன்ன அங்காரமழிக்குவோம்
இழிகுலத்தில்வந்தவுங்கள் இனமேலாமொழிக்குவோம்.

(ராக்ஷதர்கள்-வ-ம்.) அடா பூதப்பிசாசுகளே உங்களைச் சின்னபின்னப்படுத்தி நீங்கள்கொண்ட கெருவத்தை அடக்குவோம் பாருங்களடா.

ராக்ஷதர்கள்.

கொண்டகெருவம்போக்குவோம் குறைகள்யாவும்தீர்க்குவோம்
மண்டிவெழும்புதன்னமே இக்கேமாட்டுயுயிரோட்டுவோம்

(பூதங்-வ-ம்.) அடா ராக்ஷதர்களே எங்கள் உயிரோட்டும்வல்லமை உங்களுக்குண்டோ அடா இப்போதே பாருங்கள் உங்களனைவரையும் மடிவச்செய்குவோம் ராக்ஷதர்களே.

பூதங்கள்.

சத்திவரும்படைகளெல்லாம் சத்துருத்துவாரியே
எத்திமேயடிக்கிறோம் எமனுலகம்சேரவே.

(ராக்ஷதா-வ-ம்.) அடா அண்ணே இவர்களின்றால் நமது பிராணனும்போய்விடும்போலிருக்கிறது சீக்கிரம் துரிதமாய் தாருகாசுரனிடம்போய் சேனைகள்மாண்டதைப்போய் தெரிவிப்போம்வருவீர்களடா தூதர்களே.

(மந்-வ-ம்.) அப்படியேசொல்வோம் வருவீர்கள் தூதர்களே.

## தூதர்கள் தரு.

இ-ம்-சஹானு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வேகமாய்செல்லுவோம் வேந்தனிடமே. (வே)

அநுபல்லவி.

சாரும்படைகண்டு சங்கடமாகுது
ஏகுவோம்படைவந்து எப்படிப்பார்போகுது (வே)

சரணம்.

நீண்டசீர்பூதங்கள் நீவரமேகூர்ந்திட
ஆண்டதாருகனிடம் அறிதமாய்சேர்ந்திட (வே)

## தாருகாசூரன்கொலு தரு.

இ-ம்-மோகனம்-தாள-ஆதி

பல்லவி.

தகிக்கஅமரர்களனைவரை நசிக்கசிறையினிலடைத்திடும்
தாருகாசூரன்றானே மாயமாபுரியாளும் தாருகாசூரன்றானே.()

சரணம்.

அகிலம்அனைத்தும்ஆள அழியாதேவதாஸ்திரமும்
மகிமையடையும்படி மாயாவச்சிரகாயமும்
சுரர்நரர்யாவரும் சொல்லும் ஏவல்கள்செய்ய
பரமனருளைப்பெற்றேன் பராக்கிரமத்துடனய்ய. (தகி)
பத்தாயிரவருடம் பாங்குடன் தவத்தினில்
சத்தானதெய்வமாய் சாதித்தேனுலகினில்
எத்தாலுமசையாத சித்தனானேன்
வெத்தியடைந்திட முத்திஆம்நானே. (தகி)

## தாருகாசூரன் விருத்தம்.

முன்னவாபோற்றிபோற்றி மூவரோருருவாபோற்றி
மன்னவரெல்லாம்போற்றும் மகிமையுடையாய்போற்றி
அன்னவாகனனுங்காணா அருமறைப்பொருளேபோற்றி
என்குலமாகம்வாழ்க என்னுவாய்போற்றிபோற்றி.

(மந்-வ-ம்.) போற்றி போற்றி மாயமாபுரியை யாளும் தாருகாசூரனே போற்றி.

(கட்டி-வ-ம்.) பராக் பராக் ராஜகெம்பீர பராக்

(தாருக-வ-ம்.) வாழி வாழி சாதாவாழ்வீர்களப்பா.



## தேசவிசாரணை.

(தாருகன்.) அரக்கரனைவரும் உரக்கமில்லாதிருக்கிறார்
அரிக்கைசெய்வாய் மந்திரி.

(மந்திரி.) அரக்கரனைவரும் உரக்கமில்லாதிருக்கிறார்கள்
அரிக்கைசெய்தேன் அரசே.

(தாருகன்.) வேதநான்கையும் நீதிலாமலேமாதவத்தவர்
ஓதுரார்களா மந்திரி.

(மந்திரி.) வேதநான்கையும் நீதிலாமலேமாதவத்தவர்
ஓதுரார்களே மன்னு.

(தாருகன்.) திங்கில்குடிகள் தாங்கினன்பேர்பாங்காய்க்கோரி
ஓங்கிவருதா மந்திரி.

(மந்திரி.) திங்கில்குடிகள் தாங்கியுன்பேர்பாங்காய்க்கோரி
ஓங்கிவருதே அரசே.

(தாருகன்.) எனக்குநிகராய் வளப்படைந்தவன் கனத்த மன்னவனுனக்கு தெரியுமா மந்திரி.

(மந்திரி.) உனக்குநிகராய்வளப்படைந்த கனத்தமன்னவனெனக்கு தெரியாதய்யா.

(தாருகன்.) அடக்கமுடனேசடங்குயாவும் இடக்கிலாமலே
நடக்குதாவென் மந்திரி.

(மந்திரி.) அடக்கமுடனேசடங்குயாவும் இடக்கிலாமலே
நடக்குதய்யா அரசே.

(தாரு-வ-ம்.) மந்திரி என்னரசு எப்படி சீர்திருத்தமாய்நடந்தேறி வருகின்றது தெரிவிப்பாய் மந்திரி.

(மந்-வ-ம்.) அரசே வுங்கள்ராஜ்ஜியத்தில் நாற்பதினாயிரம் கெஜமுகசூரர்களுடனே உலகங்களில் அதிக கியாதிபெற்று கயிலாசவாசன் புகழத்தக்க சிம்மாசனங்களும் ஆபரணங்களும் மாதமும்மாரிபெய்து குளம்கூவம் தடாகம் ஆருகள்முதலான இடங்களில் பலஜாதிபுஷ்பங்கள் புஷ்பித்து அன்னங்கள் அதிணபெடுகளோடு உலாவுவதும் சமர்த்தியான சஜலம் எந்தவிடத்திலுமிருப்பதும் தேவர்களெல்லா முங்களுக்கு ஏவல்தொழில் செய்துகொண்டிருப்பதும் எந்தவிடங்களிலும் உங்கள் நாமதேயத்தையேதுதிசெய்வதும் அஷ்ட்ட அயிஸ்வர்யங்களும் தீர்க்காயுளும்

எவர்களாலும் மரணமில்லாமல்பெற்று விளங்கும் சுப்ரமகிமை களை எடுத்துரைக்க என்றால் முடியாமல் தெரிந்தவரையி லுரைத் தேன் மகாறுபாளா.

(தாரு-வ-ம்.) மகாசந்தோஷம் மந்திரி.

(ராக்ஷதரு-வ-ம்.) அப்பாகட்டியனே ராஜனிடம்சென்று தூதர்கள் வந்திருப்பதாய் தெரிவித்து வருவாய் கட்டியனே.

(கட்டி-வ-ம்.) இதோபோய் தெரிவிக்கின்றேன் தூதர்களே.

(கட்டி-வ-ம்.) பராக்கு பராக்கு ராஜகெம்பீர பராக்கு தங் கள் கொலுவாயலில் தூதர்கள் வந்திருக்கின்றார்கள் தெரிவிக்க வந்தேன் பிரபு.

(தாரு-வ-ம்) அடாசேர்வைக்காரா அவர்களை வரவழைப் பாய்.

(கட்டி-வ-ம்.) பிரபு இதோ அழைத்துவருகின்றேன்.

(கட்டி-வ-ம்.) தூதர்களே அரசன்அழைத்துவரச்சொன்னார் வாருங்களப்பா.

## தூதர்கள் விருத்தம்.

அண்டரண்டங்களெல்லாம் ஆண்டிடுமரசேபோற்றி
அண்டரும்சுப்பிரமண்யன் அனேகப்படையாலும்வந்து
கண்டதுண்டங்களாக கடிந்துதம்படையைக்கொன்றார்
விண்டிடவோடிவந்தோம் வியன்மலர்தாள்கள்போற்றி.

(தூதர்க-வ-ம்.) போற்றி போற்றி ராஜதீராபோற்றி சுப்பிர மண்யனுடைய படைகள்வந்து நமது சயின்யங்களை கொன்றுவிட் டது தெரிவிக்கவந்தோம் ராஜதீரா.

## தாருகன் தரு.

இ-ம்-அடாணா-தாளம்-ஏகம்.

பல்லவி.

அஞ்சலிசெய்திடாமலே தொஞ்சக்கொலைசெய்தநெஞ்சாகர் அவர்கள்
எஞ்சல்அடைய வெல்லுவேன்பார்.(அஞ்)

அநுபல்லவி.

வஞ்சகப்பாதகர்களை வாட்டிஎமதூதர்க்கொட்டும்
நஞ்சனைத்தனெடும்விராம் சாடெடங்கும்சாற்றிடக்கேட்டும்(அஞ்)



சரணம்.

எந்தன்பேரைக்கேட்டவர் எங்கும்எங்கிருப்பாரோ
இந்தவிதம்வாய்த்ததோ இப்படியும்கேழ்க்கநேரே
சினமிகப்பொங்குதடா சேனைகளைசேர்ப்பிப்பீரே
அனைவரையுங்கொல்லுவேன் அடுத்துபார்த்தும்பின்சென்றீரே(அஞ்)

(தாரு-வ-ம்) அடாதூதர்களே மந்திரிமார்களேகொஞ்சமும் பயமில்லாமல் லக்ஷ்மீகரம் பொருந்திய இந்தபட்டணத்தின்மீது வந்து வருத்துகின்ற பூதர்சேனைகளையும் மற்றவீரர்களையும் புற் கள்செழித்துவளர்ந் திருக்கின்ற காட்டினிடத்திற் தீயானது மீறி ப்பரவி அழிப்பதுபோலக்கொன்று நாசம்செய்ய இந்தவிடத்தில் நமதுசேனைகள் அனைத்தையும் நான் ஏறும்ரதத்தையும் கொண்டு வருவீர்கள் தூதர்களே.

(மந்-வ-ம்.) இதோகொண்டுவருகின்றோம் மகாராஜனே.

## மந்திரி விருத்தம்.

சேனாதிபதியோராஜன் செருச்செயப்போவதாலே
சேனைநசேனையாவும் மேவிடக்கொணருவாயே,

(மந்-வ-ம்) சேனாதிபதி நமதுராஜன் யுத்தத்திற்குப் போக வேண்டியதற்காக ரதகஜதுரகபதாதிகளை தயார்செய்து கொண்டு வருவாய் சேனாதிபதி.

(சேனாதி-வ-ம். இதோகொண்டுவருகின்றேன் பிரபு.

(சேனாதி-வ-ம்) அரசே ரதமுதலாகிய சயின்னியங்களும் கொண்டுவந்தேன் அரசே.

(தாரு-வ-ம்.) அடாபாகா சீக்கிரம் ரதம்செலுத்துவாய்.

(பாக-வ-ம்.) இதோ அதிகவேகமாய் கொண்டுபோகின்றே ன் அரசே.

## ராக்ஷதர்களுக்கும் பூதப்படைகளுக்கும் யுத்தம்.

இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

குன்றும்பெருமரமும் கொள்ளும்கணைகளாக
ஒன்றும்காயமழிய ஓங்கிவிட்டோமிதோபாருமே
வில்லும்வாளுக்கதையும் விட்டுத்துடைப்பதன்றி
கொல்லும்பாணமின்று சேர்த்துவிட்டோமிதோபாருமே
கொல்லும்பானைத்தைக் கொன்றோடிப்போவதுடன்

சல்லடைக்கண்களாய்   சளைத்தபாணம்விட்டோம்பாருமே
தனுசங்கைகளில்தாங்கி   தரிக்கத்தலைகளை
மனதுமெச்சம்படி   மாட்டிவிட்டோம்பாணம் பாருமே.

(தாரு-வ-ம்.) அடா பூதங்களே என்னுடையசின்னியங்களைக்கொன்றவர்கள் யாரடா நீங்கள்.

(பூதப்ப-வ-ம்.) அடா தாருகா நீ தேவர்களை சிறையில் வைத்ததும் வழியில்போகும் அந்தணர் முனிவர்களைக் கொன்றதாலும் குமாரதேவர் உன்னிடத்தில்யுத்தம்செய்ய அனுப்பவந்தோம் வாடா பாதகா.

## தாருகன் தரு.

இ-ம்-மோகனம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அனுப்புநிறவினமலைசகம்   பாருங்கள் நீங்கள்
அட்டிசெய்யாமலே   வாருங்கள். (அனு)

அநுபல்லவி.

சினத்துடனேபெரும்   செருச்செயவேயின்று
கணைக்கலத்துடனே   கடிதினில்யான்கொன்று. (அ)

சரணம்.

களத்தில்பதரைப்போலே   காற்றினில்தூற்றுவேன்
அனைத்துப்பூதரே   நீங்கள்செய்யவேமாற்றுவேன்
தனத்துடன்வந்தென்னைத்   தாமசத்தினாலே
வனத்தசேனைகளை   வாட்டினதினாலே. (அ)
காலமாகெடுமோடாய்   தரைவிழுந்திட
மேலுலகத்தன்னில்   மேவியழுந்திட
தாலம்செய்யாமல்   ஜடுதியிறைத்திட
காலனிடம்சேர   கண்வெகுறைத்திட. (அ)
வாள்கொள்ளாபூதத்தாலே   காலனைத்துத்து
உடல்கொளும் கால்களை   குறும்பாய்முறித்து
சிரங்களினிதறிட   சீரச்சொரிந்து
பரந்தாலந்தவர்களைப்   பற்களுதிர்த்து. (அ)

## தாருகாசூரன் விருத்தம்.

கோரமார்நாரிக்கு குதித்துவைத்தமைதானென்றே
தீரமாய்யெத்தனுட்டில் திகழ்பெரும்சேனையெல்லாம்
வீரமாயதட்டிக்கொன்ற வீரர்களேதோகோனை
கோரமாகாமவிப்போர் கோட்டைவளைத்திடமே.



(தாரு-வ-ம்.) அடா வீரர்களே நீங்கள் யாதொரு காரணமில்லாமல் என்னுட்டில் தலைப்பட்டு எனது சைன்யங்களை யெல்லாம் அதோகதப்படுத்தின விபரம் உரைப்பீர்கள் வீரர்களே.

## நவவீரர்கள் விருத்தம்.

நாலுமாமறையையோதும் நாட்டிலந்தணரைக்கொன்று
சீலமாமுனிவர்செய்யும் சிறந்தநற்றவத்தையெல்லாம்
காலனைப்போலேயும் கடிந்தப்போதழித்ததாலே
சாலவேசமர்தான்செய்ய சண்முகரனுப்பினாரே.

(நவவீரர்கள்-வ-ம்) அடா தாருகா தேவர்களை சிறையிலிட்டு அந்தணர்களையும் முனிபுங்கவர்களையும் குருமார்க்கம் செய்து கொன்றதினாலே கயிலாசத்தில் வீற்றிருக்கும் பரமசிவன் புத்திரனாகிய பாலசுப்பிரமணியர் உன்னிடம் யுத்தம்செய்யும்படி அனுப்பினார் வாடா தாருகா.

## நவவீரர்கள் லக்ஷத்தவர்கள் தரு.

இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

வருத்தும்படி பூதப்   படையை இரைத்தாயே
வானளாவி   சுத்தியே
இருந்திடம் தெரியாமல்   இன்றுன்னை யொழிக்கிறோம்
எரித்து வேலால்   குத்தியே

(நவ-வ-ம்.) அடா தாருகா எங்களுடைய பூதப்படைகளை யெல்லாம் எடுத்து வானளாவி முட்ட வீசியெறிந்த உன் ஆங்காரத்தை யடக்குறோம் பாரடா நாயே.

## தாருகன் தரு.

நாயே யென்றுசொன்ன   நாக்கையறுக்கிறேன்
நவவீர படை   எல்லாம்
நான்கண்டும் விடுவேனோ   நம்பன்மகனையும்
நடுங்கச்செய்குவேன்   புல்லாம்

## நவவீரர்கள் லக்ஷத்தவர்கள் தரு.

எல்லாம் நடுங்கச்செய்குறே   னென்று சொன்ன
இருமாப்பை   இன்றடைய
வெல்லுந்தனுராலே   வேணசரங்களை
விட்டோம்   ஜெயமடைய

## தாருகன் தரு.

விட்டசரங்களை — வெடிபட நீக்கியான்
பொடிபொடி — யாக்கினனே
வெட்டிவயிரதண்டால் — வீறியழுதிட
வீசியே — போக்கினனே

## வீரகேசரி விருத்தம்.

நலமிகுலக்ஷத்தோரு ராடியே எடுத்தெரிந்த
புலமிறைதவனேயுந்தன் புகழும்நல்வீரந்தானும்
குலைகுலைந்திடவே இந்தகுனித்திடும் தனுசைக்கொண்டு
பலபலபாணம் விட்டேன் பறித்திடத்தலையைப்பாராய்.

(வீரகேசரி-வ-ம்.) அடா தாருகா எங்களுடைய லக்ஷத்தவர்களை அலக்ஷியமாக இருகையாலேந்தி எரிந்த வீரத்தை வாட்டும்படிக்கும் தலையை தரிக்கும்படிக்கும் பாணம் விட்டேன் பாரடா தாருகா.

## தாருகன் விருத்தம்.

சிரசினிற்றரித்திருந்த சிறந்தமாமகுடந்தன்னை
விரைவினில் விட்டபாணம் வீழ்ந்திடச்செய்தலாலே
கரமதிலிருக்குந்தண்டால் காற்றின்முன்பஞ்சதென்ன
திரமுனதுதான்போகத்தேக்கினேன் பாணம்பாராய்.

(தாருகன்-வ-ம்.) அடா வீரகேசரி உன்னுடைய பாணத்தினால் என்னுடைய மகுடத்தை தள்ளினதினாலே என்னுடையவயிரதண்டத்தினால் உன்னைப்பிளக்கும்படி விட்டேன் பாரடா வீரகேசரி.

## வீரவாகுதேவர் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-தாளம்-ஏகம்.

பல்லவி.

விட்டேன் பாணத்தை — அட்டகாசமாய் (விட்)

அநுபல்லவி.

கெட்டியுந்தன் தலைதரிக்க — மட்டில்லாப்பலம்பரிக்க (விட்)

சரணம்.

வீரசேனையை — சோரவேசெய்தேன்
ஆருமெனக்கெதிரில்லாமல் — தீரனென்றெதிர்கில்லாமல் (விட்)



(வீரவாகு-தே-வ-ம்.) அடா தாருகா உன்னுடைய சயின்னியங்களெல்லாம் விழும்படிக்கி தனுசில் அமோகமான பாணங்களைப்பூட்டி வாட்டினேன் பாரடா தாருகா.

(தாருகன்-வ-ம்.) அடா வீரவாகு திரிமூர்த்திகளிலொருவனாகிய விஷ்ணுமூர்த்தியினிடம்போர்செய்து வெற்றிகொண்டு அவன் விடுத்த சக்கரப்படையைஇதோ யான் கழுத்தணியாய் பூண்டிருப்பதைப்பாரடா இப்பொழுது.

## தாருகன் கண்ணி.

பதைத்து பதைத்து விழப்பாணங்கள் பூட்டிவிட்டேன்
பரித்துன்தலைபோகும் பார்த்துப்பிழைத்துப்போடாபோ

## வீரவாகுதேவர் கண்ணி.

பிழைத்துப்போவென்று சொன்ன பேயாவுந்தனை இப்போ
பின்னிட்டோடும்படிக்கி பின்னமாக்கினேனிதோபார்

## தாருகன் கண்ணி.

பின்னமாக்கிட என்னை அன்னத்தவன்முதலோர்
இன்னமும் முழிக்கிறார் உன்னாலாவதென்னடாபோ

## வீரவாகுதேவர் கண்ணி.

போடாவென்றவுந்தன் பொலிவைக்குலைக்கவே
போட்டேன்பாணமிதோ பொடிபொடியாக்கிடப்பார்.

(தாரு-வ-ம்.) ஓ ஓ இந்த வீரவாகு வானவன் நம்மிடத்தில் சமத்துவமாய் நின்று யுத்தம் செய்வதால் இவனை ஜெயிக்க எளிதில் முடியாதுபோல் தெரிகின்றது. ஆயினும் சவாவமென்னும் மாயமந்திரத்தை உச்சரித்து மாய்கையால் தானிவனைக்கொல்ல வேண்டும் இதுவே தகுதியான யோசனை அப்படியே செய்வோம்

## தாருகன் தரு.

இ-ம்-பூரிகல்யாணி-தாளம்-ஏகம்.

பல்லவி.

பிடித்தேன் காண்டீபம் — பாரடா
பிணமலைகள் — குவித்திட (பிடி)

அநுபல்லவி.

துடிக்கவிந்தன்    இடித்துமார்பினை
வடிக்கரத்தம்    குடிக்கபேய்கள் (பிடி)

சரணம்.

அண்டமதிர்ந்திட    எண்டிசைபோற்றிட
துண்டர்கள் யாவரும்    கண்டுநடுங்கிட (பிடி.)
பக்குவமாகவே    அக்கினிபாணம்
மிக்கவேசேர்த்து    திக்கெனவிடுத்து (பிடி)

(வீரவாகு-தே-வ-ம்.) அடா தாருகா உன்னுடைய ராக்ஷத மாய்கை என்னிடத்தில் செல்லாது. அதை என்னுடைய வீர பத்திரப்படையால் தவிர்க்குறேன் பாரடா தாருகா.

## வீரவாகுதேவர் தரு.

இ-ம்-மோகனம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மாயைவினையை மாற்றுவேன்    மகிமையுள்ள (மயை)

அநுபல்லவி

தாயைப்பிரிந்து    தவித்திடுங்கன்றும்
நாயேநகர்விட்டோட    நானிதோநன்றாய் (மாயை)

சரணம்.

ஆர்பர்வத்துடன் வந்த    ஆனிக்கூட்டம் தேர்க்கூட்டம்
அனைத்தையும்பொடியாக்கிட    அதிவீரமாய்
பேர்பெருமாயுதங்கள்    பிசரிக்குனழந்திட
பின்னிடச்செய்குறேன்பார்    பேயனேயுன்னை
பரிதிதனைக்கண்டபகை    இருளொழிந்தாற்போல்
பரிக்குறேன் தலைபாரடா    பரந்தோடிட
பரித்திப்பொதியில்    நெருப்பட்டாற்போலே செய்ய
பாங்குடன்பிடித்தேன்    பாரினிலோங்கிட
வீரபத்திரப்படை    வெற்றியடைந்திட
தாருகா விட்டேன்    தரணியில் ஜெயித்திட (மா)

## வீரவாகுதேவர் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஓடாதேஓடாதே    ஓடாதே ஓடாதேநீபாயே (ஓ)



அநுபல்லவி

சீருங்குலைந்து    வீரந்தளர்ந்த
சூரபத்மன்தம்பி    தாருகாநில்லடா (ஓ)

சரணம்.

வீரனேநீவந்து    சூரத்தனந்தானோ
கோரிடமிற்பரமே    வாரியெறிகுறேன் (ஓ)
விஷ்ணுதேவனைக்    கஷ்டப்படும்படி
நஷ்டம்செய்தேனென்ற    துஷ்டப்பயலே நீ (ஓ)
புறந்தந்தோடுநீ    மறஞ்செய்யவந்து
திறந்தனின்படைத்    துறந்துபாவையும் (ஓ)

(வீரவாகு-தே-வ-ம்). அடா தாருகா உன்னுடைய ரதகெஜ துரகபதாதிகளைப் பரிகொடுத்து உலகமுள்ளளவும் திராதபழிக் குள்ளாய் சவுரியத்தை மறந்து புறந்தந்தோடுகிறதோ, ஜெயசாலி யாகிய சூரபத்மனுக்குத்தம்பி என்றும் மகாவிஷ்ணுமுதலிய சவு ரியவான்களை வெற்றிகொண்டதீரனென்றும் பலராலும் துதிக்க வாழ்ந்தேனென்றும் சொன்ன அத்தகைய ஜெயசாலியாகிய நீ இக்காலத்தில் அபலனும் பாதசாரியாய் ஓடுகின்றனை உன் சரீரத் தில் உதிரமூற்றனையோ மானத்தை நினைக்காயோ இப்படிக்கிப்பல ருமேசபதுங்கிக் கால்கழிப்பதிலும் நாக்கைப்பிடுங்கிக்கொண் டுசாவது உத்தமமாக நாணுகின்றது ஓடாதே நில்லடா தாருகா.

## வீரவாகுதேவர் விருத்தம்.

கிரியெனும் கிரவுஞ்சத்தன்னில் கிளைவெருணைநிர்த்தியுள்ள
கருநிறக்குகையிலேநான் காணுமவொளித்த மூடா
திறமையும்புகழுமெங்கே நியதோர்தொழிலைசெய்யும்
திருவிலாத்தாருகாநீ சீக்கிரம்வெளியேவாடா

(வீரவாகு-தே-வ-ம்.) அடா தாருகா உன் தீரமெங்கே பராக் கிரமம் பெற்றவனென்று உணரினது வீண்தானோ, எனது வீரபத் திரப்படைக்கஞ்சி ஓடிவந்து இந்தகிரவுஞ்சபர்வத குகையில் ஒளித் தாயே மூடா ஆண்பிள்ளையாயிருந்தால் குகையைவிட்டு வெளியே வாடா அர்ப்பப்பயலே எப்படிகூப்பிட்டும் வெளியேவராவிட்டாலுமே நாமாகிலும் உள்ளேசென்று ஒளித்ததாருகனை கைப்பிடியாகப்பி டித்து கட்டி குமாரசுவாமியிடம் கொண்டுபோவோம் இதேதகுதி யான யோசனை.

## வீரவாகுதேவர் தரு.

இ-ம்-காம்போதி-தாளம்-ஏகம்.

பல்லவி.

எங்கெனத்தேடுவேனென் பொங்குதிருளாய்ப்பொலியுதே (எங்)

அநுபல்லவி.

தங்கும்குகையில் பொங்குந்தாருகனை (எங்)

சரணம்.

சிராளந்தயிடமும் வீரமாயான்சென்று
ஆராய்ந்துபார்த்தும் நேராய்க்காணனேனேயின்று (எங்)
காதககிரவுஞ்சனும் காணுவழிமறைத்து
வாதைசெய்குறானே மீாய்கைகினைத்து (எங்)

(வீரவாகுதேவர்-வ-ம்.) இந்தகுகைகளெல்லாம் சுற்றிப்பார்த்தும் தாருகன் அகப்படவில்லையே ஓ மதிமயங்குகிறதே என்ன, யோசிப்போம் மலையுருப்பெற்றிருக்கின்ற கிரவுஞ்சன் மாய்கையா காணுகின்றது. ஆ-ஆ ஆச்சரியம் மாருதே என்செய்வேன் வலாயுதா.

## எண்பர்கள் லக்ஷத்தவர்கள் விருத்தம்.

புறமுதுகாட்டியோடி புழையினில் நுழைந்த அந்த
அறமிலான்பின்னேசென்ற அண்ணன்போர் செய்கின்றானோ
உறவிலேஇன்னுமிங்கே உற்றதுந்தோன்றவில்லை
திறமுடனேடிநாமும் செயலினையறிவோம்வாரீர்,

(எண்பர்-லக்ஷத்தவர்-வ-ம்) அப்பா லக்ஷத்தவர்களே கிரவுஞ்ச பர்வதத்திற்குள்சென்ற நமதண்ணன் இன்னும் வராததால் நாம்சென்று பார்த்துவருவோம் வாரும் தம்பிமார்களே.

## எண்பர்கள் லக்ஷத்தவர்கள் கண்ணி.

அண்ணா உனைக்காணாமல் குன்னிமனமிப்போது
எண்ணாது மெண்ணுதே விண்ணவர்க்காய்வந்து
பக்ஷிகளடங்கிடும் விருக்ஷங்களிடத்தினில்
பக்ஷமாயதுபோலே பற்றிருந்தோமேமேலே
பாவி தாருகாசூரன் மேவிசெய்தமாயத்தால்
ஆவிதடுமாறி தாவிநோந்தலைகுறோமோ,
போவழிதெரியாப் புகுந்துபுகுந்துபார்த்து
வானவர்க்காக வாட்டமடைகின்றோமோ



(எண்-வ-ம்.) தம்பிமார்களே குகைக்குள்போன அண்ணன் வாராததால் நாமெல்லோரும்,

## எண்பர்கள் கண்ணி.

புழையின் மூலமாய்ச்சென்று புதுமைகளறிகுவோம்
நுழையுங்களிப்போதே நொந்திடாதினிமேலே.

(லக்ஷ-வ-ம்.) அண்ணமார்களே இந்தகுகையில் வந்தமாத்திரத்தில் ஏதோ சோக்கமாயிருக்கிறதே அண்ணமார்களே. ஆமப்பா எங்களுக்கும் அப்படியேதானிருக்கிறது தம்பிமார்களே.

## எண்பர்கள் லக்ஷத்தவர்கள் கண்ணி.

மயக்கமாகுதேயென்ன மாயமாகிதெல்லாம்
தியங்கிவிழுந்திட நீயனிப்படிசெய்தானோ.

(தேவர்-வ-ம்) தேவர்களே அந்தபாதகனுகிய தாருகாசூரன் நமது குமாரசுவாமியின் படைகளை முற்றிலும் மாயைவஞ்சகம் செய்து மலைக்குள்ளடங்கி இருக்கும்படிசெய்து விட்டான் இனி நாம் இங்கிருந்தால் ஏதேனும் கெடுதி நேரிடும் போய்விடுவோம் வருவீர்கள் தேவர்களே.

(தாரு-வ-ம்,) இப்பொழுது இந்தமலையின்மீதேறி பாணங்களைவிட்டு பூதப்படைகளையும் மற்றவர்களையும் கொல்வோம்.

(நாரதர்-வ-ம்) ஓ-ஓ நமது குமாரசுவாமியின் படையாளையும் தாருகன் மாய்கையில் சிக்கிக்கொண்டதே அதோபோகிற மகாவிஷ்ணு பிரம்மதேவர்களுடன் போய் குமாரசுவாமிக்குத் தெரிவிப்போம்.

## நாரதர் விருத்தம்.

கார்த்திகைப்பெண்கள்வேண்ட கனமுலையுண்டநாதா
பார்த்தெங்கள்குறையைதீர்ப்பாய்பாமனேபோற்றிபோற்றி

(நாரதர்-வ-ம்.) போற்றிபோற்றி சண்முகக்கடவுளே போற்றி நான் விண்ணப்பம் செய்துகொள்வதை திருச்செவிசாற்றி கிருபைநோக்கவேண்டும் சண்முகக்கடவுளே.

## நாரதர் அகவல்.

மோனன்மணியே முருகனேகேளும்
தானவன்படைகள் தத்தளித்திடவே
வலிமிகுநமது மாப்படைவீரர்
நலிதாச்செய்தலை நயமிலாதவனும்

தாருகன்கண்டு தருக்கொடுவரவே
சீருளதிரே சென்றும்வீர
வாகுவாம்தேவர் வழங்கியகணையால்
சோகமீக்கொண்டு துரிதமாயோடி
வஞ்சகக்கிரவுஞ்ச வரையினிலொளிக்க
மிஞ்சியயவனை விரைவினிலிங்கே
கட்டியேகொணர கருத்தினிலெண்ணி
இட்டமாய்ப்பின்தொடர்ந் தேகினரவரை
திரும்பவொட்டாமல் திகைத்திடச்செய்வ
வரும்படி இன்மையை பதித்தனராகி
எண்மரோபூதர் இலக்கரோமுதலோர்
நண்ணவேயவரும் நலமழிந்தனரால்
இத்தகைஇவர்கள் எய்தியதறிந்தே
கைத்தனுவளைத்து கணையவன்பொழிய
மாண்டனர்சிற்சிலர் வழங்குவதென்னே
ஆண்டகைநீதான் அறிகுவையாலென
தண்ணந்தாமரைநேர் தாளினைப்பணிந்தே
விண்ணப்பமீதென விளம்பினனினிதே,

(நாரதர் வ-ம்) சுவாமி இதுகளெல்லாம் தங்களுக்குத்தெரிந்திருந்தும் நடந்தசரித்திரங்களை தெரிவிக்கவந்தேன் சுவாமி,

## குமாரதேவர் கண்ணி

இ-ம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஏகம்.

அஞ்சாதிர் வஞ்சமிகு நெஞ்சத்தவன் கெஞ்ச
தஞ்சமென மிஞ்சாமலே பஞ்சாய்க்கொல்வேன் துஞ்ச
நாரதமுனியேயுந்தன் கோரிக்கைதீர்ப்பேன்
தீரன்தாருகனையும் நேராய்வதைப்பேன்
சமர்களம்சேர்ந்து அமரேசாஅதிவிரைவில்
அமைத்தகிரவுஞ்சகிரியை குமைப்பேன்கூர்வேலால்

(குமாரதேவர்-வ-ம்) தேவர்களே நாரதரே இந்தக்ஷணத்தில் சமர்களம்சேர்ந்து எனதுகரத்தில்விளங்கும் வெற்றிவேலாயுதத்தினால் தாருகனைக்கொன்று அவுணர்வாசம் செய்வதற்கு கோட்டையாகயிருந்து ரிஷிகள்முதலிய பெரியோர்களை வஞ்சித்து பாதை செய்திருக்கின்ற கிரவுஞ்சகிரியையும் கண்டித்து வீரவாகுதேவர் முதலிய நம்மவர்களை மீட்டுத்தருவேன் பயப்படவேண்டாம் தேவர்களே நாரதரே,



(குமார-வ-ம்.) ஏவாயு சீக்கிரம் ரதத்தை சமர்களம்செலுத்துவாய்,

(வாயு-வ-ம்.) இதோ செலுத்துகின்றேன் சண்முகக்கடவுளே,

(தாரு-வ-ம்.) அடா சாரனேயிதோ அதோ வருகின்றவன் யார்.

(சார வ-ம்) ராஜாதி ராஜகெம்பீர இப்பாலனைத்தான் சிவகுமாரனெனச் சொல்லுகின்றார்கள் ராஜகெம்பீர,

## தாருகன் விருத்தம்.

அமரரும் அவர்கள்கோவும் அயனுமவ்வரியுமேயிப்
படமமார்கடல்சூழ்வையமதில் பகைஎனக்கல்லாவில்லை
சமரதனில்வேலோர்தாங்கும் தற்பரப்பொருட்குமெர்க்கும்
குமரனே இங்குவந்த கொள்கைதானேதோசொல்வாய்.

(தாரு-வ-ம்) ஏ பாலகுமாரா இவ்வுலகத்தில் தேவர்களுக்கும்எனக்கும் பகையல்லாது சிவபிரானுக்கும்எனக்கும் யாதொருபகையுமில்லை அப்படி இருக்க நீ வந்தகாரணம் யாதோ தெரிவிப்பாய் பாலா.

## குமாரதேவர் விருத்தம்.

தாருகாதேவர்க்கெல்லாம் தாதைதோர்தொழிலொழிட்டு
சீரிதாம்பெண்மர்பின்னை இதர்தரசிறையில்வைத்து
ஆரவாரித்துநீதான் அலைந்திடச்செய்தலாலே
காரியோர்பாகனுன்னை வதைக்கஅனுப்பினாரே.

(குமார-வ-ம்.) ஏ தாருகா எனது தந்தையானவர் ஆதியிற்றும்படைத்திருக்கின்ற வேதங்களிற் குறித்திருக்கின்றபடி க்ஷத்திரியதர்மபரிபாலனம் செய்யாமல் நீகெட்ட இருத்தியங்களை செய்து வெகுகாலங்களாகத் தேவர்களை மரியாதையற்று நகரதபணிவிடைகளிலிட்டு வருத்தியதன்றியில் அவர்கள் பெண்பிள்ளைகளுடன் அரிய சிறையில் வைத்திருக்கின்றதைக்குறித்து உன்வீரபராக்கிரமத்தினையும் [illegible] உலகங்களுக்கு சவுக்கியங்களைச்செய்து வருவதாக என்னை அனுப்பினார் தாருகா.

(தாரு-வ-ம்.) ஓ பாலனே எனது சவுரியபராக்கிரமங்களை, சற்று மரியாதவனாதலால் இப்படிக்கி தெரிவிக்க வந்தாய் அவற்றுள் சிலவற்றைக்கேள். இலக்ஷிமிதேவியை மார்பில் வைத்திருக்கின்ற மகாவிஷ்ணுவானவன் ஒருகாலம் அழகிய சிறகினையுடைய கருடன்மீது ஆரோகணித்து வந்து என்னுடனெதிர்த்து தன்னுற்கூடியவரையிலும் போர்கொடுத்து வெல்லக்கூடாமல் சூரியனைப்போல் பிரகாசிக்கும் சக்கரத்தினை பிரயோகிக்க அதைவெகுசுலபமாக கையில்பற்றி இதோ என் கழுத்தணியாகத் தரித்திருப்பதைப்பார் இதல்லாது இதுகாலம் என்னிடம் போர்புரிந்தவர் புறமுதுகாட்டியோடினதல்லாது ஜெயித்தவர்களெவருமில்லை இப்படி ஜெயம்பெற்றிருக்கின்ற என்னிடத்தில் போர்புரிய உன்னால்முடியாது சூலபாணியாகிய சிவபிரானிடம் போய் சவுக்கியமடைந்திருக்கப் போவாய் பாலா.

(குமார-வ-ம்.) அடா தாருகா எனது கரத்தில் விளங்கும் வெற்றி வேலால் நிமைப்போதில் உனது பிராணனை வாங்கி வீர சொர்க்கம் சேர்த்து மாயையிற் சிறந்த கிரவுஞ்சனையும் பிளந்து எனது படைகளை மீட்டுக்கொள்ளுகிறேன் பாரடா தாருகா.

## தாருகன் தரு

இ-ம்-மோகனம்-தாள-ரூபகம்.

பல்லவி.

பாரடா பாலகனே பரிக்கத்தலைவாளி
பற்றிப்போதே விட்டேன் (பாரடா)

அநுபல்லவி.

ஆறுதலையு மீராறுகரங்களும்
அரியவே சரியவே எரியவேபொரியவே (பாரடா)

சரணம்.

ஆழியோடாழிக் குழைந்தாலுமொன்றுக
அழியாவரங்களை ஒழியாமல் நான் பெற்றேன்
ஆ ஆ எனக்கெதிர் நிற்கத்தரமோடா
ஆச்சர்யம் வாச்சுது போச்சுது மூச்சுது (பாரடா.)

(தாரு-வ-ம்.) அடா பயலே நீ சிறுபிள்ளையென்று எவ்வளவோ புத்திகளை சொல்லியும் கேளாமல் என்னைக் கொல்ல வந்தேனென்பதினால் உனது பாகனையும் கொடியையும் அறுக்க பாணம்விட்டேன் பாரடா பயலே.



## குமாரதேவர் தரு

இ-ம்-[illegible]

பல்லவி.

விட்டபாணத்தை தடுத்தேன் வெற்றியடைந்திட
வீரமாய் சரம்பூட்டி (விட்)

அநுபல்லவி.

அட்டகாசமாகவந்த ஆனைமுகத்தோனை மட்டி
கட்டியேயுன்கைவில்லையும் கண்டித்து வெட்டி தெட்டி (விட்)

சரணம்.

பதைக்கவென்பாகனையும் பாங்குள்ளதேர்க்கொடியும்
மதிக்காம லறுத்துநீ மாட்டிலுறும் ரதத்தையும்
விதிகிழியும்படிக்கு வீரவாளியால் நேராய்
அதிக்கை இரண்டு தந்தம் அண்டித்திதன்பார்சீராய்
மாட்டி உந்தனுயிரை
ஓட்டி எமனுலகம்
காட்டி எந்தன் பேரெங்கும்
நாட்டி சொல்லித்துதிக்க
எழிலுருமுனிவரும் ஏக்கங்கொள் தவத்தரும்
அழிந்தாரெனசிறிக்க அண்டாபாணத்தால் சிரம்
பரிக்க கரங்க
எருக்க அங்கம்
இரக்க கேடதை
மாக்க பகைதனை
எட்டுத்திசையுங்காதும் முட்டாதவில் நேராய்
விட்டேன்பாணமிப்போது கெட்டித்தனத்தைப்பாராய் (விட்)

## தாருகன் கண்ணி

இ-ம்-முகாரி-தாளம்-ரூபகம்.

அய்யய்யோமெய்சோர்ந்தேன் அரியாதபாலனாலே சிவமே
வீரபட்டமணிந்த வீரங்குறையலாச்சே சிவமே சிவமே
அதிபெருதுதிக்கையுந் தலங்குந்தந்தங்களையுந்துண்டித்தானே சிவமே
அடியற்றபனைபோலே அவனிமண்மேல்வீழ்ந்தேனே சிவமே
ஆவிசோருதென்செய்வேன் பாவிபாணத்தினாலே சிவமே

(குமார-வ-ம்.) அடா தாருகா அகண்டசாம்ராஜ்ய செல்வசம்பத்துகளையும் அழிவற்றவயிரதேகத்தின்வலிமையையும்புஜபலபராக்கிரமத்தினையும்வீரத்தன்மையினையும்பார்த்தனையா எப்படி

இருக்கின்றது இவைகளை சாதிக்கவேண்டுமானால் ... விருந்தாலல்லவோ சாதிக்கலாம் நீசெய்துவந்த துஷ்டகிருத்தியங்களால் அல்லவோ உனக்கு ஒங்காமல்போய்விட்டது. வீரா உன்னுடைய நிரமென்ன நீபெற்றவரங்களென்ன ஆயிரத்தெட்டு அண்டத்தையும் நூற்றெட்டு யுகத்தையும் ஆளும்படி பெற்ற வரத்தை நினைக்க எனக்கே துயரமாகிறதே உன்னுடைய வீரபராக்கிரம சவுரியங்கள் எங்கேபோ பொளித்ததடா.

## குமாரதேவர் தரு.

இ-ம்-சஹாணு-தாளம்-ஏகம்.

பல்லவி.

சிறுமெங்கேயுன்பெருமெங்கே அடாதாருகா (சிறு)

அநுபல்லவி.

சீராயுன்னரசதை பாராமல் நீமடிய
காராமல்விட்டுவிட்ட சூராவுந்தனுடைய (சிறு)

சரணம்.

பார்க்கவுன்னைபரிதாபமாகுதே அடாதாருகா
கார்க்கப்பிடித்திருந்த சக்திகேடயம் வில்லும்
கோர்த்துவளைத்திழுத்தும் கூராதென்னசொல்லும் (சிறு)
எந்தவிதம்நீ எழுந்திருப்பாய் அடாதாருகா
தந்திரமெதுசெய்தாலும் தப்பிப்பிழைப்பாயோ சூரா
வெந்தலைந்துபாணத்தாலே விழுந்தாயே எந்தனேரா (சிறு)

(குமார-வ-ம்.) அடாதாருகா நீசெய்யும் கெட்ட காரியத்தினாலல்லவா இப்பேர்பட்ட துயரத்தை அடையும்படி நேர்ந்தது இனியாகிலும் துஷ்டதனங்களைவிட்டு என் சரணாகதியடைந்தால் இப்பொழுது மூர்ச்சித்து விழுந்திருப்பதை மாற்றி நல்வழியில் நடத்துவேன் தாருகா.

## தாருகன் சேனைவீரன் விருத்தம்

ஆடாபயலேநீதான் ஆக்கிரமித்திங்குநீயும்
ஆரவாரங்களோடு அடங்கதுமோடிவந்து
ஆருருபாணம்விட்டு அடித்துத்தாருகனைநன்றாய்
ஆர்த்திடகளைக்கவைத்தாய் அறுகுறேன்தலையைபாராய்

(தாரு-வீரன்-வ-ம்.) அடாஅற்பப்பயலே எனதுராஜனுடைய சவுரியபராக்கிரமங்களையறியாமல் அவர்மீது பாணத்தைத் தொடுத்துக் களைக்கவைத்த வுன்தலையை அறுக்கிறேன் தப்பித்துக் கொள்ளடா பயலே.



## குமாரதேவர் விருத்தம்.

தப்பியேநின்றவுர்தன் தருநியைப்பிர்தபாலும்
கப்பியபடையுந்நீயும் கண்டதுண்டங்களாக
செப்பரும்வாளியல்ல சிறந்திடும்பாணம்பல்ல
ஒப்பில்லாவீணாடித்தேவி ஒருகணைத்தழித்தேன்பாராய்.

(தாரு-வ-ம்) ஆ ஆ என்ன ஆச்சரியம் எந்தவிடத்திலும் நம்மைச்சூழ்ந்திருந்த சேனைத்தலைவரில் ஒருவரையும் காணுதவனுயிருனுமே சிறுபிள்ளையினிடம் சண்டையிட்டு திக்கையையும் தந்தங்களையும் போக்கிவாடவும் களைக்கவும் பெரும்புறக்கடலைப்போல என்னைச்சூழ்ந்துவந்த ரதகஜதுரகபதாதிகளையும் பரிகொடுத்து சூராகிய சேனைத்தலைவரையும் விவேகசாலியாகிய மந்திரி பிரதானிகளையும்போக்கி இக்காலத்தில் தனிமையாக யாதொரு சகாயங்களுமின்றி தேகவுபாதியினால் மிகவும் வருந்தி வாடும்படி நேர்ந்தது பார்த்தனையா மானசா வெகுநேர்த்தியாயிருக்கின்றது இன்னமும் நமது விற்பிரத்தினால் அரியபாணங்களை தைரியங்கொண்டு செலுத்துவேனாயினும் பகைவனது பிராணனை வாங்குவது அரிதாகும் வீண்யோசனையில் பிரயோசனமில்லை சிவபிரான் தந்த பாசுபதாஸ்திரத்தையும் தேவதாஸ்திரத்தையும் கொண்டு பாலன் ஆணவமடக்கி வீரியிருக்கின்ற பூதச்சேனைகளையும்மடிக்க வேண்டும் இதுவே நல்லயோசனை.

## தாருகன் தரு.

இ-ம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆரடா என்சேனையைக் கொன்றவன் (ஆரடா)

சரணம்.

பாரடாயிப்போது கோரயுன்முன்விடும்
கூரம்பால் கொல்லுகிறேன் வீரத்தனங்கொண்டு
சீராமல்விட்டதால் சிறுவனென்றுன்னையான்
நேர்க்கவே சுருக்காய்ப்பாணம்விட்டாய் (ஆரடா)
ஒக்குமென்தன்புகழைப் பார்தனில் புகழ்ந்திடத்
திங்கில்பாசுபதாஸ்திரம் வாய்கிவுந்தனுயிரை
எங்கிவிடுத்திடவே தாங்கிவிசைவிட்டுப்பூட்டி
தேங்கவே செவித்துவிட்டேனிதோ (ஆரடா)

(தாரு-வ-ம்.) அடாபயலே உன்னை சிறியவனென்றெண்ணி சிறும்பாணங்களை யுன்மீதுவிடாமல்பாராமுகமாயிருந்ததால் துண்டத்தனத்தினால் என்னைக் களைக்கும்படி பாணம்விட்டாய் இதோ யான் தேவதாஸ்திரங்களையும் பாசுபதாஸ்திரமும் உன்மீதுவிட்டேன் பாரடாபயலே.

## குமாரதேவர் விருத்தம்.

விட்டதோர்பாணங்கொண்ட வேகத்தைக்கரத்தால்பற்றி
நட்டமேவாராவண்ணம் நான்செய்துக்கொண்டேன்பாராய்.

(குமா-வ-ம்) அடாதாருகா நீ விட்டபாணங்களை இதோ என்கரத்தில்பற்றி கொடுத்தவன் வீரக்குமாருபோல் ஏந்திக்கொண்டேன் பாரடா தாருகா.

(தாரு-வ-ம்) ஆ ஆ என்ன இப்பேர்ப்பட்ட சவுரியமிவனுக்கிருக்கின்றது இவனிடத்தில் விட்டபாணங்களை வெகுசுலபமாய் கரத்தில்பிடித்துக்கொண்டு நிற்கின்றதிரமையும் நீமும்எவர்களுக்குமில்லையே நமதுசெல்வமும் நீரமும்இனிவிர்த்தியடையாமல் இத்தினமுதல் மங்கிப்போகும்காலம் நேர்ந்துவிட்டதோ சூரபத்மன் தம்பியென்கிற பெருமையும் போய்விடுமோ இனி என்னையார் தான்மதிப்பார்கள் நாம்மாயவித்தையினால் மறைவிடமாகயிருந்து திகைக்கும்படி போரைச்செய்து வென்றுஜெயசாலியாய் திரும்ப வேண்டும் சீக்கிரம் கிரவுஞ்சபர்வதத்தினிடத்தில் போவோம்ஜனவனே இதுநல்லதருணமாதலால் உன்னுற்கூடிய மாயைப்பெருக்கினைக்காட்டி எனக்குவெற்றிகிடைக்கும்படியாய் பாலசுப்பிரமண்யனை பிரமிக்கச்செய்ய உதவக்கடவை துணைவனே.

(பொ-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களே தாருகாசூரன் சுப்பிரமண்யருடைய பாணத்திற்குதாளாமல் துதிக்கையும் தந்தங்களையுமிழந்து மூர்ச்சித்து பிறகுஎழுந்திருந்து தன்துணைவனாகிய கிரவுஞ்சபர்வதனிடத்தில் ஓடி தன்குறைகளைசொல்ல அவன் மாயையாகிய வடிவங்களையெடுத்து சுப்பிரமண்யரை வஞ்சிக்க தாருகனும் மாய்கையான வேறுவேறு ரூபங்களையெடுத்து சண்டை செய்யும்விதம் காண்பீர்கள் கனவான்களே.

## கிரவுஞ்சபர்வதன் கண்ணி.

இ-ம்-கேதாரம்-தாளம்-ரூபகம்.

திரிபுரங்களைப்போலே திரண்டவடிவுகொண்டு
திரிகுறேனே நீரும் பாருமே நீரும் பாருமே.



## தாருகன் கண்ணி.

பத்ராக்ஷதர்போலே பாரிலுருமாறி
பாணம்பதைக்கவிட்டேன் பாருமே நீரும் பாருமே.

## கிரவுஞ்சன் கண்ணி.

எங்குமிருள்மூட எழுந்தமேகங்களாய்
எடுத்தேன்வேறுரூபம் பாருமே நீரும் பாருமே.

## தாருகன் கண்ணி.

மன்னுமிடியுடனே மதிதலமதிர்ந்திட
மண்டுமடங்கலாய் வந்தேனே நானும் வந்தேனே.

## கிரவுஞ்சன் கண்ணி.

விழியிலொளிதோற்றாமல் விண்ணவரைக்கவர
வேண்டுமிருளானேன் பாருமே நீரும் பாருமே.

## தாருகன் கண்ணி.

பற்பலபூதமாய் பகைவரைவென்றிட
பாரித்துருவுகொண்டேன் பாருமே நீரும் பாருமே.

## கிரவுஞ்சன் கண்ணி.

திக்குகஜங்களாகி திரண்டதுதிக்கையில்
திகழுலக்கைகொண்டேன் பாருமே நீரும் பாருமே.

## தாருகன் கண்ணி.

தகிக்கப்பகைவரை தாங்காவன்லாக
தாழ்வில்லாமல்வந்தேன் பாருமே நீரும் பாருமே.

## கிரவுஞ்சன் கண்ணி.

ஆறுமுகத்தோனும் அஞ்சும்படிக்கிதோ
அனற்பொரியாகினேன் பாருமே நீரும் பாருமே.

(தாரு-வ-ம்.) இப்போது நமது துணைவன் அனற்பொரியாக வந்திருப்பதால் அவனோடு நாமும் ஆயிரங்கோடி சூரியர்களாயுதித்து சகிக்கப்படாத வெப்பத்தைத் தருவோம்.

(குமார-வ-ம்.) ஓ ஓ நாம்பயந்துபோய் விடுவோமென்று இந்த அர்ப்பர்களாகிய தாருகாசூரனும் கிரவுஞ்சனும் நானாவிதருபங்களையெடுத்து ஆக்ரமித்து இவர்கள்திரத்தைக் காட்டுகின்றார்கள் இனி இவர்களுடைய பிராணனைவாங்குவதே உத்தமம் படைக்கரசே சொல்வதைக்கேள்.

## சுப்பிரமணியர் தரு.

இ-ம்- ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பகருவேன்படைக்கரசே பக்தியுடனேகேள். (பகரு)

அநுபல்லவி.

பனைவரானபாபிசூரனை பதைக்கக்கொல்லபக்ஷமோங்கிட (பகரு)

சரணம்.

தீரமுடனேதிவரம்சென்று தீயன்தாருகனைக்கொன்று
கோரகிரவுஞ்சத்தைப்பிளந்து கோரும்கீர்த்திபடைஇன்று
சேரசங்கந்தனில்புகுந்து சொக்கியிருக்குஞ்சுந்தரமுள்ள
வீரவாகுமுதலானோர்களைவிரைவிலழைத்துவருவாய்கொள்ள (பக

(சுப்பிரம-வ-ம்.) படைக்கரசே யான்சொல்வதை கவனித்து க்கேள் தாருகாசூரனையும் மாயையிற்சிறந்த கிரவுஞ்சபர்வதத்தி னையும் ஒருகணப்போது கழிவதன்முன்னம் உடலைஇருகூடாராய் பிளந்து பிராணனையுண்டபின்பு அவ்வரையன் வஞ்சகத்தில் அகப் பட்டு மயங்கி இருக்கின்ற வீரவாகுதேவர் என்பர் லக்ஷத்தவர் பூதவீரர் யாவரையும் மீட்டுக்கொண்டு அதிசீக்கிரத்தில் இவடம் வருவாய் படைக்கரசே.

(தாரு-வ-ம்) அதோவருகிற வேலாயுதத்தை சுள்ளிபோல் முறித்து எரிகுறேன்பார் ஐயய்யோ என்மார்பைப்பிளந்துவிட்டதே ஆவிபோகுதே.

(கிரவுஞ்ச-வ-ம்.) ஐயய்யோ என்னை வேலாயுதம் இருகூறு ய்க்கண்டித்ததே ஆ ஆ ஆவிசோருதே

(பொ-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களே சுப்பிரமண்யர் விட்ட வேலாயுதத்தினால் தாருகாசூரனும் கிரவுஞ்ச பர்வதமும் அதமாய்ப்போய் குகையிலிருந்த லக்ஷத்தவர்கள் நவவீரர்கள் பூத ப்படைகள் இவர்களைமீட்டு அழைத்துக்கொண்டு வந்துவிட்டுவே லாயுதம் சுப்பிரமண்யர் கரத்தில்வந்ததென்றறிவீர்கள் சபை யோர்களே.

## நவவீரர் லக்ஷ பூதர் தேவாரம்

ஐயனேபோற்றிபோற்றி அரனருள்பாலாபோற்றி
துய்யமாமயிலின்மீது துலங்கிடுமணியேபோற்றி
மெய்யனேஎம்மையெல்லாம் மேன்படச்செய்தாய்போற்றி
வய்யகம்செழிக்கவந்த வல்லவாபோற்றிபோற்றி.



(குமார-வ-ம்.) வீரவாகு சூரபத்மனுக்கினிய தாருகன் என்பீறுவிட்ட பாசுபதாஸ்திரத்தை காத்தில் பற்றினேன் இதைபெற்றுக்கொண்டு பக்தியாய் போற்றிவைத்து ஜெயசாலி [illegible] கொண்டுவாக் கடவை உங்களுக் குதுணையாயிருந்தபூதப்படைகளில்லக்ஷம் பேரையும் [illegible] விட்டவர்களைஎழுப்பித்தருகின்றேன் அவர்களுடன் எவ்விடத்தி லும் ஜெயம்பெற்றுவரக் கடவாய் எழுந்துவாக்கடவீர்கள் பூதர் களே.

## பூதர்கள் கண்ணி.

இ-ம்- இந்துஸ்தான்-தாளம்-ரூபகம்.

தாருகாசூரனும்கோரகனை தங்காமலொழிந்தே ஓடினனே
ஊருபோலிருந்தெரிந்தனனே உலகம்மெச்சிட வாகினனே

## வேறு பூதம்.

வாழ்விசெய்தவர்தவஞ்சகனும் எதிர்சேய்யாயினனும் தர்வித்தால்
தீருதினைத்திடதீயவன்றின்னாம்குதிசெய்கின்குமேனமந்திரத்தால்

## வேறு பூதம்.

தீர்த்தானேதாருகன்சேர்த்தான்மீனமேல் தேர்ந்தமுருகையன் கூர்வேலாலே
சேர்த்தானேயமேலோகம்சீமழிந் ததேசார்ந்தகிரவுஞ்சனும் கூராமலே

(பூதப்ப-வ-ம்.) போற்றிபோற்றி குமாரதேவாபோற்றி.

(குமார-வ-ம்.) வாழி வாழி பூதப்படைகளே வாழி.

(குமார-வ-ம்.) தேவர்களே காலதாமதம்செய்யாமல் தென் திசைநோக்கிச் செல்வோம் வாருங்கள் தேவர்களே.

(தேவர்-வ-ம்) மகாபாக்கியம் அப்படியே போவோம் மகா ப்ரபாவா.

## குமாரதேவர் விருத்தம்.

கவிதருசுபர்க்கைசந்தக் கடந்தாரம்கடிதில்க
தவமுனிவோர்கள்வாழும் தடதேவகிரியைக்கண்டோம்
சவிபுயேயேமுற்கில்சாய்ந்தான் சகலருமிங்கிருந்து
அவரவர்செய்விதெல்லாம் அறிந்துயோசனைசெய்வோமே

(குமாரதே-வ-ம்) தேவர்களே நாம்சமாதானம்விட்டு தேவகி ரியை அடைந்தோம் அரியன் அஸ்தமனமாய்விட்டான் இனிக ாலும் விஷயத்தை இவடமிருந்து ஆலோசிப்போம் தேவர்களே

(தேவர்-வ-ம்.) சுவாமி அப்படியே எங்களுக்கும் சம்மதமே ஆயினும் இந்தத் தேவகிரியின்மீது தங்களிருந்து நாங்கள் தரிசிக்க ஆவலுள்ளவர்களா யிருக்கின்றோம் இம்மாளிகையதனில் தாங்கள் வீற்றிருக்கவேண்டும் சுவாமி.

(குமாரதே-வ-ம்.) அப்படியே இருக்கின்றேன் தேவர்களே.

(குமாரதே-வ-ம்.) ஏ சிற்பாசிரியனே தேவர்கள் கணத்தலைவர்கள் துணைவர்கள் மற்றும் சேனைகள்முதலானவர்கள் வாசம் செய்வதற்கு தகுந்த வீதிகள் குறைவாயிருப்பதாக இந்நகரத்தினை அதிதுரிதமாக முடிக்கக்கடவாய் தேவதச்சா.

(தேவத-வ-ம்.) இதோ முடிக்கின்றேன் மகானுபாவா.

## தேவதச்சன் கண்ணி.

இ-ம்-சௌராஷ்டிரம்-தாளம்-ஆதி.

தேவகிரிமிசைதனில் சித்திரம் சிறப்புறவொன்று
மேவுமுருகன்கோயிலொன்றாக விண்ணவருக்கெல்லாமுற்றனே
ஆலயமொன்றுதிவ்வியமிசை அதிசயமாம் பிரகாரமதே
மேலாம்நிதிசொன்னவர்களுமே மேன்மையாயிழைத்தேன்கலுமே
பொன்மதிற்கோபுரமும் அதிசயமும்கிரகங்களும்
நன்னகர்வீதிகள் நாற்புறமும் நல்லமணித்தோரணமும்
மாடமாளிகைகள் மண்டபமெத்தைகள்
ஓடைகள்கூடகோபுரங்கள் தாமரை ஓடைமேற்பூர்க்க
நந்தவனங்களும் காஞ்சிதபுஷ்பங்களும்
எந்தவளமும்வாழிடையாவிளங்க எல்லாம்நிறைவித்தேன்.

(மகா-வ-ம்.) போற்றி போற்றி மகாப்பிரபோ போற்றி இதுவரைப்படிக்கு உன்னதஸ்தானத்தில் தாங்கள் வீற்றிருக்கும் விமானமும் ஆலயமும் நகரமும் அரண்மனைகளும் மெத்தைமேடைகளும் அவரவர்களுக்கேற்றபடி சிருட்டித்தேன் அனைவரும் வந்து அதில் அமரவேண்டும் மகாநுபாவா.

(குமாரதே-வ-ம்.) தேவர்காள் நமக்கென நிர்மிக்கப்பட்ட ஆலயத்தில் [illegible] அவரவர்களுக்கேற்றபடி இருப்பீர்கள் தேவர்களே.

(தேவ-வ-ம்.) அப்படியே இருக்கின்றோம் தயாநிதியே.



## தாருகாசுரன் சாரணர்கள் கண்ணி.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

ஐயய்யோ அய்யனே நொய்யும்படிக்குன்னை ஆறுமுகன்செய்தானே
மெய்யாய்மாயமாபுரிமகிமைகுறைந்து மெச்சாவழிவைத்தானே
அழியாதகாயத்தை ஆரிட்டசாபத்தால் அடைந்திறந்தாயோ
பழிபெற்றிடாமல் பாராண்டிருந்து பாலனால்மாண்டாயோ
உந்தன்பத்தினிசவுரிபீதைக்கேட்டால் உயிர்விட்டிடுவாளே
எந்தவிதமாய்போயுரைப்போமிதை எங்கெழுவாளே.

(சாரண-வ-ம்.) அடா அண்ணே இக்குபுலம்புவதால் என்ன காரியமுடியும் நாம் மாயமாபுரிக்குச்சென்று ராஜனுடைய பட்டபத்தினியாகிய சவுரியம்மாளிடம் சொல்வோம்வாடா அண்ணே.

(மற்-வ-ம்.) அடா அண்ணே நான்சொல்லமாட்டேன் நீதான்சொல்லவேண்டும்.

(மற்-வ-ம்.) அப்படியே சொல்கின்றேன் வாடா தடியா.

## சாரணர் கண்ணி.

போற்றிசெய்தோமம்மா பொன்னடிக்குநாங்கள்
போனோமே மோசமிக
ஏற்றிடவுனக்கு எப்படிசொல்லுவோம்
எதுவும்தோணுதானேமே.

(சவுரி-வ-ம்.) அப்பா என்னதுயரமாய் சொல்லுகின்றீர்கள் தெரிவிப்பீர்களப்பா.

## சாரணர் கண்ணி.

காலனைப்போலேபாலகப்பிரமண்யன் காந்தனிலேவிளங்கும்
வேலுக்கிறையுண்டுவேந்தன் மாண்டாரம்மாவேகமாயோடிவந்
[தோம்.

## சவுரி கண்ணி.

இ-ம்-சாமா-தாளம்-ஏகம்.

ஐய்யோமன்னவா அங்கம்பதரமண்ணில் அடிந்திட்டாயோபாவி
உந்தனைவி போச்சோதாவி
அன்பனே எந்தனின்பனே எந்தன் இன்பனே இ இ இ
அரசுசெய்தானென்னை அன்புடன் காப்பாயென்றகமகிழ்ந்தேனே
சீமானே சிரந்தோனே

அடர்ந்தானே சனி அடர்ந்தானே சனி அடர்ந்தானே தா தா தா
அருந்தவஞ்செய்து அடைந்ததையெல்லாம் அழியக்காலமாச்சே
இனியச்சே எங்கும்பேச்சே
ஆனனே இனிதானானே இனிதானானே தா தா-தா.

(சக்களத்திமார்-வ-ம்.) அடி என்னடி பட்டபன்றி அழுதாற்போல் கேட்கிறதிது வாருங்கடி போய்விசாரிப்போம் ஆமாண்டி வாருங்கள்

(சக்களத்திமார்-வ-ம்.) அடி சவுரி என்னடி அழுகிறாய்.

## சவுரி விருத்தம்.

அய்யய்யோசக்களத்திமாரே அனாயமாய்த்தான் றவில்லை
நய்யுதேநெஞ்சமிப்போ நானென்னசொல்லுவேன்
பய்யரவணிந்தோன்பெற்ற பாலனும்சுப்பிரமணியன்
எய்திட்டவேலால்மன்னன் யமலோகம்சேர்ந்தாராமே.

(சவுரி-வ-ம்.) அடிசக்களத்திமார்களே நமது பிராணநாதர் சந்திரசடாதரக்கடவுள் புத்திரனாகிய பாலசுப்பிரமணியன் வேலால் மாண்டாராமடி சக்களத்திமார்களே.

## தாருகன் தேவிமார்கள் கண்ணி.

இ-ம்-முகாரி-தாளம்-ரூபகம்.

| | |
|---|---|
| மன்னரே மாண்டீரோ | மாதர்களே |
| மதிமோசந் தன்னால் | சகோதர்களே |
| ஆதரவாரினி | எங்களுக்கு |
| அலையதர்மமோயிது | உங்களுக்கு |
| ஆதிசிவன் தந்த | அருமைவரம் |
| அற்பமாய்போனதே | அழிந்ததிரம் |
| காலம்வந்திப்படி | கலங்கலாமோ |
| ஓலமிட்டிப்படி | உருகலாமோ |
| தாழ்வடையாநங்கள் | தலைவிதியோ |
| தனிமையாயிருந்திட | காண்டிதியோ |

(சவுரி-வ-ம்.) ஓ கைலாசவாசா நீகொடுத்த வரங்களெல்லா மழிந்து எங்கள் நாயகர் இறக்ககாலம்வந்ததே ஜெகதீசா இப்படி செய்ய எத்தனைநாள் கணமிட்டிருந்தாயோ பாழுந்தெய்வமே.

(சவுரி-வ-ம்.) அடிசக்களத்திமார்களே போர்களம்போகலாம் வாருங்களடி.



(சக்கள-வ-ம்.) அப்படியே போகலாம்வாடி சவுரி

## சவுரி விருத்தம்.

ஐயையோபிராணேசாவுன் னங்கமும்புளமண்மேல்
ஐயய்யோவிதிவசந்தான் அன்றுனைதாலியும்
ஐயய்யோஅடர்ந்தசண்டை அறியாதபாலனோடு
ஐயய்யோதெரியாமற்செய் தடைந்தையோபதவிதானே.

(சவுரி-வ-ம்.) பிராணேசா நீ யுத்தம்செய்து மாளும்படிக்கி தெய்வச்செயலும் இப்படியிருந்ததோ அடியாளைத்தனியாய்விட்டு என்னிடத்திலிருந்த பிரீதியைமறந்துபோய்விடுவது உம்மையொத்த அனேகபுண்ணியவானுக்கு நீதியோ அல்லது அழகோ அய்யய்யோ எவ்விடத்திற் போயிருக்கின்றீர் இவ்வுலகத்தின்வாழ்வையும் மற்றசம்பத்துகளையும் வெறுத்துசாகுசக்கரதாரனாகிய மகாவிஷ்ணு வாசம்செய்கின்ற வைகுந்தநகரைச்சேர்ந்து சகலசம்பிரமங்களையும் அனுபவிக்கின்றீரோ அல்லது பிரமலோகத்திற்போய் களித்திருக்கின்றீரோ அன்றியும் கைலாசிவாசனிடத்திற்போய் வீற்றிருக்கின்றீரோ தேவர்களெல்லாம் உமது பணிவிடைகளைச் செய்து சுகத்திலிருந்த எனிகண்மணியே அடியாளிருக்கும் அந்தபுரத்திற் கெழுந்தருளும் வைபவங்களைக் காணாமல் கழுகுபருந்து காக்கைவட்டமிட்டுலவவும் பூதப்பைசாசங்கள் நடிக்கவும் இவ்விதஆடம்பரத்திற்றில் கால்மகுதலைமாடாய்விழுந்துகிடக்கும் அகோரத்தையும் இந்தப்பாழ்த்தகண்களாற் பார்ப்பேனோ நான்மிகவும் வருந்திகாணவந்தேன் பழையபடிக்கி ஆசையுடனெழுந்து ஒருவார்த்தை பேசமாட்டீரோ மாண்டார்வருவரோ மானிலத்திலென்றிறப்படி மாண்டீரோ ஐயய்யோ என்செய்வேன் பிராணேசா.

(சக்களத்-வ-ம்.) நாயகா அவளிடத்தில்தான் கோபமிருந்தபோதிலும் எங்களிடத்திலாகிலும் பேசக்கூடாதென வர்மமா எங்களிடத்திலிருந்த பிரீதியை மறந்தமாண்டீரோ நாயகா.

## சவுரி சக்களத்திமார்கள் தரு.

இ-ம்-நாதனமக்கிரியை-தாளம்-ஏகம்.

பல்லவி.

ஆருமற்றபாவியானேனென்று ஆருமற்றபாவியானேனென்று மன்னா

அநுபல்லவி.

| | |
|---|---|
| ஊரிருந்துமென்ன | உற்றாரிருந்தென்ன |
| உயிர்த்துணை | யுனைவிடுத்து |

வளனுரக்கவில்லா தூங்கிப்படுக்கவும்
உற்றதினு அடித்து. (ஆரு)

சரணம்.

அரம்பைமேனகைமுதல் ஆடல்கள்பாடல்கள்
அன்புடன் பார்த்திருந்து
அரிபிரம்மதேவர்கள் அடிமைவேலைகள்செய்ய
அரசாண்டு பூத்திருந்து. (ஆ)
சேடிமார்வந்து சிவிகிறுக்கருத்து சிரந்தரோஜாமுல்லை
சிரந் தரிக்க
ஆடிஜலக்ரீடை அழகுமஞ்சள்பூச
அனைத்தையும் மறந்திருக்க. (ஆ)

(சவு-சக்-வ-ம்.) ஆ மன்னவா நாங்களிருந்த சுகங்களை நினைக்க நினைக்கத்துயரம் மேலிடுகின்றதே எல்லாவித சம்பத்துகளை அடைந்து இப்போது அதுகளை இழந்து மாங்கல்யமும் இல்லாமலிருக்க என்னவிதிவசம் நேர்ந்தது பிராணநாதா தெய்வம் இப்பேர்ப்பட்ட சதிசெய்யுமென்று தெரியாமல்போய்விட்டதே ஆ என்செய்வோம் நாயகா.

## சவுரி சக்களத்திமார்கள் கண்ணி.

இ-ம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

என்னகாலமெங்களுக்கு எழுதினாய் சிவமே சிவமே
மன்னனைப்பிரிந்திருக்க மகிழ்ந்தாயோ சிவமே
முப்புரப்பில்செய்தபழி மூண்டதோ சிவமே சிவமே
இப்பிரப்பிஷேடியச்செய்ய இட்டாயோ சிவமே
அரசிழந்து அன்பன்மாள அலைபாய்ச்சுதே சிவமே சிவமே
ஆருமில்லாப்பாவிகளாக அமைத்தாயோ சிவமே

(சக்க-சவுரி-வ-ம்.) ஆ ஜெகதீசா எங்களை இப்பேர்ப்பட்ட கோலமாக்கி பார்ப்பதுனக்கழகா ஜெகதீசா.

(அவுணது-வ-ம்.) அடா அண்ணா இவர்கள் இப்படிபுலம்பிக்கொண்டிருந்தால் முடிவதென்ன நாம் தாருகாசூரனுடைய குமாரன் அசுரேந்திரன் பெரியதந்தையாகிய சிங்கமுகாசூரனைப்பார்க்க ஆசுரமென்னும் பட்டணத்திற்கு போயிருக்கிறான் அவனுக்குசேதிதெரிவிப்போம் வாடா அண்ணே.

(தூதன்-வ-ம்.) அப்படியேபோய்அவனைதொலைதூரம் அழைத்துவந்து அவன்தகப்பன் இறந்தசங்கதியை சொல்லவேண்டும் அண்ணே ஜாக்கிரதை.



(தூதர்கு-வ-ம்.) போற்றி போற்றி அசுரேந்திர மகாராஜனே போற்றி பாலசுப்பிரமணியனென்பவர் உம்முடைய பிதாவை வேலாயுதத்தினல் கொன்று விட்டார் ஓடிவாரும் அசுரேந்திர மகாராஜனே.

(அசுரேந்-வ-ம்.) அடா தூதர்களே என்னவார்த்தை சொல்லுகின்றீர்கள் யாவனோபாலசுப்பிரமணியனும் அவன்வேலாயுதத்தினல் எனதுதகப்பனை கொன்றுவிட்டதாகத்தெரிவிக்கின்றீர்கள் என்னதயிர்யமடா வுங்களுக்கு சீ அப்புரம் விலகுவீர்களடா;

(தூதர்க-வ-ம்.) ஐயா நீர்வந்துபார்த்து அப்படி இல்லாவிட்டால் எங்களை சிரச்சேதம் செய்துவிடுவீர் ஐயா.

(அசுரேந்தி வ-ம்.) ஆனல் வாருங்கள் பார்ப்போம் அப்படியில்லாவிட்டால் உங்களை துண்டுதுண்டாய் வெட்டிவிடுவேன் வாருங்கள்.

## அசுரேந்திரன் விருத்தம்

அன்னேவேளைவிடுத்து அடைந்திடப்பதவியும்
தன்னுவாசம்வீசும் அகைபெருங்கைலைநாடி
என்னையேபோனயோதான் எப்படிக்காணுவேனன்
குன்றும்தன்னெண்ணமிங்கு குறைதனை தீர்ப்பார்காணேன்

(அசுரேந்தி-வ-ம்.) அண்ணா என்னை தனியாய்விட்டு சாம்பசிவன் வசிக்கும் கயிலாயபதியை சேர்ந்துவிட்டயோ என்னெண்ணமெல்லாங்குறைந்து ஏங்கும்படி விட்டாயே என்துயரைத்தீர்ப்பார் ஆரண்ணா.

## அசுரேந்திரன் கண்ணி.

இ-ம் முகாரி-தாளம்-ரூபகம்.

என்னைத்தனியாய்விட்டு எப்படிமறந்தாயோ அண்ணா அண்ணா
திருவனிடத்தினில் சின்னமாய்ப்போனயோ அண்ணா அண்ணா
மாளாமனக்குறை மீளாமல்செய்தாயே அண்ணா அண்ணா
ஈசன்தந்தவரம் இப்படியும்வாய்த்ததோ அண்ணா அண்ணா
மாயவித்தைகளெல்லாம் மறந்திரோசமயத்தில் அண்ணா அண்ணா

(அசுரேந்தி-வ-ம்.) அப்பா வீரர்களே எனது தகப்பனை எடுத்துக் கொள்ளுங்கள் கொண்டுபோய் முழுக்காட்டி தகனம் செய்துவிடுவோம் வீரர்களே.

(வீரர்க-வ-ம்.) இதோ எடுத்துக்கொண்டோம் வாருமையா அசுரேந்திர மகாராஜனே.

(சவுரி-சக்கன-வ-ம்.) கண்மணி உன்னுடைய தகப்பனருட ன் நாங்களும்போக விருப்புற்றனம் அதற்கு வேண்டும் முயற்சி [illegible] அரிதமாய் முடிப்பாய் [illegible]

(அசுரேந்தி-வ-ம்.) அன்னையர்களே பிதாவைப்பரிகொடு வாடுகின்ற அடியேனை ரக்ஷிக்கவேண்டுமென்று எண்ணிநேனே தாய்மார்களே.

(சக்க சவுரி-வ-ம்.) அடாபாலா இவ்வுலகத்திலிருக்க இஷ்ட மில்லை துரிதமாய் தீக்குழியில் அக்கினியை மூட்டுவாய் பாலா.

(அசுரேந்தி-வ-ம்.) தாய்மார்களே தகப்பனருக்கு செய்ய வேண்டிய சடங்குகள்செய்து உங்களுக்கும் தீக்குழியில் அக்கினி வளர்த்து வருகின்றேன் கோபிக்கவேண்டாம் தாய்மார்களே.

## சவுரி சக்களத்திமார்கள் விருத்தம்.

கணவனைதெய்வமென்று கருதியேயிருந்தநாங்கள்
துணைவனைப்பிரிந்திருந்தால் சுகமுமின்றாதலாலே
மணமதுபுரிந்தாரேனும் மகிழ்ச்சியாயிருக்கவேண்டி
துணிவுடன் தீயில்வீழ்வோம் துயரத்தைத்தொலைத்ததாலே.

(அசுரேந்தி-வ-ம்.) நமது தகப்பனரும் தாய்மார்களும் இற ந்தபிறகு நமது நாட்டிற்கேகுவதவிட இத்தவிஷயங்களை கருங் கடலின் மத்தியிலிருக்கின்ற வீரமாமகேந்திர புரியைசேர்ந்து பெ ரியதந்தையாருக்குத் தெரிவிப்போம்.

## அசுரேந்திரன் கண்ணி.

இ-ம்-சஹானா-தாளம்-ரூபகம்.

அண்ணா அண்ணா அண்ணா அண்ணா ஆரத்துயரானேனண்ணா
எண்ணி எண்ணி எண்ணி எண்ணி ஏக்கிடலுமானே னண்ணா (அ)
சொல்லமனம்வல்லையண்ணா சோர்வடையுதென்ன்செய்வேன்
அல்லல்படஅய்யனைக் கண்டதவித்துயராம்சொல்வேன் (அ)
அப்பாயிருந்தஅன்னை தந்தை யாருங்கேட்டு ஆரார்களோ
ஒப்பிபிதைப்புதைத்தாலே உயிர்தரிக்கலுறார்களோ (அ)

## சூரபத்மன் கொலு.

(சூரன்-வ-ம்.) அடாகண்மணி இப்படிக்கு அலங்கோலமாக வந்து அழுவதற்கு உனக்கு சம்பவித்தகாரியங்களை விரைவில் சொல்வாயடா குழந்தாய்.



## அசுரேந்திரன் விருத்தம்.

அப்பாநன்குண்மையாக அறைகுவன்கன்றாய்க்கேளும்
செப்பாதபாதகன்தான் சிவசுப்பிரமண்யனென்பான்
ஒப்பாகவேறொன்றில்லா தொளிர்வேலையெடுத்ததாலே
தப்பாமலுந்தன்தம்பி தாருகன்மாண்டானண்ணா.

(அசுரேந்-வ-ம்.) அண்ணா சிவகுமாரனாகிய பாலசுப்பிரமண் யனென்பவன் பலபூதப்படைகளுடன் மாயமாபுரிக்குவந்து உன் தம்பியை வளைத்துக்கொண்டு அகோரயுத்தம்செய்து சேனைகளை னைத்தையும் கொன்றுகடையில் உனது தம்பியையும் கிரவுஞ்சபர் வதத்தையும் வேலாயுதத்தால் பிளந்துவதைத்து இப்பூமண்டலத் திலிரானின்ற நம்மவரை தேடிக்கொண்டு வருகின்றான் அண்ணா.

(சூர-வ-ம்.) குமாரனே நீசொல்வதுயாவும் பொய்யேயன்றி மெய்யல்ல சலனமற்ற புஜபலபராக்கிரமசாலியாகிய தாருகாசுர னையும் மாயைக்கரசனை கிரவுஞ்சனையும் சிவகுமாரனோ வெல்ப வன் அடாகுழந்தாய் நீயேதோ துன்பங்களிற்பட்டு திகைத்துவந் திருக்கின்றனை ஆதலால் மனசஞ்சலமற்று நடந்தசெய்தியை எதா ர்த்தமாய் சொல்வாய் குமாரனே.

(அசுரேந்-வ-ம்.) பிதாவே இப்போது யான்சொல்லிக்கொ ண்டுவந்தயாவும் சத்தியவாக்கியமேயன்றி பொய்யல்ல என்பிதா வை தகனம்செய்து தாய்மாரிஷ்டப்படிக்கு அக்கினிபிரவேசத் திற்கு வேண்டியதீக்குண்டத்தை முடித்து அவர்களையும் பலிகொ டுத்து அத்தலத்திலும் நிற்குமனமில்லாமல் தேவரீரிடத்தில் சொல் லிமனமாற்றிக் கொள்ளவந்தேன் பிதாவே.

## சூரன் தரு.

இ-ம்-தன்னியாசி-தாளம்-ஆதி

பல்லவி.

என்னசெய்வேன்னான் தம்பி ஏங்கவிட்டதேன்.(என்)

அநுபல்லவி.

மன்னவர்க்கெல்லாம் மகிபனாயிருக்க
முன்னம்செய்தவினையால் மாண்டதோதாருக (என்)

சரணம்.

மெத்தவண்ணலிங்கேஉன்னை மேவியிருந்தேனங்கே
சித்தங்கலங்கி சிருங்குலைந்து
அத்தனையும்பொய்யா யழிந்துஅலைந்து(என்)

மாயைகிரவுஞ்சனும் மதிமயக்கினனேசானும்
தாயைப்பிரிந்து தவித்திடுங்கன்றாய்
நீயன்விட்டவேளாலே தியங்கினாக்குசென்றாய் (என்)

## சூரன் விருத்தம்,

எந்தனற்பரிஜனங்காள் இயம்பிடக்கேளிப்போர்
கந்தனென்பவனோனாலும் கணப்போதுகழிபுமுன்னே
நொந்திடத்தலையறுக்க நோக்கியேசெல்வதாலே
இந்திரஜாலத்தேரை இக்ஷணம்கொண்டுவாரீர்.

(சூர-வ-ம்.) மந்திரிமார்களே பரிஜனங்களே கந்தனென்பவனேகணப்போதிற்குள் அவனது சிரங்களை கண்டிக்கப்போக உத்தேசித்திருப்பதால் எனது இந்திர ஜாலத்தேரை அதிவிரைவில் கொண்டுவருவீர்கள் மந்திரிமார்களே.

## மந்திரி அமோகன் தரு.

இ-ம்-சாவேரி-தாள-ஆதி.

பல்லவி.

சொல்லுவேன்கேளுமையா மந்திராலோசனை. (சொ)

அநுபல்லவி.

வெல்லவுபாயங்களை வேணதுரைப்பேனுக
வல்லவர்களாயினும் வகைதெரிந்துபோக. (சொ)

சரணம்.

வந்தபகைவனிட வல்லமையையறிந்து
எந்தகுலகோத்திரம் என்பதையுந்தெரிந்து
கந்தன்சேனைகளுடன் கணக்கவந்திதுகந்து
விந்தையாய்தூதுவிட்டு விளைவதெல்லாமகிழ்ந்து (சொ)

மாயைகளிற்சிறந்த மகிமையுடையோனென்றும்
மதிக்கப்படும்வீரன் மாபலசாலியென்றும்
சாயைதந்தைதாய்களின் சங்கைதெரியாதொன்று
சாதிக்கப்போகாதய்யா சகலமுந்தெரிந்தின்று. (சொ)

ஆத்திரப்படாமலே அரிந்தாலோசனையய்ய
சாத்திரம்சொல்வதாலே சாற்றுகிறேனதைசெய்ய
காத்திரமேனியையும் காசாங்களும்பய்ய
பாத்திரவானியென்று பார்த்துசிரம்கொய்ய. (சொ)



(மந்-வ-ம்.) அரசே யுத்தத்திற்கு போகுமுன்னம் எவ்வளவு பலசாலிகளாயிருப்பினும் சத்துருவுடைய பராக்கிரமங்களுஞ்சேனைத்திறங்களையும் வந்தவன் இன்னகுலகோத்திரமென்றும் தாய்தந்தையர்கள் இன்னாரென்றும் பகைவன்தேவர்கள் வரப்பிரசாதம் பெற்றவனென்றும் மாயையிற்சிறந்த பராக்கிரமசாலி யென்றும் திவ்ய அஸ்திரங்களைப்படைத்திருக்கின்றானென்றும் தருணத்திற்கடுத்த உபாயங்களைதெரிந்து நடக்கவல்லவனென்றும் ஆராய்ந்து யுத்தத்திற்குபோகும் முயற்சியை தெரிவிக்கின்றேன் அல்லது ஒரு கிலும் தூதரைவிட்டுப் பார்த்துவரச்செய்து அவர்கள் பலாபலம் தெரிந்துபோவதே ராஜநீதிக்கழகு வேந்தே.

(சூர-வ-ம்.) மந்திரிநீசொல்லியயாவும் உண்மையே அப்படியே செய்குறேன் அடா தூதர்களே இக்ஷணமே நீங்கள் துரிதமாயோடி இந்த பூமண்டலத்தில்வந்திருக்கின்ற கந்தனென்பவனுடையகாரணகாரியங்களையும் அவனுடன் சூழ்ந்திருக்கின்ற பூதச்சேனையின் பெருக்கையும் அவர்கள் பராக்கிரமங்களையும் மற்றுமிராநின்ற செய்திகளும் தெரிந்துகொண்டு விரைவில்வந்து சேதியுரைப்பீர்கள் தூதர்களே.

(தூத-வ-ம்.) இதோ ஒடிதெரிந்து வருகின்றோம் மகாராஜனே.

(பொ-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களே குமாரதேவர்தேவகிரியைவிட்டு காஞ்சிதிருவண்ணாமலை சிதம்பரமுதலான க்ஷேத்திரங்களை தரிசித்து காவிரிநதியிணைக்கடந்துஅதன்வடபாரிசத்தில் பெருகும் மண்ணியாற்றங்கரையில்வந்து சேர்ந்ததை அறிவீர்கள் கனவான்களே.

## குமாரதேவர் விருத்தம்.

காவாடவுலர்ந்துகாந்து கண்ணியதேவர்கேளீர்
ஆவாதசூரனைக்கொன் றகமகிழ்ந்திடும்படிக்கு
தேவாலயங்கள்சென்று தென்புடன்தரிசித்திந்த
மேவாதமண்ணியாற்றின்மென்படுகரைவந்தோமே.

(குமார-வ-ம்.) தேவர்களே தாருகனையும் கிரவுஞ்சனையும் வாட்டி தேவகிரியிலிருந்து புறப்பட்டு சிவதலங்களையடைந்து மெய்யன்புடன் தரிசித்து இந்தமண்ணியாற்றங் கரையில்வந்து சேர்ந்தோம் இனிநடக்கும் விதம் தெரிவிக்கவேண்டும் தேவர்களே

## தேவர்கள் விருத்தம்.

இன்றிரவிங்கிருந்து இரவிவந்துதிக்குங்காலும்
உன்திருப்பாதம்போற்ற உன்னினோம்போற்றிபோற்றி.

(தேவர்-வ-ம்.) போற்றி போற்றி காங்கேயா போற்றி இன்றிரவு இங்குதங்கி வுங்களைப்போற்றிசெய்து உதயத்தில் செல்லும்படி எண்ணினோம் கருணாகரா.

## குமாரதேவர் விருத்தம்.

விசுவகர்ம்மாவேநீயும் விரைவினிலிவ்விடத்தோரூர்
வசுவைமானகர்போல் நாங்கள்வசித்திடவியற்றுவாயே.

(குமார-வ-ம்.) ஏ விஸ்வகர்ம்மா யாரும் தேவர்களும் வசிக்கபொன்மயமான நகரத்தினைசிருட்டிப்பாய் விஸ்வகர்ம்மா.

## விஸ்வகர்ம்மா விருத்தம்.

அய்யனேபோற்றிபோற்றி ஆக்கினைப்படியேயாளும்
செய்யநீவிரும்பும்வண்ணம் சிருட்டிப்பேன்போற்றிபோற்றி

(விஸ்வகர்-வ-ம்.) போற்றிபோற்றி சுயஞ்சோதியேபோற்றி ஆக்கினைப்படியே நகரைசிருட்டிக்கின்றேன் சுயஞ்சோதியே.

## விஸ்வகர்ம்மா விருத்தம்.

கூடியவிரைவினோடு குறைபடாவளகையென்ன
நாடியகருத்தின்வண்ணம் நகரினையமைத்தேன்போற்றி

(விஸ்வகர்-வ-ம்.) சுவாமி நீங்களனைவருமிருக்க ஆக்யாபித்தவாரே நகரையமைத்தேன் வந்துபார்த்து ஆசீர்வதிக்கவேண்டும் சுவாமி.

(குமார-வ-ம்.) வாழி வாழி விஸ்வகர்ம்மாவாழி தேவர்களே நமக்கெனசிருட்டித்த நகரத்தில் அனைவர்களுக்குத் தகுந்த இடங்களில் வீற்றிருப்பீர்கள் சூரியனுதயமானபிறகு முன்செல்வோம் இத்தலத்திற்கு திருச்சேய்ஞலூரென்று வழங்கி வரும்படி செய்விக்க கடவது தேவர்களே.

(தேவர்-வ-ம்.) சுவாமி அப்படியே வழங்கும்படி செய்விக்கின்றோம் சுவாமி.

(குமார-வ-ம்.) ஏ வாயு உதயமாய்விட்டது சீக்கிரம் ரதம்செலுத்துவாய்.



(வாயுதே-வ-ம்.) அப்படியே செலுத்துகின்றேன் மகாநுபாவா.

(குமாரதே-வ-ம.) வாயு நாம்திருச்செய்ஞலூரிலுள்ள முருகு வாருரைக்கண்டு அங்குள்ளவன் மீகலிங்கத்தைப்பூசித்து மற்றுமுள்ள சிவதலங்களையும் சேவித்து இந்த பாலைவனத்தில் வரயாரோ நம்மைக்கண்டு ஓட்டமாயோடிவருகின்றார்கள் ரதத்தை நிறுத்துவாய் வாயு.

(வாயுதே-வ-ம்.) இதோ நிறுத்திவிட்டேன் மகாநுபாவா.

## குமாரதேவர் தரு.

இ-ம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வருபவாரோசொல்வாய் இந்திரவரிசையுடனருவர்களாய்.()

அநுபல்லவி.

இருந்தநிலைவிட்டு எத்தனைவேகமாய்
பரிந்தோடிவருகிறார் பாரதைசாங்கமாய். (வரு)

சரணம்.

தவமேயிருந்திடும் தவமுனிப்புத்திரரோ
பலமேதுலைத்திடும் பாங்குள்ளமித்திரரோ
அவமேபிறந்த அருவினைப்பாத்திரரோ
நவமேயறிகிலேன் நின்மதிகாத்திரரோ. (வரு)

ஓடிவருகிற உன்னிதம்பார்த்தாலே
வாடிநம்மிடமே வருகின்றனதப்போலே
நாடிடும்நாட்டமே நான்கொண்டேனதனாலே
தேடிவந்தோரை தேற்றுவேனினிமேலே. (வரு)

சிலரிவர்கள் சிறந்தவனம்விட்டு
சாலமிதுவென்று கடிதில்வழிதொட்டு
ஜாலம்செய்யாமலே சமயம்சிந்தைபட்டு
பாலைவனத்தினில் பரந்துவழிகெட்டு. (வரு

## இந்திரன் விருத்தம்.

வய்யமீரேழும்போற்றும் வள்ளலேசொல்லக்கேளாய்
துய்யநான்மறையுணர்ந்து துலக்கிடும்பராசரற்கு
செய்யமரப்புதல்வருநி சிறப்பினையடைக்கேரிக்கு
மெய்யனேவரும்வார்இப்போ விளம்புவேனறிகுவீரே.

(இந்தி-வ-ம்.) சுவாமி வருபவர்களுடைய விர்த்தாந்தத்தைத் தெரிவிக்கின்றேன் கேழ்க்கவேண்டும் சுவாமி.

(இ-வ-ம்) சுயம்பிரகாசா இவர்கள் பாலர்களாயிருந்த காலத்தில் விளையாடித்திரிகின்ற வேடிக்கையைப் [illegible] செவ்வனமுடையதாய புஷ்பங்கள் செழித்தலர்ந்திருக்கும் சரவணப்பொய்கையில் விழுந்து முதலைகளைப்போலே தனித்தனியே முழுகிக்கலக்கி வரும்போது ஜலங்கலங்கி கொதிப்பெடுத்து அலைகள்மீறிக் கரைகளில்மோதி நின்றதினால் அங்கிருந்த சலசரங்கள் பயத்தினால் துள்ளிகரையின்மீது விழுந்து துடிக்கின்றதை அவர்கள்பார்த்து வெளியாக்கி அம்மச்சங்களை எடுத்துக் கோவைப் புறங்களில் அணிபடக் கோர்த்துக்கொண்டு காங்கலிப்பற்றி உல்லாசமாக அந்தத்தோப்பினிடத்திலேவிரும்போது மந்திரவான்காலமான்றால் பராசரி ஷிகாலக்கடனைமுடித்தப்போது சரவணப்பொய்கைக்கருகில்வரும்போது ஜலங்கலங்கி வெளிகளிலிருக்கிறதையும் மச்சங்கள் வெய்யல் கடுமைபட்டு பதைத்துப்பதைத்து வாடுவதையும் தன் பிள்ளைகள் அவற்றைப்பற்றி திரிவதையும் கண்டமாத்திரத்தில் கோபித்து குலைவன்மையைக் கெடுக்கவந்த பிள்ளைகாள் நீங்கள் செய்ததுஷ்கிருத்தியங்களுக்குத் தக்கதாய் துள்ளித்திரிகின்றமீனுருக்களைப் பெற்றுவருந்தி யுழலக்கடவீரென்று சபிக்கப்பட்டிருந்து அந்தச்சரவணப்பொய்கையிலேயே இருக்க உமாதேவியாரால் சாபவிமோசனம் பெற்று பராசிவனால் திருப்பாற்குளத்தனால் தவஞ்செய்திருந்து வருகின்றார்கள் சுயம்பிரகாசா.

தத்தன்-அனந்தன்-நந்தி-சதுர்முகன் பருதி-பாலியர்வ்ஷி-விருத்தம்.

எதிர்படும்வீரரைக்கொன் றெழிற்கொடியேந்துமெங்கள்
கதிர்வடிவேலாயுதன் கழலடிக்கபயம்போற்றி.

(பருதி-தத்தன்-வ-ம்.) போற்றிபோற்றி பரஞ்சோதிக்கடலே போற்றி அபயமடைந்தோம் எங்கள் அஞ்ஞானங்களைப் போக்கி ஆதரிக்கவேண்டும் பரஞ்சோதிக்கடலே.

## குமாரதேவர் விருத்தம்.

அலைகடலோய்ந்திட்டாலும் அமரர்கள் மிந்திட்டாலும்
கலையாதிபொய்த்திட்டாலும் காத்திடுவேனேவாழி.

(குமாரதே-வ-ம்.) வாழி வாழி சதாவாழ்வீர்கள் ரிஷிபுத்திரர்களே நீங்கள் என்னுடன் கூடவருவீர்கள்.



(குமாரதே-வ-ம்.) தேவர்களே நாம் பாலிவனமுதலானமுதலான இடங்களைத்தாண்டி திருச்செந்தூரைதரிசித்து அந்தஸ்தலத்தைக்கடந்து சமுத்திரக்கரையில் விளங்கும் திருச்சேந்தியில் வந்து விஸ்வகர்ம்மாவினால் நிர்மித்ததலத்தில் காலம்போக்குவதில் பயனில்லை இனிநடக்கும் விபரம்தெரிவிக்கின்றேன் கவனிப்பீர்கள் தேவர்களே

## குமாரதேவர் விருத்தம்.

அன்னரும்சூரன் றன்னை அடுவதுமின்னமேனும்
தன்னரும்அவன்கருத்து நவின்மாவிடுதல்அன்றிப்
புன்னரும்சமர்க்கேயாதல் பாங்குடனறியமுன்னம்
என்னரும்தூதனுப்பல் இயாவரையுரைமின்இன்றே.

(குமாரதே-வ-ம்) தேவர்களே சூரபத்மனை நாசஞ்செய்ய நாளையதினமேபோக இருந்தபோதிலும் தருமசாஸ்திரத்தின்படி முன்பு தூதனையனுப்பி அவன் தேவர்களை சிறைவிடுவதும் விடுக்காததும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமானபடியால் யாரைதூதாக அனுப்புவது தேவர்களே.

## பிரமன்-விருத்தம்.

அல்லுருஅரக்கர்தங்கள் அரணுக்குள்ளதுசாதின்றே
செல்லாற்றிரலும்மீறில் இடமுடனெதிர்த்தன்றோரை
வெல்லாற்றிரலுமுள்ளான் வீரமாவாகுஅற்றல்
மல்லுருபுயத்தன்றேனை மதித்தனுத்துமாமின்றே.

(பிரம-வ-ம்) சுவாமி அசுரருக்குத் தெய்ப்பட்டிருந்து வாயுதிரும்பாமல் தீரத்துவமாய் நகரத்திற்குள்ளேபோய் அரசனைக் கண்டு தக்கவார்த்தைகளை பேசமுன்னிலையில் ஒருகாலமீறிப்பேசினால் சத்துருக்களைப் புறங்கண்டு வெற்றிகொண்டு திரும்பவல்லவர் புஜபலபராக்கிரமசாலியாகிய இளையபெருமாள் வீரவாகுதேவரன்றி இக்கூட்டத்தில் யாவரையும் நினைக்கப்படவில்லை அவரைத் தூண்டுவதே உத்தமமாயிருக்கின்றது சுவாமி.

(குமாரதே-வ-ம்) எ பிரமனே நீருரைத்த வீரவாகுவை தூது செல்ல யோக்கியமானவனாதலால் இதோ அவனையே அனுப்புகின்றேன் பிரமனே.

## குமாரதேவர் தரு

இ-ம்-அடாணா-தாளம்-ஏகம்.

பல்லவி.

சொன்னான்முருகனென்று சொல்வாய். புத்தி. (சொ)

அநுபல்லவி.

செந்திருமுகமுடை சுந்தரவீரவாகு
சோர்ந்திடதுட்டனை சேர்ந்திடும்சூரனுக்கு (சொ)

சரணம்.

கொண்டகெருவம்போக்கி கொல்லுமேறைவனையும்
மண்டலத்தரசர்கள் மகிழ்ந்துஅவனுடனே
தூண்டும்படையுடனே துணையாகசேர்ந்தாலும்
தாருமவன்சேனைகள். துடுக்குடன்வந்தாலும்
வளைந்தென்னையமர்செய்து வாட்டிடநேர்ந்தாலும்
வணங்கஎன்வேலாலே இணங்கப்புவிமேலே
அரியசிறையில்வைத்த அயிராவதன்மகனை
அடுத்ததேவரையும்மீட்டு விடுத்திடானுகில்
துண்டினைநுமவனை எண்டிசையும்புகழ
கண்டங்கண்டங்களாக துண்டமிடுவேனென்று (சொ)

(குமாரதே-வ-ம்.) தம்பி வீரவாகு சூரபத்மன் அரசாண்டுவ
ரும் வீரமாமயேந்திரஞ்சென்று அவன் சபைக்கிப்போய் கண்டு
இந்திரன் குமாரனாகிய சயந்தன் முதலியதேவர்களை வெகுகால
மாக அரியசிறைவைத்திருப்பது உன்னைத்தவனுக்கு தாகாதெ
ன்றுசொல்லுவாய் மறுத்தால் உன்வம்சமுற்றிலும் வேருடன்
நிமைப்போதில் நின்றுபின்னப்படக் கண்டித்து உன்னையும் வெற்
றிவேலாயுதத்திற் கிரைகொடுப்பதாக போருக்கு நாளையதினமே
குமாரதேவர் யுத்தத்திற்கு வரப்போகுறாரென்று தெரிவித்துவரு
வாய் வீரவாகு.

## வீரவாகுதேவர் விருத்தம்.

ஆங்காரங்கொண்டசூரன் அகத்தினிற்கொண்டஎண்ணம்
பாங்காகத்தெரிந்துவந்து பகருவேனன்றுபோற்றி.

(வீரவாகுதே-வ-ம்.) போற்றி போற்றி அண்ணாவீரமாமயே
ந்திரஞ்சென்று சூரனுடைய எண்ணமின்னதென்று விபரமாய்த்
தெரிந்தோடி வருகின்றேன் அண்ணா.



## இந்திரன் தரு.

இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ஏகம்.

பல்லவி.

இந்தவுதவியையுன் றைந்தனைத்துசெய்வாய்
வந்தனைகள்தந்தேனுந்தனுக்கே எந்தவிதமும் (இந்)

அநுபல்லவி.

அந்தசூரனாலே வந்துசிறையாலே
எந்தன்மகனும்நொந்தானதனாலே தேற்றுவாய்மேலே. (இந்)

சரணம்.

தேவருகந்த தேடிட்டமணிகள்
ஆவலாய்ப்பெற்ற அருமைப்புதல்வர்கள்
யாவரையும்காவல் அஞ்சாநிருதர்கள்
நிவரமாகவே நீங்குறவடைத்தார்கள் தெளியவேயவர்கள் (இந்)

(இந்-வ-ம்) சுவாமி வீரவாகுதேவரே நீர்பராக்கிரமசாலியா
கிய சூரபத்மன் பட்டணத்தைச்சேர்ந்தவுடன் அப்பதியின் கொ
டியகாவலிற் பட்டிருக்கின்ற என்குமாரன் சயந்தனையும் மற்றதே
வர்களையுங்கண்டு சிலதேறுதல்சொல்லித்தேற்றி தயிரியங்கொள்
ளும்படிசொல்லிவந்துஅடியேனுக்குத்தெரிவிக்கவேண்டும் சுவாமி.

(வீரவாகு-வ-ம்.) இந்திரா உன்கோரிக்கையின்படிக்கி அவர்க
ளைக்கண்டுபேசி வருவேன் மனக்கவலையற்றிருப்பாய் இந்திரா.

## வீரவாகுதேவர் தரு.

இ-ம்-சாவேரி-தாளம்-ஏகம்.

பல்லவி.

பாய்ந்தேன் கடலைத்தாண்டவே
பக்குவமாகவே தெக்குவிடமாட்டார்கள். (பாய்)

அநுபல்லவி.

ஓய்ந்திடவீரர்கள் ஒதுங்கிடமலைபட
வாய்த்தகந்தமாதன வரைமிதுஅச்சிகரனில். (பாய்)

சரணம்.

அருண்மைஅன்னைஎனித்த அத்தினப்படியெண்ணி
பெருமைப்படைக்காலம் போனமனதிலுன்னி
வருமையகலதேவர் வாழ்ந்திடமிகஎண்ணி
திரமையாய்யான்வெகு நீர்த்துயோசனைபண்ணி. (பா)

கந்தமாதனத்தினில் — கரடிபுலிசெந்நாய்கள்
நொந்துநிசாதிசை — நோக்கியோடநன்னாய்கள்
விந்தையதாகவே — விஸ்வரூபமெடுக்க
மந்திரகிரிதனை — மதித்துமேனான்மிதிக்க (பா)
சூழ்ந்திடும்நெடுங்கடல் — சோங்கிதத்தளித்திட
ஆழ்ந்திடும்திமிங்கிலம் — அதிர்ந்துமிதந்திட
வாழ்ந்திடுமசுரர்கள் — வரைகளிலொளித்திட
தாழ்ந்திட — மயேந்திரம்தாண்ட விழித்திட. (பா)

(வீரவாகு-வ-ம்.) அதோதெரிகின்றது லங்காபுரிபட்டணம் போலிருக்கின்றது அருகிற்சென்று என்னநடக்கின்றதோ அதை தெரிந்து முன்செல்வோம்.

## வீரசிங்கன் விருத்தம்.

ஆரடாபயலேநீதான் அரியாமலிங்குவந்தாய்
நேரடாவந்தவாரை நினைப்பிணமாக்குமுன்னே.

(வீரசிங்-வ-ம்.) ஆரடா அடாபயலே இத்தினவரையில் நாங்கள் காவல்கொண்டிருக்கும் இந்த இலங்கைக்கருகில் வந்தவர்களொருவருமில்லை அப்படியிருக்க சற்றும்பயமில்லாமல் தனித்து உயிரினிடத்திச்சையில்லாமல் வீண்பரிகொடுக்கவந்தவுன்னை கொல்லுவதன்முன்னம் வந்தகாரியத்தைத் துரிதமாய் சொல்லக்கடவாய் பயலே.

## வீரவாகுதேவர் விருத்தம்.

வீரமாமயேந்திரத்தில் வீரமாயரசாள்சூரன்
நேரிடக்கண்டுவார்த்தை நிகழ்த்திடவந்தேன்கண்டாய்.

(வீர-தே-வ-ம்.) ஏ வீரா யான் வீரமாமயேந்திரத்தை அரசாளும் சூரபத்மனிடத்தில் ராஜகாரியம் பேசிப்போக வந்தேன் சூரா.

## வீரசிங்கன் தரு.

இ-ம்-அடாணா-தாளம்-ஏகம்.

பல்லவி.

அடாஎன்னடா — அடக்கமில்லா தவார்த்தை
அதட்டிநீபோகுய் — அம்பெய்திட்டேன்பாரடா. (அ)

அநுபல்லவி.

படாதபாடுபட — பாரடாஅனைத்திரம்
அடாக்ஷிபோலபாணம் — வாங்கவிட்டேன்வீரம். (அ)



சரணம்.

சூரபத்மனுடைய — சுயதேசம்பார்த்திட
சுருக்காய்வந்தாயோ — இங்குசோதித்துமனம்பூத்திட
ஆரவாரசேனையை — அரிந்துபோகவந்தாயோ
அதியுல்லாசமாகவே — அனைத்தையும்தெரிந்தாயோ (அ)
அவுணர்காவல்களிங்கு — அணியாயிருப்பதை
அரியாமலிங்குவர — ஆருமோசொல்லடாஅதை
மவுனமாயிருந்தாலே — மன்னித்துவிடமாட்டேனே
மதிதலம்மதித்திட — மாயவானைப்போட்டேனே (அ)

## வீரவாகுதேவர் விருத்தம்.

என்றனைக்கொல்லஎண்ணி எழிற்படையோடுசூழ்ந்திங்கு
மின்றிகழ்வாளால்வீசும் வீரமாசிங்காவுன்றன்
வன்றிகழ்வீரத்தோடு மாப்படையாவுமான
வென்றிகொள்ளனதுவாளால் வீசுறேன்பாராயின்றே.

(வீர தே-வ-ம்.) அடாவீரசிங்கா, உனதுபடைகளைக் கொண்டுவந்து தூதாகவந்தவென்பேரில் அமோகமீகபாணங்களை செலுத்தி வளைத்து மழுதண்டம் வாள் தோமரம் முதலிய ஆயுதங்களை செலுத்தினவீரத்தை என்துவாளால் உனதுபடையையும் உன்னையும் வீசிப்போடுவேன் பாரடா.

## வீரவாகுதேவர் கண்ணி.

இ-ம்-காதனுமக்கிரியை-தாளம்-ஏகம்.

வாடப்படைகள்வாளினாலே — வகைவகையாய் — வீசுறேன்
ஓடும்பேரைகண்டாலே — ஓங்கியோங்கி — வெட்டுறேன்
பிடிக்கவந்தபேர்களைப் — பிணமலையாய் — குவிக்குறேன்
அடிக்கவந்தபேர்களை — அருந்தருத் — தெரிகுறேன்
வீரசிங்கனென்றபேரை — விரைவிலேதா — மாற்றுறேன்
வீரியம்பேசிவந்தோரை — வெட்டிவெட்டி — சாய்க்குறேன்

(வீரவாகு-வ-ம்.) இவ்விடத்தில்வந்த சேனையின்யாங்களை முற்றிலும் நோர்க்கச்செய்தோம் இனி அதோதெரிகின்ற லங்கையின் சிகரத்தில்பாய்வோம் அவ்விடம் என்னவிசேஷம் தெரிந்துகொள்வோம்.

## பொது விருத்தம்.

அலங்கல்சேர்வீரவாகு அரியகாவலரைக்கொன்று
இலங்கைமாநகரிற்சென்றும் இடைச்சிகரத்தில்பாய

நலங்கெடவாரிழ்ந்ததாலே கடுமப்பதிக்குவேந்தாம்
புலங்கொண்மாவீரப்போரால் போர்செயநேர்ந்தானன்றே

(போது-வ-ம்.) கேளுங்கள்கனவான்களே வீரவாகுதேவர் லங்கைக்கு வடபாரிசத்தில் காவல்கொண்டிருந்த ராக்ஷதர்களை சம்மாரஞ்செய்து இலங்கையில்தோன்றும் மூன்றுசிகரங்களின் மத்திசிகரத்தில் பாய்ந்ததனால் இலங்கைப்பட்டணம் பூமியிலழுந்தி சமுத்திரஜலப்பிரவாகம்கூடி ஜெனங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்போது பானுகோபன்புத்திரன் அதிவீரனென்பவன் வீரவாகுதேவர்மேல் யுத்தத்திற்குவருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

## அதிவீரன் விருத்தம்.

அந்நெடாதிசைவந்து அரிபவித்திமைசெய்தோன்
வந்தனமாலையம்மலை கருதிடித்தழியனுரும்
செஞ்சினமதினைப்பவென்னை திடத்திற்சென்றன்றேனை
தஞ்சமேயனவேசெய்தல் தருந்தேதாக்குமமாமே

(அதிவீ-வ-ம்.) ஆ ஆ என்ன ஆச்சரியம் இந்தலங்கைப்பட்டணம் முழுதும் இப்படிசெய்ததீரன் யாவனோதெரியவில்லை பிரம்மன் விஷ்ணு ருத்திரன் முதலானவர்களால் வந்ததல்ல யாவனோ புதிதாய்வந்திப்படிசெய்ததாகதெரிகிறது நாம்சேனைகளுடன்சென்று அவனையுத்தம்செய்து இன்னபடிச்செய்வதே கவலையாகும் சிந்திப்பதில் பயனில்லை சீக்கிரம்செல்வோம்.

## அதிவீரன் விருத்தம்.

மன்னுமாகாயத்தோங்கி வயங்கிடைச்சிகரத்தூற்றென்
பொன்னகர்பூமிக்குள்ளே பொருக்கறச்செய்தவாலே
நன்னெறியில்லாதடா நம்முனைப்படையோடின்னே
உன்னதாவியைப்போக்க உனக்கணைவிடுத்திட்டேனே.

(அதிவீ-வ-ம்.) அடாதுஷ்டா என்னுடையபட்டணத்தின் சிகரத்தின் மத்தியிலிருந்து பட்டணத்தை பூமியிலழுந்தும்படி செய்தவீரா உன்னுயிர்போக்க இதோபாணம்விட்டேன் பாரடா.

## வீரவாகுதேவர் விருத்தம்.

கடிதில்லென்னுயிரைப்போக்க கருதியேசேனையோடு
நெடியதோர்பாணம்விட்ட நேயமின்றோயென்றோர்



கொடியினி னுங்களாவி நங்கிடவிந்தவாளால்
சடுதியிலெறிகின்றேன்பார் தரணியின்கதிங்கிதானே.

(வீரவாகு-வ-ம்.) அடாபயலே நீவிட்டபாணங்களையும் உன்னுடைய சயின்யங்களையும் எனதுவாளினால்வெட்டி உன்னையும் கண்டதுண்டமாகத் துணித்துவிடுவேன் பாரடா.

(வீர-தே-வ-ம்.) இவடத்தில்வந்தவீரர்களையும்போக்கினோம் வேறொருவரையும் இவடத்தில் காணாததினால் இக்கிருப்பதில் யாதுபயன் வீரமாமயேந்திரம் செல்வோம்.

## பொது விருத்தம்.

அதிவீரன்தனையும்அன்னோன் அரியசேனையையும்வாளால்
மதிவீரவாகுவெட்டி மதியிலாச்சூரன்வாழும்
அதிவீரமாமயேந்திரம் துரிதமாய்செல்லஅன்றே
பதிவீரலங்கைமுன்னே பரிசினில்விளங்கிற்றம்மா.

(பொ-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களே பானுகோபன் புத்திரனையும் அவன்சேனைகளையும் வீரவாகுதேவர்வாளினால்கண்டித்து சூரபத்மன் வாசஸ்தலத்திற்கு அந்தரமார்க்கமாய் ஏகின மாத்திரத்தில் பூமியிலமிழ்ந்திருந்த லங்கைப்பட்டணமானது சரேலென மேலெழுந்து யதாப்பிரகாரம் நின்றதென்றறிவீர்கள் சபையோர்களே.

(வீர-தே-வ-ம்.) ஆ ஆ என்னபுதுமையா யிருக்கின்றது இந்த வீரமாமயேந்திரப்பட்டணம் நாற்புரத்திலும் அனேகம்கோடிராக்ஷதர்கள் காவலிருப்பதைப் பார்த்தால் நம்மை லேசில் உள்ளேவிடமாட்டார்கள்போ லிருக்கின்றது இவர்களிடத்தில்யுத்தம் செய்துபோவோமென்றால் நாம்வந்த அதிவிஷயமான காரியத்தைத் தெரிந்துபோவது கூடாமையாகும்போ லிருக்கின்றது ஆகையால் அந்தரமார்க்கமாகவே நாலுபுரத்தையும் சுற்றிப்பார்த்து யோசிப்போம் இதுவேநல்லயோசனை.

## கெஜமுகன் விருத்தம்.

அந்தணன்அரனும்மாலும் அதனுகொணுதைதுணுட்டில்
வந்தனிவான்கைக்கொண்டு வாட்டமில்லாமலேகும்
சிந்தனையானநீதான் தெரிந்திடாதொளித்துக்கொண்ட
இந்திரன்றனேஅல்லால் யாவனோவுந்தத்திடாயே.

(கெஜமு-வ-ம்,) ஆமடா அடாபயலே எவர்களும் வரப்போகாத இந்தப்பட்டணத்தில் அதிதீரங்கொண்டு கையில் வாளேந்தி சுற்றிவருகின்றவன் பிரம்மா விஷ்ணு ருத்திரன் என்று சொல்லப்பட்ட மூவரில்யார் அனுப்பவந்தாய் சரியுன்னிடு விழித்ததுபோல் தெரிகின்றது எனக்கு ஆயிரங்சிரசும் இரண்டாயிரம் கரங்களும் பார்த்த எவர்களுங்நடுங்கியிருக்க ஒளித்துத்திரிகின்ற இந்திரனுக்கு ஆதாரமாகவந்து இவடமிருக்கும் சங்கதியை தெரிந்துபோகவந்தாயோ தெரிவிப்பாயடா மூடா.

## வீரவாகுதேவர் விருத்தம்.

அஞ்சுதல்சற்றுமின்றி ஆரெனவுணர்வதின்றி
மிஞ்சியேவார்த்தைபேசும் வீணனேயின்றிம்மண்மேல்
அஞ்சுதல்விழைநியாகில் அட்டனேகடலில்வந்த
நஞ்சினும்கொடியனே நீ நனுகடாவருகிற்றுனே.

(வீர-தே-வ-ம்.) அடா பாதகா ஆயிரமுகத்தையும் இரண்டாயிரம் கரங்களையுமுடையவனென்று அகங்காரம்பேசவேண்டாம் உன் னுயிர் இன்றுடன் ஒழியக்காலம் நேர்ந்ததுபோ லிருக்கின்றது அருகில்வாடா துஷ்டா.

## கெஜமுகன் தரு.

இ-ம்-கேதாரம்-தாளம்-ஏகம்.

பல்லவி.

நீளமலையைஎரிந்தேன் நீமாளவேக. (நீள)

அநுபல்லவி.

காளைமுகத்தோனே வாளைகண்டித்திட இந்தவேளை. (நீள)

சரணம்.

எந்தன்சேனைகொந்துவாட உந்தன்வாளால்கீர்த்தாய்
முந்திவிசும்வாளைப்போக்க பந்திபந்தியாய்பருத்த (நீள)

## வீரவாகுதேவர் தரு.

இ-ம்-கேதாரம்-தாளம்-ஏகம்.

பல்லவி.

ஆனைமுகத்தோனேயுன்னோர் அறிந்தெரிவதைப்பார் (ஆ)

அநுபல்லவி.

சேனைபரவும்ஊனமாக்கி வாறுகைம்தானுப்புநேன். (ஆ)



சரணம்.

அய்யன்முருகையனாலே நோய்யும்படிசெய்குறேன்
வெய்யோன்முன்பனிநிக்கிறதுபோல் கொய்யுநேன்கோரக்கர்தலைகளை. ()

## கெஜமுகன் விருத்தம்.

புத்தியில்வீரவாகே பொருப்புன்பலகொண்டுந்தன்
கைத்திகழ்வாளைத்தாக்கி கண்டங்கள்செய்தனென்றன்
மெத்திகழ்வீரங்கண்டும் விலகிலையினிமேல்நீதான்
இத்திசைநின்றால்கொல்வேன் ஏகடாவுயிர்பிழைத்தே.

(கெஜமு-வ-ம்.) அடாவீரவாகு யான் அனேகமான பாணங்களைவாரி யுன்மீதிற்றுக்கி உனதாகரத்திலிருந்த வாளையும் பொடித்ததைப்பார்த்தும் ஏன் இன்னும் வீரம்பேசுகின்றாய் பேசாமல் ஓடிப்போய் பிழையடா வீரவாகு.

## வீரவாகுதேவர் விருத்தம்.

கயமுகாசூரனென்னும் கயவனேநீதான்சொல்லும்
நயமிலாமொழிதனக்கு நான்பயந்திடுவேனல்லேன்
வயமிலாமுனைவென்றாலும் மட்டிபேகிட்டியின்றே
சயிகோவுன்றன்மார்பில் தாக்கியேநீக்குவேனே.

(வீர-தே-வ-ம்.) அடா கஜமுகா உனக்கா யான்பயந்து ஓடுவது இதோபார் உன்மார்பில் உதைத்து பிராணனைபோக்கடிக்குறேன் மூடா.

(வீர-தே-வ-ம்.) இப்பொழுது நாம் சூரன்வாசம் செய்யுமிடத்திற்கு இத்தகையரூபத்தோடு சென்றால் ராக்ஷதபாதர்களிடத்தில் யுத்தம்செய்யும்படி நேர்ந்து காலதாமதமாய்விடும் அண்ணனுக்கு சேதியுரைப்பது கூடாமையாய் போய்விடுமாகையால் சிற்றுருவமைந்து பாய்ந்துசெல்வதே தகுதியாகும் அப்படியே செல்வோம்.

(வீர-தே-வ-ம்.) ஆ ஆ இந்த நகருடைய சிறப்பை எவர்களாலும் வர்ணிக்கத்தரமல்ல தேவருலகத்தையும் இதற்கொப்பாக சொல்லக்கூடாததா யிருக்கின்றதே ஆ ஆ என்ன ஆச்சரியமான பட்டணம் ஓ இதுயாருடைய அரண்மனைபார்ப்போம் சரி மந்திராலோசனைசெய்யும் தருமகோபன் அரண்மனைபோலிருக்கின்றது இவ்விடத்திலித்திரகுமாரனை சிறையிட்டிருப்பதாக இந்திரன் சொன்னபடி சிறையிட்டிருப்பதைப்பார்ப்போம்.

(சயந்-வ-ம்.) தேவர்களே யான் நித்திரை செய்துகொண்டிருந்தகாலத்தில் கண்டகனவின்பலனை தெரிவிக்கின்றேன் சந்தோஷப்படுவீர்கள் தேவர்களே.

## சயந்தன் அகவல்.

தேவர்காள்கேளீர் சிறப்புசிலாச்சிறையில்
ஆவலாய்நித்திரை அமர்தருகாலை
பன்னிருகரமும் பகர்முகமாறும்
மன்னியமுருகன் வந்தெதிர்தோன்றி
சொன்னவாசகந்தான் சோர்விலாதுரைப்பேன்
தன்னயமுடனே நனுகியேகேளும்
வலிமிகுமகாசர் வாதனையொழிப்போம்
மெலிவுறுதிக்கு வீற்றிருப்பீர்களாம்
என்றுரைத்ததனால் இம்மொழிமெய்யாம்
கன்றுதல்ஒழியும்காலநேர்ந்ததுவால்
இனிநமக்கொருகுறை இல்லையெனவே
மனமினிதுவந்து வாழ்குவோமினியே.

(சயந்-வ-ம்.) தேவர்களே இப்படிப்பட்ட கனவை யான்கண்டபடியினாலே இனிநமக்கு யாதொருகுறைவும் நேரிடாதுமனசஞ்சலமகன்றிருக்கலாம் தேவர்களே.

(தேவர்-வ-ம்.) மகத்தான சந்தோஷத்திற்குள்ளானோம்சயந்தமகாராஜனே.

(வீர-தே-வ-ம்.) அய்யா சயந்தமகாராஜனே நீயும் உன்னைச்சேர்ந்த தேவர்களும் யாதொருகவலைப்படவேண்டாம் இன்னுஞ்சிலதினத்தில் அந்தசூரனை குமாரதேவரால் சம்மாரம்செய்து உங்கள் சிறையைமீட்டுப்போவோம் பயப்படவேண்டாம் யான் அந்தசூரனிடத்தில்தான் தூதாகச்செல்கின்றேன் தேவர்களே.

(சயந்-வ-ம்.) சுவாமி சீக்கிரத்தில் அந்தபாதகனையொழித்து எங்களை மீட்கவேண்டும் சுவாமி.

(பொ-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களே மாலைப்பிரமனிமிரிடத்திலிருந்துவந்த வீரவாகுதேவர் சூரபத்மன் அரசுபுரிந்துகொண்டிருக்குஞ்சமயம் அவனைக்காணவந்த வீரவாகுதேவர் குமாரதேவரை நினைக்க பனிரண்டுகோடிசூரியர் பிரகாசிக்கத்தக்கதாக சிம்மாதனம் விண்ணுலகத்திலிருந்துவந்து சூரனுக்கெதிரில்



உன்னதஸ்தானத்தில் அந்தரமாய்நிற்க அதில் வீரவாகு தேவர் வீற்றிருந்ததைக் கண்டசூரன் அதட்டி அண்டமதிரக் கேட்கும் விதம் காண்பீர்கள் கனவான்களே.

(வீரவாகு-வ-ம்.) நாம் இவ்விடத்தில்வந்து நின்றுகொண்டிருப்பதாம் அழியப்போகும் சூரன் சிம்மாதனத்திலிருப்பதும் நலமல்ல நாம் குமாரதேவனைத்தியானித்து அவர்கட்டளைப்படி நடந்துகொள்வோம்.

## வீரவாகுதேவர் விருத்தம்.

அண்ணலேபோற்றிபோற்றி ஆறுமுகனேப்போற்றி
மன்னனிலேமயங்குகின்றேன் மகிழ்ந்திடஅருள்வாய்போற்றி

(வீரவாகு-வ-ம்) ஓ ஓ நமக்கெனவந்த சிம்மாதனத்தின் மீதேறி அமருவோம்.

## சூரபத்மன் தரு.

இராகம்-இந்துஸ்தான்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆரடாப்பயலே அறியாமல்வந்தவன்நீ (ஆ)

அநுபல்லவி.

ஆரடாபயலே அறியாமலின்று
பாரசிங்காதனம் பகட்டாயென்னிலும் மேலிட்டிருக்கிறாய் (ஆ)

சரணம்.

அஞ்சலில்லாமல் கெஞ்சிநில்லாமல்
மிஞ்சிவீரன்போலேபாய்ந்து தஞ்சம்சொல்லாமல்
நெஞ்சில்பயங்கொள்ளா நிருபனைப்போலே
சஞ்சலமில்லாமல் சார்ந்திருக்கிறாய் (ஆ)
நீண்டதேகமும் பூண்டுவாளையும்
ஆண்டவனையடிமைகொள்ள தாண்டினாய்நீயும்
வேண்டக்காலில்வீர கண்டையுடன்
தூண்டாதொழியாய் தொடர்ந்துவந்தநீ (ஆ)
வந்தவிதமென்னடா வருத்துக்சொல்லடா
இந்தசிங்காதனத்தைவிட்டு இறங்கில்லடா
எந்தனுக்குக்கோபம் எழும்புததிகம்
உந்தனைப்பிளந்து உயிரைவாட்டுவேன் (ஆ)

## சூரன் விருத்தம்.

அஞ்சாதலின்றி அண்டம் ஆயிரத்தெட்டும் ஆண்டு
தஞ்சமென்றெவரும்போற்ற தங்குமென் தவிசின் முன்னே
நெஞ்சமஞ்சாமலேஓர் நெடிந்தவிசிட்டிருக்கும்
வஞ்சகநீயாரிங்கு வந்ததையுரைத்திடாயே.

(சூரன்-வ-ம்) ஆரடா, அடாபயலே ஆயிரத்தெட்டண்டத்திற்கும் அதிபதியாயிருப்பவனென்றென்னை எண்ணாமல் எனது சிம்மாதனத்திற்கதிகமானவுயரத்தில் பிரகாசம்பொருந்தியசிம்மாதனத்தில் அமர்ந்திருப்பவனாரடா பயலே.

## வீரவாகுதேவர் கலிவிருத்தம்.

எந்தன்வீரத்தை என்னமுன்வாயினில்
வந்தபெல்லாம் வழங்குகின்றமூடனே
உந்தன்முன்னெனை ஒன்றுமின்றெனை
சிந்தைகொள்ளத் தெரிக்கின்றேன்கேளடா.

(வீரவாகு-வ-ம்.) அடாசூரா என்னுடைய பராக்ரமத்தைக் கொஞ்சமேனும்அறியாதன் முன்னமே நீயுன்வாயில்வந்தபடி உழருகின்றாய் நானின்னனென்பதை தெரிவிக்கின்றேன் கவனித்துக் கேளடா சூரா.

## வீரவாகுதேவர் தரு.

இ-ம்-அடாணா-தாளம்-ரூபகம்.

பல்லவி.

குமாரசாமிதூதனடா அடடாசூரா
கோரும்வீரவாகுநானடா அடடாசூரா (கு)

அநுபல்லவி.

சமானமெவருமில்லையென்று சாற்றுறாய்சேவந்தேனின்று (கு)

சரணம்.

அளித்தவாமுங்கனமுந்தனமும் அறியாமலேயழிக்கிறாய்
ஒளிர்தருமுந்தன் கோட்டைகொத்தளம் உயிருடனிருந்திழைக்கிறாய்
இளைத்தோர்போலவண்ணளியும் இருந்திடச்சிறைவைத்தாயமரரை
களிப்புற்றிடவேவிடும்படிக்கு கண்டுசொல்லவந்தேனிவ்வரை (கு)
கங்கைக்கரமறப்புண்டதை நீ சற்றுங்கேட்டதில்லையோ
பொங்கியேன்வழிகிறாய் பொல்லாதகாலமல்லவோ
அங்கமுள்ளஉன் தம்பிமுதலோர் சோர்ந்தழியவேவலத்தொட்ட
கங்கைமைந்தன் இங்குவந்தன் கருத்தைத்தெரிந்துவாவேவிட்ட ()



பிரமதேவர்களெல்லாரையும் பற்றுதளையனைத்துப்பின்னே
சரவணசந்தானிப்பமிசை சங்கடமடையமுன்னே
சேனைதருமெங்களய்யன் சேவடியில்வீழ்ந்தாஇன்னே
தேவரைவிட்டுப்பிழைப்பாயிப்போ செகிலைமெருஇனிப்பாய்
[சொல்லேன், (கு)

(வீர-தே-வ-ம்) அடா சூரா உனதுதம்பி தாருகாசூரனையும் இரவுஞ்சனையும் வாட்டின குமாரதேவர்க்குத் தூதாகவந்தவன் என்பேர் வீரவாகுதேவன் என்றுசொல்வார்கள் நீ தேவர்களை சிறைப்படுத்திருப்பதால் அவர்களை மீட்டுவிடும்படி கேட்கவைத்தேன் அப்படி விடாவிட்டால் உன்னைக்கொன்றுமீட்டுபோவதாய் தெரிவிக்கும்படி குமாரதேவர் சொன்னார் அவர்கள்யாதொருதீங் குமுனக்கு செய்யாதிருக்க சிறையடைத்தகாரணம்யாதடா சூரா.

## சூரன் விருத்தம்.

எங்கள்குலத்துதித்திருந்த முன்னோர்கட்கு
இடுக்கம்அன்னாள்செய்துவந்த தென்னாசேயித்
தங்கராருதேவர்களை சிறையில்வைத்து
துன்பம்இன்னாள்புரிகின்றேன் தூதாஅற்றால்
சங்கர்பாண்மனைநான் கமழும்வாயான்
சாற்றமொழிக்கருகலினே சத்வாரி
பொங்குதிசப்பாத்திரஉலகமெல்லாம்
பொருந்திடினும்விடுத்துப் போக்கிடேனே.

(சூரன்-வ-ம்.) அடா வீரவாகு அந்ததேவர்கள் எங்கள் முன்னோர்களுக்குசெய்தவந்தநிக்குகளையெல்லாம் அதுமுதல் எங்கள் பெரியோர்கள் செய்துவந்ததைப்போல யானும் சிறையடைத்திருக்கின்றேன் நீ எவ்விதமான பயங்காட்டினாலும் ஏழுசமுத்திரங்களும் ஒன்றோடொன்றுபொங்கி மேல்விழுந் தழிக்கவந்தபோதிலும் அந்த சிவகுமாரனாகிய சுப்பிரமண்யனுக்கா யான்பயந்து தேவர்களை விடுவேன் என்னவேண்டாம் போடாமூடா.

## வீரவாகுதேவர் விருத்தம்.

பால்குடிக்கும்பாலனென மதித்தச்சொல்லும்
பாதகனேயவர்பெருமை பகரக்கேளாய்
மான்பிடிக்கும்மனத்தாங்கி வெருவாமென்னி
மானாதேவனக்குமுன்னுள் வாழ்ந்தாய்ந்தார்

வேல்பிடிக்குங்கரத்தவரோ னைவரைக்கொன்று
விளையாட்டாளன்றோதே விலங்கன்றோர்தம்
கால்பிடித்துப்பணிக்குவரர் சிறையைநீக்கில்
கருதரியஇகபரமும் கதிக்குந்தானே.

(வீர-தே-வ-ம்.) அடாமூடா அகங்காரத்தினாலே குமாரதேவரைக் குழந்தையென்பதை விட்டுவிடு அவருடையபெருமைகளை சொல்லுகின்றேன்கேள் உலகில் சர்வஞ்சத்துவ சர்வகர்த்தத்துவ ஆதியந்தரகித பாவஸ்த்துவாயும் எவரெவர்கள் எப்படிவேண்டுகின்றார்களோ அவரவர்களுக்கு நானாவிதரூபமாகவும் நடித்துக்காட்டி சிருட்டி திதி சங்காரம் திரோவம் அநுக்கிரகம் என்று சொல்லப்பட்ட பஞ்சகிர்த்தியங்களையும் நடாத்திவருபவர்நீ தவஞ்செய்த காலத்தில் வந்தவண்ணமான பரம்பொருள் உனக்குவரந்தந்தவர் அவரே இப்பொழுது குழந்தைவடிவுகொண்டு வேலாயுதம் விளங்க துஷ்டநிக்கிரகஞ்செய்ய அவதரித்திருக்கின்றார் நீசெய்யுமீ துட்டகாரியங்களை விலக்கி அவரை சரணகதியடைந்தால் இப்போதிருக்கும் ஐஸ்வரியங்களுக் கதிகமான செல்வமும் சகலவித வைபவமும் உனக்குக்கிடைக்கும் அன்றேல் நீபெற்றவரங்களும் உனதுசெல்வங்களும் அரசாக்ஷிமுதலானயாவும் தொலைந்து அவருடைய வேலாயுதத்திற்கிரையாய்விடுவாயென்பதை அறிந்துகொள் மூடா.

## சூரன் விருத்தம்.

சக்கரவர்த்தியென்றென் றனைமதியாமலென்மேல்
அக்கிரமமானவார்த்தை அறைகின்றாய்தூதன்றென்னி
உக்கிரமமாகவுங்கொல்லாமல் உற்றனன்இனித்தாளிட்டே
நிக்கிரகமாகசீற்றம் நினைச்சிறைவைப்பிப்பேனே.

(சூர-வ-ம்.) அடாதுஷ்டா என்னை சக்கிரவர்த்தியென்று மதியாமல் இந்தசபையில் ஏதோ புன்வாயில் வந்தபடியெல்லாம் உளறுகின்றாய் எனக்கு இப்போதுவந்த கோபத்தைத் தணித்து தூதாகவந்த வுன்னைமதித்து கொல்லாமல்விட்டேனால் இப்பேர்ப்பட்ட விஷயங்களை ராஜாமுகத்தில் உரைக்கலானாய் இதோபார் உன்னைபாரவிலங்கடித்துச் சிறையிடுகின்றேன் துஷ்டா.

(வீர-தே-வ-ம்.) அடா சண்டாளா இன்னும் யான்சொல்வதைக்கேட்டுப் பிழையடா குடிகேடா.



## வீரவாகுதேவர் தரு.

இ-ம்-ஸாவேரி-ராகம்-ரூபகம்.

பல்லவி.

எத்தனைவிதம் எடுத்துரைத்தும்நீ
எண்ணாமல் விடுகிறாய். (எ)

அநுபல்லவி.

சித்தமறியாய்நீ சத்துருவைப்போலே
சத்துருவேநீயே சத்தினைதீபேசாயே. (எ)

சரணம்.

பாலனெனபரியாசமாய் சாலவிகழ்ந்துரைத்துத்துரும்பினுமிதமாய்
சீலத்துமுன்னவின்னமையானத்தேவலவானத்தாரவர்க்குமுசிதமாய்
விளங்கிடுமகரனைவாட்டி
வேலைப்பிடித்தவனின் சொன்னகையிடுதன்னைகாட்டி
கோலமெடுத்தவந்த ஒளிகட்டிடுவோனை
மூலகாரணமாக
காலமிந்துதாக்க ஞாலமீதில்வந்தவனை. (எ)

(சூர-வ-ம்.) அடாவீரர்களே தூதாகவந்த இவனை சொல்லைக் கூடாதென மதித்தால் இவனென்னை எதிர்த்து அதிகமாய் பேசுகின்றான் ஆதலால் இவனைப் பிடித்துக்கொண்டுபோய் பாதாளவிலங்கடித்து அரியசிறையிலடைத்து ஜாக்கிரதையாய் காத்துவருவீர்களடா வீரர்களே.

(வீரர்-வ-ம்.) அப்படியே செய்கின்றோம் மகாராஜனே.

## வீரர்கள் விருத்தம்.

அரசன்சொற்படிக்கேயுன்னை அரியதோர்காவல்வைக்க
சிரமுடனுடிவந்தோம் நீவரவிரங்கிவாடா:

(வீரர்-வ-ம்.) அடாபாதகா கொஞ்சமும் அஞ்சாமல் சபையில் வார்த்தையாடினவுன்னை விலங்கடித்து காவல் வைக்கும்படி ராஜன் ஆக்யாபித்திருக்கிறார் இம்மாதனத்தைவிட்டு இறங்கிவாடா பயலே.

## வீரவாகுதேவர் விருத்தம்.

பகைதனைக்காட்டவந்த பதகரேமடிக்கவுங்கள்
சிகைதனைப்பிடித்தடித்து சிந்திடேனுதிரம்பாரீர்.

(வீர-தே-வ-ம்.) அடாபாதகர்களே உங்கள் ராஜன்முன்னிலையிலே இருக்கும் சபாமண்டபத்தூணில் உங்கள் சிகையை

பிடித்து மோதியறைக்கு ரத்தவெள்ளமுண்டாக தலைவேறு கால் வேராய்மோதியடித்தேன் பாருங்களடா.

## வீரவாகுதேவர் விருத்தம்.

உத்தன்றுயிர்பிழைக்க உணர்வுடனோடியிங்கு
சுத்தனார்கருணை தன்னை சாற்றிடவுரைக்கவந்தால்
சித்தனைபண்ணுதொன்றும் சிறையிடவுரைக்கலானாய்
வத்தனமிடவேவேலும் வாட்டிடுமுண்மைதானே.

(வீர-தே-வ-ம்.) அடாபாவி என்னுகர்த்தன் கட்டளைப்படிக்கி நீபிழைக்கும்பொருட்டு நீதியாகிய வசனங்களைப் புகட்டினால் அங்கிகரியாமல் தூதர்களைவிட்டு விலங்கடித்து சிறையில்வைக்கும்படி திட்டம்செய்தவுன்னை எனதய்யனாகிய சுப்பிரமண்யர் கரத்திலிலங்கும் வெற்றிவேலாயுதமானது உன்னுயிர்தேகத்தைப்பிளந்து கொல்வது நிச்சயமே இனிசண்டாளனாகிய வுன்முகத்தை பார்க்கமாட்டேன் போய்வருகின்றேனடா துஷ்டா.

(பொ-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களேசூரனிடத்தில் வீரவாகுதேவர் சம்பாஷித்து வீரர்களை நாசம்செய்ய சிம்மாதனத்தைவிட்டு இறங்கினவுடன் அந்தரமார்க்கமாய் போய்விட்டதென்றறிவீர்கள் கனவான்களே.

## சூரபத்மன் விருத்தம்.

சண்டனைச்சதைத்துவாழும் சதகண்டாசொல்வேன்கேளாய்
துண்டனைப்போலேதூதன் துணித்திட்டான்வீரர்மாள
தண்டனைக்கூராதொன்றும் தவிர்த்திட்டேனவனைச்சேர்ந்து
கண்டனைசெய்யாதிப்போ கடிதினில்கொணருவாயே.

(சூர-வ-ம்.) அடா சதமுகா சண்முகனிடத்திலிருந்து தூதாகவந்தவன் நமது ஆயிரம்வீரரைக் கொன்றதல்லாமல் நம்சவுரியங்களையும் ஆக்கினைகளையும் இகழ்ந்துபேசினான் அவன் ராஜகாரியமாக தூதாய்வந்ததால் கொல்லாமல் போர்செய்து கர்வத்தையுமடக்கி கரங்களொடியும்படி இறுகிக் கட்டிக்கொண்டுவருவாய் சதமுகா.

(சதமு-வ-ம்.) அப்படியே கொண்டுவருகின்றேன் மகாராஜனே.



## சதமுகன் விருத்தம்.

நில்லடாபயலேநீதான் நிற்காமலோடுகின்றாய்
வல்லடாவழக்குபேசி வழங்கிடஇகழ்ச்சியாக
சொல்லடாநிரந்தரனேது சோதிக்கவந்தபாவி
கல்லடாமனமுனக்கு கண்டிக்ககணைவிட்டேனே.

(சதமு-வ-ம்.) ஆரடா அடா தூதாவந்த பயலே எங்களரசன் சபையில் அஞ்சாமல் ராஜகீர்த்திப் பிரதாபங்களை இகழ்ந்துபேசி வீரர்களையும் கொன்று ஓடிவந்தபயலே உன்னை நிமிஷப்போதில் நாசஞ்செய்குவேன் நில்லடா கள்ளனே.

## சதமுகன் தரு.

இ-ம்-கமாஸ்-தாளம்-ஏகம்.

பல்லவி.

ஓடாதேஓடாதேமூடா குடிகேடா நீ (ஓடாதே)

அநுபல்லவி.

நாடிவந்திங்கு நயமிலாமல்பேசி
வாடிட ஆயிரம் வீரரையும்வீசி. (ஓடா)

சரணம்.

கட்டிப்பிடித்திட கனத்தபாணம்தொட்டேன்
நெட்டியுனைத்தள்ள நேரிடவிட்டேன். (ஓ)
அங்குசம்வேலும் அஞ்சக்கொடிவாளையும்
பங்கம்செய்யவிட்டேன் பத்திநாலையும். (ஓ)
காத்திரமேனி கரைந்துசரிந்திட
கோத்துஅம்மையாய்தேன் குப்புரளிந்திட. (ஓ)

(வீர-தே-வ-ம்) அடாசதமுகா நீ நூறுசிரம் இருநூறுகரங்களுமுடையவனென்று ஆணவங்கொண்டனீது அமோகமான பாணங்களையும் மற்றுமுள்ள ஆயுதங்களையும் சேதித்தினவுன்வீரத்தை இதோமுதல்வாயிலிருக்கும் ஆயிரதங்கச்சிகரம் பொருந்திய கோபுரத்தை எடுத்து உன்சேனைகளையும் உன்னையும் மாளும்படிபோடுகேன் பாரடா சதமுகா.

## வீரவாகுதேவர் தரு.

இ-ம்-மோகனம்-தாளம்-ஏகம்.

பல்லவி.

இன்றுன்னையொழிப்பேனடா மன்றுடவந்தமுடா (இன்)

அநுபல்லவி.

என்றுமெந்தன்பேரிருக்க சென்றுனமனரைபார்க்க (இன்)

சரணம்.

கருத்துவந்தசேனையாவும் பருத்தவுன்னிளமுமோய
வருத்தம்செய்துவைபகத்தில் பொருத்தமில்லாபோர்களத்தில். ()
நகரிதுள்ளபகைவரெல்லாம் தகரச்செய்தேன் தரணிதன்னில்
பகரவுன்னையும்பாவியெனவே சிகரியைபோட்டேடவன்தலைமேல். ()

## வீரவாகுதேவர் விருத்தம்.

சதமுகாவுந்தன்சேனைச் சருவமும்துலைந்துமான
இதமிகும்கோபுரத்தை எடுத்தெறிந்தழித்ததல்லால்
அதமதுசெய்திவ்வுரை அழித்திட்டேனுன்னை மார்பில்
பதமதுகொண்டுதைத்துப் பதைத்திடக்கிழித்திட்டேனே.

(வீர-தே-வ-ம்.) அடாசதமுகா வுந்தன் சேனைகளையும் உன்னையும் அழியச்செய்தேன் பாரடா.

(பொ-வ-ம்.) கேளுங்கள், சபையோர்களே வீரவாகுதேவர் மயேந்திரபுரியின் கோட்டைமதில்கோபுர மாடமாளிகை முதலானவைகளையும் நூறுசிரமுடைய சதமுகனையும் சேனைகளையும்அழித்துவிட்டாரென்பதை அறிவீர்கள் சபையோர்களே.

## இராக்ஷதவரர் விருத்தம்.

அஞ்சாதவீரர்காங்கள் அன்பதுவெள்ளத்தோரும்
நெஞ்சாரவுந்தன்மேலே நீட்டினோம்பாணம்பாராய்.

(இராக்ஷ-வ-ம்) அடாவீரவாகு நாங்கள் அன்பதுவெள்ளம் சேனையும் உன்னைமடிக்கும்படி பாணம்விட்டோம் பாரடா.



## வீரவாகுதேவர் விருத்தம்.

சதமுகன்சேனையெல்லாம் தவிர்ந்திடச்செய்தாற்போலே
அதமதுசெய்வேனிப்போ அறிகுவீர்விரைவிற்றுனே.

(வீரவாகு-வ-ம்.) அடா அன்பதுவெள்ளம் சேனைகளே சதமுகனையும் அவன்படைகளையும் சன்னல்பின்னலாய் என்னையினால் மாண்டதைப்போல் உங்களையும் மடிக்கின்றேன் பாருங்களடா சேனைகளே.

## வீரவாகுதேவர் தரு.

இ-ம்-மோகனம்-தாளம்-ரூபகம்.

அன்பதுவெள்ளத்து சேனை
அழிந்திடச்செய்குவே னானே
துன்புறுங்கணைகளால் துண்டந்துண்ட மாக்க
பின்புறுதுவிட்டேன் பிழைத்திடாதினி போக்க. (அ)

## வீரர்கள் தரு.

பிழைத்திடவொட்டாமல் துஷ்டடா
பிணமாக்கிடவிட்டு நஷ்டடா
குழைத்திடபாணங்கள் கோடானகோடியாய்
அழித்திடவுன்மீது அனுப்பினோம்வேடையாய். (பி)

## வீரவாகுதேவர் தரு.

வேடையாய்விட்டதோர் பாணம்
விரைவிடக்கினேன் காணும்
நாடெல்லாம்புகழ்கந்த நம்பி யருளாலே
நமதுவகைமுங்களை நாடச்செய்தேன்மேலே. (வே)

(இராக்ஷத-வ-ம்) ஆயிரத்தெட் டண்டத்தையும் ஆளும் ராஜபரமேஸ்வரா சதகண்டன் அன்பதுவெள்ளம் சேனையாவரும் வீரவாகுதேவரால் மாண்டார்களய்யா ராஜபரமேஸ்வரா.

(சூர-வ-ம்.) அடா ஐநூறுசிரங்களும் ஆயிரங்கரங்களுடைய அதிரவர்களே நமதுபட்டணம் முழுமையும் நாசம்செய்துசென்ற வீரவாகுவிடம் விரைவில்போய் உங்கள் சதுரங்கசேனைகளுடன் அவனைவளைத்துக்கொண்டு தந்திரவுபாயங்களினாலாவது சண்டைகொடுத்து வென்றுவது அல்லது மாயையின் முயற்சியினாலாவது அவனுக்கு உயிர்ச்சேதம்வராமல் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு வாருங்களடா அதிரவர்களே.

(ஆயிர-வ-ம்) அப்படியே பிடித்துக்கொண்டு வருகின்றோம் மகாராஜனே.

## ஆயிரவர்கள் விருத்தம்

வீரமாமயேந்திரத்தின் மேன்மைகள்அழித்துச்செல்லும்
தீரமாவீரவாகே சிவசுப்பிரமண்யன்தூதே
கோரமாயாயிரத்தோர் கொண்டுபோய்சூரன்முன்னே
சோமாகாமலின்றே கிமிடத்தில்விடுவோம்பாராய்.

(ஆயிரவர்-வ-ம்.) அடாவீரவாகு எங்கள்வீரமா மயேந்திரத்தில்வந்து அவடத்துள்ள விஷயங்களை அறிந்துபோகும்தூதா உன்னைஜெயித்துக் கட்டிக்கொண்டுபோய் எங்கள் சூரன்முன் விடுகிறோம் பாரடா துஷ்டா.

## வீரவாகுதேவர் விருத்தம்.

தனித்தனிஐந்நூறு தலைகளொருக்கேகொண்ட
இனிப்பதும்ஆயிரத்தோர் எனப்பெயர்பெற்றதுட்டர்
சனிப்பயமுறுத்திசூர்முன் நன்னைவிடுவோமென்ற
பனிப்பதுநீங்கக்கொன்று பருந்துபேய்க்கிருவேனே.

(வீர-தே-வ-ம்.) அடா வீரர்களே நீங்கள் ஒவ்வொருவரும் ஐந்நூறு சிரங்களும் ஆயிரங்கரங்களும்கொண்டு ஆயிரவர்களென்று பெயர்கொண்டுவந்து பயமுறுத்தலைத்தலைத்து பருந்துபேய்களுக்கு இறைகொடுக்கின்றேன் பாருங்களடா ஆயிரவர்களே.

## வீரவாகுதேவர் தரு.

இ-ம்-காம்போதி-தாளம்-சாப்பு.

விட்டேன் கணைகளானவன்
வெற்றிபடைத்திட பற்றியென்கையினல்
சுற்றியேவரும்படி எற்றிசையுமய்யனுல். (விட்)

## ஆயிரவர் தரு.

பல்லபாணங்கள் தொடுத்தோம்
கலகலகலவென கண்டுபயந்தோட
உலைமெழ்காயுருக உன்றன்கலைவிட்டோட. (பல்ல)



## வீரவாகுதேவர் தரு.

பங்கம்செய்குறே னிதோபார்
உங்காரம்செய்யாத கங்காரந்தனைவிட்டு
உங்களுயிர்நீங்கவே சிங்கம்போல்சரத்தொட்டு. (பங்)

## ஆயிரவர்கள் தரு.

வேலாயுதங்கள் விடுத்தோம்
வீணனேபோர்புரிந்து வெழ்க்கியேகுலைந்திட
வீரும்குறைமும்விட்டோம் வேண்டியேயலைந்திட. (வே)

## வீரவாகுதேவர் தரு.

சூலம்வேலையும் பொடித்தேன்
சாரிசாரியாய்வந்து மேருகிரியைப்போலே
வாரிவாரிவுங்களை தூரிவிட்டுமண்மேலே. (சூலம்)

(இராக்ஷததூ-வ-ம்) இராஜபரமேஸ்வரா ஆயிரவர்களும்மாண்டார்களய்யா ராஜபரமேஸ்வரா.

(சூரன்-வ-ம்.) அடா ஐநூறுசிரம்படைத்த சகத்திரவாகு நீயுன்னுடையவெள்ளம் சேனைகளுடன் சென்று வீரவாகுவை கொல்லாமல் பிடித்துக்கொண்டு வருவாயடா சகத்திரவாகு.

(சகத்-வா-வ-ம்.) அப்படியே கொண்டுவருகின்றேன் அய்யாவே.

## சகத்திரவாகு விருத்தம்.

எம்மிடசேனையர்வும் இரிதரக்கொலைதான்செய்தே
வம்புகொள்துட்டவீர வாகுவேமனத்திறுள்ளே
நம்புமாமகிழ்ச்சிகொண்டாய் நாடிலாய்எங்கள்வீரம்
கம்மிலாதெங்களோடு கடுஞ்சமர்புரியவாடா.

(சகத்திரவா-வ-ம்.) அடா வீரவாகு எங்கள்வீரமும் வலியும் கொஞ்சமேனுமறியாமல் எங்கள்சேனைகளைக்கொன்று அகமகிழ்ந்தவுன்னைவென்று பிடித்துப் போகவந்தோம் சமர்செய்யவாடா வீரவாகு.

## வீரவாகுதேவர் விருத்தம்.

என்னிடவீரந்தன்னை என்னுறுவாயில்வந்த
பன்னியசகத்ரவாகு பய்யவேபகருன்வீரம்

தன்னென்டுபத்துநூறு தானெனும்வெள்ளமான
உன்னினால்இன்றேவரடா உறுசமர்விளைக்கத்தானே.

(வீர-தே-வ-ம்.) அடா சகத்திரவாகு என்னுடையவீரத்தைக்கொஞ்சமேனு மறியாமல் ஆயிரவெள்ளம்சேனைகளுடன் வந்திருக்கிறேமென்னும் கெர்வத்தினால் சமர்க்கழைத்தாய் மானுவதாயிருந்தால் போரிடுவோம் வாடா சகத்திரவாகு.

## சகத்திரவாகு தரு.

இ-ம்-புன்னாகவராளி-தாளம்-ரூபகம்.

சேரிநாயைப்போலே ஜெகமெங்கும்படவோசை
சேதப்படக்குலைக்குறாய் சீசி நாணுவெகுமலைக்குறாய்
வீரியவார்த்தைகள் விட்டுவிடு என்
வீணுயிர் தொலைக்கிறாய்

## வீரவாகுதேவர் தரு.

உயிர்தொலைக்கிறாயென்று உல்லங்கனமாயென்னை
உதட்டியாய்சொன்னவீரம் அடடாவுன்னைக்கொல்லவோநேரம்
வயிரவாளியைக்கொண்டு வாடவுன்சேனையை
மாக்குறேன் பூமிபாரம்

## சகத்திரவாகு தரு.

பூமிபாரமென்று புகழிழிவாகவே
பொருமிச்சொன்னாயே உயிர்போக்குறேன்பார்பேயே
தாமதமில்லாமல் தனுசில்சரந்தொட்டு
தாக்கினேன் ஒழிவாயே

## வீரவாகுதேவர் தரு.

ஒழியச்சொன்னவுந்தன் உள்ளங்கலங்கிட
ஓட்டினேன்பார்பாணம்வாட ஓகோவென்றெண்ணாதானம்
அழியவோடிவந்தின் காண்மைபேசினாயே
ஆ ஆ என்ன காணும்

(இரா-வ-ம்.) சகத்திரவாகு முதலியவர்களும் இறந்துவிட்டார்கள் இராஜகெம்பீர.

(வச்சிரவா-வ-ம்.) அண்ணா அந்த தூதனைப்பற்றி யாரும்பயப்படவேண்டாம் புகழ்ச்சியாய் பேசவும்வேண்டாம் இதோ யான்சென்று அவனைவமடக்கி கட்டிக்கொண்டு வருகின்றேன் அண்ணா.



(சூர-வ-ம்.) குமாரனே பிதாவின்குறிப்பறிந்து யுத்தத்திற்குப்போய் ஜெயம்செய்து வருகிறேனென்று சொன்னாலும் அதிகசந்தோஷித்தேன் ஆனால் அவனை சீக்கிரம் பிடித்துவர உன்னுடைய சேனைகள் அறுபதுவெள்ளத்துடன் செல்வாய்பாலா.

(வச்சிரவா-வ-ம்.) அப்படியேபோய்வருகின்றேன் தந்தையே

## வச்சிரவாகு விருத்தம்.

சகத்திரவாகைக்கொன்று சந்தோஷங்கொண்டவீரா
இத்தினியின்பதுன்பம் இனிமேலீயடையாவண்ணம்
அகத்திடவெள்ளம்சேனை ஆறுகோடியுமாய்வந்தேன்
சகித்திடாவருத்தம்செய்தான் சமர்த்தைநானறியத்தானே.

(வச்சிரவா-வ-ம்.) அடா வீரவாகு சகத்திரவாகுமுதலானவர்களைக்கொன்று அதிகசந்தோஷத்துடனிற்கின்றவுன்னை கண்டம்செய்ய வந்திருக்கின்றேன் அறிவாயடா வீரவாகு.

## வீரவாகுதேவர் விருத்தம்.

எண்ணுக்குளெண்ணைப்போல எங்கணும்நிறைந்தஎன்றன்
கண்ணுக்குண்மணியாய்வாழும் கந்தனின்னருளினாலே
மண்ணுக்குள்வரும்போற்ற வயங்குநின்சிரங்கள்பத்தும்
விண்ணுக்கப்பாற்போய்வீழ வெட்டியேவீசுவேனே.

(வீர-தே-வ-ம்.) அடா அற்பப்பயலே கந்தசுவாமியினுடைய அனுக்கிரகத்தினால் உனது சிரங்கள்பத்தும்சேனைகள்வெள்ளம் அறுபதும் விண்ணுலகத்திற் கப்பாற்போய் சேரும்படி வெட்டி வீசுறேன்பாரடா அற்பப்பயலே.

## வீரவாகுதேவர் தரு.

இ-ம்-வசந்தம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சின்னபின்னமாய்சிதைப்பேன் ஓசீ போடாபயலே. (சின்)

அநுபல்லவி.

சின்னபின்னங்களாக முன்னூள் சேனைகள்பட்ட
சின்னன்தெரிந்திருந்தும் என்னோடெதிர்த்தவுன்னை. (சின்)

சரணம்.

சத்திவந்தவுந்தனை சத்தியென்கைவாளினால்
சத்தியமாய்பூர்த்தே சுத்திமுழுதுங்காட்ட (சின்)

கண்டுபணியாதவுன் ரெண்டைக்கு சிரமிப்போ
விண்டுபூமியில்விழக் கண்டதுண்டமாய்வெட்டி (சின்)
கெட்டித்தனமுடனே நெட்டிவந்தப்படையை
மட்டில்லாபாணங்கொண்டு வெட்டிஎறிந்துவிழ.(சின்)

## வச்சிரவாகு தரு.

இ-ம்-கர்பார்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வந்தேனுந்தனை வாட்டிடவே வணங்களந்தனே. (வந்)

அநுபல்லவி.

சொந்தசேனைகளை சோக்கபாணத்தாலே
சிந்திடச்செய்தாய் சீரழித்ததாலே. (வந்)

சரணம்.

வெற்றிகொள்ளவே வேணசாம்விடுத்தேன் துள்ளுவே
எற்றிசையும்புகழ் எழிலாய்விளங்கிட
முற்றிலும்எந்தன்பேர் முனைவாய்துலங்கிட.(வந்)

## வீரவாகுதேவர் விருத்தம்.

ஒழுக்கமோசிறிதுமில்லா உனுத்தனே தீதுசெய்தே
வழக்குறுகொடியபாவி மதித்திலையாகிப்பொல்லா
சழக்குறுவச்சிரவாகே சமர்செயநேர்ந்ததாலே
மழுப்படைவீசினேன்பார் மன்னுயிர்போக்கத்தானே.

(இராக்ஷதது-வ-ம்.) வீரமாமயேந்திரத்தை பரிபாலனம்செய்யும் கர்த்தனே வீரவாகுதேவர் மழுப்படையால் வச்சிரவாகும் படைகளும் மாண்டார்களய்யா கர்த்தனே.

(பொ-வ-ம்.) சபையோர்களே வீரவாகுதேவர்வீரமாமயேந்திரத்தில் மாடமாளிகை கூடகோபுரம் அரண்மனையாவும் அழித்துதன்னிடம் வந்தவீரர்களையும் கொன்று இலங்கைக்குவந்து யாளிமுகனுடன் போர்புரியும்விதம் காண்பீர்கள் கனவான்களே

(ஆளிமுக-மந்-வ-ம்.) சுவாமி தாங்கள் வீரமாமயேந்திரஞ்சென்ற காலத்தில் உமது புத்திரனைக்கொன்றபாதகன் வருகின்றான் சுவாமி.

(ஆளிமு-வ-ம்.) மந்திரிவருகின்றானா இப்போதே அவனை மாளும்படி செய்கின்றேன் மந்திரி.



## ஆளிமுகன் விருத்தம்.

என்னகரிலங்கைமேவும் எழிற்கோத்திலேறி
மன்னுயிப்புவியிலுக்குள் மாய்வுறச்செய்ததன்றி
நன்னயமைந்தனோடு நவில்படைதனையுங்கொன்ற
உன்னையான்சிதைத்திப்போது ஓட்டுறேனமபுரத்தே.

(ஆளிமு-வ-ம்.) அடா அற்பப்பயலே என்னுடைய இலங்கா பட்டணத்தின் கோபுரத்தில் பாய்ந்து நின்றுபட்டணத்தை அழித்துவிடும்படிசெய்து என்புத்திரனையும் சேனைகளையும் கொன்று இப்பொழுதும்வந்து கோபுரத்தின்மீதிருந்து பட்டணத்தை அழிக்கும்படிசெய்தவுன்னை கண்டதுண்டமாய் வீசுறேன் வாடா.

## வீரவாகுதேவர் விருத்தம்.

ஆயிரம்சிரத்தைக்கொண்டு அதட்டியேயபமுறுத்தும்
மாயிரும்பாவிபுந்தன் வலியினைக்காண்பேனுனே
வாயினால்பேசலென்ன வல்லமையுண்டேல்நீதான்
காயிரும்போர்தானென்முன் கண்டிடவாடாஇன்றே.

(வீர-வ-ம்.) அடாவீரா ஆயிரம் சிரங்களும் இரண்டாயிரங்கரங்களுமுடையவனென்று வாயால்பேசுவதாலென்ன யுத்தத்திற்கு வாடா வீரா.

## ஆளிமுகன் தரு.

இ-ம்-அடாணா-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஏனோஎன்னுடனெதிர்த்துப்பேசுறாய் அடாவீரவாகு. (ஏ)

அநுபல்லவி.

மானங்கெட்டோடநீ மாளவே இன்றைக்கி
வானோர்களுக்காகவந்தாயே சண்டைக்கி. (ஏ)

சரணம்.

அடிக்குதே மனமுன்னைக்கண்டு அடாவீரவாகு
பொடிபடக்களைவிட்டேன் புவியில்நீ இடியவும்
அடியற்றமரம்போலே அங்கம்படியவும் (ஏ)
காளைப்போலக்கடிந்து இன்றுநீ அடாவீரவாகு
பூனைப்பூப்போலவே புயக்காற்றில்தூற்ற
வாளைக்கொண்டுன்னையான் வாட்டுவேனன்பார்மாற்ற (ஏ)

## வீரவாகுதேவர் தரு.

இ-ம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பாரடா ஆளிமுகா பந்திடச்செய்குறேன்- (பா)

அநுபல்லவி.

வீறிடவுந்தன்மேலே வேணசரங்கள்பூட்டி
சீறிச்சிதறிடத்திட்டிச் சிலைந்திதோவிட்டேன்பாட்டி (பா)

சரணம்.

ஆயிரம்வாயாலதட்டிப் பேசினாலும்
அந்தபூச்சிக்கெல்லா மஞ்சேனெருத்தாலும்
சாயும்பனைகுலைபோலே சாய்ப்பேன்தலைகளைமேலும்
சல்லடைகண்களாய்நூடலம் சலைதப்பேன்பாணத்தாலும். (பா)
ஆலம்விழுதைப்போல் அடைந்திருக்குங்கரம்
அரிந்தளறிகுறேன் அவனியிலுன்சிரம்
நாலுதிக்கிலும்சிதற காய்பேய்குடிக்கவுதிரம்
சுகரினிலெங்குமோட நாடுசெய்குறேனென்திரம். (பா)
சேனையானைகளுடன் சேயனினமுற்றும்
சேதித்ததிர்ந்தும் சீருரய்சேற்றும்
ஈனமானமில்லாமலிருக்குறாய் என்னகற்றும்
இன்னும்ஏந்தனுடனே எதிர்த்துப்பேசுறாய்மற்றும். (பா)

## வீரவாகுதேவர் விருத்தம்.

மனங்குலைதருவன்சொற்கள் வழங்கினைமதியாதென்முன்
கனங்குலைபடுவேதோராய் கதித்தெழுகோபத்தாலே
பனங்குலைவிசிறைப்போல் பற்பலயாயிரம்சிரத்தின்
இனங்குலைதரவேவெட்டி எழிற்கொடிபிடித்திட்டேனே.

(வீர-வ-ம்.) ஓ இவடத்தில் இனி எவர்களும் யுத்தத்திற்கு வருபவர்களைக்காணோம் நாம் துரிதமாய் நமது அண்ணனிடம் திருச்செந்திப் பதியைப்போய் சேருவோம்.

## வீரவாகுதேவர் தேவாரம்.

அன்னாலே அரசோங்கன் அற்புதவாழ்வே போற்றி
கன்னிலே புதிந்துவந்த கருணையங்கடலே போற்றி
மண்ணிலா குயிர்கட்கின்ப வாழ்பருள்பவனே போற்றி
நண்ணியே வந்தன்பாத நன்மலரடைந்தேன் போற்றி.



நாரண னயனும்போற்றும் நாதனேபோற்றி போற்றி
ஆரண முடியிலோங்கும் அய்யனே போற்றி போற்றி
காரணப் பொருளாய்வாழும் கடவுளே போற்றி போற்றி
சீரணியினதுபாதஞ் சேவித்தேன் போற்றி போற்றி.

## குமாரதேவர் விருத்தம்.

சூரர்கோன்சபையில்நீதான் சொன்னதைக்கேட்டுஅன்னான்
நேராய்சொன்னவாறை நீவாமுரைசெய்வாயே.

(குமாரதே-வ-ம்.) அப்பா வீரவாகு நீ சூரபத்மன் சபையை நேர்ந்ததிறகு நடந்த சரித்திரங்களை சவிஸ்த்தாரமாகத்தெரிவிப்பாய் வீரவாகு.

## வீரவாகுதேவர் விருத்தம்.

தேவரீருரைத்தவாறே செப்பிடக்கோபனுகித்
தேவரைவிடேனென்று தெரிவித்துப்போவென்றனே.

(வீரவா-வ-ம்.) சயஞ்சோதிவடிவமான அண்ணா தேவரீர் அருளிச்செய்தபடிக்கு சூரன்பிழைக்கு மார்க்கங்களை பற்பலவிதமாய் தெரிவித்தும் தேவர்கள் சிறைநீக்கேனென்று சொல்லிவிட்டான் அண்ணா.

(குமார-வ-ம்.) தம்பீ வீரவாகு நீ நடத்தினகாரியங்களில் ஒன்றொழியாமல் இச்சபையிலிருக்கின்ற சகலரும்கேட்டு சந்தோஷிக்கச் சொல்வாய் தம்பி.

(வீரவா-வ-ம்.) கர்த்தனே சூரபத்மன்வாசஞ்செய்யும் வீரமாமகேந்திரம் செல்லும்போது வழியில்மடக்கின இராக்ஷதர்களையும் சூரன்சபையில் இராக்ஷதர்களையும் கண்டித்து பட்டணத்திலுள்ள மாடமாளிகை கூடகோபுரம் முதலியவற்றை அழித்துத் திரும்பிவருங்கால் வந்தெதிர்த்த யாளிமுகாசூரன் சதகண்டன் வச்சிரவாகு ஆயிரவர் இன்னும் அனேக ராக்ஷதர்களையும் மடித்தனன்தேன் கர்த்தனே.

## குமாரதேவர் விருத்தம்.

வம்புசெய்சூரரோடு வாதுசெய்யினைப்புமாற்றி
தம்பிநீயெத்தநாளும் தயங்காமல்வாழ்கவாழ்க.

(வீரவா-வ-ம்.) சந்தோஷித்தேன் அண்ணா.

(குமார-வ-ம்.) தேவர்களே சூரபத்மனுக்குத் தூதுகொண்டுசொல்லியும் கேளாததினால் நாளையதினமேபோய் சம்மாரஞ்செய்ய இருக்கின்றேன் யாதுநினைக்கின்றீர்கள் தேவர்களே.

(தே-வ-ம்.) கர்த்தனே நாளையதினமே போவதுதான் நிச்சயம் அதற்கொன்றும் தடையில்லை கர்த்தனே.

(வீரவா-வ-ம்.) இந்திரா யான் உனது புத்திரனைக்கண்டு தேறுதல்சொல்லி வந்திருக்கின்றேன் அஞ்சவேண்டாம் இந்திரா.

(இந்-வ-ம்.) சந்தோஷித்தேன் பிரபு.

(இராக்ஷ-வ-ம்.) இராஜகெம்பீரா தேவரீர் புத்திரன் வீரவாகுடன் எதிர்த்து மாண்டதுடன் இலங்கைக்கதிபதியாகிய யாளிமுகாசூரனும் அப்படியே இறந்தார் இராஜகெம்பீரா.

## சூரபத்மன் கண்ணி.

இ-ம்-முகாரி-தாளம்-ரூபகம்.

என்னசெய்வேனடா எந்தன்மனமேங்குதே மகனே
முன்னாளில்செய்தபழி இன்னாளில்மூண்டதோ மகனே
வீரவாகுவின்கையிலே வீரசொர்க்கம்போனாயோ மகனே
பத்தாசிரத்தையும் பாதகனறுத்தானோ மகனே
இருபதுகையும்போய் வெறுங்கையாயிருந்தாயோ மகனே

## பதுமகோமளை கண்ணி.

இ-ம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்

எந்தன்கண்ணின்மணியே என்னைநீங்கவிட்டாயோ மகனே
உந்தனுள்ளமழிந்து உருகிடலானேன்.
எப்போதினிகாண்பேனடா எந்தன் மகனே மகனே
இப்பாரிலுந்தனைப்போல எவருங்காணேனே
என்னவிதிவந்ததோ முன்னவன் மகனே மகனே
என்வயிறெரியுதே நான் என்செய்வேனடா

(தரும-வ-ம்.) இராஜபரமேஸ்வரா நீர்பெற்றவரத்தைக் கொஞ்சமும் நினையாமல் துயரத்திலழுந்தி அழுதால் தேவப்பயல்கள் நம்மைக்கண்டு நகையார்களோ துயரத்தைவிடும் இனிநடக்கும் மார்க்கங்களை மந்திராலோசனை செய்வோம் இராஜபரமேஸ்வரா

(சூரன்-வ-ம்.) அடா தூதர்களே வீரவாகுவென்பவன் என்னிடம் பேசிப்போகும்போது அழித்தகட்டடங்களை நிறுபிக்கவேண்டியதற்காக பிரமனையான் அழைத்துவரச் சொன்னதாய் கொண்டுவருவீர்களடா தூதர்களே.



(தூதர்-வ-ம்.) அப்படியே அழைத்துவருகின்றோம் மஹாராஜனே.

(சபைத்தூ-வ-ம்.) அரசே புவனங்களைப் படைக்கும் பிரமன் இந்திரன் விஷ்ணுமுதலான தேவர்கள் பாலசுப்பிரமண்யனைச்சூழ்ந்து உம்மைமதியாமல் இருப்பதாக சிலரால் கேள்விப்பட்டோம் அரசே.

(சூரன்-வ-ம்.) தூதர்களே அவர்கள் கெர்வத்தை சீக்கிரத்தில் அடக்கின்றேன் நீங்கள் துரிதமாய் மற்றொரண்டத்திற்கோடி அவ்வண்டத்திலிருக்கின்ற பிரமனைப் பிடித்துக்கொண்டுவாருங்கள் தூதர்களே.

(தூ-வ-ம்.) அப்படியே பிடித்துவருகின்றோம்மஹாராஜனே.

(தூத-வ-ம்.) ஏ பிரமனே உன்னை சூரபத்மன் அழைத்துக்கொண்டுவரச்சொன்னார் ஓடிவா பிரமனே.

(பிர-வ-ம்.) இதோ வருகின்றேன் ராக்ஷததூதர்களே.

(பிர-வ-ம்.) போற்றி போற்றி மஹாராஜனே போற்றி.

## சூரபத்மன் விருத்தம்.

வன்மைசேர்தூதனாலே வளமெலாமழியப்பெற்று
புன்மைசேர்நிலமாய்த்தோன்றும் புகழ்பெறென்பதியைமுன்போ
நன்மைசேர்தரவேயெல்லா நலங்களும்வாய்க்கஇன்றே [ல்
தன்மைசேர்பிரமனேநீ சமைத்திடுவிரைவிற்றனே.

(சூர-வ-ம்.) பிரமனே அழகுகுலைந்து அழிந்து பின்னப்பட்டிருக்கின்ற இந்தப்பட்டணத்தைப் பழயபடிக்கு சகலசெல்வங்களும் பொருந்தி இருக்கும்படியாக அமைத்துவைப்பாய் பிரமனே

(பிர-வ-ம்.) அப்படியே அமைத்துவைக்கின்றேன் ஆண்டவா

## பிரமன் விருத்தம்.

அன்புறுமசேவந்தன் அழகுறும்யெந்திரத்தைத்
தென்புடன்முன்புபோலே சிருட்டித்தேனுரைத்தவாறே.

(பிர-வ-ம்.) அரசே முன்னிருந்ததற்கும் அதிகமான வளப்பமுள்ளதாய் உமது நகரைசிருட்டித்தேன் அரசே.

(சூர-வ-ம்.) சந்தோஷித்தேன் உன்னிருப்பிடம் செல்வாய் பிரமனே.

(பிர-வ-ம்.) இதோ செல்கின்றேன் அரசே.

(தூத-வ-ம்.) போற்றி போற்றி மகாராஜனேபோற்றி தேவரீர் கட்டளையின்படிக்கிவிரைவிற்சென்று எதிரிகளின் காரணகாரியங்களை தெரிந்துவந்ததாவது இலக்ஷோபலக்ஷம் வெள்ளம்பூதப்படைகளும் அவர்களுக்குத் தலைவர்களாய் சிங்கத்தைப்போன்றவலியும் சூரமுமுள்ள சூரர்கள் நூற்றெண்பரும் சொல்லுதற்கரிய புஜபலபராக்கிரமசாலிகளாகிய வீரத்தன்மைபொருந்திய தம்பிமார்கள் இலக்ஷத்தொன்பதின்மரும் பிரமன் இந்திரன் விஷ்ணுமுதலியதேவர்களும் சிவபிரான் குமாரர் பாலசுப்பிரமண்யரும் திருக்கயிலையிலிருந்து பூலோகம்வந்துவருமார்க்கத்தில்அகப்பட்ட உங்கள் தம்பி தாருகாசூரனையும் கிரவுஞ்சனையும், கொன்றுகடற்கரையில் விளங்கும் திருச்செந்தியில் வந்து ஒருதூதனையனுப்பிஉங்கள் கருத்தைத் தெரிந்துவந்து பிறகுவுங்களிடத்தில் யுத்தத்திற்குவரசித்தமாயிருக்கின்றார்கள் அரசே.

## சூரபத்மன் விருத்தம்.

தூதர்காள்விரைவிற்சென்று துலங்குமென்னினத்தாரோடு
மோதுபேர்த்தம்பிசிங்க முகனையுமழைத்துவாரீர்.

(சூர-வ-ம்.) அடா தூதர்களே நீங்கள்சென்று என்தம்பிசிங்கமுகா சூரனையும் திக்குதிகாந்திரங்களிலுள்ள எனது பந்துக்கள் யாவரையும் அழைத்தோடி வருவீர்களடா தூதர்களே.

(தூத-வ-ம்.) அப்படியே அழைத்தோடி வருகின்றோம் மகாராஜனே.

(தூத-வ-ம்.) போற்றி போற்றி சிங்கமுகாசூரனே போற்றி உங்கள் தமையனார் அழைத்துவரச்சொன்னார் அன்றியும் திக்குதிகாந்திரங்களிலுள்ள நம்மவர் அனைவரையும் அழைத்துவரச்சொன்னார் அவர்களையும் ஒன்றாய்க்கூட்டிசெல்லவேண்டும் பிரபு.

(சிங்கமு-வ-ம்.) அடா தூதர்களே அவர்களையும் போயழைத்தோடிவருவீர்களடா தூதர்களே.

(தூத-வ-ம்.) அப்படியே அழைத்தோடி வருகின்றோம் மகாராஜனே.

(தூத-வ-ம்.) இதோ அனைவரையும்அழைத்தோடிவந்தோம் மஹாராஜனே.



(சிங்-வ-ம்.) தூதர்களோ பந்துக்களே எனதண்ணனிடம் செல்வோம் வாருங்கள் தூதர்களே.

(தூத-வ-ம்.) அப்படியே வாரும் மஹாராஜனே.

## சிங்கமுகாசூரன் விருத்தம்.

அண்டமாயிரத்தெட்டாளும் அண்ணலேபோற்றிபோற்றி.
தொண்டனையழைத்ததேதெனத் துரிதமாயுரைப்பாய்போற்றி.

(சிங்-வ-ம்.) போற்றி போற்றி அண்ணா யாதுகாரியமாயழைத்தீர் தெரிவிக்கவேண்டும் அண்ணா.

(சூர-வ-ம்.) வாழி வாழி தம்பி என்பந்துஜனங்களே அனைவரும் அவரவர்களுக்கேற்ற இடங்களில் அமருவீர்கள் அழைத்ததை தெரிவிக்கின்றேன்.

## சூரபத்மன் தரு.

இ-ம்-பியாகடை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

| | |
|---|---|
| ஆலோசனைசொல்வீர் | அடைந்தவருத்தமின் |
| றுரைக்குறேன் | சபையோரே. (ஆ) |

அநுபல்லவி.

| | |
|---|---|
| வேலோன்விட்டதூதன் | வேகமாய்வந்திங்கு |
| காலன்போலழித்திட்டான் | கதிக்கும்வீரரைநன்கு (ஆ) |

சரணம்.

| | |
|---|---|
| சபதங்கூறியவன் | சபையையிகழ்ந்துபேசி |
| சமர்த்தனென்றுதள்ளித் | தாண்டினனென்னைஏசி |
| அபலனவனையும் | அரக்கர்சிறதோசி |
| அவர்களையும்தொட்டு | அருத்தான்வாளால்வீசி. (ஆ) |
| துதிபெருஞ்சதமுகன் | துலங்கும்வச்சிரவாகு |
| தூண்டும்அன்பதுவெள்ளம் | துஞ்சாசகத்திரவாகு |
| மதியாளிமுகன்முதல் | மடக்கிக்கொணரவெகு |
| மதிக்கப்போரிட்டார்கள் | மாய்த்தான்வீரவாகு (ஆ) |
| கிரவுஞ்சகிரியையும் | கிளர்தாருகனையும் |
| கிட்டிவந்துகந்தன் | கொட்டியடித்ததையும் |
| உரவின்முறையோரே | உரைத்தேன்யாவற்றையும் |
| உத்தமமெதுவோதான் | உரைத்தூராஜியத்தையும் (ஆ) |

(மந்-மே-மு-வ-ம்.) சுவாமி எப்பொழுது உமது தம்பியைக் கொன்ருனென்று கேள்விப்பட்டோமோ அந்தக்ஷணமேபோய் அவனை சம்மாரஞ்செய்யாமல் விட்டதினுல் இப்பேர்ப்பட்ட கெடுதிகள் நேர்ந்தது ஆனுல் வந்ததூதன் சாதாரண மானவனென்று எண்ணுவது அறிவாளிசளுக்கழகல்லதிரிமூர்த்திகளும் ஒருருவாய் வந்ததாகத் தெரிகின்றது இனி தாமதம் செய்யாமல் இப்போதே வீரர்களைவிட்டு சிவகுமாரனையும் மற்றவர்களையும் சின்னபின்னமடையும்படி செய்ய சேனைகளையும் இப்பொழுதே அநுப்பவேண்டும் சுவாமி.

(மந்-தார்-வ-ம்) பிரபு இவ்வாரவர்களை செய்யாவிட்டால் நம்மைக் கொல்ல வருவார்களென்பது உண்மையே ஆகையால் சீக்கிரம் சேனைகளை அநுப்பவேண்டும் பிரபு.

(மந்-தரு-கோ-வ-ம்.) அரசே இதுகளெல்லாம் வீண்காரியம் உமதுபுத்திரர்களாகிய எரிமுகன் இரண்யன்இவர்களிலொவர்களையாகிலும்சேனைத்தலைவராகில் ஜெயங்கொண்டுவருவார்கள் அரசே

(மந்-தண்-வ-ம்)இராஜ கெம்பீர சாமான்யமுள்ள அந்தசிவகுமாரனுக்காக இத்தகைய மந்திரா லோசனை எதுக்கு நமது சேனைத்தலைவரில் ஒருவனை அநுப்பினுல் அவர்களைக்கட்டிக்கொண்டுவந்து விடுகிறேன் இதற்காக வேரு யோசனை செய்யவேண்டாம் இராஜ கெம்பீரா.

(மந்-சிங்-வ-ம்.) இராஜபரமேஸ்வரா போருக்கஞ்சாத சுத்தவீரனுனவன் ஒருகாரியம் வந்து நேருமாயின் மந்திரி பிரதானிகள்சேனைத்தலைவர்களைவரவழைத்து மந்திராலோசனைசெய்தும் தந்திரவுபாயங்களை ஆராய்ந்தும் இவ்விதங்களில்காலதாமதம் செய்திருப்பனே தேவரீர் என்னைப்போரும்படி கட்டளை யிடுவீராகில் ஜெயம் பெற்றுவருவேன் அடியேன் காரியமும் வீரமும் வலியும் தோன்றவில்லையோ வீரனுக இருப்பவன் தன்சவுரியங்களை விரித்துப்பேசவொண்ணுதாகையால் அடங்கி இருந்தேன் வுத்திரவுதாரும் இராஜ பரமேஸ்வரா.

(பானு-வ ம்.) அண்ணு நானிருக்க வுங்களுக்கிவ்வளவு யோசனை ஏன்.



(எரிமு-வ-ம்அண்ணு) பானு கோபமும் இரண்யனும் யானும்ஏககாலத்தில்கோபித்தால் அந்தசாம்பசிவன் குமாரன் நீருய்விடமாட்டானே அப்படிக்கிருக்க இதுகளெல்லாம் என்னயோசனை அண்ணு.

(சிங்கமு-வ-ம்.) அண்ணு நமக்கு பரமசிவன் கொடுத்தவரம் முடிந்து விட்டது ஆதலால் யான் சொல்வதை கவனித்துக்கேழ்க்க வேண்டுமண்ணு.

## சிங்கமுகாசூரன் தரு.

இ-ம்-சஹானு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எந்தன்சொல்புத்தியைக்கேளண்ணு  ஏறுமெண்ணு (எந்)

அநுபல்லவி.

இந்தசபையோருரைத்த  விந்தையேஉளமாமய்யா
அந்தமந்தபுத்திகளை  வந்தனுசாமல்மெய்யா (எந்)

சரணம்.

சின்னஞ்சிறுவனென்றெண்ணுதே  கந்தசுவாமியை
இன்னும்பரியாசம் பண்ணுதே
முன்னுளில்நாம்செய்ததவ  முன்னிலையில்வந்துசிவ
கண்ணயத்தவடீசோனாய் இன்னுளிலும்வந்தார்கோராய்.(எந்)
அப்புளத்தாருகன்இறந்தான்கந்தர்வேலாலே
செப்புங்கிரவுஞ்சனும்பரந்தான்
அப்படிவாராமல்நாடி  தப்பவேணுமானலோடி
இப்படிதேவரைத்தேடி  ஒப்பிவிடுசிறையைக்கூடி. (எந்)
எண்டிசைதனிலுள்ளோர்போற்றும்  வேலாயுதம்
தொண்டர்தங்களைக்காப்பாற்றும்
அண்டபகிரண்டமெங்கும்  கண்டுதொழாமல்தங்கும்
அண்டர்யாவர்களையுமே  கண்டபிடுமுன்னையுமே.(எந்)

## சூரபத்மன் தரு.

இ-ம்-அடாணா-தாளம்-ஏகம்.

பல்லவி.

அடடாஎனக்காரீபுத்தி அந்தாதடாதுரைத்தாய்சந்தி. (அ)

அநுபல்லவி.

சுடவாதகாரியத்தை இடமாயுரைத்தாய்சொத்தை
சடையான்மகனுக்கஞ்சி அடியாய்சபையில்மிஞ்சி. (அ)

சரணம்.

தேவர்கள்மூவர்கள் ஆவலாயெனக்கஞ்சி
சேவித்திடுவதறியாயோ நான்
ஏவிடும்வேலைகள் தாவிசெய்துவருவ
தாவதனைக்குறித்தெரியாதோ என்னை
கேவலமாயெண்ணிநீ கொரிதுப்சதிரினில்
ஆவிதுடிக்குதடா அந்நிடாமலைதிரினில். (அ).
என்னோடெதிர்க்கவந்த மன்னுதிமன்னர்கள்
அன்னாளில் தெறித்தோடினார் பின்னை
இன்னிலமெங்கினும் உன்னிநிக்குவிஜயமே
பன்னாதிர்த்தவருண்டோ மேலும்
பொன்னுலகினில்ளோரைபொடித்துச்சிறையில்வைக்க
முன்னவன்பார்த்திருந்தேனே மூனைத்துவைராமல்சாக்க. (அ)
குழந்தைசிவனவன வழிதெரிந்துபோகிட
செழித்தென்னுடனெதிர்ப்பான் அவன்
அழுதபால்குடித்திட்டு புழுதிவிளையாடி
எழுதின்பவனே எதிர்ப்பான் நான்
அழியாவச்சிரகாயம் அடைந்தவனென்றெண்ணுதே
தொழுதிடச்சொன்னவுன்னை துணிப்பேனென்முன்நிற்காதே. (அ)

(சிங்-வ-ம்.) அண்ணா அடியேன் குமாரகடவுளைக்குறித்து உங்களுன்னையறிய சொன்ன தல்லால் வேறல்ல அவைகளைக்குற்றம் பாராட்டாமல் கிருபைசெய்து ரக்ஷிக்கவேண்டும் சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம் பெரியோர்பொறுப்பதுகடனே என்பதைப்போல் கோபந்தணிந்து யுத்தசந்நாகதைப்போக உத்திரவுதாரும் அண்ணா.

(சூர-வ-ம்.) தம்பி இப்போதல்லவோ சந்தோஷித்தேன் என்மனதிலிருந்த சங்கடம் யாவும் ஒழிந்து விட்டது நீயுன்பட்டணத்தில் போய் அரசுசெய்துக்கொண்டு சுகமாயிருக்கக்கடவாய் யானுன்னை வேண்டும்போது தருவிக்கின்றேன் தம்பி.



(சிங்-வ-ம்.) அப்படியேபோய் வருகின்றேன் அண்ணா.

(குமா-வ-ம்.) தேவர்களே பாதகனாகிய சூரபத்மனையொழிக்கவீரமாமயேந்திரம்செல்ல ரதம்கொண்டுவருவீர்கள் தேவர்களே.

(தேவ-வ-ம்.) இதோகொண்டுவருகின்றோம் சுயம்பிரகாசக்கடவுள்.

(வாயு-வ-ம்.) கர்த்தனே உங்களிஷ்டப்படி ரதம்கொண்டு வந்தேன் கிருபைநோக்கவேண்டும் கர்த்தனே.

(குமா-வ-ம்) தேவர்களே நீங்களனைவரும் அவரவர்களுக்குரியவாகனங்களிலேறி என்பின்பற்றி வருவீர்கள் யானும் மற்றவர்களும் ரதமேறி வருகின்றோம் தேவர்களே.

(தேவ-வ-ம்.) அப்படியே வருகின்றோம் ஞானப்பிரகாசா.

### மகாவிஷ்ணு விருத்தம்.

செல்லரும்பொருளோகம்முன் தோற்றுமப்பதியேமிக்க
மல்லுறுசூரன்வாழும் வைப்பதாம்அதற்குநேரே
செல்லுதலின்றிஇங்கே சிறந்தபாசறைதான்கட்டி
வெல்லவீற்றிருந்தாரும் வினையதையோசிப்போமே.

(மஹாவி-வ-ம்.) சுயஞ்சோதி வடிவாய்விளங்கும் ஐயனே அதோ எதிரிற்சொன்ன மயமாய்காணுகின்ற ராஜதானியானது நமக்குப்பகைவனாகிய சூரபத்மன் வாசமாயிருக்கப்பட்ட இடமானதால் அப்பட்டணத்தில் பாதகர்கள் வாசம்செய்வதாலும் நாம் விரோதித்துப்போவதாலும் அதற்கருகில் சேருவது தகுதியாகக் காணவில்லை இவ்விடமே நமது சேனைகளும் நாமுமிருப்பதற்கு விசாலமான இடமிருப்பதால் இவ்விடத்திற் பாசறையுண்டாக்கிக் கொண்டு அதில்வீற்றிருந்து மேல்நடக்கவேண்டிய காரியங்களை யோசிப்பது நன்மையாயிருக்கின்றது சுயஞ்சோதி வடிவே.

(குமா-வ-ம்.) அப்படியே செய்வோம் நீலமேகசாமளா.

### குமாரதேவர் விருத்தம்.

தேவகம்மியனேநாமும் தேவர்கள்யாரும்வாழ்க
தாவில்பாசறைதானிங்கு தடையிலாதியற்றுவாயே.

(குமா-வ-ம்) அடா தேவசிற்பி நாமும் தேவர்களும் மற்றவர்களுமிருக்கும்படியான விசாலமாகிய பாசறையை துரிதம் சிருட்டிக்கக் கடவை.

(தேவசி-வ-ம்.) அப்படியே சிருஷ்டிக்கின்றேன் கர்த்தனே.

## தேவசிற்பி விருத்தம்.

சுட்டளைப்படியேஇன்று கருதும்பாசறைதான்செய்து
இட்டமாஏமகூட மெனப்பெயரிட்டேன்போற்றி.

(தேவசி-வ-ம்.) சுவாமி தங்களாக்கினைப்படியே பாசறைசெய்துமுடித்துவிட்டேன் அதற்கு ஏமகூடமெனப் பெயருமிட்டிருக்கின்றேன் சுவாமி.

(குமா-வ-ம்.) தேவர்களே நமக்கென சிருஷ்டித்த ஏமகூட பாசறையில் அவரவர்களுக்கேற்ற இடங்களில் வீற்றிருப்பீர்களாளுமிருக்கின்றேன் தேவர்களே.

(தேவ-வ-ம்.) அப்படியே இருக்கின்றோம் கடவுளே.

## நாரதர் விருத்தம்.

அத்தனின்னருள்வரத்தால் அழியாமல்சூராவாழி
சத்துருக்களைஜெயித்து சாங்கமாய்வாழிவாழி.

(நார-வ-ம்.) இராஜாதிராஜ பரமேஸ்வரா ஆயிரத்தெட்டண்டங்களைவென்று ஒப்பற்ற ஆக்கினைச்சக்கரத்தை செலுத்தி அரசை நடாத்திவரும் சூரா தீர்க்காயிசுடன் சத்துருக்களை ஜெயித்துவாழக்கடவது இராஜாதிராஜ ராஜபரமேஸ்வரா.

## சூரபத்மன் விருத்தம்.

ஆய்யாநீர்தானிங்கு அடைந்ததெக்காரணத்தால்
பொய்யாதுரைக்கவேணும் பிரியமாய்தெரியத்தானே.

(சூர-வ-ம்.) ஏரிஷியே நீர்யார் உமதிடமெது இங்குவந்தகாரணமெதுவோ அதைசீக்கிரம் உரைப்பீர் ரிஷியே.

(நார-வ-ம்.) இராஜகெம்பீரா வடகயிலைச்சாரலிலிருந்து தேவரீர் வம்சபரம்பரையாக நீடித்துவாழ தவங்களைச்செய்துவருபவன் என்பேர் நாரதனென்று சொல்வார்கள் இப்போது ஒருகாரணத்தைக்குறித்து அவஸ்யம் அதைதேவரீருக்குத் தெரிவிக்கத் தீர்ப்பட்டேயும்தேன யாதெனில் குமாரதேவரென்பவர் தேவர்களுடன் தங்கள் நகரத்திற்குவடபாரிசத்தில்பாசறைகட்டி அதில் சயின்யங்களுடன் வீற்றிருக்கின்றனர் அவர்களை பட்டணத்திற்கருகாமையில் இருக்கவொட்டாமல் துரத்திவிடும்படி சொல்லவோடிவந்தேன் இராஜகெம்பீரா.



## சூரபத்மன் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

கந்தனிங்குவந்தானு எந்தவெல்லையில்சேர்ந்தானு (கந்)

அநுபல்லவி.

இந்தக்ஷணமேமனம் நொந்திடச்செய்குறேன். (கந்)

சரணம்.

நாரதரேஉமது கோரிக்கைமுடிக்கிறேன்
தாருகனைக்கொன்ற வீரத்தையடக்கிறேன்
சிறுக்குலையரேடப் பொடிக்கிறேன் (கந்)

(சூரன்-வ-ம்.) நாரதரே அந்த ஆண்டி மகன் கந்தன் இங்கு வந்திருக்கின்றானா என் தங்கையை காமமறுக்கச் செய்தும் தம்பி தாருகா சூரனையும் துணையாயிருந்த கிரவுஞ்சனையும் கொன்றோமென்கிற துபிரியத்தினால் என்னுடைய நகரில் வந்து பாசறை கட்டிக் கொண்டிருக்கின்றான் போலிருக்கின்றது அந்த சிவகுமாரனா என்னை ஜெயிப்பவன் பால பருவத்தில் வானத்தில் சஞ்சரித்து உலகை விளக்கும் சூரியனைப் பற்றி வந்து தொட்டிற் காலில் சேர்த்து கட்டி சிறை செய்த வீராதி வீரனாகிய என் புத்திரன் பானுகோப னென்பவனை யனுப்பி கொடிய போரை செய்வித்து கந்தனை வென்று அவனுக்குத் துணையாக வந்திருக்கின்ற பூதப்படைலக்ஷத்தவர் மற்றவர்களையும் கொல்வித்து அவனுடன் வந்திருக்கும் தேவப்பயல்களை சிறையிலடைக்கின்றேன் பாரும் நாரதரே.

(நார-வ-ம்.) இராஜ பரமேஸ்வரா நீர் நினைத்த காரியமே தரும் தரும் இனி காலதாமதம் செய்யாமல் ஜெயசாலிகளாகிய அவுணக் கூட்டத்தை யனுப்பி உமது பட்டணத்தைச் சூழ்ந்திருக்கின்ற கந்தனென்பவனைவாட்டி சவுக்கியத்தி லிருக்கும் பிரயத்தனங்களை தேட்கடவீர் உங்களுக்கு ஜெயமுண்டாகும் படிக்கி நான் தவம்செய்யச் செல்கின்றேன் இராஜபரமேஸ்வரா.

(சூர-வ-ம்.) அப்படியேபோய்தவம்செய்யும்நாரதமுனிவரே.

(நார-வ-ம்.) இனிசந்தேகமில்லாமல் இந்தசூரபத்மன் வம்சநாசமாய்போய்விடுவான் என்பதற்கு சந்தேகமே இல்லை.

## சூரபத்மன் விருத்தம்.

வெல்லுமுற்கோரரீயும் வெளமாய்வழிகடந்து
அல்லுறவருணன்தன்னை அழைத்தோடிவருகுவாயே.

(சூர-வ-ம்.) அடா உக்கோரா சமுத்திரராஜனை இந்த க்ஷணத்தில் பிடித்தோடி வருவாய்.

(கோர-வ-ம்.) அப்படியே பிடித்து வருகின்றேன் மஹாராஜனே.

(கோர-வ-ம்.) ஏ கடற்கரசே ஓடிவாரும் சூரன் அழைத்து வரச்சொன்னார் சீக்கிரம்வாரும்.

(வரு-வ-ம்.) சுவாமி யாதுகாரணமாய் அழைப்பித்தீர் தெரிவிக்கவேண்டும் சுவாமி.

சூரபத்மன் தரு.

இ-ம்-சுருட்டி-தாளம்-ஏகம்.

பல்லவி.

அடாவனக்குத்துரோகம் கிட்டத்தினுமேயமேகம் (அ)

அநுபல்லவி.

படைவிடனதேவாக்கன் பண்டையுடனிங்குவந்
திடங்கொடுத்தாயல்லவா வடபாரிசத்திதுபா. (அ)

சரணம்.

எப்படிக்கந்தாவர்கள் ஒப்பிக்கிடாமல்தங்க
இப்படிசெய்யக்காரணம் செப்புவாய்பாவையுமிங்கு. (அட)

(சூர-வ-ம்.) அடா வருணா கீனனது கட்டளைக்கடங்கி நடந்துவருவது வெகுசேர்த்தியாயிருக்கின்றது இவருமாரன் சயின்யங்களுடன் என்பேரில் எதிர்க்கவந்தால் அவனை இப்பட்டணத்திற்குவரும்படி எப்படி வழிவிட்டனுப்புகின்றாய் வருணா.

வருணன் விருத்தம்.

அய்யனே அபனுமானும் அரியதேவருஞ்செல்வேனும்
மெய்மையாய்வின்னின்மார்க்கம் மேவியிந்நுற்றூரந்தக்
கய்யராம்பூதர்மற்றோர் கருதுமென்முகமாய்வந்தார்
தய்யமீர்க்கணைக்கால்மட்டாய் தோன்றியதென்செய்வேனே.

(வரு-வ-ம்) இராஜாதிராஜனே தேவசேர்குழித்த பாலசுப்பிரமண்யர் மஹாவிஷ்ணு பிரமதேவர் இந்திரன் நவவீரர் லக்ஷத்தவர் இவர்கள் ககனமார்க்கமாய் வந்தார்கள் பூதசேனைகளும் சேனைத்தலைவர்களும் என்னுடைய கத்தான் சென்றார்கள் அவர்களுக்கு சமுத்திரம் கணைக்காலளவை இருந்தது அப்படியிருக்க யான் எப்படி தடைசெய்யவல்லேன் இராஜாதி ராஜனே.



(சூர-வ-ம்.) அப்படியா ஆனால் உன்னிருப்பிடம் செல்வாய் வருணா.

(இராக்ஷ-வ-ம்.) இராஜபரமேஸ்வரா நமது பட்டணத்தின் வடபாரிசத்தில் கந்தனென்பவன் தேவர்கள் லக்ஷத்தவர்கள் பூதப்படைகள் நவவீரர்களுடன் பாசறைகட்டி அதிலிருக்கின்றார்கள் தெரிவிக்கவந்தோம் இராஜபரமேஸ்வரா.

(சூரன்-வ-ம்.) அடா தூதர்களே காண்முன்னமே நாரதரிஷியால் கேள்விப்பட்டேன் பயப்படவேண்டாம் இதோ அவனை க்ஷணத்தில் கொல்விக்கின்றேன் பானுகோபனைப்போயழைத்துவாருங்களடா தூதர்களே.

(தூத-வ-ம்.) இதோ அழைத்தோடி வருகின்றோம் மஹாராஜனே.

(தூத-வ-ம்.) போற்றி போற்றி பானுகோப மஹாராஜனே போற்றி உங்களை பிதா அழைத்துவரச் சொன்னார் வாரும் மஹாராஜனே.

(பானு-வ-ம்.) இதோ வருகின்றேன் தூதர்களே.

பானுகோபன் விருத்தம்.

அப்பனேபோற்றிபோற்றி அனைத்தையுமாள்வோய்போற்றி
செப்புவாயென்னையழைத்த சேதியைபோற்றிபோற்றி.

(பானு-வ-ம்.) போற்றி போற்றி பிதாவே என்னையழைத்த காரணம் யாதோ தெரிவிக்கவேணும் பிதாவே.

சூரபத்மன் விருத்தம்.

பாலனேபானுகோபா பாசறைஇயற்றிக்கந்தன்
கோலமேகுலக்தேவர் குறைக்ளைத்தீர்க்கவென்னி
ஏலவேசமதுவூரில் இருக்கிறான்படைகளோடும்
சாலவேசமர்தான்செய்து ஜுதியில்ஜெயித்திடாயே.

(சூர-வ-ம்.) அடா குழந்தை சென்றினத்திற்குமுன்பு உன்னுடைய சிறியதகப்பனையும் கிரவுஞ்சனையும்கொன்ற கந்தனென்பவன் பூதப்படையுடன் நமதுபட்டணத்தின் வடபாரிசத்தில்வந்து பாசறைகட்டி இருப்பதால் சீக்கிரம் உனது சயின்யங்களுடன்சென்று கண்டித்து மனக்களிப்புடன் வரக்கடவாய் பாலா.

## பானுகோபன் விருத்தம்.

அப்பாநீருரைத்தவண்ணம் அரியகம்பகைவர் தம்மை
இப்போதேசென்றுவென்று எழிற்கொடிநாட்டுவேனே.

(பானு-வ-ம்.) பிதாவே நமது பகைவர்களைக்கொன்று ஜெயக்கொடிபிடித்துவர இப்பொழுதேபோய்வருகின்றேன்பிதாவே

## நாரதர் விருத்தம்.

மூவரோருருவேபோற்றி முதல்வனேபோற்றிபோற்றி
ஆவலிரயோடிவந்தேன் அறைவதைக்கேழ்ப்பீர்போற்றி.

(நார-வ-ம்.) போற்றி போற்றிகருணைக்கடலேபோற்றிதேவரீர் சவுரியவான்களாகிய சேனைகளுடன் இக்குமாரபுரத்தில் இருப்பதை ராக்ஷததூதர்கள் தெரிந்தோடி தேவாந்தகனாகிய சூரனுக்கறிக்கையிட்ட மாத்திரத்தில் அவன்கோபித்துத் தன்மூத்த பிள்ளையாகிய பானுகோபனென்பவனை யுத்தத்திற் கனுப்பியிருக்கின்றான் அவனோமகாபலசாலி எவர்களாலும் வெல்லத்திறமில்லாதவன் தாங்களேபோய் ஜெயிக்கவேணுமென்றுசொல்ல ஓடிவந்தேன்கருணைக்கடலே.

## குமாரதேவர் விருத்தம்.

தம்பிநாமிங்குவந்த தகைமையையறிந்துசூரன்
கம்பனைசெய்யச்சேனைக் கடிதினிற்சேர்த்ததாக
அம்பெருநாரதர்வந் தறிவித்ததாலேநீயுன்
வம்பிலாப்படையைக்கொண்டு வணங்கிடச்செய்துவாராய்.

(குமா-வ-ம்) தம்பி வீரவாகு நாம்பூதச்சேனையுடன் இவ்விடம் வந்திருக்குஞ்சேதி சூரபத்மன்தெரிந்து அளவற்றராக்ஷசேனைகளைக்கூட்டி நம்முடன் சண்டைசெய்யும்படிக்கு தன்குமாரன் பானுகோபனை செலுத்தியதாக நாரதர் தெரிவித்ததால் புஜபலபராக்ரமசாலிகளாகிய உனதுசகோதரர்களையும் லக்ஷத்தவர்களையும் ஆயிரம்வெள்ளம் பூதப்படைகளையும் கூட்டிப்போய் மயேந்திரபுரியை முற்றுகைபோட்டு கோட்டைமதில் உருப்புகள் கோபுரம்மாடமாளிகை முதலியவற்றை துகள்படவிடுத்து பானுகோபனையும் அவன் சயின்யங்களையும் கண்டித்துவருவாய் வீரவாகு.

## வீரவாகுதேவர் விருத்தம்.

எண்ணரும்பூதமாயும் எல்லாமாய்நிற்குமெந்தன்
வண்ணநேயாக்கர்மான வண்ணமாய்ஜெயித்துவாரேன்.



(வீரவா-வ-ம்.) அண்ணா அப்படியே இதோபோய் ஜெயித்துவருகின்றேன் அண்ணா.

(குமார-வ-ம்.) நாரதரே சர்ப்பபக்ஷிகள் கூட்டமாய் சேர்ந்திருக்குமிடத்தில் கிலசிங்கங்கள் எதிர்க்கவருமாயின் சாவதல்லது உயிருடன் ஜெயித்து மீளவல்லதோ சற்றுநோக்கிப் பார்க்கப் போகின்றீர் பாரும் நாரதரே.

## பூதர்கள் தரு.

இ-மீ-மோகனம்-தாளம்-ஏகம்.

பூண்டைசிதறடித்து ஓட்டுவோம் (மண்)
என்றுசைதனிலேயுள்ள இருக்குமரக்கர்வாடி
கண்டபயர்துஞ்ட கைக்களைகளாலேஜோடி. (மண்)

## இராக்ஷதர்கள் தரு.

விழிடக்களைகள் விட்டோமேவீதி
சோச்சேரப்பிடித்து வாரிவாரிப்பொடிக்க
கோரரூபம்விடுக்க சிறிரத்தம் வடிக்க.(வீரி)

## பூதர்கள் தரு.

சிதறச்சிதறத்தாக்கிப் பதறபதறத்தாக்கி
உதறக்ககனம்போக்கி கண்ணில்காணுமலாக்கி (மண்)

## இராக்ஷதர்கள் தரு.

காற்றின்முன்பஞ்சளைபோய் கீற்றுக்கீற்றாய்கெடுத்தே
தூற்றியுங்களைமாற்றி எற்றுவோமெமபுரத்தே.(வீரி)

## பானுகோபன் தரு.

இ-ம்-கேதாரம்-தாளம்-ரூபகம்

எடுத்தேன்வேலாயுதம் விடுத்தேனுங்களைக்கொல்ல
எட்டுத்திசைபொறுப்பும் கெட்டிவாநிதோனிடுத்தேன் இதோவிடு

## இலக்ஷத்தவர் தரு.

விட்டவேலாயுதம் திட்டெனவிழுந்திட
மட்டில்லாருலக்கள்மாட்டி வந்தன்மீது ஒட்டிடுவோம் இதோ
[ஓட்டிடுவோம்

### பானுகோபன் தரு.

ஓட்டினசூலங்கள் ஒடுங்கநீங்கள் நடுங்க
பூட்டிபாணமிதோபுகழ்பெறவேவிட்டுமோட்டினேன் இதேர்வாட்டி.
[னேன்.

(எண்-வ-ம்.) அடா பானுகோபா இலக்ஷம் வீரரை அடித்து த்துரத்திடுறேமென்கிற ஆங்காரத்தை யறிகுறோம் பாரடா பானு கோபா.

### எண்பர்கள் விருத்தம்.

வெண்ணிலாப்போன்றலக்ஷம்வீரரையடித்ததாலே
எண்ணிலாபாணம்விட்டோம் என்பெலாமொடியத்தானே.

(எண்-வ-ம்.) அடா பானுகோபா உன்னுடைய எலும்புகள் ஒடிய லக்குபார்த்து கணக்கில்லாத பாணங்கள்விட்டோம் பாரடா பானுகோபா.

### பானுகோபன் விருத்தம்.

சற்றேனுமஞ்சாதென்மேல் சரங்களைத்தொடுத்துவிட்ட
விற்றீரமறியபானும் விடுத்திட்டேன்பாணம்பாரீர்.

(பானு-வ-ம்.) அடா எண்பர்களே என்னுடைய சேனைகளை மடியச்செய்த வுங்கள்பூதப்படைகளை சின்னபின்னப் படச்செய்ததுபோல் உங்களையும் மாளும்படி பாணம்விட்டேன் பாருங்களடா எண்பர்களே.

### பானுகோபன் தரு.

இ-ம்-கேதாரம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

குத்திக்குமைக்குறேன் பாருங்கள்-அடா (குத்)

அநுபல்லவி.

எத்திசைபோனாலும் சுத்திப்பிடித்திப்போ. (குத்)

சரணம்.

அடிகள்முடிகள்பல கொடிகள்தடிகள்பொடி
பொடிகள்பட விசிறி(குத்)
எண்பர்களேநீங்கள் எடுத்ததேகமழிய
புண்படச்செய்து மான்(குத்)

(வீர-வ-ம்.) அடா பானுகோபா நீ பூதர்சேனைகளையும் இலக்ஷத்தவர்களையும் எண்பர்களையும் மடியச்செய்தோமென்று கெர்வங் கொள்ளாதே பயலே.



(பானு-வ-ம்.) அடாவீரவாகு நீயும்மாளவந்த தல்லாமல் வேறென்ன இருக்கின்றது எனது திராணியைக் கண்முனே கண்டும் ஜெயிப்போமென்கிற இருமாப்படைய வேண்டாம் நான்குழந்தைப் பருவத்திலேயே சூரியனை தளைசெய்தசேதி உனக்குத்தெரியாதோ தேவர்களுடைய விண்ணுலகத்தைக் கொளுத்தி இந்திரன்மகன் சயிந்தனையையும் வெள்ளையானையையும் தோர்க்கடித்து சயந்தனை சிறையடைத்ததுனக்குத் தெரியாதோ பிரமன் என்னை வேண்டி சூரியனை மீட்டுப்போவதற்காக அவனுடைய பிரம்மாஸ்திரமும் மற்றுமுள்ள ஆயுதங்களையும் பெற்றுக்கொண்டு விடுதலை செய்ததுனக்குத் தெரியாதோ விஷ்ணுவும் தேவர்களும் என்னைக் கண்டு நடுங்குவது உனக்குத்தெரிந்திருந்தும் உயிரிழக்க என் வந்தாய்போடா வீரவாகு.

### வீரவாகுதேவர் விருத்தம்.

வீரனையிருப்போனிந்த வீண்வார்த்தையாடுவானோ
போரினில்ஜெயமேகொண்டு புகழ்ந்திடச்செய்வதல்லால்
கோரமாய்நாய்போல்நின்று குலைப்பவருண்டோவுன்னை
வாரினுன்னறிகுறேன்பார் வல்லமையழியத்தானே.

(வீர-வ-ம்.) அடாபானுகோபா வீரனாயிருப்பவன் தன்னுடையசவுரியங்களை சொல்லிக்கொள்ளாமல்வந்த வீரனிடத்தில்ஜெயம்பெற்றால் நீ வீரனென்று எவர்களும் மெய்ச்சுவார்கள்வீணாயுளருவது வீரனுக்கழகோ பானுகோபா

### சூரபத்மன் தரு.

இ-ம்-பியாக்-தாளம்-ஏகம்.

பல்லவி.

வாட்டுறேனடா வாட்டுவன்னுயிர் (வாட்)

அநுபல்லவி.

மேட்டியாகப்பேசவேண்டாம் மேதினிநடுங்கத்தானே. (வாட்)

சரணம்.

சூலம்வாள்கொண்டு சோரந்தாவினேன்
காலனைப்போல்நின்றுதாவி கருத்தழியபனைமேனி. (வாட்)
அம்புமேலம்பு அணியணியாக
வம்புசெய்யவந்தவுன்னை வணங்கிடவேகோர்த்துமுன்னை. (வாட்)
அண்டமதிரவே அறைகுறேனடா
துண்டுதுண்டாய்கரமொடிய கட்டனைநீயும்மடிய. (வாட்)

## வீரவாகுதேவர் கண்ணி.

இ-ம்பைரவி-தாளம்-ரூபகம்.

கரிக்கூட்டம்பரிக்கூட்டம் காலெடவொட்டாமல் கால்மாடுதலைமாடாக
கதறிவிழும்படிகாட்டுறேனிப்போது கண்ணுக்குமுன்பாக
இறைக்கிவருகிறபேய்களெல்லா இப்போதுபிணக்குவிய
இருக்குறேனுனக்குறேனின்னும் பலபலகாளிகூளிகளிய
புண்பட்டதெல்லாம்போதாதென் றெண்ணியும் போருக்குவர [தாயே
பொவிழைக்குலைத்து பொங்கையுடைக்கவே போட்டேனம்மை [தாயே.

(வீர-வ-ம்.) அடா பானுகோபா உனது என்பது வெள்ளம் சேனைகளும் மாளும்படிச்செய்து உன்னையும் மூர்ச்சிக்கும்படி செய்ததைப் பார்த்தனையா.

(பொ-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களே பானுகோபன் சண்டையில்மாண்ட பூதங்களும் லக்ஷத்தவர்களும் எண்பர்களும் வீரவாகுதேவர் பாணத்தினால்மூர்ச்சித்தபானுகோபன்முன் உணர்வுண்டாய் யதாப்பிரகாரம் எழுந்துவிட்டார்கள் பானுகோபனும் மூர்ச்சைதெளிந்து மறுபடியும் யுத்தம் செய்கிறவிதம் காண்பீர்கள் சபையோர்களே.

## பானுகோபன் விருத்தம்.

முன்னாள்தேர்தன்ரதமுடைத்து மூர்ச்சிக்கச்செய்தலாலே
சினைந்தான்னைதனுசினாலே சிதறிடச்செய்தேன்காண்பாய்.

## வீரவாகுதேவர் விருத்தம்.

இரமதுகொண்டுபோரைச் செய்திட்டபானுகோபா
புறமுதுகாட்டியோடப் புரிக்கிட்டேன்பாணம்பாராய்.

(பொ-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களே பானுகோபனும் வீரவாகுதேவரும் போர்புரிந்து கடையில் பானுகோபன் சயின்யங்களெல்லா மிழந்து தன்னுடையரதமும் பாகனும் கைவில்லு மொடியக்கண்டு புறமுதுகாட்டியோட வீரவாகுதேவரும் அவர் படைகளும் கந்தசுவாமியிடம் பாசறையில்சேர ராக்ஷதகூதர்கள் சூரனிடம் பானுகோபன் ஓடினவிஷயத்தைத் தெரிவிக்கும் விதம் காண்பீர்கள் சபையோர்களே.



(தூத-வ-ம்-) இராஜகெம்பீரா உங்கள் குமாரன் பானுகோபன் வீரவாகுதேவருடன் போர்புரிந்து தன்னுடைய சயின்யங்களெல்லாம் தோர்த்து தானும் புறமுதுகாட்டி யோடிவந்து சேர்ந்தார் இராஜகெம்பீரா.

(சூர-வ-ம்.) ஆ ஆ நன்றாயிருக்கின்றது பிள்ளைகளையும் சுற்றத்தாரையும் எவர்களையும் நம்பக்கூடாது. முன்னமே நானே யுத்தத்திற்குப்போயிராமல் போய்விட்டேன் ஆயினும் நாளையதினம் நானே போய் அந்த ஆண்டிமகனை ஜெயித்து வருகிறேன் சேனைகளை சேர்த்து வாருங்கள் மந்திரிமார்களே.

(மந்திரிகள் வ-ம்.) அப்படியே சேர்க்கின்றோம் மஹாராஜனே.

(இந்-வ-ம்.) சுவாமி சூரபத்மன் சேனைகளுடன் யுத்தமின்று கனுக வருகின்றான் அவனை சாதாரணமானவனென்று மதிக்கக் கூடாது தாங்களே போய் ஜெயித்து வரவேண்டும் சுவாமி.

(குமா-வ-ம்.) அப்படியே செல்கின்றேன் பயப்படவேண்டாம் இந்திரா.

(குமா-வ-ம்.) ஏ வாயு எனது சயின்யங்களையும் ரதத்தையும் சீக்கிரம் கொண்டுவருவாய்.

(வாயு-வ-ம்.) அப்படியே கொண்டுவருகின்றேன் சுவாமி.

(வாயு-வ-ம்.) சுவாமி தங்களாக்கினைப்படி சைன்னியங்களையும் ரதமும் கொண்டுவந்தேன் ஆரோகணிக்கவேணும் சுவாமி.

## சூரபத்மன் தரு.

இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

எடுத்தேன்பாணத்தை விடுத்தேன் ஏவரும் வாட (எடு)

அநுபல்லவி.

அடுத்துளந்தன்மேலே கடுத்துப்பண்டியுட்னே
துடுக்காய்வந்தவுன்னிட நடக்கையறிந்திப்போது (எடு)

சரணம்.

வீரவாகுவேயுந்தன் விருதும் ரதமொடிய
தீரமுடனேவந்த சேனையாவும்மடிய
கோரம்யாவையும்பார்த்து கோபிக்காதேகொடிய
வீரத்தனமழியும் வீணாய் நீயுமிடிய.

அண்டமெலாமோடிப்பாய கடல்நீர்
அணைத்தும்தரையாய்வற்றிக்காய வரைகள்
எண்டிசையுள்ளதும்தீய புகையால்
ஏங்கிப்பரிதிப்பரிதெய எங்கும்
பொறிசிதற நார்சிதற.
அட்டமாசித்திகள் ஆடும்தேவர்பயப்பட்டு
கிட்டாதனலால் கட்டமடையமிகசுட்டு
யாரும்பதங்க கண்பிதங்க.
ஒருகணையாயிர மாயிரமாகவே
விருகுதுபாரிதோ வாடவெந்துவேகவே. (௭௫)

## வீரவாகுதேவர் விருத்தம்.

கொலையருமென்னுநெஞ்சன் கொண்டங்குவந்தசூரா
சிலையுறுபாணம்விட்டாய் சிதர்தாளங்கள்மேலே
நலிதரவுந்தனக்கும் நணுகியசேனைகட்கும்
வலிகுறைந்தோடிமாள மழுப்படைவிட்டேன்காண்பாய்.

(வீர-வ-ம்.) அடா சூரா என்னுடைய சயின்யங்களைத்தும் அதம்செய்து என்மீதும் அஞ்சாமல்பாணம்விட்டவுன்னைசின்னபின்னமாய் வதைத்துவிழும்படிக்குபாணங்களும் மழுவாயுதங்களும் விட்டேன்பாரடா சூரா.

## சூரபத்மன் விருத்தம்.

வேகமாய்வந்தவீர வாகுவேதள்ளிவீழும்
போகணுஞ்சிரத்தைவிட்டு மோதியேமயக்கினேனே.

## சூரபத்மன் விருத்தம்.

கர்தனேவுந்தன்சேனைக் கன்றுனேயழியக்கண்டும்
எந்தனைதிர்க்கவந்தாய் ஏதுமோஇங்குநிற்கா
தந்தனுடேகிவாழ்வாய் உயர்சிவபதிபிடத்தில்
விந்தையாய்வீற்றிருக்க விரைவினிலோடிப்போடா.

(சூர-வ-ம்.) அடா சிவகுமாரா உன்னைப்பார்த்தால் குழந்தையா யிருக்கின்றதே நீயா என்னிடத்தில் சண்டைசெய்யவந்தவன் நான்வச்சிரதேகம்பெற்று ஆயிரத்தெட்டண்டமுமாளும் ஆளுபவனென்று தெரியாமல் என் இங்குநிற்கின்றாய் உன்னுடன்வந்த சயின்யங்களெல்லாம் மாண்டதைப் பார்த்திருந்தும் ஏன் நீயும் மாளப்போகின்றாய் பேசாமல் ஓடிப்போய்மறை தாய்தந்தையர்



களிடத்தில் சொல்லாமல் தேவப்பயல்களுக்காகத் திருட்டுத்தனமாய் யுத்தத்திற்குவந்தவன்போ லிருக்கின்றது உன்தாய் பார்ப்பதி நீ இறந்ததைக் கேட்டால் அழுவாள் வேண்டாம் போய்விடு பாலா.

## குமாரதேவர் விருத்தம்.

வேலையுலகமெல்லாம் வேண்டியாள்வோனென்று
பாலனேஎன்றிகழ்ந்து பாதகாமதமேகொண்டு
காலகாலனைப்போய்சிறிக் ககனதேவாதியோரை
ஆலபோலாட்ஏவல் அடைந்ததைஅறிவேன்வாடா.

(குமா-வ-ம்.) அடா சூரா ஆயிரத்தெட்டண்டம்ஆண்டாலென்ன வச்சிரதேகம் பெற்றாலென்ன தேவர்களை ஏவல் கொண்டிருக்கின்றாயென்றும் ஆணவத்தை ஆலிவாய்க் கரும்பாக அடக்கின்றேன் வாடா சூரா.

## சூரபத்மன் தரு.

இ-ம்-மோகனம்-தாளம்-ரூபகம்

பல்லவி.

மாணிப்பயலேவுன்னைமாய்க்கவே பெருங்கணைகளைவிட்டேனிதோ (மா)

அநுபல்லவி.

எனிந்தப்பாலனுக்கு என்னிடத்தில்கீள
காணமலேவிட்டு கடுகிவந்தாய்மாள (மா)

சரணம்.

வெற்றியடையவே வீணாயிங்குவந்தாயே
மெத்தக்கூட்டத்துடன் மேவினாயேநாயே
சித்தங்கலக்கிச்சிதைத்துப் பொடிசெய்ய
எத்தனையம்புகள் எத்தினேன்பார்நய்ய (மா)
சரமாரிபொழிந்திட தனுசையேதொட்டேனே
சடலத்தினைத்திட சண்முகாவிட்டேனே
பாதவித்திங்கேநீ பாரில்விழும்படி
பறக்கப்பஞ்சதைப்போல பார்சிரமறும்படி (மா)
பாலனென்றெண்ணியான் பரிதாபம்பார்த்தனை
பாங்கோடச்சொன்னால் நீ பரியாசமாயென்னை
ஆலிவாய்க்கரும்பாக அழிப்பேனென்றாய்சாக
ஆணவமடக்கிட அம்புமேலம்பாக (மா)

## குமாரதேவர் தரு.

இ-ம்-பியாகடை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அடடாஎன்னடாசொன்னாய் மடத்தனமாய்சூரனே (அட)

அநுபல்லவி.

தடைபடாமலெனையே சரணடைந்தாலுனையே
தயவாய்விட்டிடுவேனே தப்பிடக்கடையனே (அட)

சரணம்.

ஒழிந்துபோவென்றுசொன்ன ஒய்யாரமேதடா
தேடிவந்தேனுனைகாய் தேங்காதேநில்லடா
வாட்டுவேன்கணையாலே வணங்கிநேரடா
வாடிவருந்தும்படி வஞ்சகாபாரடா (அட)
பார்த்தெவரும்சிரிக்கப் பரிந்தொருகணைவிட்டு
பறிக்குறேனுன்தலை பாரடாவெற்றிகெட்டு
வேர்த்தழியும்படிக்கி விண்ணோருறைக்காவலிட்டு
விரித்தோதுரைப்பத்தி வீராவென்னெதிர்பட்டு (அட)
எந்தனையிகழ்ந்தாயே எண்ணிமிகப்பாராமல்
மந்தபுத்தியினாலே மதியாமிகத்தேராமல்
வந்தவுன்சேனைகளை வகையாய்முற்றுங்காராமல்
உந்தனுக்குமுயிரிப்போ ஒழிந்திடஆராமல் (அட)

(குமார-வ-ம்,) அடா சூரா உன்னுடன் கூடவந்த ஆயிரங் கோடி சேனைவெள்ளமுமமாண்டுவிட்டது நீயும் நிராயுதபாணியாய் நின்றுவிட்டாய் உன்னுடைய தம்பி தாருகனையும் கிரவுஞ்சனையும் கொன்றவேலாயுதம்கரத்திலிருக்கின்றது வெகுகாலமாய் தேவரை வைத்திருக்கின்ற சிறையை இப்போதாகிலும் விட்டுவிட்டால் உன்னுடைய பிராணனை விடுவேன் அப்படி சம்மதப்படாவிட்டால் இப்போதே கண்டித்து தேவர்களை சிறையை மீட்ப்பேன் யாதுரைக்கின்றாய் சூரா.

(சூர-வ-ம்.) ஆ ஆ இந்த பாலனுடைய திராணியை பார்க்குமிடத்தில் இவனுக்கிணைஎவர்களையும் சொல்லப்படாதசவுரியத்தையுடையவனாயிருக்கின்றான் இவனிடத்தில் நாம் ஜெயிப்ப தரிதாயினும் சாமபேத தானதண்டமென்னும் சதுர்வித உபாயத்தில் எதிலாகிலும வெல்லலாம் சுக்கிராச்சாரியர் உபதேசித்திருக்கின்றமாயமந்திரத்தை உச்சரித்து அந்தரமார்க்கமாக நமதுநாட்டைச் சேர்ந்து இவ்விடமிழைந்த விரிடம் வாருவஸ்யம் புதுகிருதயாவும் அ



னிந்து மறுபடியும் திரண்டசேனையுடன் வந்து இந்த பாலனை ஜெயிப்போம் இதே தகுதியான யோசனை செல்வோம்.

(குமா-வ-ம்,) ஓ சயின்யங்களே என்னெதிரில் நின்று வாதாடினசூரன் மாயவித்தைசெய்து ஓடிப்போய்விட்டான் நாம் பாசறையை அடைவோம் வாருங்கள் சயின்யங்களே.

(சயின்-வ-ம்) அப்படியே வருகின்றோம் ஞானப்பிரகாசா.

(தூ-வ-ம்.) பானுகோபமகாராஜனே நீர் சண்டைசெய்து வந்த பிறகு உங்கள் தகப்பனார் போய்யுத்தம் செய்து இதிதுதோல்வியடைந்துவந்தார் மகாராஜனே.

(பானுகோ-வ-ம்.) அப்படியா தூதர்களே இதோயான்சென்று பிதாவை வணங்கி மறுபடியும் போய் கந்தனைஜெயித்து வருகின்றேன் தூதர்களே.

(தூத-வ-ம்.) அப்படியே செய்யவேண்டும் மகாராஜனே.

(பானுகோ-வ-ம்) போற்றி போற்றி தந்தையே நான் யுத்தத்திற்குப்போய் வந்த பிறகு தாங்கள் என் போலொத்தவர்களை அழைத்துப்போகாமல் தோல்வியடைந்ததாகக் கேள்விப்பட்டேன் ஆயினும் இந்தவிசை யான்சென்றுஜெயங்கொண்டு வருகின்றேன் உத்திரவு அளிக்க வேண்டும் தந்தையே.

(சூர-வ-ம்.) அடா கண்மணி பாலசுப்பிரமணியனை ஜெயிக்க யாவராலும் முடியாது நீயும் சேனைகளும் சென்று இவ்விடத்தில் தூதாக வந்த வீரவாகுவையும் அவன் சயின்யங்களையும் அதம்செய்து வருவாயடா கண்மணி.

(பானு-வ-ம்.) அப்படியே போய் வருகின்றேன் அண்ணா.

(பானு-வ-ம்.) ஓ மாயை ஓடிவரவேண்டும்.

(மாயை-வ-ம்.) ஏன் அழைத்தாய் பேரா.

(பானுகோ-வ-ம்.) பாட்டி யான்கந்தன்பேரில் யுத்தத்திற்குப்போகதகுந்த ஆயுதங்கள் உன்னிடத்தில் அடைய அழைத்தேன் பாட்டி.

(மாயை-வ-ம்-) அப்பா பேரா இந்தமோகனாஸ்திரத்தை விட்டால் சகலரும் மயங்கி விடுவார்கள் பிறகு அவர்களை ஜெயங்கொள்ளுவாய் பேரா போய் வருகின்றேன்.

(பானுகோ-வ-ம்.) அடா தூதர்களே நீங்கள் போய் இங்கு தூதாக வந்த வீரவாகுவை பானுகோபன் யுத்தத்திற் கழைத்து வரச் சொன்னானென்று சொல்லி வாருங்களடா தூதர்களே.

(தூத-வ-ம்.) அப்படியே சொல்லி வருகின்றோம் மகாராஜனே.

(தூத-வ-ம்.) ஐயா வீரவாகுதேவரே பானுகோபமகாராஜன் யுத்தத்திற் களைத்தோடி வரச்சொன்னார் வாருமய்யா வீரவாகு தேவரே.

(வீரவா-வ-ம்.) நேற்றியதினம் போரிலஞ்சி ஓடினவனு வந்திருக்கின்றான் இதோ வருகின்றேன் போய் சொல்லீர்களாடா தூதர்களே.

## வீரவாகுதேவர் விருத்தம்.

புறமுதுகாட்டிப்போன புகழிலாப்பானுகோபா
இரமிகும்பாணம்பூட்டித் தீக்குறச்செய்வதல்லால்
உரமதைக்கொண்டசேனை உயிரிழந்திடும்படிக்கி
சிரமதைத் துணிக்கிறேனுன் சிவனுமொடுக்கத்தானே.

(வீரவா-வ-ம்.) அடா யுத்தம் செய்யத் திறமையில்லாமல்புறமுதுகாட்டி யோடிப் போய் வந்த பானுகோபா உன்னையும் உனது சேனைகளையும் ஒடுங்கும்படி செய்கிறேன் பாரடா.

## பானுகோபன் விருத்தம்.

ஒடுங்கிடபாணம்விட்டு உயிரிழந்திடுவேனென்று
திடங்கொண்டுசொன்னதீய தீரமாவீரவாகே
விடங்கொண்டநாதனாலும் வென்றிடவொண்ணாதென்னை
அடங்கிடச்செய்யவுன்னா லாகுமோபோடமூடா.

(பானு-வ-ம்) அடா வீரவாகு ஜடாமண்டல தாரியாகிய சிவபிரானாலும் ஜெயிக்கமுடியாத என்னை நீயாஉயிரிழைத்து அடங்கச்செய்பவன் போடா மூடப்பயலே.

## வீரவாகுதேவர் தரு.

இ-ம்-மோகனம்-தாளம்-ஏகம

மூடனென்றிகழ்ந்துரைத்த மூர்க்காவாளால் வீசுறேன்
தேடிவந்தபேர்களையும் தென்புரமே யாகுறேன்.

## பானுகோபன் தரு.

தென்புரமனுப்பவந்த தீரவந்தன் வீரத்தை
அன்புறஅடையச்செய்து தூற்றுறேன்பார் கோரத்தை



## வீரவாகுதேவர் தரு.

கோரமாக்கிடுவேனென்ற கொடியனே மழியவே
கூரம்பைவிட்டேனே மார்பில்நேராய்பட்டொழியவே.

## பானுகோபன் தரு.

நேராய்பட்டொழியும்படி கூராய்விட்ட அம்பையும்
சேரவண்ணம்பாணம்விட்டேன் சிரழிக்க வும்மையும்.

## வீரவாகுதேவர் தரு.

சிரழிக்கவிட்டபாணம் சின்னமாய்ப் பழிக்கவே
வீரவாளால்வெட்டினேனே விண்ணவர் செழிக்கவே.

## பானுகோபன் விருத்தம்.

முத்தேவர்மகிழ்வெல்லாம் மோகனாஸ்திரத்தைவிட்டு
சத்தோதமெனும்சமுத்திரம் சுருக்குடன்கொண்டுசேர்க்கச்
சந்தானைனதுதிரானி சகலருமழிய இன்றே
எத்தாலுமசையாவண்ணம் இருத்திடச்செய்வேன்பாராய்.

(பானு-வ-ம்.) அடா வீரவாகு இப்பொழுதுவிடும் மோகனாஸ்திரம் உங்கள் அனைவரையும் சத்தோதக சமுத்திரத்திற் கொண்டுபோய் சேர்க்கின்றது பாரடா.

(பானு-வ-ம்.) ஒ இந்த இடத்தில் ஏவர்களையும் காணோம் நாம் நமது நகரம்செல்வோம்.

(நாரு-வ-ம்.) சுவாமி இத்தினம் சண்டையில் பானுகோபனானவன் கடும்போரைச்செய்து வீரவாகுதேவருக்குத் தோற்றவனாய் மேகத்தில் மறைந்து மோகனாஸ்திரத்தைவிட்டு கொண்டுசுத்தோதகசமுத்திரத்தில் போட்டுவிடும்படி செய்தான் சுவாமி.

## குமாரதேவர் விருத்தம்.

பயப்படவேண்டாமய்யா படைக்காசதனைவிட்டு
வியப்படக்கொண்டுவாரேன் வீரமாப்படையைத்தானே.

(குமா-வ-ம்.) வேலாயுதா நீ சத்தோதக சமுத்திரத்தைச் சேர்ந்து அவ்விடத்தில் காவல்கொண்டிருக்கின்ற மோகனாஸ்திரத்தை அதம்பண்ணி அங்கிருந்து படுத்திருக்கின்ற வீரவாகுதேவர் முதலானவர்களுடைய மயக்கத்தைத்தீர்த்து வேகமாய் இவ்விடத்திற் கொண்டுவந்து சேர்க்கக்கடவை வேலாயுதா.

(வே-வ-ம்) அப்படியே கொண்டுவருகின்றேன் சுவாமி.

(வரு-வ-ம்) சுவாமி வேலாயுதமே இந்த சுத்தோதக சமுத்திரத்தில் பானுகோபனுடைய மோகனாஸ்திரத்தால் வீரவாகுதேவர் முதலியபடைகள் மயங்கி இருக்கின்றனர் அந்தபாதகனை மறிக்க என்றால் தாமில்லாமல் நடுக்கங்கொண் டிருக்கின்றேன் சுவாமி.

(வே-வ-ம்.) அப்டா வருணா பயப்படவேண்டாம் இதோ அவர்களை எழுப்பிக்கொண்டு வருகின்றேன் வருணா.

(வே-வ-ம்.) வீரவாகுதேவரே லக்ஷத்தவர்களே எண்பர்களே பூதப்படைகளே உங்கள்மயக்கங்களைப் போக்கினேன் எழுந்துவாருங்கள் வீரவாகுதேவர் முதலானவர்களே.

## வீரவாகுதேவர் படைகள் விருத்தம்.

அன்னாளில்கிரவுஞ்சந்தன்னில் அடங்கிடக்காத்ததைப்போல்
இன்னாளிலும்வந்தெங்கள் இடுக்கத்தைத்தீர்த்தாய்போற்றி.

(வீர-வ-ம்.) போற்றி போற்றி வேலாயுதமே போற்றி முன்னொருநாள் கிரவுஞ்சமலையில் சொக்கியிருந்த எங்களைக்காப்பாற்றினதைப்போல் இத்தினமும் காப்பாற்றின வுமக்குநாங்கள் என்னகைம்மாறு செய்யப்போகின்றோம் படைக்கரசே.

(வே-வ-ம்) படைகளே எல்லாம் கந்தசுவாமியினுடையஅநுக்கிரகமல்லாமல் ஏனெனில் முடிவதொன்றுமில்லை வாருங்கள் அவருடைய திருவடியை சேவித்துக்கொள்வோம் படைகளே.

(படைவீர-வ-ம்.) அப்படியே வருகின்றோம் படைக்கரசே.

(படை-வ-ம்.) போற்றி போற்றி சுயஞ்சோதிக் கடவுளேபோற்றி நாங்கள் பானுகோபனால் பட்டபாட்டிற்கு எதிர்செய்யாமல் விடுவதில்லை இப்பொழுதேபோய் அவர்கள் ஊரைக்கொளுத்தி அதிலுள்ளவர்களையும் கண்டித்துவரப் போகின்றோம் தயைகூரவேண்டும் சுயஞ்சோதிக்கடவுளே.

(குமா-வ-ம்.) சயின்னியங்களே உங்களுக்கிஷ்டப்படிப் போய் செய்துவரக்கடவீர்கள் சயின்யங்களே.

(இரா-வ-ம்) இராஜ ராஜேஸ்வரா கந்தனுடைய படைகள் நமது ஊரிலுள்ள மாடமாளிகை கூடகோபுர முதலியவற்றை இடித்து கொளுத்துகின்றார்கள் ஆண்டவா.

(சூர-வ-ம்.) ஆ ஆ என்ன ஆச்சரியம் பானுகோபனால் கட



லில்போய் மாண்டவர்கள் எப்படிவந்தார்கள் அடாமந்திரிமார்களே யுத்தத்திற்குப் போகவேண்டும் சேனைகளைசேகரிப்பீர்களடா.

(இரணி-வ-ம்.) பிதாவே நீராகிலும் மற்ற எவர்களும் கந்தசுவாமியை ஜெயங்கொள்வது அரிது எனெனில் எவ்வுலகங்களிலும் சிருட்டி திதிசங்காரம் திரோபவ அநுக்கிரகமென்னும் பஞ்சகிர்த்தியங்களையும் நடத்திவரும்சிவபிரானே அப்படிப்பட்டவடிவாய் வந்திருக்கின்றார் உமக்கு இன்னும் சம்பத்துகள் வேண்டுமானால் சிறையிட்டிருக்கும் தேவர்களைவிடுத்தால் கொடுப்பார் விடாவிட்டால் நாமெல்லோரும் மாள்வது திண்ணமாகும்பிதாவே

## சூரபத்மன் விருத்தம்.

தரணியின்முதலோரெல்லாம் தாழ்ந்திடஎனக்குகந்தன்
சரணடைந்திடச்செய்யாமல் சமர்த்திலாதிங்கேவந்து
கரணங்களோய்ந்துநின்றாய் கனமுள்ளவீரனென்ற
இரணியாவுனதுபுத்தி இத்தினமறிந்தேன்போடா.

(சூர-வ-ம்.) அடா இரணியா நீ மூன்றுதலையை யடைந்து கேவலமான சிறுபயலே இவ்வளவுபுகழ்ச்சியாய் பேசின உன்புத்தியை அறிந்தேன் நீயா எனக்குப்புத்திரன் சீ அப்புறம்போ என் முன்னிற்க வேண்டாம் பயலே.

## இரணியன் விருத்தம்.

சேதித்தேனல்லாலும்மை சொன்னதைவேறொன்றெண்ணி
பேதிக்கவேண்டாமென்னைப் பெற்றவாபேறுபெற்று
சாதித்துக்கந்தன்சேனை சகலமுமழிக்கச்செல்ல
வாதிக்காதிப்போதேநீர் மகிழ்வுடன் அனுப்புவீரே.

(இர-வ-ம்.) அன்னா உங்களைசோதிக்கும்படி சொன்னதல்லவல்ல உங்களிஷ்டம்போல் யான் சென்று கந்தனையும் அவன்சேனைகளையும் கொன்று குலநாசம்செய்து வருகின்றேன் உத்திரவுதாரும் தந்தையே.

(சூர-வ-ம்.) அடா கண்மணி நீயல்லவோவீரன் போய்ஜெயித்துவருவாயடா கண்மணி.

(இர-வ-ம்.) அப்படியே போய்வருகின்றேன் அன்னாவே.

## இரணியன் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

வெல்லக்கணைவிட்டேனே நீவேண்டும்படி நாட்டனே. (வெ)

அநுபல்லவி.

வல்லரக்கர் ஜெயிக்க
வருந்திவாட வுன்னைபழிக்க
வந்தசேனை யாவுமழிக்க. (வெல்)

சரணம்.

எந்தன் தம்பிமார்களை
சிந்தினைவுந்தன் தோள்களை
வந்தநுக்கவே தாள்களை. (வெல்)

## வீரவாகுதேவர் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஏகம்.

விட்டகணையைதொட்டேன் வாளாலறுத்திட்டேன்
குட்டிக்கரணங்கள் கோடிநாம்போட்டாலும்
குடத்தில்இட்டவிளக்காய் கோரனேசெய்தாலுமே. (விட்)

வட்டவுலகில் வந்தெதிர்த் தரக்கனும்
கிட்டிவுன் தம்பிமார் கேடானதைத்தெரிந்தும்
மட்டிப்பயலே என்மேல் மாய்க்கவுன்னலேசிறி (விட்)
சட்டமுடனேமுட்டாளே பேசிவந்தாயே
சட்டிசுட்டதை விட்டதைப்போலே
மட்டில்லாசைவிட கெட்டித்தன்முடனே (விட்)

(இர-வ-ம்.) நாம் எவ்வளவு போர்புரிந்தாலும் இவர்களிடத் ஜெயிக்கப்போகிறதில்லை நமது அறுபதுவெள்ளம்மாண்டுவிட் இனிமாயமந்திரத்தை ஜெபித்து மீனுருக்கொண்டு சமுத்தி லிருந்து பிதாயிறந்தபிறகு வந்து கர்ம்மகாரியங்களை முடிப் ம் இனி இங்குநிற்கக் கூடாது செல்வோம்.

(தூதர்-வ-ம்.) அரசே வுங்கள்மகன் இரணியமகாராஜன் வீர தேவர் முதலியோரிடத்தில் போர்புரிந்து கடையில் சமுத்தி ல்போய் ஒளிந்துக்கொண்டனர் யாதுகாரணமோ தெரிய ு அரசே.



(சூர-வ-ம்.) ஆ ஆ அவனும் அப்படியா செய்துவிட்டான் என்மனம் கொதிக்கிறதே.

(அக்-மு-சூர-வ-ம்.) தந்தையே நானிருக்கும்போது எதற் காக வருத்தப்படவேண்டும் இப்போதே யான்சென்று சுப்பிரம ணியனை கண்டதுண்டமாய் வெட்டிவருகிறேன் உத்திரவுதாரும் பிதாவே.

(சூர-வ-ம்.) அடாமகனே நீயும் மற்றவர்களைப்போல மோ சம்செய்யாமல் ஜெயம்பெற போய்வருவாயடா கண்மணி.

(அக்-வ-ம்.) அப்படியே போய்வருகின்றேன் தந்தையே.

## அக்கினிமுகாசூரன் தரு.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஏகம்.

குட்டிமனிதனேகொன்றிப்போ துந்தனைகுறைகளைதீர்க்குறனே
அட்டகாசமாகஆணவங்கொண்டிங்கு அடைந்தபோர்வீரனே

## வீரவாகுதேவர் தரு.

ஆணவங்கொண்டேனென் றசுந்தைவார்த்தைகளாடி அதட்டிப்பே [சுகின்ற நாயே
நாணமடையவேகூரிதரபாணங்கள் நாட்டிவிட்டேன்பேயே.

## அக்கினிமுகாசூரன் தரு.

நாட்டிவிட்டபாணம்கட்டமடையவேநான்விட்டேனக்கினிபாணம்
வாட்டியுன்னைக்குத்தி வருந்திடச்செய்து வகைதப்பச்செய்யும்கா [ணும்

## வீரவாகுதேவர் தரு.

வகைதப்பச்செய்துவாட்டவிட்டபாணம் வலியிழைந்தொடிய
பகைவரெல்லாம்ஒழிந்தோட ஒருக்கணைவிட்டேன்மடைய

## அக்கினிமுகாசூரன் தரு.

பரிந்துவிட்டகணைபற்றுமலைந்தனைபாரிதோ முறிக்கதொட்டேன்
உரங்கொண்டவுன்னையும் உலகின்மெழுகாய் உருகிடக்கணைவிட் [டேன்

## வீரவாகுதேவர் தரு.

உருகக்கணைவிட்ட உன்னைவிழச்செய்துநான்குமவாளாலுயிர்போக்கி
பெருகரத்தவெள்ளம் பேய்கள்குடிக்க பிணமாக்கினேன்தாக்கி

(அக்-வ-ம்.) ஆ ஆ நமது நாற்பதுவெள்ளம் சேனையும்போய் நாமும் எழுந்திருக்கவொட்டாத அபஜெயத்தை அடைந்தோமல்லவா ஆயினும் இந்த வீரவாகுவை எந்தவிதத்திலும் ஜெயிக்கவேண்டும் இதற்கென்ன யோசனைசெய்வது சரிநாம் பாலபருவத்தில் காளிகோவிலுக்குப்போய் பூஜைபண்ணிக்கொண் டிருந்தகாலத்தில் காளிபிரசன்னமாய் வேண்டியதைக் கேளென்று கேட்டபோது எனக்கு எப்பொழுது போர்நேரிடுகிறதோ அப்பொழுது வந்து காக்கவேணுமென்று கேட்டப்படிக்கு உத்திரவளித்திருக்க இப்பொழுது காளியை நினைத்து வரவழைத்து இந்த அபஜெயத்தைசொல்லி வரம்பெற்று ஜெயிப்போம் இதுவேநல்லயோசனை

## அக்கினிமுகாசூரன் தரு.

இ-ம்-கல்யாணி-தாளம்-ஏகம்

பல்லவி.

சாம்பவிசங்கரிதாயே சமயங்காத்தருள்வாயே. (சாம்)

அநுபல்லவி.

பாம்பணிந்தபரவியே பாதவிக்காதெனையே. (சாம்)

சரணம்.

உன்னையேநம்பினேனம்மா உற்றதுணையாருமில்லை
அன்னைநீயேயல்லாமல் ஆதிருக்குறூர்கள்வல்ல(சாம்)
பாலனுன்கோவில்வலம் பரிந்துவரநீவரம்
சாலக்கேளென்றுசொன்ன சமயமிதுவேதிரம்(சாம்)
போரில்காப்பேனென்ற என்புனிதவதிமாகாளி
நேரில்வாஇப்போதே நின்னைவேண்டுறேன்மீளி(சாம்)
மானிடப்பயலாலெனை மாயாவன்ணமேசெய்து
மானமழியாமல்கார்மதிமிக அருள்பெய்து(சாம்)

## காளி தரு.

இ-ம்-வசந்தம்-தாளம்-ஏகம்.

பல்லவி.

நடனகாளிவந்தாள் நான்மறைகள்துதித்திட. (நட)

அநுபல்லவி.

நடுக்கங்கொள்ளப்போர்வீரர் படுக்கப்பிணமாய்நீர்
ஒடுக்கமில்லாதசூரர்க் கிடுக்கந்தரவேவோடி (நட)



சரணம்.

அந்தமுள்ளமுனிவர் அதிர்ந்துகிடுகிடென
மந்தகாசத்துடனே மகிழ்ந்துநடமிடென
தங்கச்சிலம்பொலியும் தரித்தமணியும்மின்ன
மங்களவாத்தியம் மணிகள்கலகலென்ன-தந்தனங்கள்மிக
பாட பூதக்கூட்டங்கள்
ஆட பகைவர்கண்டு
ஓட எதிர்ப்போரையே
ஜாட மகிழ்வுடனே
சிரித்து மயிரதை விரித்து இடையினில்
கறுத்த துயிலதை திருத்தி கரங்களில்-பெருக்க
எடுத்து ஆயுதம் பிடித்து
தடுத்த பகைவரை அடித்து
எக்காளபேரிகை எங்கு முழங்கிட
மைக்காலகாலனும் மனதுமயங்கிட (நட)

## காளி விருத்தம்.

பாதுகாத்திடவேவந்தேன் பயப்படவேண்டாம்பாலா
ஏதுதான்செய்தான்வீரன் எனக்கதை இயம்பிடாயே.

(காளி-வ-ம்.) ஏ பக்தனே பயப்படவேண்டாம் வந்த வீரன் (உன்னை ஏன்னசெய்தான்) (இப்படி எழுந்திராதிருக்கும்படி) தெரிவிப்பாய் பக்தனே.

(அக்-வ-ம்.) அம்மா எனது சேனைகளையெல்லாம் வீரவாகுவென்பவன் வாளால் வீசிக்கொன்று என்னையும் எழுந்திராதபடியடித்துத் தள்ளினான் தாயே.

(காளி-வ-ம்.) அப்பா அக்கினிமுகாசூரா உன்னை எழுந்திராதபடிசெய்த சத்துருக்களை அதம்பண்ணி மனவருத்தம் நீக்குகின்றேன் பயப்படவேண்டாம் இதோ யுத்தத்திற்குச் செல்கின்றேன் பாலா.

(அக்-வ-ம்.) அப்படியே போய்வருவாய் தாயே.

## காளி விருத்தம்.

தீரமாகாளியென்று திக்கெலாம்நடுங்கும்போது
கோரமாய்நின்றதன் கோதிலைபக்தன்தன்னை
வீரமாயடித்துவாட்டி வீழ்ந்திடச்செய்ததுட்ட
வீரவாகுவேயுன்வீரம் விரைவினிலழிப்பேன்வாடா.

(காளி-வ-ம்.) அடா வீரவாகு என்னுடைய பக்தனுகிய அக்கினிமுகாசூரனை கொஞ்சமுமஞ்சாமல் அடித்துத் தள்ளினதினுல் வாடயுத்தத்திற்கு.

## காளி கண்ணி.

இ-ம்-தன்யாசி-தாளம்-ஏகம்.

| | |
|---|---|
| அண்டபிண்டமதிரும்படி | ஆர்பரித்தவுன் |
| கொண்டகெருவம்போக்கி | யானும்கொல்லுறேன்பாராய் |
| வாரிவாரிபாணத்தாலே | வஞ்சமழிய |
| பாரினுன்னையழிக்குறேன்பார் | பழிக்குபழியாய் |
| எந்தபாணம்விட்டாலும் | நீஎதிர்த்து ஓட்டுறேய் |
| இந்தவாளாயுதத்தாலுனனை | இடியச்செய்குறேன் |
| மதிக்காதெதையும் | மழுங்கிடும்படிமாற்றிடும்வீரா |
| கதிக்காதுன்னைஎமலோகம் | காட்டுறேன்நீரா |
| கொடியவானையுடைத்து | யிங்கேகொக்கரிக்குறுய் |
| மடியச்செய்யவேல்மழுவும் | மாட்டிவிட்டேன்கார். |

(காளி-வ-ம்.) அடா வீரவாகு யான் எப்பேர்ப்பட்ட பாணம்விட்டபோதிலும் தடுத்து தப்பித்துக்கொள்ளுவதினுல் இதோ பார் இந்தவாளாயுதத்தால் வீசுறேன் துஷ்டா.

## வீரவாகுதேவர் விருத்தம்.

காளியேவுனதுஎட்டுக் கரங்களைப்பிடித்துமார்பில்
ஆளிபோலறைந்துதள்ளி அடங்கிடச்செய்தேன்பாராய்

(காளி-வ-ம்.) ஆ ஆ நாம் ஏன் இங்குவந்தோம் சுப்பிரமணியருடைய பரிபூரண கடாக்ஷத்தைப்பெற்ற மகாதுபாவனுடன் போர்செய்யவல்லேன் அவரைக்கோபம் தணியும்படி சாந்தப்படுத்தி விடைபெற்றுச் செல்வோம் ஐயா வீராதிவீரனே பாலபருவத்திலிருந்த அக்கினிமுகாசூரன் என்னை வேண்டி பூஜித்ததினுல் அவனுக்குக்கொடுத்த வரத்தைப்போலப் போருக்குவந்தேன் உம்முடைய சவுரியமறியாமல்வந்து மானமழிந்தேன் கிருபைகூர்ந்து விடைகொடுத்தால் என்னிருப்பிடம்போய் சேருவேன் நீர் அக்கினிமுகாசூரன் பூர்னுகோபன் இவர்களுடன் வரும் வீரர்களையும் ஜெயித்து இவைகளனைத்தையும் கைக்கண்டபலனுகக் கடையில் காண்பீர் உத்திரவுதாரும் வீராதி வீரரே.

(வீர-வ-ம்.) அப்படியே உனது ஆலயத்தையடைவாய்காளி.



## அக்கினிமுகாசூரன் விருத்தம்.

எந்தனுக்குதவியாக எதிர்த்தகாளியைஜெயித்த
மந்தனேமகிழவேண்டாம் மன்னுயிரையேகொல்ல
குந்தத்தையெறிவர்கம் கூறுகூறாய்ப்பிளந்து
அந்தாம்காட்டயானும் அகமகிழ்ந்திடவிட்டேனே.

(அக்-வ-ம்.) அடா வீரவாகு எனக்குத் துணையாய்வந்த காளியை ஜெயித்தோமென்றும் கெர்வம் கொள்ளவேண்டாம் உன்னுடைய அங்கத்தைக் கூறுகூறாய்ப் பிளந்துகொல்ல கைவேலாயுதத்தால் முடிவுகாட்ட விட்டேன் பாரடா வீரவாகு

## வீரவாகுதேவர் விருத்தம்.

வீரபத்திரப்படை வேகமாய்வந்துனை
சிரகத்திக்கொலை செய்திடவிடுவேனே.

(வீரவா-வ-ம்.) தம்பிமார்களே பூதர்களே அண்ணனிடம் செல்வோம் வாருங்களப்பா.

(பூதர்-வ-ம்) அப்படியேபோவோம்வாரும்மஹாநுபாவரே

(இரா-தூ-வ-ம்.) இராஜசெம்பீரா உங்கள் புத்திரன் அக்கினிமுகாசூரன் வீரவாகுவுடன் அதிகபோர்செய்து கடைசியில் அவரும்படைகளும் வீரபத்திரப்படையால் மாண்டார்களய்யா.

(சூர-வ-ம்.) ஆ ஆ அவனும்மாண்டானு என்செய்வது மந்திரிமார்களே எனக்கோ அதிகதுயரமாயிருக்கின்றதே மந்திரிமார்களே.

(மூவாயி-வ-ம்) அண்ணு நாங்கள் மூவாயிரம் பிள்ளைகளிருக்க உங்களுக்கேன் இவ்வளவுகவலை எங்களுக்குத்திரவுகொடுத்தால் கந்தனையும் அவன்சேனைகளையும் வாட்டிவருகின்றோம் ஏன் கவலைப்படுகின்றீர் அண்ணு.

(சூர-வ-ம்.) அடா கண்மணிகளே நீங்களாகிலும் போய் ஜெயம்பெற்று வாருங்கள் மூவாயிரவர்களே.

(மூவா-வ-ம்.) அப்படியே ஜெயம்பெற்று வருகின்றோம் அண்ணு.

## மூவாயிரவர்கள் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஏகம்

| | |
|---|---|
| வாடாவீரவாகுவே | வந்தாகம்தீர்க்குறோம் |
| நாடாமல்சேனைகளே | நறுக்கிப்பிழிகுறோம் (வா) |

## வீரவாகுதேவர் பூதர் தரு

நகைக்கச்சாருப்பூரிய          நாடிவந்தவீரரே
கொசுவைப்போல்தேவர்தங்களை    கொல்லுஞ்சூரர்காரரே. (நக)

## மூவாயிரவர்கள் தரு.

கொல்லுஞ்சூரென்றவுங்கள்    கோலத்தேவரையழித்து
வெல்லவேமேவிட்டபூதர்      வீரத்தனைப்பழித்து. (வா)

## வீரவாகுதேவர் பூதர் தரு.

வீரம்பூரிப்போமென்று      வீண்பெருமைவார்த்தைபாய்
சிரும்சேனைகள்ரதம்       செங்கற்பொடிபொடியாய். (நக)

## மூவாயிரவர்கள் தரு.

செங்கற்பொடிபொடியாய்    சிந்தினதேர்சேவகத்தை
மங்கபாணத்தைவிட்டுவாட்டுவோம்    ஆனைதனை. (வா)

## வீரவாகுதேவர் பூதர் தரு

வாட்டவிட்டபாணத்தை      வாரியெதிர்த்தொழிய
ஓட்டமானதேர்பாணம்     ஒட்டினோம் நீங்களழிய. (நக)

(தூத-வ-ம்.) இராஜகெம்பீரா மூவாயிரவர்கள் வீரவாகுதேவர் முதலானவர்களைத் தோர்க்கடிக்கும் சமயம் அவர்களில் ஒருவன் ஒரேபாணம்விட்டு மூவாயிரவர்களையும் கொன்றான் இராஜகெம்பீரா.

(சூர-வ-ம்.) ஆ ஆ அவர்களுக்கும் இப்பேர்ப்பட்ட காலம் நேர்ந்ததா ஐயோ என்செய்வேன் மந்திரிமார்களே.

(தருமகோ-வ-ம்-) அரசே தருமகோபனென்றால் உலகமெல்லாம் நடுங்குமென்கிற சேதிதெரிந்தும் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்யிக்கழுவார்போல் கவலைபடுவதேன் எனக்கு ஒரு வார்த்தை தயவுசெய்தீரானால் இத்தருணத்தில் பகைவர்களைவென்று ஜெயக்கொடிபோட்டு வருகின்றேன் அரசே.

(சூர-வ-ம்.) மந்திரி தருமகோபா நீ நமது சேனையின்மக்களைவெள்ளம் கணக்காய் கொண்டுபோய் ஜெயம்பெற்று வருவாய் தருமகோபா.

(தரு-வ-ம்) அப்படியே போய்வருகின்றேன் அரசே.



## தருமகோபன் தரு.

இ-ம்-சாமா-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இறக்கவந்தாயோநீபயலே    எல்லாம்வந்ததுநீசன்செயலே. (இ)

அநுபல்லவி.

மறங்கொண்டம்பெங்கும்     நிறையமாட்டிவிட்டேனே அறைய
பிறங்கல்சேனைகளிறைய     பின்னேங்கியுன்பேருமறைய. (இ)

சரணம்.

கந்தனுடன்கூடவந்து           காட்டிப்படிக்குறும்பிக்கு
உந்தன்மனமிகவெந்து     உருகச்செய்குவேனென்பார்நொந்து. (இ)
பூதச்சேனைகளைக்கொண்டு     புகழில்லாவார்த்தைதான்விண்டு
சேதப்பட்டீதுவண்டு செய்யப்போர்வந்தாயோ என்னோடுகண்டு. (இ)
சீறவச்சிராயுதம்விட்டு      இளைக்கச்செய்குவேனிதோபட்டு
வீரவாகுவேயுந்தன்வீரம் விரைவிலோட்டுவேனென்பார்என்தீரம். (இ)

(தரும-வ-ம்.) அடா வீரவாகு நீ மாளும்படி வச்சிராயுதம் விட்டேன் பாரடா மூடா.

## வீரவாகுதேவர் விருத்தம்.

தருமமேநாட்டவந்த சண்முகாருளெண்ணமல்
பொறுமமேல்கொண்டுமாளப் புந்தியில்லாமல்லுநானக
கருமமேயெரிதென்றெண்ணிக் கணைகிலாப்படைதொணர்ந்த
தருமகோபாஎன்காலால் தரியினில்மாய்த்தேன்பாராய்.

(வீரவா-வ-ம்.) அடா தருமகோபா உன்படைகளைக்கொன்று நீ விட்ட வச்சிராயுதத்தைப்பற்றி உன்மார்பிலுதைத்து மாளும்படி செய்தேன்பாரடா.

(தூத-வ-ம்.) மண்டலாதீஸ்வரா உங்கள் மந்திரியாகிய தருமகோபன் பகைவர்களுடைய சேனைகளை வாட்டிப் போர்செய்து முடிவில் வீரவாகுதேவர் மாரிலறைந்து காலாலுதைத்து மடித்தனர் மண்டலாதீஸ்வரா.

(சூர-வ-ம்.) ஆஹா தருமகோபன் இறந்தானா என்ன ஆச்சரியம் ஒன்றுந்தோன்றவில்லையே இனிஎன்செய்வதுயோசிப்போம்.

(தூத-வ-ம்.) ஐயா பரனுகோபமஹாராஜனே நீங்கள் மோகனாஸ்திரத்தைவிட்டு வீரவாகு தேவர்முதலானவர்களை சுத்தோதசமுத்திரத்தில் கொண்டுபோய் சேர்த்தபிறகு தேவரிலொருவன் கந்தசுவாமியிடம் போய்சொல்லி அவர் வேலாயுதத்தை விட்டு

அவர்களை மீட்டுவந்த பிறகு நமது பட்டணத்தைக் கொளுத்தி மடமாளிகை முதலியவற்றை இடித்துக் கொண்டிருக்க சூரபத்மராஜன் கண்டு யாளிமுகன் இரண்ணியன் அக்கினிமுகாசுரன் தருமகோபன் முதலாக இன்னும் சிலரை ஏவ யுத்தத்திற்குப்போய் மாண்டார்கள் அரசே.

(பானு-வ-ம்.) அடா தூதர்களே இதோ பிதாவிடம்வந்து தகுந்த ஏற்பாடுகள் செய்கின்றேன் தூதர்களே.

(தூத-வ-ம்.) அப்படியே செய்யவேண்டும் மஹாராஜனே.

(பானு-வ-ம்.) போற்றி போற்றி பிதாவே யான்நேற்றுயுத்தம் சண்டையில் எனதுபாட்டியம்மாள் கொடுத்தமோகனாஸ்திரத்தைக்கொண்டு வீரவாகுமுதலானவர்களை சமுத்திரத்தில் கொண்டுபோய் மடியும்படி செய்ய கந்தன்தெரிந்து வேலாயுதத்தைவிட்டு அவர்களை மீட்டுவந்தாமறுபடியும் இப்போர்ப்பட்ட போராடுகிறேன் வெல்வது அரிதாயிருக்கின்றது தேவர்களைவிட்டால் சுப்பிரமண்யன் நமக்கு இன்னும் வேண்டும் வரங்களும் சம்பத்தும்கொடுப்பார் விடாவிட்டால் அவரால் நாம் மாளுவதுடன் குலமேநாசமாகும்போலிருக்கிறது தெரியாமல் ஏற்றாகவேண்டும் பிதாவே.

(சூர-வ-ம்.) அடா குமாரனே நல்லகாரியம் சொன்னாய் அப்படிநாம் தேவர்களைவிட்டால் பிரமன் விஷ்ணு இந்திரன் இவர்கள் மதிப்பார்களா அன்றியும் கேவலமான ஸ்ரீஜாதிகளும் அஞ்சுவார்களா அயிரத்தெட்டண்டத்தை ஆளும் சூரன்திறம் இதுதானென்று ஏசமாட்டார்களோ உன்னைப்போன்றபிள்ளைகள் எனக்கிருந்து இப்போர்ப்பட்ட வார்த்தைகள் சொல்லவந்ததுஅஷ்டட்டா நீ அப்புறம்போவாய் யான்போய் அந்த ஆண்டிமகனை ஜெயங்கொண்டு வருகின்றேன் பாரடா வீரமில்லாதவனே.

(பானு-வ-ம்.) அன்று கோபிக்கவேண்டாம் யான்போய் அந்தபாதகர்களை வெற்றிகொண்டு வருகிறேன் உத்திரவு தாருமன்று.

(சூர-வ-ம்.) பானுகோபா என்மனம் குளிரும்படிக்கு கந்தனையும் அவன்படைகளையும் துண்டம் துண்டமாய்வெட்டி ஜெயம்கொண்டு வருவாயடா.

(பானு-வ-ம்.) அப்படியே ஜெயம்கொண்டு வருகின்றேன் அன்று



## பானுகோபன் தரு.

இ-ம்-காம்போதி-தாளம்-சாப்பு.

வந்தேனிதோபாரடா வீரவாகுவேசிற (வந்)
இந்தவிசையுனது இனமெல்லாம் நாமொழிக்க
எந்தன்குலத்தோரென்றைனும் எழிலாய்ச்செழிக்க (வந்)

## வீரவாகுதேவர் தரு.

வந்தாயேஎன்வாளால்மாளவே வணங்காதாளவே (வந்)
பந்திபந்தியாய்வந்து பரிகொடுத்தான்சேனைகளை
முந்திமாய்கையாலோடின மூர்க்கா இவ்வேளை (வந்)

## பானுகோபன் தரு.

மாளச்செய்யவுன்னாலாகுமோ மடையாவேகுமோ (மாள)
வேள்படைத்தவனை வீரங்கூறிமுந்தினை
ஈளப்படச்செய்வேன்பாரடா இப்போதெந்தனை (மாள)

## வீரவாகுதேவர் தரு.

மடையனென்றிகழ்ந்தாயொழிய மண்படையழிய (மடை)
கடையானென ஆவீரம் காண்கிலையோமுன்னேராய்
இடையாதொடிவந்தாயேதோ இன்னமும் வேராய் (மடை)

## பானுகோபன் தரு.

அழிந்தீத்தாமோசீ எந்தனை அறிவேனுந்தனை (அழி)
ஒழிக்கஓராயிரமம் புருகிச்சாய்க்கத்தாவினேன்
வழிகண்டுவாராவண்ணம்சீ வாரித்தூவினேன் (அழி)

## வீரவாகுதேவர் தரு.

அழிவேனென்ற ஆணவம்போக அழித்தேனேசாக (அழி)
சரிந்தகாயிரண்டும் தாழ்ந்துசிரசம்வீழ
பரிந்துசக்தியோர்வந்து பார்த்துன்னையழ (அழி)

(வீர-வ-ம்.) சேனைகளே பாபியாகிய பானுகோபன் மாண்டான் நாம் பரம்பொருளாய் விளங்குகின்ற அண்ணலை வணங்குவோம் வாருங்கள்.

(சேனை-வ-ம்.) அப்படியே வாரும் வீரரே.

(வீர-சேனை-வ-ம்.) போற்றி போற்றி ஞானப்பிரகாசா நாங்கள் இரண்டு நாளாய் சூரன் குமாரன் பானுகோபனுடன் யுத்தம் செய்து மடியச் செய்து வந்தோம், ஞானப்பிரகாசா.

(குமா-வ-ம்.) வாழி வாழி சுகமே வாழ்க்கடவீர்கள் தூனைவர்களே.

(தூத-வ-ம்.) அரசே பானுகோபன் இறந்துவிட்டாரய்யா.

## சூரபத்மன் கண்ணி.

இ-ம்-நீலாம்புரி-தாளம்-ரூபகம்.

பாலகா பானுகோபா நீ பறந்தாயோ பாரையாளாமல்
பற்றுதேதன் வயராது சற்றுமே நீ
உன்றுலேனை துருவ நீ ஒன்றுமென்றேனென்னினையோ
பன்னகபூஷணனன்னைப் படைச்செய்தானோ
எந்தனைப்பிரிந்திருக்க என்னணிறுயோ மகனே
தந்தையென்றெண்ணிப்பார்த்து தங்காமல்

## பதுமகோமளை கண்ணி.

இ-ம்-நீலாம்புரி-தாளம்-ரூபகம்.

அய்யய்யோ என்னமோசம் செய்தாய் அருமைக்கண்மணியே
நப்புதே என்னங்கமெல்லாம் நானினி என்செய்வேன்
ஆரிட்டசாபத்தாலே அலறித்துடித்தழுது
பொரில் எணறுதென்னி நீயும் போய்சேர்ந்தாயோ மகனே
ஆவிபோகும்போதனை அம்மாவென்றழைத்து
பாவிவாயில்லையென்று பார்க்காமல் மாண்டாயோ

(சூர-வ-ம்.) அடா தூதர்களே ஆசுரமென்னும் பட்டணத்திற் கோடி எனது தம்பி சிங்கமுகாசூரனை அழைத்தோடி வருவீர்களடா தூதர்களே.

(தூத-வ-ம்.) இதோ அழைத்தோடி வருகின்றோம் மகாராஜனே.

(தூத-வ-ம்.) மகாராஜனே உங்கள் தமையனார் அழைத்தோடி வரச்சொன்னார் வாருமய்யா மகாராஜனே.

(சிங்-வ-ம்.) இதோ வருகின்றேன் தூதர்களே.

## சிங்கமுகாசூரன் விருத்தம்.

எதுக்கோ ரழைத்தசேதி எத்தனைப்பொருட்டாரெயன்னி
ஓதுவீர் ஒழியாதொன்றும் உன்பாதம் போற்றினேனே.



(சிங்-வ-ம்.) போற்றி போற்றி அண்ணா யாது காரியமாய் அழைத்தீர் தெரிவிக்க வேண்டும் அண்ணா.

(சூர-வ-ம்.) தம்பி கந்தனென்பவன் நமது சயின்யங்களையெல்லாம் கொன்றதல்லாமல் பானுகோபன் அக்கினிமுகாசூரன் யாளிமுதன் மூவாயிரவர் இப்பேர்ப்பட்டவர்களையும் அதமாக்கிவிட்டான் இனி காலதாமதம் செய்யாமல் எனது பகைதீர அவனை வெட்டி வெட்டி சாய்த்து ஜெயங்கொண்டு வருவாய் தம்பி.

(சிங்-வ-ம்-ம்.) அப்படியே ஜெயங்கொள்ளப்போய் வருகின்றேன் சந்தோஷப்படுவீர் அண்ணா.

## சிங்கமுகாசூரன் தரு.

இ-ம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

வீரவாகுவேயுந்தன் வீரமழிக்குறேன் வாடா
வில்லுஞ்சரங்களுங் கொண்டு (வீர)

அநுபல்லவி.

சூரன்பட்டணமென்று தோன்றுத்தூதனாய்வந்து
சீரமில்லாக்கதையை சற்றுமஞ்சாதுரைத்த (வீர)

சரணம்.

எந்தனண்ணனுக்கும்மேலே இட்டசிம்மாதனத்தினில்
அந்தமுடனிருந்து நீ வந்தாக்கர்களைக்கொன்ற (வீர)
சமர்த்தனென்றுசொல்லியே சபையில் சபதங்கூறி
இமைப்போதுமங்கில்லாமல் இறைந்துத்துறையாய்வந்த (வீர)
எதிரில்வந்தழைத்தோரை ஏங்கும்படிக்கியன்று
எதிர்த்துப்போரிட்டேயும் எளனமேமிகச்செய்த (வீர)

## வீரவாகுதேவர் விருத்தம்.

ஆலமாமரத்தில்வாய்க்க அதிபெரும்விழுதைப்போலக்
கோலமாய்க்கரங்கள்தொங்கக் கொண்டவுன்னுயிரைவாங்கக்
காலமேநேர்ந்ததாலே கடிந்தென்மேலம்பைவிட்டாய்
மூலகாரணனையெண்ணி மோதினேனுன்னைத்தானே.

(வீர-வ-ம்.) அடா சிங்கமுகா ஆயிரம் சிரங்களும் இரண்டாயிரம் கரங்களும் ஆல்விழுதைப்போல் தொங்கவிட்டு வந்து என்மேல் அம்பைவிட்ட வுன்னை மோதியடிந்தேன் பாரடா.

## சிங்கமுகாசூரன் விருத்தம்.

மோதியேயடித்ததாலே முழுதுமுன்படைகளெல்லாம்
சேதமாக்கிட்பாசத்தை சீறியேவிட்டுவாறி
போனதுதான்போகாமுன்னம் போற்றலேபுகழ்பெற்றேருங்கும்
பேதையேயுடனையச்சூரல் பெருமலேசேர்த்தேன்பாராய்.

(சிங்-வ-ம்.) அடாவீரவாகு இப்போதுவிட்ட பாசத்தினால் உங்களனைவரையும் உதயகிரியில் கொண்டுபோய் சேர்க்கச் செய்தேன் பாரடா வீரவாகு

(வாயு-வ-ம்.) சுவாமி தேவரீர் கட்டளைப்படிக்கி வீரவாகுதேவர் என்பர் பூசர் லக்ஷத்தவர் இவர்கள் ரணக்களத்தில் சேர்ந்து கொடிய போரைச்செய்து ராக்ஷதர் கொடிய சேனைகளையும் படைத்தலைவர்களையும் சிங்கமுகன் பிள்ளைகள் நூறுபேரையும்மாட்டி அவனையும் பற்பல சண்டையில் ஜாடும்போது அவன் பாசத்தை விட்டு வீரவாகுதேவர் முதலானவர்களை வாட்டிசேர்த்துக் கட்டிக்கொண்டுபோய் உதயகிரியிற் சேர்த்தது சிங்கமுகாசூரன் இவடம் வருவதாய் யத்தனித்து ரதாரூடனாய் வருகின்றான் சுவாமி.

(குமா-வ-ம்.) ஏ வாயு யுத்தகளத்திற்கு ரதம் ஓட்டுவாய்.
(வாயு-வ-ம்.) அப்படியே ஓட்டுகின்றேன் சுவாமி.

## சிங்கமுகாசூரன் விருத்தம்.

பொன்னுலகுள்ளோர்கட்கும் பொருந்திவாழெங்களுக்கும்
பன்னிடாப்பகையிருக்கப் பாலனேயிங்கேன் வந்தாய்
இன்னிலத்தேவராலும் எத்தனைஜெயிப்பாருண்டோ
நன்னயமுள்ள தந்தை நாடதையடைகுவாயே.

(சிங்-வ-ம்.) அடா சிவகுமாரா தேவர்களுக்கும் எங்களுக்கும் பகை இருக்க நீயேன் வந்தாய் சிவகுமாரனே.

## குமாரசுவாமி விருத்தம்.

சீரிலாசிங்காவுந்தன் சிறிடும்இனத்தைக்கொன்று
நேரிலாவேதமார்க்கம் நிலைபெறச்செய்துதேவர்
மாரிலாச்சிறையைமீட்டு மகிழ்ந்திடவிடவேவந்தேன்
வேரிலை பிதுவல்லாமல் வினையதைஅறிகுவாயே.

(குமா-வ-ம்.) அடா சிங்கமுகாசூரா இராக்ஷதர்களைக் கொன்று தேவர்கள் சிறையை மீழ்க்கவும் வேதமார்க்கங்களை நிலைநிறுத்தவும் வந்தேனடா சிங்கமுகாசூரா.



(சிங்-வ-ம்.) அடா நீயா தேவர்களுடையசிறையை மீழ்ப்பவன் அறியாதபாலனென்றுன்னை அடித்துக்கொல்ல மனமில்லாமல் இவ்வளவு சமாதானங்களைச்சொல்லிக் கேட்டால்வாயில் வந்தபடி உளறி தேவர் சிறையை மீழ்க்கவந்தேனென்றுளறுகிறாய் உன்னுடைய ஆங்காரத்தை யடைக்கிறேன் பாரடா பயலே.

(குமா-வ-ம்.) அடா சிங்கமுகாசூரா சிவபிள்ளையினுடைய சாமர்த்தியம் இன்னதென்று தெரியாமல் உளறுவதினால் உனது சிரங்களும் கரங்களும் ஒவ்வொன்றாக விழும்படி தனுசில்வாளியை சந்தித்து.

## குமாரதேவர் தரு.

இ-ம்-கல்யாணி-தாளம்-ஏகம்

பல்லவி.

ஆயிரந்தலையையும்அறுப்பேன் சிங்கா (ஆயி)

அநுபல்லவி.

வாயில்வந்ததுளறி வகித்திடாதேந்தனை
வஞ்சித்திடும்படிவந்த வகையில்லாதோனேவந்தன் (ஆயி)

சரணம்.

இன்பமாயுலகினிலிருக்கும் ராக்ஷதர்களை
துன்புறக்கொலைசெய்து துஜங்கட்டிதேவர்களை
விண்ணுலகத்தினில் வண்ணமுடனேவாழ
எண்ணரும்வேதவழி என்றும்பிசகில்லாமல்
எவ்வுலகத்தோரும் எழிலாய்நடக்க
இவ்வேளைவந்தேனே செவ்வேளாகத்தானே
நேசிதெரிந்திருந்தும் சோதிப்பதாலே
சேதித்தொன்பதுகோடி சேனையையும்மாய்த்து
அண்டமதிரும்படி ஆயிரங்கோடிகளம்பு
விண்டிடவொட்டாதவேகம் விட்டுத்தன்கண்ணின்முன்பு (

## சிங்கமுகாசூரன் விருத்தம்.

ஆங்காரங்கொண்டுஎந்தன் அன்புள்ளசேனையெல்லாம்
வாங்குதேறனையின்றையென்றுவைழக்குதத்தெரியாப்பாவி
போங்காலம்கொண்டுஇங்கு பொறுக்காமல்வந்தாயோ நான்
ஒங்கியேபாணம்விட்டேன் ஓராறுமுகமேபோக

(சிங்-வ-ம்.) அடா ஆறுமுகா உன்னுடைய ஆங்காரத்தினாலே என்னுடைய சேனைகளை அழிக்குதீரென்றுசொன்ன வாயைச்

கிழித்து ஆறுசிரங்களும் பன்னிரண்டு கரங்களும் சிதைக்க பாணம் விட்டேன் பாரடா ஆறுமுகா.

### குமாரதேவர் விருத்தம்.

நோக்கியேவிட்டபாணம் நொடிதனில்விழுவேலேரிக்
காக்கவேவகையில்லாத கனத்தசேனையையும்அள்ளிப்
போக்கவேஉயிரைஇப்போ போரினிலிடைபாணம்
ஊக்கமேகொண்டுவிட்டேன் உன்சிரமதுக்குத்தானே.

(குமா-வ-ம்.) அடா சிங்கமுகசூரா, நீவிட்டபாணத்தைப் பொடித்து உன்சேனைகளையும் உன்னையும் கொல்லபாணம்விட்டேன் பாரடா.

(குமார-வ-ம்.) ஆ ஆ என்ன ஆச்சர்யம் இவனுடைய சிரங்களெல்லாமறுந்தும் ஒருதலையுடனேயும் வாதாடிக்கொண்டிருக்கின்றானல்லவா இவனைப்போன்ற சூரன் எவனையும் பார்த்ததேயில்லை ஆனால் இவனுக்கு வேலாயுதமே தகும் சீக்கிரம் அனுப்புவோம்.

### குமாரதேவர் விருத்தம்.

என்றுமேபுகழ்பெற்றோங்கும் எழிற்கொடியுடையவேலா
சிங்கமாமுகத்தைப்பெற்றுச் சீறிடும்சூரன் தன்னை
பங்கமேசெய்துநீதான் பாரினில்விழவேதள்ளி
அங்கமேபிளந்துகூடற்றும் ஆவியையழித்துவாராய்.

(குமா-வ-ம்.) படைக்கரசே நீசென்று சிங்கமுகா சூரன் மார்பில்தாக்கி பிராணனைகிரகித்து ஓடிவருவாய்.

(படைக்-வ-ம்.) அப்படியே வருகின்றேன் சுவாமி.

(படைக்-வ-ம்.) போற்றி போற்றி மகாநபர்வாபோற்றிசிங்கமுகாசூரனைக் கொன்றுவந்தேன் மகாநபாவா.

(குமா-வ-ம்.) வாழி வாழி சதாவாழி படைக்கரசே.

(குமா-வ-ம்.) ஏ வாயு உதையகிரியிலிருக்கும் நம்மவர்களைக் கொண்டுவர பாணம்விட்டேன் பயப்படவேண்டாம் வாயு.

(வாயு-வ-ம்.) மஹாசந்தோஷம் ஆண்டவா.

(கவி-முத-வ-ம்.) போற்றி போற்றி எங்களை ஆட்கொள்ள வந்தகருணைக்கடலே போற்றி.

(குமா-வ-ம்.) அப்பா துணைவர்களே வாருங்கள் நமது பாசறையில் வீற்றிருப்போம்.



(துணை-வ-ம்.) அப்படியே போவோம் வருவீர் ஆண்டவரே.

(தூத-வ-ம்.) இராஜாதி ராஜனே உங்கள் தம்பி எவர்களும் செய்யக்கூடாத யுத்தம்செய்து முடிவில் கந்தனுடைய வேலாயுதத்திற்கிரையானார் இராஜாதி ராஜனே.

(சூர-வ-ம்.) ஆ ஆ அவனைக்கொல்பவனும் ஒருவன் இருக்கின்றானா அப்பேர்ப்பட்டவனை நானேகொல்கின்றேன் தூதர்களே நமதுபட்டணத்தின் பாசறையில் இருக்கும் கணக்கிடக்கூடாத சேனைகளையும் ஒவ்வொரு அண்டத்திலும் எழுவதுவெள்ளம் சேனைகளாக எழண்டத்திலிருக்கும் சேனைகளைமாத்திரம் கொண்டுவரக்கடவீர்கள் மற்றஅண்டங்களிலிருக்கும் சயின்யங்கள்வந்தால் உலகத்திலிருக்க இடமிராது சீக்கிரம் வருவீர்கள் தூதர்களே.

(தூதர்-வ-ம்.) அப்படியே கொண்டுவருகின்றோம் அரசே.

(தூதர்-வ-ம்.) அரசே சயின்யங்கள் பூமியில்நிற்க இடமில்லாமல் அந்தரமார்க்கத்தில் கணக்கிடக்கூடாத வெள்ளம் காத்திருக்கின்றார்கள்உங்களுடைய இந்திரஜாலத்தேர்முதலாகியதும் கொண்டுவந்தோம் அரசே.

(சூர-வ-ம்.) ஆனால் சீக்கிரம் புறப்படுங்கள் சேனைகளே.

(சேனை-வ-ம்.) இதோ செல்வோம்வாரும் மகாராஜனே.

(விஷ்-பிர-திசைக்-வ-ம்.) போற்றி போற்றி கருணாகரக்கடவுளே தீங்கள் சிங்கமுகாசூரனைக் கொன்ற சேதியைக் கேட்டசூரன் அதிகவீராவேசத்துடன் தன்னுடைய விழலிற்குட்பட்ட ஆயிரத்தெட்டண்டங்களிலுமிருக்கும் சதுரங்கசேனைப் பெருக்குகளையும் தருவித்துக்கொண்டு தன்னுடைய பட்டணத்தைவிட்டு புறப்பட்டு வருகின்றனன் கருணாகரக் கடவுளே.

(குமர-வ-ம்.) ஏ வாயு சீக்கிரம் ரதம்கொண்டுவருவாய் நமதுசேனைகளையும் சித்தப்படுத்துவாய் வாயு.

(வாயு-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் சுவாமி.

(வாயு-வ-ம்.) சுவாமி எல்லாம் தயாராய் கொண்டுவந்துவிட்டேன் ரதத்திலாரோகணிக்கவேண்டும் சுவாமி.

(குமா-வ-ம்.) இதோவந்தேன் வாயு துரிதமாய் ரதம்செலுத்துவாய்

(வா-வ-ம்.) அப்படியே செலுத்துகின்றேன் ஆண்டவா.

(குமர்-வ-ம்.) சேனைகளே துரிதமாய்வரக் கடவீர்கள்.

(சே-வ-ம்.) அப்படியே வருகின்றோம் ஜெகதீசா.

## வீரவாகுதேவர் பூதப்படைகள் தரு

இ-ம்-புன்னாகவராளி-தாளம்-ஏகம்.

வந்தராக்ஷதர்களே வாரிஇறைத்திட
முந்திபாணம்விட்டோம் முனைந்துமே

## இராக்ஷதர்கள் தரு.

முனைந்துவிட்டபாணம் முழுதும்பொடிசெய்ய
சினைந்துபாணம் சிதிப்போட்டோமே

## வீரவாகுதேவர் பூதப்படைகள் தரு

யோட்டபாணமெல்லாம் பொடிபட ஆயிரம்
நீட்டமானஅம்பு நீட்டினோம்.

## இராக்ஷதர்கள் தரு.

நீட்டின அம்புகள் தெறித்துவிழும்படி
ஓட்டினோமம்புகள் உயர்ந்துமே.

## வீரவாகுதேவர் பூதப்படைகள் தரு

உயர்ந்தோமென்றவுங்கள் உள்ளங்கலக்கி
உணர்வில்லாமல் உயிர்ஓட்டினோம்.

## சூரபத்மன் தரு.

இ-ம்-அடாணா-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்வத்திக்கெதிர்க்குரீமான ஏபூதர்களே. (என்)

அநுபல்லவி.

தேனில்விழுந்த ஈப்போலவேதியங்கி
மானிலத்தினிலே மதியும்மயங்கி. (என்)

சரணம்.

எனக்கெதிர்நின்றெதிர்ப்பவர்களார் ஏவீரர்களே
கனத்தமன்னரெல்லாம் காணஎனைபய
மனதில்கொண்டுங்கி மறைந்திருக்கச்செய. (ஏ)
ஞாலமென்னுல் நடுக்கங்கொள்ளுமே அடாவீரர்களே
காலனையுதைத்த கங்காதரனாலே
வேலன்வந்தானென்று வீணாயவனாலே. (ஏ)



வேலன்தான்வெல்லாவிடுவேனோ ஏபூதர்களே
ஆலகாலம்போல அஞ்சாமலழிக்க
கோலகாலன் உயிர் கொண்டுபோய்பழிக்க. (ஏ)

## வீரவாகுதேவர் பூதர்கள் விருத்தம்.

எங்களைஜெயிக்கசக்தி ஏவாமல்பயமேகாட்டிப்
பொங்குளவந்தாயோபோர் போடடாதிராணிபார்ப்போம்.

## சூரபத்மன் விருத்தம்.

பேரிப்பிழைத்திடுவீரென்று பொருந்துரைத்தும்கேளாதால்
மாய்த்திடபாணம்விட்டேன் மகிதலம்மதிக்கத்தானே.

## குமாரதேவர் தரு.

இ-ம்-மத்யமாவதி-தாளம்-ஏகம்.

பல்லவி.

சூராவுந்தனைசருமாய் தோற்கச்செய்குறேன். (சூரா)

அநுபல்லவி

பாராதென்சேனைகளை பார்ணைத்தாலேவாட்டினாயே
நீராப்பகையொழிக்கத் நீராகைகாட்டினாயே. (சூ)

சரணம்.

மூவர்பகைகொண்டதால் முனைந்துன்மேலேமூதேவி
தாவிவந்தடைந்தது தான்எகிடசிதேவி
தேவரைசிறைதனில் தேடிவைத்தபாவி
ஆவியுனதுபடை அழிக்கபாணமேவி (சூரா)
உன்தம்பிதாருகனும் உயிர்துனைக்கிரவுஞ்சனும்
மின்வாங்கிவேலினாலே மிளப்புண்டதைத்தெரிஞ்சும்
என்னைஎதிர்க்கவந்த இருமாப்புமுந்தன்சினம்
சின்னமடையவேதான் சீரழிக்குறேன்முனம். (சூ)
பொன்னுலகவாசிகள் பொருக்காசரபட்டவிக்க
மன்னியவேதவழி மாறுமல்தான்செலிக்க
வன்னெஞ்சகமுடனே வாழரக்கர்சலிக்க
இன்னிலமெங்கிலும் எந்தன்பேரேஜொலிக்க. (சூ)

(குமா-வ-ம்.) அடா சூரா உன்னுடைய படைகளையும் ரதத்திலிட்ட சிங்கக்கொடியையும் பாகனையும் காணுதபடிஅழித்தேன் பார் ஏன் இன்னும் மாளும்படி வைத்துக்கொள்ளுகுறாய் மாய்கையால் இனி எந்தவிடம்போனபோதிலும் விடமாட்டேனென்றறிவாய் சூரா.

(சூர-வ-ம்) ஆ ஆ நமது சேனையாவும் மடிக்கச்செய்து , பாகனையும் கொன்றுவிட்டானே இனி என்செய்வது சரிநமது தாயை நினைப்போம் அவள்வந்தவுடன் யோசனைகேட்டு பிறகு நடக்கவேண்டிய விஷயங்களை நடத்துவோம் இதுதான் சமயம்அம்மா என்னைப்பெற்றதாயே மாயையே இதுசமயம் ஓடிவரவேண்டும்தாயே.

(சுமாலி-வ-ம்) அப்பா ஆயிரத்தெட்டண்டமும் ஆண்டுகொண்டிருந்தவன் இப்பொழுது யாருமில்லாமல் தனியாயிருக்கும் காரணமென்ன தெரிவிப்பாயடா சூரா.

(சூர-வ-ம்.) அம்மா யான் கந்தனுடன் போர்செய்துஎல்லா சேனைகளையும் தோர்த்து தனிமையாயிருக்கின்றேன் தாயே.

(சுமாலி-வ-ம்.) அப்பா மகனே அந்ததேவர்களை சிறைவிடுத்தால் பிழைப்பாய் இல்லாவிடில் இறப்பாய் சுப்பிரமண்யனை ஜெயிக்க வுன்னால் முடியாது இதுகுயோசனைசெய்து நடந்துகொள்ளக்கடவாய் மேலும் உன் கருத்தின்படி இறந்தவர்களை எழுப்பவேண்டுமாயில் சத்தசாகரங்களுக்குக் கடையில்சொர்ணமயமாய் வானத்தையளாவியோங்கி வளர்ந்திருக்கும் சக்கரவாளகிரியை சூழ்ந்தபெரும்புறக்கடலினருகில் குளிர்ந்தகிரணங்களை வீசி சஞ்சீவிவிளங்கும் மந்திரகூடமென்றொரு பருவதமிருக்கின்றது அதைத்தருவிப் பையாயின் உன்னெண்ணம் கைகூடும் எல்லாம் பிரமன் நிர்ணயப்படிக்கி முடியுமல்லால் வேரில்லை யான்செல்கின்றேன் மகனே.

(சூர-வ-ம்) ஆ ஆ இத்தருணம் எவர்களுமில்லையே யாரையனுப்புவது எவர்களுமில்லாமல் மடிந்துவிட்டார்களே சரி இந்திரஜாலத்தேரையனுப்புவோம் ஆனால் நாமென்செய்வது மிருகராஜனையினைப்போம் ஏ மிருகராஜனே வருவாய்.

(சிங்க-வ-ம்.) என்னை யாதுகாரியமா யழைத்தீர் ராஜனே

(சூர-வ-ம்,) நீ எனக்கு வாகனமாயிருக்க அழைத்தேன்மிருகராஜனே.

(சிங்-வ ம்,) அப்படியே இருக்கின்றேன் அரசே.

(சூர-வ-ம்.) ஏ இந்திரஜாலரதமே நீ மனோவேகத்திலும்அதிகவேகச்சென்று பெரும்புறக்கடலைச் சேர்ந்து சஞ்சீவியைப்படைத்திருக்கின்ற மந்திரகூடமென்றொரு பர்வதமிருக்கின்றது அதனை இத்தமிஷத்தில் பெயர்த்தெடுத்தோடிவருவாய்இந்திரஜாலரதமே.



(போ-வ-ம்) கேளுங்கள் சபையோர்களே இந்திரஜாலத்தேர் சஞ்சீவிபர்வதத்தை யெடுத்து விரமாபுயேந்திடம் வந்ததும் கந்தசுவாமியால் துண்டாடுணமினாங்கள் யாவும் எழுந்து கூத்தாடி கொக்கரிக்கின்ற தென்றறிவீர்கள் கனவான்களே.

(இராக்ஷ-சைன்-வ-ம்.) இராஜகெம்பீரா நாங்களிருக்க உங்களுக்கென்னகுறை இதோபோய் கந்தனைஜெயித்து வருகுறோம் அரசே

(சூர-வ-ம்.) மகா சந்தோஷம் அப்படியே போய் ஜெயித்து வருவீர்களப்பா சயின்யங்களே.

(குமா-வ-ம்.) ஓ ஓ இந்திரஜாலத்தேர் சஞ்சீவிபர்வதத்தைக் கொண்டுவந்ததினால் இறந்தவர்களெல்லாம் எழுந்து மறுபடியும் சண்டைக்கி வந்திருக்கிறார்கள்போல் தெரிகிறது ஆனால் சஞ்சீவி பர்வதத்தையும் எழுந்துவந்த சேனைகளையும் ஒரேபாணத்தினால் மாளும்படி பாசுபதாஸ்திரத்தை விடுவோம்

குமாரதேவர் விருத்தம்.

செத்தெழுந்தோடிவந்த சேனைசஞ்சீவிகுன்றம்
அத்தனையும்பொடிக்க அகற்றினேன்பாணம்பாரீர்.

(சூர-வ-ம்.) ஆ ஆ இப்பொழுது எழுந்துவந்த சேனையாவும் ஒரேபாணத்தினால் மாண்டுவிட்டதே ஆகட்டும் இவனையும் எவர்களுமில்லாமல் தனியாயிருக்கச் செய்வோம் ஏ இந்திரஜாலரதமே குதலைச்சொல்லுறுத கந்தனைச்சூழ்ந்திருக்கும் பூதவெள்ளம் இலக்ஷத்தொன் நவவீரர் யாவரையும் உன்மாயைப் பெருக்கினால் மயக்கிவாரிக்கொண்டுபோய் அண்டஎல்லையினுச்சியில் வைத்து நான்மகட்டளையிடுகிறவரையில் காத்திருக்கக் கடவாய் சீக்கிரம் செல்வாய் இந்திரஜாலரதமே.

(குமா-வ-ம்) ஏ பாணமே இத்தமிஷத்தில் அண்டகோளமுகப்பில்போய் நமது சன்னியங்கள் முதலானவர்களை வஞ்சித்துக்கொண்டுபோய் வைத்திருக்கின்ற இந்திரஜாலத்தேரை திருப்பிவரக் கடவாய் பாணமே.

துணைவர்கள் இந்திரஜாலத்தேர் விருத்தம்.

சுயம்பிரகாசந்தன்னொளி ஜொலிக்கிடும்வாழ்வேஎங்கள்
பயந்தீர்த்துஆள்வாய்கடந்தன் பாதமேபோற்றிபோற்றி

(துணைவர்-இந்திரஜா-வ-ம்.) போற்றி போற்றி கடவுளே போற்றி.

(குமா-வ-ம்.) வாழி வாழி துணைவர்களே இந்திரஜாலரதமே சதாவாழ்வீர்கள்.

(சூர-வ-ம்.) ஆ ஆ பார்த்தீரையா நம்மிடசட்டளையை மீறி அவனுடைய பானுத்திற்கஞ்சி இந்திரஜாலத்தேர் அவர்களனைவரையும் கொண்டுவந்துவிட்டு அதுவும் அவனிடத்திலே நின்றுவிட்டது பார்த்தீரையா.

## சூரபத்மன் விருத்தம்.

முத்தலைபாணத்தாலே முடிந்திடசேனையும்
மெத்தலைத்தோடப்பாரில் மேன்மையாய்விடுத்தேன்காண்பாய்.

(சூர-வ-ம்.) அடா கந்தா உன்னுடைய பாகனையும் உன்னையும் யாவரையும்தான்படமுத்தலைபாணம் விட்டேன்பாரடாகந்தா.

## குமாரதேவர் விருத்தம்.

வெற்றிவேலேநீசென்று வேகமுற்றலைபாணத்தை
பற்றிவாதுரிதமாக பார்த்ததிசயிக்கத்தானே.

(குமா-வ-ம்.) சுடுசரங்களே சூரன் ஏறியிருக்கும் சிங்கவாகனத்தை கொன்று விடுவீர்கள்.

(குமா-வ-ம்.) வெற்றி வேலாயுதா நீசென்று சூரன் ஏவியமுத்தலைபாணத்தை கொண்டு வாக்கடவாய்.

(வேல்-வ-ம். இதோ போய் கொண்டு வருகின்றேன் கடவுளே.

(வேல்-வ-ம்.) சுவாமி இதோ கொண்டு வந்தேன் திருக்கண் சாற்றவேண்டும்.

(குமா-வ-ம்.) சந்தோஷம் படைக்கரசே.

## சூரபத்மன் தரு.

இ-ம்-இந்துஸ்தான்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னைத்தனியாயிருக்கநீயும் எண்ணினாயோசிவமே (எ)

அநுபல்லவி.

உன்னையல்லாலகதி உற்றவராரெனக்
கன்னைதந்தைநீ யென்றுன்னினேனேபதி (எ)



சரணம்.

எந்தன்மனதைவெந்திடச்செய்ய சிந்தையோசிவமே
அந்தமுள்ளநல்லபந்து சேனையாவும்
கந்தனென்பவனால் சேர்ந்திடச்செய்து (எ)

அன்றனிலேயே இந்தவிதியென் றன்னியேசிவமே
கன்னல்வரமென்று பன்னியளித்து
நன்னயத்துடனே இன்னிலத்தன்னிலே (எ)

உந்தன்தயவால் எந்தவரமும் தந்தாயின்சிவமே
இந்திரஜாலரதம் எந்தமென்றாலும்
வந்தசிங்கவாகனத்தையும் போக்கி (எ)

(சூர-வ-ம்.) ஆ ஆ பார்த்தால் பாலனாயிருக்கின்றான் இவன் என்ன சண்டை செய்கின்றான் பார்த்தீரையா நம்மிடத்திலிருந்த இந்திரஜாலத் தேரையும் விடுத்த சூலத்தையும் கைவசப்படுத்தி சிங்கவாகனத்தையும் கொன்று விட்டானே இனியென்ன செய்வது நல்லது இவனுனைவதற்காய்பட்க்கி படைத்துணைகள் யாவும் விழுங்க சக்கிரபகவான் போதித்திருந்த மோகன மந்திரத்தை புச்சரித்து அதன் முயற்சியினால் சக்கரவாகப் புள்ளுருக்கொண்டு ஆகத்தினால் இருட்டைப் பிடித்து ஒவ்வொருவர்களையும் விழுங்குவோம் அன்றியும் கந்தன் ஏறிவந்த ரதம் கொடி சிலை கவசம் அம்புராத்தூணி வில் முதலாவும் அழுத்துத்தக்கனிமன் மோடாகவும் சத்தசாகரங்களாகவும் காற்றாகவும் பிரம்மா விஷ்ணு ருத்திரனாகவும் இந்திரனாகவும் ராக்ஷதர்களாகவும் உருவெடுத்து போர் செய்து அவன்தோற்காவிட்டால் நமது சுவரூபத்தை எடுத்து யுத்தம் செய்வோம் இதைவிட வேறு உபாயமொன்று மில்லை உருமாறி வருவோம்.

## சுப்பிரமண்யர் கண்ணி.

ரா-ம்-பூபாளம்-தாளம்-ஆதி.

மாயவித்தைதனில்வல்லான் மயங்கிடுவேனோதான்
நியமசுரூபத்தை நிர்க்கவானேவிடுத்தேன்
விண்ணவரையெய்படி விரைந்துபூமியெங்கும்
மண்மோடாகவந்தாயே மாய்த்திடபாணம்பாராய்
சமுத்திரமாதினுருசத்த சாகரமானாயோ
இசைப்போதில்ஜலம்வற்ற ஏவினேனக்னிபாணம்
காற்றாகமாறியே கலங்கமோதினையே
தூற்றிடவுந்தனை துட்டனேசூலம்பாராய்

மும்மூர்த்திகளிமற்ற முனிவர்யாவருமெனக்
கெம்மாத்திரமென்ற ஏயா அம்புகளேற்றினேன்
ஆயிரங்கண்ணனும் அமைச்சனும்நிற்பவனோ
தாயில்லாபிள்ளையாக ஆக்கினேன்மருப்படையே
இராக்ஷதர்களாகி இறைந்துள் நிர்த்தனும்
பராக்கிரமங்களுமே பாராட்டபாணமிதோ.

(குமா-வ-ம்.) அடா சூரா நீ செய்யவேண்டிய யாவத்மான தந்திரங்களும் செய்துமுடித்துவிட்டது இனி என்னசெய்யப்போறாய் நிராயுதபாணியாய் நின்றிருந்தனையேடா என்னைப்பார்த்தால்பரிதாபமாக இருக்கின்றதேதடா உன்னுடையவரமென்ன திறமென்ன ஆண்டபூமியென்ன இவைகளையெல்லாம் நினைக்கையா மாநிலத்தே வேண்டாம் இப்போதாகிலும் தேவர்களை சிறைநீக்கிவிட்டுப்பிழைப்பாய் இல்லாவிட்டால் எனது கரத்தில் விளங்கும் வெற்றிவேலாயுதத்தினால் இறப்பாய் என்னசொல்லுகுறாய் சூரா.

(சூர-வ-ம்.) அடாஉனக்கஞ்சி தேவப்பயல்களை விடுவேனோ உன்னாலானதைப்பாரடா அற்பப்பயலே.

## குமாரதேவர் தரு.

படைக்கூசேமுன்சென்று பாவிசூரனைக்கொன்று
துடிக்குடன்வருவாயே அலங்கனன்கரம்நீயே.

(பொ-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களே சுப்பிரமண்யர் வேலாயுதத்தினால் சூரபத்மன் மாண்டபிறகு கடலில்மீனுருக்கொண்டிருந்த இரணியன் வந்து கர்மகாரியங்களை நடத்தி தன்னகரைச் சேர்ந்தானென் றறிவீர்கள் கனவான்களே.

(சுப்பி-வ-ம்.) ஆ ஆ என்ன ஆச்சர்யம் இவன் சுயரூபமாக வந்தவனை நமது வேலால் இருகூறுய்ப்பிளக்க ஒருபாதிமயிலாகவும் மற்றொன்று கோழியாகவும் கூக்குரலிட்டு வணங்கி அறிவுவிளங்காதபக்ஷிகளாய் வந்தபடியால் இனிநாம் காப்பாற்றவேண்டும் ஏ சேவலனே நீ நமது திருத்தேரின்மீது ஆசனமாகநின்று கூவக்கடவை ஏ கலாபமயிலே இதோ உன்மீது ஆரோகணித்தனம் நம்மைச் சுமந்துழல்க்கடவை.

(சுப்பிர-வ-ம்.) இந்திரா அக்னி நீங்களிருவரும் இப்போதிருக்கும் உருவமாற்றி பழயகோலமாய் விளக்கடவீர்கள்.

(இந்-அக்-வ-ம்.) போற்றி போற்றி சுயம்பிரகாசக் கடவுளே போற்றி.



(குமா-வ-ம்.) வாழி வாழி சதாவாழ்வீர்களப்பா.

(குமா-வ-ம்.) நவவீரர்களே நீங்கள்சென்று சிறைப்பட்டிருக்கும் சயந்தன்முதலாகியதேவர்களை அழைத்துக்கொண்டு வருவீர்களப்பா நவவீரர்களே.

(வீர-வ-ம்.) இதோ அழைத்துக்கொண்டுவருகுறோம்சுவாமி.

(வீர-வ-ம்.) அப்பா சயந்தா தேவர்களே சூரன்மாண்டான் உங்கள் விலங்கைப்பொடித்து விட்டேன் குமாரசுவாமி உங்களை அழைத்துவரச்சொன்னார் வாருங்களப்பா.

(சயந்-தே-வ-ம்.) போற்றி போற்றி புனிதனானபோற்றி.

(குமா-வ-ம்.) வாழி வாழி சுகமாய் வாழ்வீர்களப்பா.

(குமா-வ-ம்.) ஏ வருணா சூரபத்மன் ஆண்ட வீரமாமகேந்திரத்தை உன்னுடைய சமுத்திரப்பெருக்கால் அழித்துவரக்கடவை வருணா.

(வரு-வ-ம்.) அப்படியே அழித்துவருகிறேன் சுவாமி.

(வரு-வ-ம்.) சுவாமி சூரன்பட்டணம் யாவும் அழித்துவந்தேன் சுவாமி.

(குமா-வ-ம்.) தேவர்களே நவவீரர்களே மற்றுமுள்ளசபின்யர்களே நான்வந்தவேலை பூர்த்திசெய்து திருச்செந்திப்பதியில் வந்து தெய்வயானையையும் மணம்புரிந்தேன்இனிநாம் அவரவர்கள் இருப்பிடம்போய் சேருவோம் வருவீர்கள் தேவர்களே.

(தேவ-வ-ம்.) அப்படியேபோய் சேருவோம் மகாநுபாவா.

(பொ-வ-ம்.) கேளுங்கள் சபையோர்களே சுப்பிரமண்யர் சூரபத்மனை சம்மாரம்செய்து திருச்செந்திப் பதியைவந்து தெய்வயானையை மணம்புரிந்து தன்னுடன் கூடவந்தவர்களுக்கு தருந்த ஏற்பாடுசெய்து அவரவர்கள் இருப்பிடம்போய் சேர்ந்தார்களென்பதை அறிவீர்கள் கனவான்களே.

## மங்களம் தரு.

இ-ம்-சௌராஷ்டிரம்-தாளம்-ஆதி.

பல்லவி.

மங்களம் மங்களம் மங்களம் நித்தியசுப
மங்களம் மங்களம் மங்களம்

சரணம்.

செங்கையின்மழுமானேந்தும் செல்வசிவபிரானுக்கும்
மங்கையுமையாள்தனக்கும் மதிக்கும்விநாயகர்க்கும். (ம)

தேவர்கள்யாவருக்கும் ஜெயநவவீரருக்கும்
சேவலங்கொடியோனுக்கும் சேர்ந்ததின்னவருக்கும். (ம)

அண்டமாயிரத்தெட்டும் ஆண்டசூரன்கதையை
அன்பாயெழுதப்பண்ண அருணகிரிமுதலிக்கு. (ம)

பாரினுள்ளயாவர்க்கும் பரிந்தின்னூல்படிப்போர்க்கும்
சீருள்ளநற்றவத்தால் சிறந்தசெங்குந்தர்தோர்க்கும் (ம)

திருக்கழுக்குன்றீசர்க்கும் திருச்சிற்றம்பலவர்க்கும்
திருக்கச்சிஸ்வரருக்கும் திருஏகாம்பரருக்கும். (ம)

## வாழ்த்தல்.

சீராரும்கந்தன்மலர் தாள்கள்வாழ்க
திகழ்குறமாதுடன் தேவமாதும்வாழ்க
காராரும்மஞ்ஞையும் குக்குடமும்வாழ்க
காரரக்கர்குலங்களைந்த கதிர்வேல்வாழ்க
நேராரும்நவவீரர் முதலோர்வாழ்க
கல்விபெறவேயிந்நூலைப் படிப்போர்வாழ்க
ஏராரும்செவிப்புலத்தால் கேட்போர்வாழ்க
என்றுமிந்நூலும் வாழ்க வாழ்க.

## நூற்பயன்.

சீரிலங்கும்சிவபெருமான் அளித்தசெல்வன்
சிவசுப்பிரமணியனருட் டிறஞ்சேரிந்தப்
பேரிலங்கும்நாடகத்தை இனிதிற்கேட்போர்
பிறங்குமிளமக்களொடும் பெரிதுவாழ்ந்தே
ஏரிலங்கும்சுவர்க்கநாடடைந்துமேவி
பின்புமனத்தினையுமனுபவித்துப்பின்னர்
காரிலங்குமனத்தினரா யெம்மான்செறியும்
நற்கயிலைசேர்ந்தவன்றன் தண்ணிழல்வாழ்வார்.

சூரபத்ம நாடகம்
முற்றிற்று.

---

முருகன் துணை.

| பக்கம் | வரி. | பிழைதிருத்தம். | பக்கம் | வரி. | பிழைதிருத்தம். |
|---|---|---|---|---|---|
| 6 | 22 | சாமறைகள் | 91 | 2 | அறிவீ |
| 13 | 19 | முறைசெய்வாயே | 96 | 26 | பண்பெறைத் |
| 16 | 31 | மறியாமல் | டை | 29 | சிதறிட |
| 17 | 26 | அறிய | 97 | 16 | இறைத் |
| டை | 33 | பெற்று | டை | 21 | வீசிபெறி |
| 19 | 3 | உரங்கி | 98 | 7 | தெறித்த |
| 27 | 27 | யுரைசெய் | டை | 12 | எறித்த |
| 31 | 1 | திங்குகறுரை | டை | 29 | தறிக்க, பறிக்க |
| 32 | 16 | வேரல்ல | 99 | 10 | பறித்து |
| 34 | 22 | யுரைப்பீர் | 100 | 6 | தகிக்கிட |
| 43 | 6 | அறிவீர் | டை | 22 | பெறுமா |
| 44 | 6 | சிறுவனே | டை | 25 | பறிக்கு |
| டை | 7 | சிறுவனே | 101 | 13 | மறந்து |
| 47 | 7 | அறிந்து | 102 | 11 | சிறைந்து |
| டை | 10 | றன்புடனுரைத் | டை | 31 | மாறி |
| 52 | 6 | குரைப்பீரே | 108 | 10 | மறிகிலோர் |
| டை | 8 | லுரைத்த | ,, | 17 | மீதெறி |
| 54 | 25 | பொறி | 104 | 13 | தறிந்தே |
| டை | 30 | பொறி | ,, | 16 | அறிகு |
| 56 | 4 | அனற்பொறி | 105 | 29 | பறித்து |
| 57 | 2 | டை டை | 106 | 2 | மறியாத |
| டை | 21 | அறியா | ,, | 21 | பறிக்க |
| டை | 23 | பொறிகளை | 107 | 20 | பறிக்க |
| 58 | 32 | பொறிகள் | ,, | 21 | எறுக்க |
| 60 | 7 | பொறிகள் | ,, | 22 | இறக்க |
| 62 | 8 | அறிரு | ,, | 23 | மறச்க |
| 65 | 26 | அறிந்து | ,, | 28 | அறியாத |
| 67 | 2 | அறிவோனே | 108 | 31 | அரிருறே |
| 68 | 16 | களறுவரு | 110 | 2 | சிறும் |
| 69 | 10 | அறிய | ,, | 10 | வாங்குமாறு |
| டை | 27 | பொறியால் | 111 | 24 | பொறி |
| 71 | 2 | இவ்வாறே | ,, | 25 | பொறியர் |
| 73 | 7 | அய்யய்யோ | 113 | 28 | இருந்து |
| டை | 12 | அறிகிலேனே | 114 | 13 | சிறந் |
| டை | 27 | அறிவீர் | 116 | 10 | அறைய |
| 74 | 20 | அறிந்தி | 117 | 5 | அறியா |
| 75 | 11 | அறிவீர் | 118 | 8 | சிறுக்கறுத் |
| 76 | 2 | அறிவீர் | ,, | 22 | முப்புறப் |
| 81 | 17 | அறியக் | ,, | 23 | இப்பிறப் |
| 84 | 21 | அய் | 119 | 26 | சிறுவ |
| 89 | 4 | வாக்கெறி | 122 | 21 | வல்லமையறி |
| டை | 8 | வீரகேறி | ,, | 29 | அறிந்தா |
| 90 | 27 | சிதறி | | | |
| டை | 30 | முறைக் | | | |

| பக்கம் | வரி. | பிழைதிருத்தம். |
| --- | --- | --- |
| 123 | 23 | அறிவீர் |
| ,, | 31 | புறப் |
| 125 | 12 | யுடனறு |
| ,, | 19 | பிறந் |
| ,, | 33 | வேணதீறு |
| 127 | 9 | இறைவிடு |
| ,, | 10 | னறிய |
| ,, | 14 | இறைவி |
| ,, | 16 | அறப்பு |
| ,, | 26 | புறம் |
| 130 | 13 | அறியா |
| ,, | 14 | வாறை |
| 131 | 4 | அறிந்து |
| ,, | 7 | அறியா |
| ,, | 25 | தெறிகு |
| 133 | 32 | வுரைத்தி |
| 134 | 21 | எதிர் |
| ,, | 30 | அரிக்கெறி |
| 135 | 3 | வொய்யுறேன் |
| ,, | 27 | இறப்பை |
| 139 | 19 | சத்தவா |
| 141 | 19 | அரிய |
| 142 | 6 | வுஞ்சரக் |
| ,, | 22 | கூறுதொ |
| 143 | 6 | எங்களரச |
| ,, | 23 | றுப்புற |
| ,, | 24 | நுறு, இராஜனு |
| 144 | 3 | கறுத் |
| ,, | 14 | தெரிந்த |
| ,, | 21 | நறு |
| ,, | 22 | அறிவீர் |
| ,, | 23 | ராகூதவீரர் |
| 152 | 4 | பறந்தி |

12 06 31